பாடுவார் முத்தப்பர்





வரலாறும் நூலாராய்ச்சியும்

டாக்டர் தே. சொக்கலிங்கம்

பார்வதி பதிப்பகம்

பாடுவார் முத்தப்பர்

(வரலாறும் நூலாராய்ச்சியும்)

டாக்டர் தே. சொக்கலிங்கம்

எம்.ஏ;பி.ஓ.எல்; பிஎச்.டி.

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை

அழகப்பா பல்கலைக்கழகம்

காரைக்குடி

பார்வதி பதிப்பகம்

தையல் நாயகி இல்லம்

11, எட்டாவது வீதி

சுப்பிரமணியபுரம்—தென்விரிவு

காரைக்குடி-623003.

நூல் விளக்கக் குறிப்பு

1.	நூலின் பெயர்	: பாடுவார் முத்தப்பர்
2.	ஆசிரியர் பெயர்	: டாக்டர் தே. சொக்கலிங்கம் இணைப் பேராசிரியர் அழகப்பா பல்கலைக்கழகம்
3.	மொழி	: தமிழ்
4.	பதிப்பு	: முதற்பதிப்பு
5.	வெளியீட்டுநாள்	: செப்டம்பர், 1988
6.	பதிப்புரிமை	: சொ. பார்வதி
7.	தாள்	: 11.6
8.	நூலின் அளவு	: 12 5செ.மீ × 18 செ.மீ
9.	அச்சு எழுத்து	: 10 புள்ளி
10.	பக்கங்கள்	: xxiv + 216 = 240
11.	படிகள்	: 1000
12.	அச்சிட்டோர்	: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014
13.	நூல் கட்டு	: வெள்ளை அட்டை
14.	விலை	: ரூ. 18.00
15.	பதிப்பாளர்	: பார்வதி பதிப்பகம், காரைக்குடி-3
16.	பொருள்	: பாடுவார் முத்தப்பர் என்ற புலவரின் வாழ்க்கை வரலாறும் நூலாராய்ச்சியும்
17.	நூல் கிடைக்குமிடம்	: 1. செல்வி பதிப்பகம் கல்லூரிச்சாலை, காரைக்குடி-1 2. மீனாட்சி புத்தக நிலையம் 60, மேலக்கோபுரத்தெரு மதுரை-625001.

அணிந்துரை

மூதறிஞர்செம்மல் **வ.சுப. மாணிக்கம்**, பிஎச்.டி.;டி.லிட்டு.
முன்னைத் துணைவேந்தர், மதுரை காமராசர்
பல்கலைக்கழகம்

''பாடுவார் முத்தப்பர்—வரலாறும் நூலாராய்ச்சியும்'' எனப் பெரிய இந்நூல் அகன்ற ஆய்வும் ஆழ்ந்த முடிபும் புதிய செய்தியும் புலமைச் சுவையும் பொதிந்த எழுத்துப் பனுவல் ஆகும். 78 பக்கங்கள் வரலாறாகவும் 130 பக்கங்கள் ஆராய்ச்சியாகவும் அமைந்துள. புலமை சான்ற ஆய்வாதலானும், சான்றுபட நிறுவுதல் என்பது ஆய்வியம் ஆதலானும், சான்றுக் கோள்கள் நூல் முழுதும் பரந்து கிடப்பக் காண்கின்றோம்.

> ''இந்தநூல் பாடுவார் வரலாற்றையும் நூல்களையும் ஆராய்ந்து உருவானது. நூலாசிரியரின் நீண்டகால ஆராய்ச்சியால் புலனாம் உண்மைகளும் வரலாற்றுச் செய்திகளும் இங்கு முறைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. இதுகாறும் வெளிப்படுத்தப் பெறாத புதுக் கருத்துக்களும் வரலாற்றுண்மைகளும் இங்குக் கூறப்பட்டுள்ளன''

எனவரும் நூலாசிரியர் அறிஞர் சொக்கலிங்கனாரின் தன் மதிப்பீடு மிகையன்று; இந்நூலைக் கற்பார் ஒப்புக்கொள்ளத் தக்க நன் மதிப்பீடேயாகும்.

பாடுவார் பிறந்து மறைந்த காலம், மிதிலைப்பட்டித் தொடர்பு, சேனாபதியடிகளின் நட்பு, நூலறிபுலமை, சூழ்ந்த அரசியலறிவு, வாக்குப்பலிதம், இனத்தார்நலம், புரவுத்தன்மை எல்லாம் கூடுதலான புதிய செய்திகளோடும்

மேற்கோள்களோடும் அரண்செய்யப்பட்டுள. பாடுவார் முறையான தமிழறிவு பெற்றவர் என்பது இந்நூலாசிரியர் கோட்பாடு. அகச் சான்றுகள் காட்டிப் பாடுவாரின் பரந்த பனுவற்புலமையை நிறுவியிருப்பதைப் பாராட்டுகின்றேன். அதன்மேலும் திருமுகவிலாசம், குதிரையடி, குளுவநாடகம், நகரவாழ்த்து என்ற புதிய இலக்கிய வகைகளின் முன்னோடி முத்தப்பரே என்று சுட்டுவதும் பாராட்டத் தகும்.

பாடுவார் நூலறிபுலவர் மட்டும் அல்லர்; பரிமேலழகர் உரையை எடுத்துக்காட்டியபடி (பக். 23) வாக்குப்பலிதம் மிக்க நிறைமொழிப்புலவருமாவர். பாடுவார் என்ற பெயருக்குச் செய்யுள் இயற்றுவார் என்ற பொருள் இவ்விடத்து இல்லை. அறம்பாடுவார் என்பதே சிறப்புப் பொருள். செவ்வூர், அரியக்குடி, சந்தைக்கட்டணம் முதலான சாபநிகழ்ச்சிகளையும், 'காடுவெட்டிப்போட்டு' என்றாங்கு வரும் வெண்பாப் பயன்களையும், மழை தருவித்த சிறப்புக் களையும் கண்ட மக்கள் முத்தப்பரை யாப்புப் புலவரினும் மேலான அருட்புலவராக அஞ்சி மதித்தனர். பாடுவார் என்ற சிறப்பு முத்தப்பர் செயங்கொண்டார் சதகம், திருமுகவிலாசம் முதலான நூல்களை இயற்றுவதற்கு முன்பே, அவர்தம் இளமைக் காலத்தே மக்கள் வழக்குக்கு வந்துவிட்டது.

இஃது ஆய்வு நூலாதலின் அறிஞர் சொக்கலிங்கனார் எதனையும் சான்றிருந்து துணியல் வேண்டும் என எண்ணுவர். அதனால் வழிவழி வந்த சிற்சில வரலாறுகளை யும் கருத்துக்களையும் அவர் உடன்படவில்லை. முத்தப்பரின் பாடல்களில் வரும் குறிப்புக்களை வைத்தே வாழ்வு வரலாறு காணவேண்டும் என்பர். இவ்வாய்வியம் பெரும்பாலான பெருமக்கள் வரலாற்றுக்கு இசைவதில்லை. முழுதும் தன் வரலாறு என ஒருவர் நூல் எழுதி இருந்தாற்றான் அனைத்துக்கும் அகச்சான்று பார்க்க முடியும். முத்தப்பர்

அண்மைக்கால வாழியர் ஆதலானும் அவர் குடும்ப வழிவழி இன்றும் பொலிவாக இருத்தலானும், அவர்தம் தனி நிகழ்ச்சிப்பாடல்கள் மக்கள் வாய்மொழியாக வழக்காற்றில் உள்ளூர்களில் கேட்கப்படுதலானும், வழக்குச் சான்று களையும் பகுத்தறிந்து ஆய்வுநாடியாக ஏற்கலாம். ஆதலின் இத்தகைய கதைகளும் கவிதைகளும் பாடுவார் முத்தப்பர் தெய்வத்தன்மை வாய்ந்த புலவர் என்று காட்டுவதற்காகப் பிற்காலத்தவராற் புனையப்பட்டவை என்ற தள்ளுரை மறு சிந்தனைக்குரியது.

முன்னைப் பதிப்பாசிரியர்கள் முத்தப்பர் பாடியனவாகச் சொல்லப்படும் நூல்கள் கிடைத்திலவாதலால், அவர்க்குப் பெருமை சேர்ப்பதற்காக இட்டுக் கட்டியவை என்று முடிப்பர் சொக்கலிங்கனார். செயங்கொண்ட சோழீசர் பிள்ளைத் தமிழ், நேமநகர்க் கலம்பகம் என்றவாறு நூற்பெயர்களோடு தெளிவாகச் சுட்டியிருத்தலால், இட்டுக்கட்டியவை என்று விட்டுவிடாது, தேடும் முயற்சியில் முனையவேண்டும். பாடுவார் அணிய காலத்தவர் ஆதலின், முயற்சி பலித்தலும் உண்டு. எந்தப் பதிப்பாளரும் குறிப்பிடாத குளுவ நாடகம் ஏட்டுப்படியாகக் கிடைத்துளது என நூலாசிரியரே ஒப்புவர். ''பாடுவார் முத்தப்பர் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபின் முதற் புலவர். இவர்க்கு முன் பட்டினத்தார் போன்ற புலவர் கள் தோன்றியிருந்தாலும் இவரே உறுதியாக அறியப்பெறும் நகரத்தார் மரபுப் புலவர்'' என்பது தே.சொ வின் தனிப் பாராட்டு. இதனை அவ்வாறே உடன்படுதற்கு இல்லெனினும், பாடுவார் பிறந்த ஊரிற் பிறந்த பெருமை யால் எழுந்த அன்புரை என்று போற்றுகிறேன். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பொதுப்படப் பாடிய கணியன் பூங்குன்றனாரைத் தன்னூரான், மகிபாலன் பட்டியான் என்று பண்டிதமணியார் போற்றிக் கொள்ள வில்லையா?

நூலாராய்ச்சி என்ற அரிய பகுதிக்கண் பாடுவாரின் நூலெல்லாம் தனித்தனியாகத் திறன் பெறுகின்றன. திருமுக விலாசம் என்ற பெயராய்வும், புதிய இலக்கியக் கலப்பும், மாதவி மடலொடும் திருமுகப் பாசுரத்தோடும் செய்த ஒப்புமையும், சொன்னயங்களும், திருமுகவிலாசத்தின் பயனும் விரிவாகக் காட்டப்பட்டுள. ஊனையூர்ப் பண்டாரத்துக்குப் பாடுவார் திருமுகப்பாடல் ஒன்று கொடுத் திருக்க வேண்டும்; அது கிடைக்கவில்லை என்று ஆசிரியர் கருதும் கருத்து வெள்ளுகமேயானாலும், திருமுகவிலாசம் மடலமைப்பு உடையதன்று எனவும், ஆற்றுப்படைச்சாயல் கொண்டது எனவும் துணியும் முடிபு ஏற்கத்தகும்.

குதிரையடி என்ற தலைப்பில் பல்வேறு குலதெய்வக் கருப்பர் வரலாறும் வழிபாடும் மன்பதை நோக்கில் இடம் பெற்றுள. இவ்விலக்கிய வகையில் புதுமைகளையும் குதிரை யின் தோற்றங்களையும் நாம் நன்கு உணர்கின்றோம். பெண் தெய்வப்பாக்கள் என்ற பகுதி ஊர்ச் செய்திகள் பொதிந்தது. மழைவரம் தரும் பாடுவாரின் ஆற்றலை இதனால் நாம் அறிகின்றோம். முத்தப்பரின் புரட்சியும் தெய்வவீறும் சந்தமும் கொண்டது, உச்சினி மாகாளியம்மன் கும்மி என்ற படைப்பாகும். 90 கண்ணிகள் உடைய கும்மி தெய்வக்காப்பு வழங்கும் அருட்பாசுரம் என்று போற்ற வேண்டும். பாரதியாரின் சத்திப் பாடலுக்கும் ஊழிக்கூத்து என்ற வண்ணப்பாடலுக்கும் இக்கும்மி முன்னோடி என்க.

சேலைப்பழித்த விழியுடையாள் செழுந்
        தேனைப் பழித்த மொழியுடையாள்
மாலைக்குழலில் அழியுடையாளரன்
        மால்கொழு முந்திச் சுழியுடையாள்

இக்கண்ணியின் தமிழோசை சொல்லுந்தரமோ?

திருமுகவிலாசமும் நகரவாழ்த்தும் கருத்துத் தொடர் புடைய குலவிலக்கியங்கள். நகரத்தார் திருமண முறைகள்

இன்றுவரை அவ்வளவாக மாறிடவில்லை. மணச் சடங்கு களை அறிஞர் சொக்கலிங்கம் தொலைக்காட்சி போல வரன்முறைப்படுத்திக் காட்டுவர். தக்கவயது வந்த பின்னரே திருமணஞ் செய்யும் வழக்கம் நகரத்தார்பால் இருந்தது; குழந்தை மணம் இருந்ததில்லை என்பது முற்றும் பொருந்தும். சிலப்பதிகாரத்தும் பருவமணமே—காமஞ் சான்ற மணமே சுட்டப்படுகின்றது.

மங்கலியம் தன்னை வணிகர்தொட்டுத் தான்கொடுத்தார்
செங்கையினால் வாங்கிச் செய்யதிரு மங்கலியம்
தரித்தான் கழுத்தில் சால மணவாளன்
தரித்தானே நாயகிக்குத் தாட்டிமையாத் தான்புகழ

என்றபடி, முத்தப்பர் காலத்து மணவாளனே தாலிகட்டும் மரபிருந்த சடங்கினை அறிகின்றோம். இடைக்காலத்து இம்மரபு வழுவினாலும் இப்போது மீண்டும் முத்தப்பர் சொல்லே உயிர் பெற்றிருக்கின்றது. வேவெடுத்தல் என்பது வேள்வெடுத்தல் என்ற சொல்லின் திரிபு எனத் தமிழகராதி கூறியிருப்பது பொருந்தாது. இது 'வே' என்னும் ஓரெழுத் தொருமொழியாய்ச் சமைப்பதைக் குறிக்கும். சமைத்தற்கு வேண்டிய அரிசி காய்கறி முதலான பண்டங்களைக் கொண்டு போதலையே வேவெடுத்தல் என்ற கிளவி குறிக்கும்.

பாடுவார் பனுவல்களுள் செயங்கொண்டார் சதகம் உள்நாடும் வெளிநாடும் சுவைத்த சிற்றிலக்கியமாகும். இச்சதகம் தனிப்பெரும் ஆய்வுக்கு உரியது எனினும் சிறந்த பாங்குகளை இந்நூல் ஆராய்ச்சி புலப்படுத்துகின்றது. திருமுகவிலாசம், நகர வாழ்த்துப் போல இச்சதகம் இனநலம் பாடுவதன்று எனவும், முழுமுதற் கடவுளான செயங் கொண்ட சோழீசரைப் பாடும் தலைமையுடையது, எனவும் கூறிய முடிபு பொருந்தும். இச்சதகத்தில் வரும் கதைகளைப் பாகுபடுத்தியிருப்பதும், கதைமாற்றங்களை ஆய்ந்திருப்பதும், பழமொழிகளை நுண்மைப்பட விளக்கியிருப்பதும், பல

காப்பியங்களோடு ஒப்புறழ் செய்திருப்பதும் குறிப்பிடத் தக்கவை. முத்தப்பர் நினைவில் இருந்தவற்றை எழுதிய மையால் சில கதை முரண்கள் ஏற்பட்டனவோ என்று அமைதி கூறுவதைக் காட்டிலும், புராணக் கதைகள் ஆசிரியர்தோறும் வேறுபடுமாற்றைக் கருதலாம். இராமாயணக் கதைகளில் வேறு மாறுகளுக்கு வரம்புண்டோ?

வாழ்ந்த பெருமக்களின் வரலாறு எங்ஙனம் உணர்வோடும் சுவையோடும் எழுதப்படல் வேண்டும்; அவர் தம் நூல்களை எவ்வாறு சூழலாகவும் ஆழமாகவும் ஒப்பாடாகவும் திறப்படுத்தல் வேண்டும் என்ற எழுத் தாண்மைக்கு அறிஞர் சொக்கலிங்கனாரின் நூல் வழிகாட்டி யாகும். பாடுவார் பனுவல்கள் இன்னும் பன்மாணும் ஆராயும் பொருள்வளம் சான்றவை என்ற அறிவுத் தூண்டுதலை இந்நூல் எழுப்பியுள்ளது. திருமுகவிலாசத்தை யும், நகரவாழ்த்தையும் நாட்டுக்கோட்டையார் இன நூல் களாக மட்டும் கருதிவிடாமல், தான் நன்கறிந்த அருந்தமிழ்க் குலத்தின் சமுதாயப் பழக்கவழக்கங்களை வடித்துக் காட்டும் மன்பதை வரலாற்று நூலாக மதிக்கவேண்டும். முத்தப்பர் தமிழ் பற்றி மொழிந்த சிறப்புக்கள் அளவில. 'தமிழ் மேலும் ஆணை' என்று பாடிய முதற்புரட்சிப்புலவர் முத்தப்பரே. 'துய்ய தமிழோர் வாழி' என்று தமிழினத்தையே வாழ்த்திய முன்னவரும் முத்தப்பரே. அரசியற்சூழல், வழக்காறுகள், சொல்வழக்குகள், சத்திவழிபாடு, ஊர்த்தெய்வங்கள், பல வண்ணங்கள், வெண்பாத்திறம், அடுக்குப் புனைவு, அணிகலன்கள், ஊரகப் பாடல்கள், பெருமித உணர்வு என்ற களங்களில் எல்லாம் ஆய்வு பெருகத்தக்க களஞ்சியப்புலவர் முத்தப்பர் என்ற புதியவுண்மையை அறிஞர் சொக்கலிங்கம் தம் பல்லாண்டுப் புலமை உழைப்பினால் காட்டியுள்ளார்.

மேலும் இத்தகைய நுண்மாண் நுழைபுல நூல்களை இவரிடமிருந்து தமிழுலகம் எதிர்பார்க்கின்றது.

பாடுவார் இடைக்காலத் தமிழுலகத்துப் பெரும் புலவருள் ஒருவர்; ஏனைப் புலவோரினும் அரசியலறிவும் சூழலறிவும் நடைமுறை மெய்ம்மையும் பெருமிதச்சால்பும் நிறைமொழிவன்மையும் வாய்ந்தவர். அவர் படைப்புக்கள் சங்கச் செம்மையும் இடைக்காலக் கற்பனைவளமும் கலந்தவை. ஆதலின் பாடுவார் தமிழ் நாடெங்கணும் பரவுவார் ஆகவேண்டும் எனவும், அவர்தம் பனுவல்கள் செம்பதிப்புக்களாக வனப்பெய்தவேண்டும் எனவும், பல்கலைக்கழகங்களில் பாடுவார் ஆய்விருக்கைகள் நிறுவப் படவேண்டும் எனவும் நன்றிக் கைம்மாறாக எழுதியிருக்கும் அறிஞர் சொக்கலிங்கனாரின் வேணவா நிறைவேறுங்காலம் நெருங்குகின்றது என அறிகின்றேன். பாடுவார் பெருமையை உணர்ந்து பெருமக்கள் பாடுவார் கோட்டம் ஒன்று எடுக்கும் சீரிய முயற்சியைப் பாராட்டுகின்றேன்.

தீர்த்தேன் சுகம்பெற்றேன் என்னய்யன் மேற்சொன்ன
கவியிதனைப் பகலிரவு கேட்போர் படிப்போர்
செகமதிலே சந்ததமும் சீருடனே வாழ்ந்திருப்பார்
தல்லா குளக்கருப்பர் தண்ணருளால் இன்பமுடன்
எல்லாரும் வாழ்க இனிது

—பாடுவார் முத்தப்பர்

5-8-1988
கதிரகம்
காரைக்குடி-3

வ.சுப. மாணிக்கம்

மதிப்புரை

பேராசிரியர், முதல்வர் கோ. செல்வகணபதி

அழகப்பா அரசு கலைக் கல்லூரி

காரைக்குடி-3

''மிக விரைவாகவும் தெளிவாகவும் பாடலை மனத்தில் கவனம் செய்து கொண்டு விறுவிறு என்று சொல்லிவிடும் பண்புடையவர்''—இத்தொடர் பாடுவார் முத்தப்பரைப் பற்றி இந்த நூலாசிரியர் கூறுவது. இக்கூற்று இந் நூலாசிரியர்க்கும் பொருந்தும். விரைவாகவும் தெளிவாகவும் அனைத்துக் கருத்துக்களையும் கவனத்தில் கொண்டு செய்தி களைக் கூறும் ஆற்றல் நிறைந்தவர் நண்பர் பேராசிர்யர் தே. சொக்கலிங்கம் ஆவார். அவர்தம் திறனை வெளிப் படுத்தும் முறையில் பாடுவார் முத்தப்பர் பற்றிய நூல் அமைந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

நகரத்தார் மரபில் தோன்றிச் சிறப்படைந்த பாடுவார் முத்தப்பரின் பெருமையினை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் கூறியுள்ளார் இந்நூலாசிரியர்.

''கல்வியைக் காட்டிலும் பொருளுக்கே மதிப்பு அதிகம் கொடுத்து வந்த காலத்தில் தமிழறிவு பெற்றவர் பாடுவார்'' என்று ஆசிரியர் கூறுவதற்கேற்ப, பாடுவார் முத்தப்பரின் புகழ்மிகு அருஞ்செயல்கள் இந்நூலில் மிகுதியும் சொல்லப் பெறுகின்றன.

அறம் பாடுவதில் வல்லவராகவும், வாக்குப்பலிதம் கொண்டவராகவும், அருள்மொழிக் கவிஞராகவும், அருட் செயல்களின் ஆற்றல் உள்ளவராகவும் பாடுவார் திகழ்ந்த தன்மையை அழகுறச் சுட்டுகிறார் இவர்.

''செல்வர்களையோ மன்னர்களையோ பாடிய குறிப்புகள் பாடுவாரின் நூல்களில் இல்லை'' என்று ஆசிரியர் கூறுவதிலிருந்து உலகமும் மக்களும் நலமுற அக்கறை கொண்ட பாடுவாரின் உயர்ந்த எண்ணம் நமக்குப் புலனாகின்றது. அரசியல் ஆர்வமும் அதே நேரத்தில் உண்மையான சிவபக்தியும் கொண்டவர் பாடுவார் என்பதனை ஆங்காங்கே நூலாசிரியர் விளக்கிக் காட்டுகிறார்.

நகரத்தார் மரபில் தோன்றிய பாடுவார், நகரத்தார்களின் பெருமையினைப் பாடுவதில் சற்றும் சளைக்கவில்லை எனத் தெரிகிறது. ''நகரத்தார் வீடுகளில் இலக்குமி என்றும் தங்கியிருத்தல் வேண்டும்'' என்ற விருப்பத்தைத் தம் நூல்களில் தெரியப்படுத்தும் பாடுவார் முத்தப்பர், ''நகரத்தார் அனைவரும் கொடைத் திறத்தையும் அறச்சிந்தனையையும் வளர்க்க வேண்டும்'' என்பதையும் வலியுறுத்தினார் என்ற கருத்தை ஆசிரியர் தமக்கே உரிய எளிய நடையில் எடுத்தியம்புகிறார்.

''நகரத்தார் வீட்டுத் திருமணப் பழக்க வழக்கங்களில் குழந்தை மணமே அப்போது கிடையாது; தக்க வயது வந்த பிறகுதான் திருமணம் நடந்தது; திருமணச் சடங்கு முறைகளில் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டார்க்கு வேவு கொண்டு சென்றார்கள்.'' இவ்வாறான பழக்கங்கள் இன்றைய பழக்கங்களுக்கு மாறாகச் சிறந்த முறையில் அச்சமூகத்தாரால் பின்பற்றப்பட்டன என்பதை நகரத்தார் சமூகத்தைச் சார்ந்த இந்நூலாசிரியர் உள்ளம் உணர்ந்து கூறுவதைக் காண முடிகின்றது.

இவ்வாறாகப் பாடுவார் முத்தப்பர் பற்றிய பல்வேறு பெருமைகளை நகரத்தார் மட்டுமன்றிப் பலரும் அறிந்து கொள்ளப் பயன்படும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூலை அறிஞர் உலகமும் நகரத்தார் சமூகமும் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தக் காலத்தில் பதிப்பில் இல்லாத கிடைத்தற்கரிய பல சிறந்த நூல்களை எல்லாம் தம்முடைய நூலகத்தில் வைத்துப் பேணித் தமிழறிஞர்களுக்கு உதவி வரும் பெரும் பணியினைச் செய்து வருபவர் டாக்டர் தே. சொக்கலிங்கம் ஆவார். அத்தோடு நின்று விடாமல் நூல்கள் எழுதும் பணியிலும் அவர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருப்பது பாராட்டுக்கும் பெருமைக்கும் உரியதாகும்.

'குதிரையடி' போன்ற புதிய இலக்கிய வகையினைத் தமிழிலக்கிய உலகிற்குத் தந்த பாடுவார் முத்தப்பரைப் போன்று பேராசிரியர் டாக்டர் தே. சொக்கலிங்கம் இன்னும் பல நூல்களைத் தமிழ் இலக்கிய உலகிற்குத் தரவேண்டும் என்பதே நம் அவா.

கோ. செல்வகணபதி
முதல்வர்
அழகப்பா அரசு கலைக்கல்லூரி

காரைக்குடி 3
2-5-88

செந்தமிழ் வளர்க்கும் சிறுகூடல்பட்டி வாழும்
பிறையாயிரப் பெருவிழாக் கண்ட பெரியார்

உயர்திரு ஆத. வீர. காசிச் செட்டியார் அவர்களின்

வாழ்த்துரை

'பாடுவார் முத்தப்பர்— வரலாறும் நூலாராய்ச்சியும்' என்ற நூலாசிரியர் திரு. தே.கி.தே. சொக்கலிங்கம் அவர்கள் முத்தப்பய்யாவைப் பற்றி விரிவாக ஆராய்ந்து எழுதி யுள்ளார்கள். இந்தப் புத்தகம் புலவர் வரலாறாகவும் செட்டிநாட்டு வரலாறாகவும் படிக்கத்தக்க சுவையான தமிழாகவும் இருப்பது பாராட்டத்தக்கது.

என் அம்மான் சி.கரு. முத்தய்யா செட்டியார், முத்தப்பய்யா பாடிய 'உச்சினிமாகாளியம்மன் பேரில் கும்மி' என்ற நூலை 1935இல் அச்சிட்டு அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். இன்று எங்கள் மாப்பிள்ளை 'பாடுவார் முத்தப்பர்' நூலை வெளியிடுவது கண்டு நானும் என் மனைவி சேது ஆச்சியும் குடும்பத்தினரும் ஆசிரியரைப் பாராட்டுகின்றோம்; பெருமகிழ்ச்சி அடைகின்றோம். சிவல்பட்டியில் முத்தப்பய்யாவுக்கு மணி மண்டபம் கட்டும் முயற்சியில் நகரத்தார்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் இந்நூல் முத்தப்பரைப் பற்றி அறியவும் பெருமையை உணரவும் பெரிதும் துணையாகும்.

நம் வட்டாரத்தில் வெங்களப்ப நாயக்கர், கானாடு காத்தான் பெத்தாச்சிச் செட்டியார், வை.சு. சண்முகம் செட்டியார் போன்ற வள்ளல்களும், முத்துக்குட்டிப் புலவர், சுப்பராயர், பீமகவிராயர், சொக்கலிங்க அய்யா, தமிழ்க்

கடல் இராய. சொ. போன்ற பெரும் புலவர்களும் வாழ்ந் திருக்கின்றனர். இவர்களைப் பற்றிய வரலாறுகள் எழுதப் படாவிட்டால், நாமே அவர்களை மறந்துவிடுவோம். செட்டிநாட்டில் வாழ்ந்த பல பெருமக்கள் வரலாறுகள் எழுதாமல் மறைந்துவிட்டன; நாமும் அவர்களை மறந்து விட்டோம். செட்டிநாட்டு வள்ளல்களைப் பற்றியும் புலவர் களைப் பற்றியும் படித்தவர்கள் எழுதவேண்டும். நகரத்தார் களும் சங்கங்களும் தரும ஸ்தாபனங்களும் இப்பணியில் உதவ வேண்டும்.

பாடுவார் முத்தப்பர் பற்றிய நூலை எழுதிய டாக்டர் தே. சொக்கலிங்கம் அவர்களை 'வாழ்க! வெல்க!' என்று வாழ்த்துகிறேன். நூலை வெளியிட்ட பார்வதி பதிப்பகத்தை வளர்க என வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

சிறுகூடல்பட்டி — அன்புள்ள,

8-8-1988. — **வீர. காசிச் செட்டியார்**

பாயிரம்

செல்வம் மல்கும் செட்டிநாட்டில் வாழ்ந்த புலவர்களுள் நிறைமொழி மாந்தராக விளங்கியவர், பாடுவார் முத்தப்பர். இவரைப் பற்றி ' அறியாத நகரத்தார் எவரும் இலர். நகரத்தார் பலரும் ஒருங்கு கூடுகின்றபோது முத்தப்பர் பற்றிய சுவையான நிகழ்ச்சிகள்—கதைகள் பேசப் பெறும். அவர் பாடிய 'காடுவெட்டிப் போட்டு' என்ற பாடல் அங்கே ஒலிக்கும். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், முத்தப்ப ருடைய வாழ்த்துப் பாடல்களினாலேயே தாங்கள் செல்வம் கொழிக்க வாழ்வதாகக் கருதி வருகின்றனர். அத்தகைய அருட்புலவரான பாடுவார் முத்தப்பரின் வரலாற்றையும் நூல்களையும் ஆராய்ந்து எழுதி வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அல்லியரசாணி மாலை, அல்லிகுறம், புலந்திரன் களவு மாலை, புலந்திரன் தூது போன்ற ஊரகக் கதைப்பாடல் களைப் படிக்கச் சொல்லிக் கேட்கும் (காலஞ்சென்ற) எங்கள் தாயார் சிகப்பி ஆச்சி அவர்கள் புராண இதிகாசக் கதை களையும் வரலாற்றையும் கேட்பதில் மிக்க ஆர்வம் உடையவர்கள். அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் புரட்டாசித் திங்களில் எங்கள் வீட்டில் படித்துவரும் இராமாயணக் கதையைத் தவறாது கேட்பார்கள். ஏடு படிக்கும் நாங்கள் எழுத்தைத் தேடிக் கொண்டிருக்கும்போது அவர்கள் தன் நினைவாற்றலால் தொடர்களை எடுத்துக் கொடுப்பார்கள். கேள்வியாலேயே தம் புலமையையும் அறிவுத்திறத்தையும் வளர்த்துக் கொண்டிருந்த அவர்கள், முத்தப்பர் பற்றித் தான் கேட்டறிந்தவற்றைக் கோவையாகச் சொல்லுவார்கள். மிதிலைப்பட்டியில் ஆட்டுக்கிடாயின் தலை வெடிக்க

வெண்பாப்புலிக் கவிராயர் பாடியதையும் அத்தலை ஒட்ட முத்தப்பர் பாடியதையும் அவர்கள் சொல்லுவார்கள். இந்த வரலாற்றை அவர்கள் பல்வேறு சமயங்களில் பன்முறை கூறுவதுண்டு. இவ்வாறு இளமை முதலே முத்தப்பர் வரலாறு எனக்கு மனத்தில் பதிந்து சுவையூட்டியது.

தமிழே வாழ்க்கைத் தொழில் என்றானபோது முத்தப்பர் பற்றிய நூல்களையும் வரலாறுகளையும் திரட்டத் துவங்கினேன். பாடுவார் முத்தப்பர் பிறந்த ஊரில் யான் பிறந்தபடியால், முத்தப்பர் பற்றிய செய்திகளைத் திரட்டப் போதிய வாய்ப்புக் கிட்டியது. வள்ளல் அழகப்பர் நிறுவிய அழகப்பா கல்லூரியில் 1964இல் வேலைக்குச் சேர்ந்தபின் முத்தப்பர் பற்றிய ஆய்வைத் தொடர்ந்தேன். அவ்வப்போது நான் எழுதியவற்றில் மூன்று கட்டுரைகள் கலைத் தந்தை கருமுத்து. தியாகராசன் செட்டியார் அவர்கள் நிறுவிய 'தமிழ்நாடு' இதழ் ஞாயிறு மலரில் வெளிவந்தன. பாடுவார் முத்தப்பர், திருமுகவிலாசம், நகர வாழ்த்து என்பன அவ்வாறு வெளியானவை. தொடர்ந்து பல்வேறு மலர் களிலும் இதழ்களிலும் பாடுவார் முத்தப்பர் பற்றிய கட்டுரைகளையே எழுதி வந்தேன். ஆயினும் அனைத்தையும் முறைப்படுத்தி ஒரு நூலாக வெளியிடக் காலம் கனியவில்லை.

கீழ்ச்சிவல்பட்டி—தமிழ்மன்றப் பொன் விழா வெளி யீடாக முத்தப்பரின் நூல்களை வெளியிட வேண்டும் என்றும் அவற்றை முறையாகப் பதிப்பித்துத்தர வேண்டும் என்றும் மன்றத்தின் அன்றையச் செயலர் என்னைக் கேட்டுக் கொண்டார். அதற்காக மீண்டும் முத்தப்பர் நூல் களை ஆராய முற்பட்டுக் கையெழுத்துப் படிகளைச் செப்பம் செய்து அச்சுக்கு அணியமாக வைத்திருந்தேன். பின் மன்றத்தார் என்ன காரணத்தாலோ அதனை வெளி யிடவில்லை.

மீண்டும் 1987 கோடை விடுமுறையில் கருமமே கண்ணாக—திரட்டியவற்றை எல்லாம் ஒருங்கு நோக்கிப் 'பாடுவார் முத்தப்பர்' என்னும் இந்நூலை எழுதினேன். முன்பு எழுதிய பழைய கட்டுரைகள் எல்லாம் மீண்டும் புதிய ஆராய்ச்சிக்குள்ளாயின. இந்நூல் முத்தப்பர் பற்றிய முறையான வரலாறாகவும் நகரத்தார்களின் வரலாறு தழுவிய பண்பாட்டாய்வாகவும் எழுதப்பட்டிருக்கிறது. முத்தப்பரின் அருளுள்ளம்—அன்பு நேயம்—இன நலம் நாடும் பண்பு ஆகியன முதற்கண் இந்நூலில் காட்டப்பட்டுள்ளன.

தமிழ் உலகின் தலை சிறந்த அறிஞராகப் போற்றப் பெறும் எங்கள் ஆசிரியப் பெருந்தகை, மதுரை காமராசர் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் செம்மல் **டாக்டர் வ. சுப. மாணிக்கம்** அவர்கள் இந்நூலைப் படித்து அணிந்துரை வழங்கியருளினார்கள். அஃது எம் தவப்பேறே யாகும். அவர்கள் தூண்டுதலினாலும் ஊக்கத்தினாலும் தாம் இந்நூல் வெளிவருகின்றது. அப்பெருந்தகை யாளருக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூலின் தட்டச்சுப்படியை முழுமையாகப் படித்துப் பார்த்து வேண்டிய திருத்தங்களைக் கண்டு கூறிய என் ஆசிரியப் பெருமக்கள் **டாக்டர் கோ. சிவகுருநாதன்** அவர்களுக்கும் **டாக்டர் அ. விசுவநாதன்** அவர்களுக்கும் நன்றி.

'பாடுவார் முத்தப்பர்' என்ற இந்நூலை எங்கள் பல்கலைக்கழகமுதல் துணைவேந்தர், கலையன்னை **டாக்டர் இராதா தியாகராசன்** அவர்களுக்குக் காணிக்கை யாக்குவதில் பெரிதும் மகிழ்கின்றேன். அன்னார்க்கு எம்உளங் கனிந்த நன்றி.

முதல்வர் பேராசிரியர், **கோ. செல்வகணபதி** அவர்கள் நேரிய நிருவாகத்திறனும் அரிய புலமையும் மிக்கவர்கள்,

ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் செவ்வனே வளம்பட எழுதும் திறன் மிக்கவர்கள். அன்னார் பாடுவார் முத்தப்பர் பற்றிய தட்டச்சுப் படியைப் படித்து மதிப்புரை வழங்கியமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் குடும்பவளர்ச்சியிலும் ஆக்கப்பணிகளிலும் ஆர்வமும் தூண்டுதலும் தருபவர்கள் என் மாமனார் ஆத. வீர. காசிச் செட்டியார் அவர்கள். அவர்களுடைய வாழ்த்துரை எங்களை வாழ்விக்கும் அருளுரையாம். அவர்களுக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் நன்றி.

இந்நூலை வெளியிட முன் வந்த பார்வதி பதிப்பகத்தார்க்கு நன்றி. எழுதியவற்றைப் படியெடுத்துதவிய என் மக்கள் தேனப்பன், (B.E.), ஆதப்பன் (B.Sc.), சீனிவாச மீனாட்சி சுந்தரம் ஆகியோர்க்கும் நன்றி. நூலினை நன்முறையில் அச்சிட்டுதவிய நாவல் ஆர்ட் பிரிண்டர்சாருக்கும் மெய்ப்புத் திருத்திய அறிஞர்களுக்கும் உளமார்ந்த நன்றி. நூல் அச்சாவதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்த கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்கள் துணையை மறக்கமுடியாது. அப்பெருமகனார்க்கு மனம்நிறைந்த நன்றி.

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும்அரு
ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

காரைக்குடி
6-5-1988

தே. சொக்கலிங்கம்

Pāṭuvār Muttappar

The illustrious nakarattār community of Tamil Nāṭu has liberally contributed its mite for the development of Tamil nāṭu and its culture. The temples they have built stand as monuments for their munificence and their interest in the religious sector. Even in the field of literature they do not lag. 'Pāṭuvar Muttappar' is a poet of the first order belonging to the Nakarattār Community. He was born at Sivapaṭṭi, now in Pacumpoṉ Mutturamaliṅkam District. His father was Aḻakappa Cheṭṭiyār, belonging to Nemam Clan alias Nemam temple.

The Cheṭṭyārs of those days had only a formal education — the rudiments of Tamil and simple arithmetic calculations. These were considered enough for them to look after their business in their home town and elsewhere. But Muttappar must have mastered Nalavenbā, Tiruveṅkaṭa Catakam etc. Muttappar was a poet who could compose instantaneously.

The title 'Pāṭuvār', simply indicates his proficiency in learning and versification. Among his compositions, Jayaṅkoṇṭār Catakam, Tirumuka Vilācam, Nakara Vāḻttu, Karuppaṇṇa Cuvāmi Kutireyaṭi are noteworthy. Jayaṅkoṇṭar catakam is composed on God Siva of Nemam. Proverbs which are the distilled wisdom of the people are handled by pāṭuvār Muttappar who skil

fully weaves them into the texture of his poems. Some apt striking situations from the classic-situations which are illustrative of the proverbs — are also enshrined in Jayaṅkoṇṭār Catakam.

Tirumuka Vilācam belongs to the genre 'Tūtu' wherein the poet sends some emissary on his behalf to Nakarattār. Kuṉṟakuṭi Muṟukan is the Hero of the Poem. This is composed on behalf of Uṉaiyur Cupramaṇia Paṇṭāram. Tirumuka Vilācam is 'Satrical' in nature wherein Lord Muṟukaṇ ridicules the false pretensions of his family.

Nakara Vaḻttu is an epitome of the life style, especially the marriage rituals of Nakarattār. Karuppaṇṇa cuvāmi Kutiraiyaṭi is also a peculiar minor literature which explains the riding of horse. This type of literature is found only in and around Cheṭṭinād. This is the first of its kind.

Pāṭuvār Muttappar used to compose many verses on temples that lay enroute during his sojourn. He occasionaly composed some verses which reflect his life and character.

When Muttappar was young he lost his father and so he was brought up by his mother Leṭcimi Acci. He was greatly interested in Tamil versification than in trade propensities. However, Muttappar earned his livelihood by means of small trade.

He seemed to have lived in the eighteenth century. There is a transparent internal evidence in his work to

prove that he belonged to the eighteenth century. He has mentioned General Agnew, Maṟutu Pāṇṭiyar, Muttu Vaṭukunatār of Civākaṇkai Jamin in his Maṟutam Piḷḷaiyār patikam.

Pāṭuvār Muttappar's literary compositions are simple and easy to learn. They are interspersed with sanskrit words and dialects of Cheṭṭiār Community.

Pāṭuvār Muttappar invokes the blessings of God so that Nakarttār should live for ever free from worries Perhaps this is the main reason for the Community honouring him and remembering him with gratitude.

It is commonly believed that the flourshing of the Nakarattār community is only after the blessings of the divine poet, Muttappar.

prove that he belonged to the eighteenth century. He has mentioned General Agnew, Maṛutu Pāṇṭiyar, Muttu Vaṭukanātar of Civakaṅkai Jamin in his Maṛutam Piḷḷaiyār [illegible].

Pāṭuvār Muttappar's literary compositions are simple and easy to learn. They are interspersed with sanskrit words and dialects of Cheṭṭiar Community.

Pāṭuvār Muttappar invokes the blessings of God so that Nakarattār should live for ever free from worries. Perhaps this is the main reason for the Community honouring him and remembering him with gratitude.

It is commonly believed that the flourishing of the Nakarattār community is only after the blessings of the divine poet, Muttappar.

உள்ளே

வரலாறு

நூலாராய்ச்சி



—அழகப்பா பல்கலைக் கழக முதல் துணைவேந்தர்—

பேணித் தமிழ் காக்கும் அன்னைக்காம்

காணிக்கை

தருவொத்த திருவாரூர்த் தியாக ராசர்
தாள் மறவா எமதன்னை! இராதா! அன்புக்
கருமுத்துப் பேராளர் தியாக ராசர்
கலைக் கண்ணின் மணிப்பாவை! கமலத் தேவி!
பருவத்து மாமழையாய் அழகப் பர்தம்
பல்கலையாம் கழகம்பா லனமாகக் கொண்டாய்!
ஒருமுத்தின் காணிக்கை உனக்கே யம்மா!
ஒளிக்கதிரும் பாடுவார்க்கிங் கொப்பொன் றாமோ



பாடுவார் முத்தப்பர்

முன்னுரை

செந்தமிழும் சிவநெறியும் செழித்தோங்கும் செட்டி நாட்டில், நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில், பாடுவார் முத்தப்ப செட்டியார் பிறந்தார். இவர் தமிழார்வமுடையவ ராகத் தமிழ்ப் புலமையுடையவராகத் திகழ்ந்தார். முத்தப்பர் திருமுகவிலாசம், செயங்கொண்டார் சதகம், நகரவாழ்த்து, குதிரையடி, குளுவநாடகம் என்பன போன்ற பல சிற்றிலக் கியங்களைப் பாடினார். இவற்றில் நகரத்தார்கள் நலம் பெறவும் செல்வம் பெற்று ஓங்கவும் கடவுளரை வேண்டினார். இவர் வாழ்ந்த நாளில் நகரத்தார் அனைவரும் பொருள்களை வாங்கி விற்கும் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் பாடுவார் முத்தப்பருக்கு வணிகத்தில் இருந்த ஆர்வத்தைக் காட்டிலும் தமிழ்ச் செய்யுளியற்றுவதில் இருந்த ஆர்வம் பெரிது.

பதிப்புகளும் முன்னைய ஆய்வுகளும் :

பாடுவார் முத்தப்பரின் அருள் புலமையால் எழுந்த நூல்களும் பாடல்களும் தமிழ்ச் சுவை நிறைந்தவை. அவர் வாக்குப் பலிதமுடைய கவிஞர். முத்தப்பர் என்ன நினைத்துப் பாடுகிறாரோ அஃது அப்படியே நடந்துவிடும். திருவள்ளுவர் குறிக்கும் 'நிறைமொழிமாந்தர்' இவரே. ஆயினும் இவர் நூல்கள் சிறந்த நிறுவனங்களாலோ பதிப்பாசிரியர்களாலோ வெளியிடப் பெறவில்லை. அதனால்

முத்தப்பர் நூல்கள் மக்களிடையே பரவவில்லை; அப்புலவர் பற்றிய வரலாற்று நூல்களோ, திறனாய்வு நூல்களோ தமிழில் எழுதப்பட்டில.

பாடுவார் முத்தப்பர் வரலாற்றுடன் அவர் நூல்களைப் பதிப்பித்தவர், மதுரைத் தமிழ்வித்துவான் நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களே: இதுவே முத்தப்பர் வரலாற்றைக் கூறும் முதல்நூல். இந்நூலின் பதிப்பாசிரியர் அச்சுப் பிரதிகளையும் ஏட்டுப் பிரதிகளையும் ஒப்பு நோக்கிப் பதிப்பித்திருப்பது பாராட்டற்பாலது. ஆயினும் அவர் தான் கண்ட பாட பேதங் களைத் தன் நூலில் தொகுத்துத் தரவில்லை. இந்நூல் 1925இல் அச்சானது.

அடுத்து, முத்தப்பர் வரலாற்றையும் நூல்களையும் எழுதிப் பதிப்பித்தவர் நா. நடராசன். இவர் எழுதிய 'பாடுவார் முத்தப்ப செட்டியார்' என்னும் வரலாற்று நூல் 1949இல் வெளிவந்தது. நா. நடராசன், பாடுவார் முத்தப்பர் பிறந்த சிவல்பட்டியைச் சேர்ந்தவர். இவர் அவ்வூரில் இருந்த முதியவர்களைக் கண்டு முத்தப்பர் பற்றிய செய்திகளைத் திரட்டி இந்நூலை எழுதியிருக்கிறார். மதுரைத் தமிழ் வித்துவான் நா. கிருஷ்ணசாமி நாயுடு எழுதிய வரலாற்றைத் தழுவியே நா. நடராஜன் அவர்கள் எழுதிய இந்நூலும் அமைந்தது. இவ் ஆசிரியரின் முயற்சி பாராட்டிப் போற்றத் தக்கது.

நகரத்தார் மரபினரான 'சோமலெ' 1954இல், 'செட்டி நாடும் தமிழும்' என்ற நூலை வெளியிட்டார். அந்நூலில் 'செட்டி நாட்டுப் புலவர்கள்' என்றொரு பகுதி. அதில் பாடுவார் முத்தப்ப செட்டியார் பற்றிய சுருக்கமான குறிப்பு-கள் தரப்பட்டுள்ளன.[1] திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், தமிழ்ப் புலவர் வரலாறுகளைப் பல நூல்-களாக வெளியிட்டிருக்கிறது. அவ்வரிசையில் தமிழ்ப் புலவர்

வரிசை - பத்தாம் புத்தகம் கி. பி. 1955இல் வெளிப் போந்தது.[2] இந்நூலில் முத்தப்ப செட்டியார் வரலாறு தெளிவாகவும் விரிவாகவும் காணப்படுகிறது. இவற்றுக்குப் பின் 1964இல் இந்நூலாசிரியர் 'தமிழ்நாடு' ஞாயிறு மலரில் முத்தப்பர் தொடர்பான கட்டுரைகளை எழுதி வெளி யிட்டார். இவ்வாசிரியர் பல்வேறு மலர்களிலும், முத்தப்பரைப்பற்றி எழுதிய கட்டுரைகள் குறிப்பிடத் தக்கவை.[3]

தேவகோட்டை சு. செ. சேவு. மெய்யப்ப செட்டியார் மணிவிழா வெளியீட்டில் (1981) பாடுவார் முத்தப்பர் வரலாறும் அவருடைய பாடல்களும் நூல்களும் அச்சிடப் பட்டிருக்கின்றன. முத்தப்பர் நூல்களை (திட்டாணிக் கருப்பர் குளுவ நாடகம் அச்சிடவில்லை) ஒருங்கே தொகுத்து வழங்கிய இம் முயற்சி பாராட்டத்தக்கது. இந்நூல் முழுமை யும் நா. நடராஜன் எழுதிய முத்தப்பர்வரலாற்றையும் பதிப் பித்த நூல்களையும் பார்த்தெழுதி அச்சிடப்பட்டது. இஃது உயர்ந்த தாளில் பெரும் பொருட் செலவில் வெளிவந்திருக் கிறது. நகரமலர் இதழ்களில் புலவர் இளங்கோவன் எழுதிய முத்தப்பர் பற்றிய தொடர் கட்டுரைகளும், நா. நடராஜன் எழுதியவற்றைத் தழுவியமைந்தனவேயாம்.

இந்த நூல், பாடுவார் வரலாற்றையும் நூல்களை யும் ஆராய்ந்து உருவானது. நூலாசிரியரின் நீண்ட கால ஆராய்ச்சியால் புலனாம் உண்மைகளும் வரலாற்றுச் செய்தி களும் இங்கு முறைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. இதுகாறும் வெளிப்படுத்தப்பெறாத புதுக்கருத்து களும் வரலாற்றுண்மை களும் இங்குக்கூறப்பட்டுள்ளன.

ஆய்வு மூலங்கள் :

பாடுவார் முத்தப்பர் வரலாற்றுக்கும் நூலாராய்ச்சிக்கும் உரிய ஆய்வுமூலங்கள் அவர்தம் நூல்களே. அவர் பாடிய பல

தனிப்பாடல்களும் சிற்றிலக்கியங்களும் கிடைத்திருக்கின்றன. அவர் காப்பியமோ புராணமோ பாடவில்லை. அப்புலவர் பாடியனவாக இன்று கிடைப்பன.

1. திருமுகவிலாசம்
2. நகரவாழ்த்து
3. செயங்கொண்டார் சதகம்
4. உச்சினிமாகாளியம்மன் கும்மி
5. தல்லாகுளம் கருப்பர் அகவல்
6. மருதம் பிள்ளையார் பதிகம்
7. கீரணிப்பட்டி முத்துமாரியம்மன் பதிகம்
8. குன்றக்குடி முருகன் பதிகம்
9. பழநியாண்டவர் பதிகம்
10. இராங்கியம் கருப்பர் குதிரையடி

திருமுகவிலாசத்தையும் செயங்கொண்டார் சதகத்தையும் பதிப்பித்த வித்துவான் நா. கிருஷ்ணசாமி நாயுடு, பாடுவார் முத்தப்பர் இயற்றியனவாகப் பின்வருவனவற்றைக் குறிப்பர்.

> "இப்புலவர் பெருமான் அவ்வவ்வமையங்களிற் பாடிய தனிப் பாடல்கள் இன்னும் நூற்றுக் கணக்காய் உள்ளன. இவையன்றி, ஜெயங்கொண்ட சோழீசர் பிள்ளைத் தமிழ், பதிற்றுப்பத்தந்தாதி, கலித்துறையந்தாதி, நேமநகர்க் கலம்பகம், ஜெயங்கொண்ட சோழீசர் ஊசற்றிரு நாமம் முதலிய பிரபந்தங்களும் நம் வித்வப் பெம்மானால் இயற்றப் பெற்றனவாமென்ப"[4]

இவற்றில் ஒரு நூலேனும் கிடைக்கவில்லை; ஒருபாட்டுக் கூடக் கிடைக்கவில்லை. தி. சந்திரசேகரன், செயங்கொண்டார் வழக்கம் முன்னுரையில், இவர் 'திவ்ய தேசயாத்திரையின் சரித்திரம்'[5] என்ற நூலை எழுதினார் என்பர்.

தமிழ்ப் புலவர் வரிசை எழுதிய சு. அ. இராமசாமிப் புலவர். 'செட்டியார் வரலாறு'[6] என்று, பாடுவார் முத்தப்பர் நூல் எழுதியதாகக் குறிப்பர்.

பதிப்பாசிரியர்களும் நூலாசிரியர்களும் தருகின்ற இந்த நூற்பட்டியல்கள் எந்த அளவுக்கு உண்மையானவை என்று முடிவு செய்வதற்கில்லை; இவை புலவருக்குப் பெருமை சேர்ப்பதற்காக இட்டுக்கட்டியவை என்றே தோன்றுகின்றன. முத்தப்பர் பாடிய திட்டாணிக் கருப்பர் குளுவ நாடகம் ஏட்டுப் பிரதியாகவே உள்ளது. அதனைப் பற்றி எந்தப் பதிப்பாசிரியரும் குறித்திலர்.

இப்பட்டியலில், 'செயங்கொண்ட சோழீசர் பிள்ளைத் தமிழ்' என்று ஒரு நூல் காணப்படுகிறது. செயங்கொண்ட சோழீசர் பிள்ளைத்தமிழ் பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானைப் பற்றியதாகும். சிவபெருமானைப் பிள்ளையாக்கி எவரும் இதுகாறும் பாடிலர். சிறந்த சிவனடியாராகத் திகழும் முத்தப்பர், சிவபெருமானைக் குழந்தையாக்கிப் பாடுவாரா? மரபுக்கு முரண்படுவாரா? புலவர் என்றால் அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் போன்ற இலக்கியங்களைப் பாடியிருப்பர் என்ற ஊகத்தின் அடிப்படையில் எழுதப்பட்டதே முத்தப்பர் செயங்கொண்ட சோழீசர் பிள்ளைத் தமிழ் பாடினார் என்பது. இத்தகைய பட்டியலைத் தந்தவர்கள் நேமம் சிவபெருமான் பெயர் செயங்கொண்ட சோழீசர் என்பதை அறியாதார். எனவே பாடுவார் முத்தப்பர் பாடியனவாகத் தரப்பெறுகின்ற பட்டியலில் உள்ள நூல்கள் முத்தப்பருக்குப் பெருமை சேர்ப்பதற்காகப் பதிப்பாசிரியர்கள் படைத்தவைகளே யாகும்.

நூற்பதிப்புகள் :

பாடுவார் முத்தப்பர் இயற்றிய நூல்கள் அனைத்திலும், செட்டி நாட்டு மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தவை திருமுக

விலாசமும் செயங்கொண்டார் சதகமும்தாம். இவ்விரு நூல்களையும் பல நகரத்தார்கள் அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றனர். ஏனைய நூல்கள் இந்த நூல்கள் அளவுக்குப் பரவவில்லை.

செயங்கொண்டார் சதகம், நேமத்தில் அரங்கேறியமையால், பேரளவுக்கு மக்களிடைப் பரவியிருக்கிறது. பலர் ஏடுகளைப் பார்த்து எழுதிச் சதகத்தைப் படித்திருக்கின்றனர். அதனால் இச்சதகப் பாடல்களில், பாட பேதங்கள் நிறையக் காணப்படுகின்றன.' ஒரு நூல் மக்களிடையே நன்கு பரவியிருப்பதைக் காட்டுவது, பாடபேதங்களேயாம். ஒரு நூல் படிக்கப்படாமல் கிடக்குமாயின், அதில் பாடபேதங்கள் தோன்ற வாய்ப்பில்லை. எனவே முத்தப்பர் நூல்களில் செயங்கொண்டார் சதகம் ஒன்றிற்குத்தான், கம்பராமாயணம் போலப் பாடபேதங்கள் நிறைந்துள்ளன. முத்தப்பர் நூல்களில் இதற்குத்தான் உரையும் கிடைத்திருக்கிறது. அந்நூலிலுள்ள கதைகளும் பழமொழிகளும் மக்களைக் கவர்ந்திருக்கின்றன.

ஆராய்ச்சிக்குக் கிடைத்திருக்கும் முத்தப்பர் நூல்களில் திருமுக விலாசமே முதற்கண் (1868) அச்சிடப்பட்டிருக்கிறது. அது வெளிவந்தபின் செயங்கொண்டார் சதகம் இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து (1893) அச்சாகியிருக்கிறது. இராசசிங்கம் கருப்பண்ணசுவாமி பேரில் குதிரையடி, சதகம் அச்சான ஐந்து ஆண்டுகளுக்குப்பின் (1898) இரங்கோன் பிறையர் அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டது. செயங்கொண்டார் சதகம், இரங்கோன், பிரிட்டிஸ் பர்மா அச்சியந்திர சாலையில் அச்சானது. ஆகவே முத்தப்பர் நூல்களில் திருமுக விலாசமும் செயங்கொண்டார் சதகமும் முதற்கண் அச்சானவை என்றும் மக்களால் படிக்கப் பெற்றவை என்றும் கொள்ளவேண்டும்.

திருமுக விலாசம்

	ஆண்டு	பதிப்பாசிரியர்	அச்சிட்டோர்	அச்சகம்
1	1868	சிதம்பரம் கருணானந்த சுவாமிகள்		சென்னை, பிரபாகர அச்சுக்கூடம்
2	1882	——	——	——
3	1883	கோகிலாபுரம் அருணாசலமுதலியார்	தெ. அரு. இராமஞ் செட்டியார்	மநோன்மணிவிலாச அச்சுக்கூடம்
4	1896	சிதம்பரம் அ. இரத்நசபாபதி முதலியார்	——	சென்னை இந்து தியாலாஜிகல் அச்சகம்
5	1905	தஞ்சை சதாவதானம் சுப்பிரமணிய ஐயர்	——	——
6	1910	——	——	ரெங்கோன், ஸ்ரீ பாலசுப்பிரமணியர் அச்சியந்திரசாலை
7	1925	மதுரைத்தமிழ் வித்துவான் நா. கிருஷ்ணசாமி நாயுடு	புதுவயல் ராம.சு ராமசாமி செட்டியார்	சென்னை, செங்குந்த மித்திரன் பிரஸ்
8	1933	——	——	மெர்க்கண்டைல் பிரஸ், ஈப்போ
9	1951	நா. நடராசன் & ராம. நாகப்பன்	——	புதுக்கோட்டை, கோவாபரேடிவ் பிரஸ்
10	1954	——	ராம.மு.க.மு.நாராயணன் செட்டியார்	காரைக்குடி, யுனைடட் பிரிண்டர்ஸ்
11	1981	உ. தட்சிணாமூர்த்தி	தேவகோட்டை சு.செ. சேவு. மெய்யப்ப செட்டியார் மணி விழா	தேவகோட்டை, வசந்தா பிரஸ்

செயங்கொண்டார் சதகம்

	ஆண்டு	பதிப்பாசிரியர்	அச்சிட்டோர்	அச்சகம்
1	1893	——	கிழச்சிவல்பட்டி ஆ.பெ. அரு. பழனியப்ப செட்டியார் & அரு.அ.சி.மு. சின்ன முத்தப்ப செட்டியார்	ரெங்கோன் பிரிட்டிஸ் பர்மாஅச்சியந்திரசாலை
2	1896	சிதம்பரம் அ. இரத்ந சபாபதி முதலியார்	——	சென்னை, இந்து தியாலாஜிகல் அச்சகம்
3	1914	——	——	மதராஸ், ரிப்பன் அச்சகம்.
4	1925	மதுரைத்தமிழ் வித்துவான் நா. கிருஷ்ணசாமி	புதுவயல் ராம சு. ராமசாமி செட்டியார்	மதுரை, மீனாம்பிகை அச்சகம்.
5	1941	——	பாகனேரி வெ. பெரி. பழ.மு. காசிவிசுவநாதன் செட்டியார்	சென்னை, செங்குந்த மித்திரன் பிரஸ்
6	1951	நா. நடராசன் & ராம. நாகப்பன்	——	புதுக்கோட்டை, கோவாபரேடிவ் பிரஸ்
7	1954	——	ராம.மு க.மு. நாராயணன் செட்டியார்	காரைக்குடி, யுனைடெட் பிரிண்டர்ஸ்
8	1955	தி. சந்திரசேகரன்	தமிழ்நாடு அரசு கீழ்த் திசைச் சுவடிகள் நூலகம்	சென்னை ஸ்ரீவத்சா பிரஸ்
6	1959	டி.எம். குமரகுருபரன் பிள்ளை	திருப்பனந்தாள்	திருச்சி, ரெயின்போ பிரிண்டர்ஸ்
10	1981	உ. தட்சிணாமூர்த்தி	தேவகோட்டை சு.செ. சேவு. மெய்யப்ப செட்டியார் மணி விழா	தேவகோட்டை வசந்தாபிரஸ்

அடிக்குறிப்பு

1. சோமலெ (1960)—செட்டிநாடும் தமிழும், சென்னை. இரண்டாம் பதிப்பு, பக் 111-112.
2. இராமசாமிப் புலவர். சு.அ. (1955)—தமிழ்ப் புலவர் வரிசை - பத்தாம் புத்தகம். சென்னை. பக் 55-71
3. தமிழ்நாடு ஞாயிறு மலர் : அனைத்திந்திய தமிழா சிரியர் மன்ற மலர்; கோட்டையூர் கும்பாபிஷேக மலர், நெற்குப்பைக் குடமுழுக்கு மலர் ஆகிய வற்றில் தெ. சொக்கலிங்கத்தின் கட்டுரைகள் வெளி வந்துள்ளன.
4. கிருஷ்ணசாமி நாயுடு. நா (1925)—ஏழு நகரத்தார்க் களித்த திருமுக விலாசம், மதுரை, பக். 13
5. சந்திரசேகரன். தி. (1955) — செயங்கொண்டார் வழக்கம் உரைவிளக்கத்துடன். சென்னை. முன்னுரை ப. vi
5. இராமசாமிப் புலவர் சு.அ. (1955)—தமிழ்ப் புலவர் வரிசை - பத்தாம் புத்தகம். சென்னை. பக். 71
7. குமரகுருபரன் பிள்ளை. டி. எம். (1959) — செயங் கொண்டார் வழக்கம், ஸ்ரீவைகுண்டம். இந்த ஒரு பதிப்பே பாடபேதங்களையும் தந்து மூலத்தைக் குறிப்புரையுடன் வெளிப்படுத்தியது.

வாழ்வியல்

நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில் வன்றொண்டர், காரைக்குடிச் சொக்கலிங்க அய்யா, பாலகவி வயிநாகரம் இராமநாதன் செட்டியார், தேவகோட்டை வீர.லெ.சிந்நயச் செட்டியார், பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் போன்ற பெரும்புலவர்கள் பிறந்திருக்கின்றனர். ஆயினும் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில், காலத்தால் முதற் கண் அறியப்பெறும் அருள்மொழிப் புலவர் பாடுவார் முத்தப்ப செட்டியார். இவர் செட்டிநாட்டு மேலவட்டகையி லுள்ள கீழச்சிவல்பட்டியில்[1] பிறந்தருளினார்.

பிறப்பிடமும் பெற்றோரும் :

இன்று கீழச்சிவல்பட்டி, கீழச் சேவல்பட்டி, சிவல்புரி என்று வழங்கப்பெறும் ஊரைப் புலவர்கள் 'திருமதுரை சிவப் பட்டி' என்பர். இவ்வூரின் பழைய பெயர் 'அ. சிவப்பட்டி' அச்சரம்பட்டியைச் சார்ந்த சிவப்பட்டி என்பது கருத்து. கோ. அழகாபுரி, பி. அளகாபுரி என்பன போன்ற வழக்கே அ. சிவப்பட்டி என்பதுமாம். செட்டிநாட்டு ஊர்கள் சில வற்றை இப்படி முன்னெழுத்து (விலாசம்) அமைத்து வழங்குவதும் உண்டு.

உழைப்பாளிகளான நாட்டார்கள் வாழ்ந்த அச்சரம் பட்டியை ஒட்டியது இளையாத்தக்குடி. இங்கிருந்து சில நகரத்தார்கள் வந்து அச்சரம் பட்டியை ஒட்டிய பகுதியில்

குடியேறினர். புதிதாகத் தோன்றிய அந்தவூர் அ. சிவப்பட்டி என்று பெயர் பெற்றது. கீழச்சிவல்பட்டியில், இன்று மந்தையம்மன் கோயில் இருக்கும் இடத்தை ஒட்டியே பழைய அ. சிவப்பட்டி இருந்தது. இப்பகுதியில்தான், நகரத்தார்களுக்குரிய கண்ணத்தாள் கோயில் வீடு, அழகாத்தாள் கோயில் வீடு, ஆண்டத்தாள் கோயில் வீடு, பழநியப்பஅய்யா கோயில் வீடு போன்றவை உள்ளன. இவையெல்லாம் இப்பகுதியின் பழமையை உணர்த்துவன. இங்கு நகரத்தார்கள் குடியிருந்தபோதுதான் பாடுவார் முத்தப்ப செட்டியார் சிவப்பட்டியில் பிறந்தருளினார்.

பாடுவார் முத்தப்பர் பிறந்த வீடும் வளர்ந்த இடமும் எங்குள்ளது என்று அறியச் சான்றுகள் கிடையாது. அப்புலவர் வாழ்ந்த காலத்தில் குடிசை வீட்டில்தான் வாழ்ந்தார். இன்று உள்ளது போலப் பெரிய காரைவீடுகள் கட்டும் பழக்கம் அன்றில்லை.

பாடுவார் முத்தப்பரின் தந்தையார் பெயர் அழகப்ப செட்டியார். இதனை 'உருமதனன் அழகப்பன் உதவிய முத்தையன் எனும் ஒப்பில் சிங்கம்'[2] என்று ஒரு புலவர் பாடியுள்ளார். இவர் தாயார் பெயர் லட்சுமி ஆச்சி.[3] பாடுவார் முத்தப்பர் தன் பாடல்களில் தன் தாயார் பெயரையோ தந்தையார் பெயரையோ குறிக்கவில்லை. அவர்களைப் பற்றியும் பாடவில்லை. இவர் குடும்பத் தொடர்பான வேறு செய்திகள் கிட்டவில்லை.

வணிக குலத்தில் பிறந்த பாடுவார் முத்தப்பர், கருவிலே திருவுடையவராக இளமையிலேயே தமிழுணர்வும் ஆர்வமும் உடையவராக விளங்கினார். அவர் தம் தமிழறிவு கவிதை வளமாய்ப் பொங்கியது. செய்யுளியற்றும் இவருடைய தமிழறிவு, வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பாடும் பாக்களாகப் பெருகின. இதனால் வணிகரான முத்தப்பர் பாடுவார் முத்தப்பரானார்.

பாடுவார் ஆதல் :

பாடுவார் முத்தப்ப செட்டியார் முறையான புலமையும் எளிமையாகப் பாடல்கள் இயற்றும் திறமையும் வாய்ந்தவர்; கார்மேகம் போலக் கவிபாட வல்லவர். அவர் வாழ்ந்த காலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் செய்து பொருள் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அன்று கல்வியைக் காட்டிலும் பொருளுக்குத்தான் மதிப்பு. 'குறைந்த கல்வி-நிறைந்த சம்பாத்தியம்' என்பதுதான் செட்டியார்களின் மனப்பான்மை.

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் முந்திரி இலக்கம், பிறை வாய்ச்சுவடி, குழிமாற்று முதலியவற்றையும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நாலடியார் முதலியவற்றையும் நகரத்தார் இளைஞர்கள் பயின்று தமக்குத் தேவையான கல்வியைப் பெற்றனர். ஆனால் இவற்றுக்கும் மேலாகப் பாடுவார் முத்தப்பர் தமிழறிவு பெறுவதில் ஆர்வமுடையவராக விளங்கினார். ஆக்க இலக்கியம் படைக்கும் அவர்தம் அறிவாற்றல் மேலோங்கி நின்றது.

பலரும் வணிகம் செய்யும்போது, முத்தப்பரும் வணிகத்தில் ஈடுபட்டார். அப்போதும் அவருடைய தமிழ் உள்ளம் பாடிக் கொண்டிருந்தது. இயல்பாக எளிய இனிய கவிதைகளைப் பாடிக்கொண்டிருந்த முத்தப்பரைக்கண்ட கூட்டாளிகள் 'பாடுவார் முத்தப்பர்' என்றழைக்கலாயினர். முத்தப்பருக்கு இந்தப் பட்டப் பெயர் நீங்காது நிலைத்தது. முத்தப்பர் தமிழ் பாடும் தகைமையராய்ப் பாடுவார் முத்தப்பர் ஆனார். பாடுவார் என்பதனைப் 'பாடுவாய்' என்று குறிக்கும் இக்காலத்தறிஞர்களும் உளர்.[4] பாடுவார் என்பதே வழங்கிய அடைமொழியாகும். ஓதுவார் என்பது போலப் பாடுவார் என்பதும் வினையாலணையும் பெயராகும். வணிகராக வாழ்க்கையைத் துவங்கிய முத்தப்பர்

உள்ளத்துள் மறைந்திருந்த தமிழ்ப்புலமையாலும் ஆற்றலாலும் தமிழில் பாடுவாரானார்.

உருவாக்கிய தமிழ்ப்பண்ணை :

பாடுவார் முத்தப்பர், திண்ணைப் பள்ளியில் எழுத்தறிவு பெற்றுத் தன் முயற்சியால் நூற்கல்வி பயின்றார். எழுத்தறிவு பெற்ற முத்தப்பர் இலக்கிய இலக்கண அறிவை எங்ஙனம் அறிந்தார் என்று தெரிந்திடப் போதிய சான்றுகள் இல்லை. இயல்பிலேயே நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த முத்தப்பருக்கு மிதிலைப் பட்டியில் வாழ்ந்த கவிராயர்களோடு தொடர்பு இருந்தது.

மிதிலைப்பட்டி, செட்டிநாட்டின் தமிழ்ப்பண்ணை, தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர், 'மிதிலைப் பட்டியைத் தமிழ்த் தாய் குடி கொண்டிருக்கும் கோயில்'[5] என்று பாராட்டினார். இன்று உ.வே. சாமிநாதையர் அச்சிட்டு வெளியிட்ட நூல்கள் பலவற்றுக்கு அடிப்படையாக அமைந்த ஏடுகள் இவ்வூரில் இருந்தவைதாம். இத்தகைய சிறந்த புலவர் மரபினரொடு பாடுவார் முத்தப்பருக்கு நெருங்கிய பழக்கமிருந்தது.

மிதிலைப்பட்டியும் இராங்கியமும் மிக நெருங்கிய தூரத்தில் உள்ளவை. பாடுவார் முத்தப்பரின் இராங்கியம் கருப்பர் கோயில், மிதிலைப்பட்டிக் கவிராயர்களும் வழிபட்ட இடம். இராங்கியம் கருப்பர் கோயிலில், உள்ள மின்னோடியைப் பாடும் முத்தப்பர் சிற்றம்பலக் கவிராயர், இரவில் நடந்து போகும்போது மின்னோடித் தெய்வம் வழிகாட்டிச் செல்லும்[6] என்று பாடுவர்.

கருப்பர், மின்னோடிபோன்ற தெய்வங்கள் தன்னடியார்களுக்குக் கள்ளர் பயத்தைப் போக்கியும் பேய் பிசாசுகளை

அண்டவிடாமல் தடுத்தும் துணைவருவன. மின்னோடி' தமிழ்ப் புலவனுக்குத் துணை வருதலைச் சொல்லித் தனக்குத் துணையாக வேண்டுகிறார், ஆசிரியர்.

இன்னொரு நிகழ்ச்சியும், பாடுவார் முத்தப்பருக்கு மிதிலைப்பட்டிக் கவிராயர் குடும்பத்துடன் நெருக்கம் உண்மையைக் காட்டுகிறது. வெண்பாப் புலிச்சொக்கலிங்கக் கவிராயர் பாட்டை முத்தப்பர் மறுத்துப்பாடினார். இந் நிகழ்ச்சி மிதிலைப்பட்டியில்தான் நடைபெற்றது. மிதிலைப் பட்டி, பாடுவார் முத்தப்பர் வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயர் போன்ற புலவர்கள் பலரும் ஒருங்கு கூடும் இடமாக இருந்தது.

இவற்றையெல்லாம் ஒருங்கு நோக்கினால், மிதிலைப் பட்டி, புலவர் கூடும் தமிழ் மையமாகவும் அறிவுப் போர் நிகழும் பட்டிமன்றமாகவும் விளங்கியமை தெளிவாகும். ஆதலால் பாடுவார் முத்தப்பருக்கு, மிதிலைப்பட்டிக் கவி ராயர்களும் அவர்களின் உறவினர்களும் தமிழறிவையும் தமிழின்மேல் ஈடுபாட்டையும் ஏற்படுத்தினர். எனவே முத்தப்பர், மிதிலைப்பட்டிக்குச் சென்று அவர்களோடு கலந் துரையாடும் பழக்கமுடையவராக விளங்கினார். பாடுவார் முத்தப்பரின் தமிழறிவும் நூலாக்கத் திறமும் வளர்த்திட மிதிலைப்பட்டிக் கவிராயர்களின் உறவு உரமிட்டது.

தமிழ் கற்ற புலவரான பாடுவார் முத்தப்பரின் வாழ்க்கை வரலாறு தெளிவாகத் தெரியவில்லை. அவரைப் பற்றிப் பல்வேறு கதைகள்-அற்புத நவிற்சியாக-நம்புதற்கு இயலாதவையாக நகரத்தார்களிடையே வழங்குகின்றன. இவற்றில் எது உண்மை? எது பொய்? என்று பகுத்தறிய முடியவில்லை. பாடுவார் முத்தப்பரைத் தெய்வமாகக் கொண்டு வழிபடுகின்ற மக்களிடையே, இந்த பாகுபாட்டு ஆய்வு மகிழ்ச்சியைத் தாராது. எனவே பாடுவார் முத்தப்பர்

பாடிய பாடல்களில் காணலாகும் வாழ்க்கைக் குறிப்புகளால் அறியப்பெறுவன இங்கு இடம் பெறுகின்றன .

வாழ்க்கை நிகழ்ச்சிகள்

புறநானூற்றுப் புலவர்கள், புரவலர்களொடும் பிறரொடும் ஏற்பட்ட தொடர்பையெல்லாம் பாட்டாகப் பாடிப் போந்தனர். அவர்கள் பாடல்களை முறையாகப் புறத்திணை என்று சங்கச் சான்றோர் வகுத்து ஒழுங்குபடுத்தினர். ஆனால் பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுப் புலவர்கள் தாங்கள் உண்டபோது நடைபெற்றனவற்றையும் வழியிடையே கண்டவற்றையும் பிறவற்றையும் பாட்டாகப் பாடினர். இவை பாடியவர், பாடப்பட்டோர் என்று பெயர் தெரிந்த பாடல்கள். பாடுவார் முத்தப்பரின் பாக்களும் அந்த வகையில் அமைந்தவையே. அவருடைய சொந்த வாழ்க்கை நிகழ்ச்சிகளே, பாடல்களில் இடம் பெற்றிருக்கின்றன.

அன்னமிட்ட சிறப்பு :

தமிழ் கற்றுத் தமிழில் பாடிய இப்புலவர், தம் இன வழக்கப்படி வணிகத்தில் ஈடுபட்டார். அவர் உப்புவணிகம் மேற்கொண்டபோது' பசியால் களைப்புற்றார். அப்போது நகரத்தார் ஒருவர் உணவளித்துப் பாடுவார் முத்தப்பரை உபசரித்தார். அவருடைய அன்பையும் உபசரிப்பையும்கண்டு, முத்தப்பர் அவரை வாழ்த்தினார். அப்பாட்டு, முன்பின் அறியாதவரை வாழ்த்தியது. எனவே பாடுவார், பொது நிலையில் அன்னமிட்டவரின் இனமக்கள் அனைவரையும் வாழ்த்தி விட்டார்.

> அன்போ டறுசுவையோ டன்னமளித் தாதரவாய்
> என்பசியைத் தீர்த்துவிட்ட தென்னினமே—பின்பின்
> நகரத்தார் தங்களிடம் நண்ணிக் குபேரன்
> பகருகடன் கேட்கவரும் பாங்கு

இந்த நேரிசை வெண்பா, நகரத்தார் இனம் முழுமைக்கு முரிய வாழ்த்தாகிறது. இப்பாடல் எழக்காரணமான செட்டியார் யார்? அவர் எந்தவூர்? என்பன போன்ற செய்திகள் தெரியவில்லை. முன்பின் தெரியாத ஒருவர்க்கு (பாடுவார் முத்தப்பர்) அன்னமிட்டு வைரம் போன்ற வெண்பாவைத் தன் சாதியார் அனைவருக்கும் பாடவைத்து விட்டார், உணவிட்ட அந்தச் செட்டியார்.

பாடுவார் முத்தப்ப செட்டியாரை யார் என்று அறியாமல் அந்தச் செட்டியார் உணவிட்டார். அந்தச் செட்டியார் பெயர் என்ன? கோயில் எது? என்று அறியாமல் முத்தப்பர் அவரைப் பாடினார். அவர் அன்னமிட்டதும் அவர் செட்டியார் என்பதும் தாம் முத்தப்பருக்குத் தெரியும். இதனால் தனிமனிதனை வாழ்த்திப் பாடவேண்டிய பாட்டுப் பொது வாழ்த்தாக இன வாழ்த்தாக மாறிவிட்டது.

அன்னம் இடும் அறம் தான் அறங்களில் தலைசிறந்தது. உயிர்வாழ அன்னமே அடிப்படை. ஆகையால் பாடுவார் முத்தப்பர் உணவூட்டி உபசரித்தலையே உயர்ந்த அறமாகப் போற்றுகிறார். பாடுவார் முத்தப்பர் வாழ்ந்த காலம் தமிழகத்தில் மழையின்றி வறண்ட காலம். எனவே தான் அவர் வயிற்றுக்கு ஈதலையே உயர்ந்ததாகப் பாராட்டுகிறார். வயிற்றுப் பசியைத் தணிக்காதவர்களின் பண்புகண்டு இடித்துரைக்கின்றார்.

வாழ்த்தின் கருத்து :

இந்த வெண்பாவின் கருத்தென்ன? முதலிரண்டடிகளில், உணவிட்டவர் அன்புடனும் அறுசுவையுடனும் அகமும் முகமும் மலர அன்னமிட்ட சிறப்பு எடுத்துரைக்கப் பெறுகிறது. அடுத்துத் தன் பசியைத் தன் மரபினரே போக்கியமை கூறப்படுகிறது. உணவு சமைப்பதில், இனத்துக்குத் தக்கவாறு முறையும் சுவையும் மாறும். ஒரு சாதியார் உணவு செய்யும்

முறையும் சுவையும் அடுத்த சாதிக்காரருக்குப் பிடிக்காது. இஃது உலகியல். தன் இனத்தவரே சமைத்துத் தன்னினத் தவரே உணவளிப்பது உள்ளூரில் சாதாரணமானது. இம் மாதிரி வெளியூரில் கிடைப்பது அரிது. வணிகத்துக்குச் சென்ற வூரில், தன் சாதியாரே தனக்கு உணவாக்கி அன்போடு அன்னமிட்டமை கண்டு முத்தப்பர் மகிழ்கிறார்.

இவர் அன்னமிட்ட நகரத்தாரைப் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்தாமல், வேறு வகையாக வாழ்த்துகிறார். பொருளுக்குத்தான் உலகத்தில் மதிப்பு. பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை. அதனால் செல்வத்துக் கதிபதியான குபேரன் நகரத்தார்களிடம் கடன் கேட்க வரவேண்டும் என்று இவர் பாடினார். இவ்வாறு பாடியதில் இரண்டு குறிப் புண்டு. ஒன்று, குபேரன் போன்ற பெருஞ்செல்வர்களுக்கு நகரத்தார்கள் கடன் கொடுக்குமாறு செல்வவளம் பெருக வேண்டும். அவர்கள் கடன் கொடுத்தால், வட்டிக்குக் கொடுக்கும் தனவைசியர்களாய் வளருகின்றனர். இதனால் இஃது இவர்களின் தொழில் வளர்ச்சியாகின்றது. இரண் டாவது, குபேரன் சங்கநிதி, பதுமநிதி எனும் இருவகை பெருஞ்செல்வங்களையுடையவன். அவனே இவ்வினத்தாரிடம் கடன் வாங்க வேண்டுமானால், இவ்வினத்தார் அவனை விடச் செல்வராய்த் திகழ்தல் வேண்டும். எவ்வாறேனும் பாடுவார் முத்தப்பர் நகரத்தார்களைப் பெருஞ்செல்வர் களாய் வாழப் பாடியுள்ளார். அவ்வை, கம்பன் போன்ற புலவர்கள் கூழுக்கும் உணவுக்கும் பாடியது போலப் பாடுவார் முத்தப்பர் ஒருவேளை உணவுக்கு மிகச் சிறந்த வாழ்த்தைப் பாடினார்.

உணவிட்டு உள்ளன்புமிக மக்களொடு பழகுவதுதான் உயர்ந்த பண்பு. இதனையே விருந்தோம்பல் என்பர். இப்

பண்பைத்தான் பாடுவார் முத்தப்பர் தம் மக்களிடையே எதிர்பார்த்தார். இராங்கியம் கருப்பரைப் பாடுவார் முத்தப்பர் பாடும்போது, 'நீடாக நல்லறிவு வரவேணும் அன்னமிட நிதியும்வந்தெய்தவேணும்'[8] என்று வேண்டுகிறார். இதனால் பாடுவார் முத்தப்பர் வருவோரை வரவேற்று அன்னமிட வேண்டும் என்று கருதியமையை அறிய முடியும்.

வயிற்றுத் தீத்தணிய அன்னம் இட்டவரின் இனத்தைப் பாராட்டிய முத்தப்பர், உணவு வேளையில் வரவேற்று உணவிடாத மக்களைக் கண்டித்துப் பாடிய நிகழ்ச்சிகளும் உண்டு. அத்தகைய ஒன்று செவ்வூரில் நடந்தது.

விருந்திடாத ஊர் :

நகரத்தார்கள் வாழுகின்ற தொண்ணூற்றாறு ஊர்களில் ஒன்று செவ்வூர். இங்கு மிதிலைப்பட்டிக் கவிராயர்களொடு உறவுடைய புலவர் மரபினர் வாழ்ந்தனர். இவ்வூருக்குப் பாடுவார் முத்தப்பர் சென்றார். அவர் அங்கு எதற்காகப் போனார் என்று அறிய முடியவில்லை. அல்லது அவர் வேறெங்காவது போகும்போது செவ்வூர் வழியே சென்றாரா என்பதும் தெரியவில்லை.

பாடுவார் முத்தப்பர் செவ்வூர்க்குள் போன நேரம் உணவு உண்ணும் நேரம். அருள்மொழிக் கவிஞர் ஊருள் வருவதைக் கண்டபின்னும் அவ்வூர் நகரத்தார்கள் பாராமுகமாய் இருந்தனர். இனத்தவர் என்று அறிந்தும் நகரத்தார் யாரும் வரவேற்று உபசரிக்கவில்லை என்பது அவர் வருத்தம். பசி நேரத்தில் உணவளிக்க வேண்டும் என்ற மனிதநேயமற்ற அவர்கள் பண்பைப் பொதுமைப்படுத்தி

''எவ்வூரிற் போனாலும் எவ்வுலகிற் சென்றாலும்
செவ்வூரிற் போகமனம் செல்லாதே—அவ்வூரார்
பார்த்திருக்கத் தின்பார் பசித்தார் முகம்பாரார்
கோத்திரத்திற் குள்ள குணம்''[9]

எனப் பாடினார். யாரோ குறிப்பிட்ட சிலர் நடந்து கொண்ட முறை ஊரின் பொதுப் பண்பாகிவிட்டது. பாட்டைக்கேட்டு வந்திருப்பவர் யார் என்று உணர்ந்து முத்தப்பரைப் போற்றி உபசரித்துப் பிழை பொறுக்க வேண்டினர், சிலர். அதன்பின், முத்தப்பர் ''அவ்வூரார் பார்த்திருக்கத் தின்னார் பசித்தார் முகம் பார்ப்பர்'' என்று நல்வாக்காக மாற்றினார். விருந் தோம்பல் சிறப்பைப் போற்றும் ஊராக முத்தப்பர் செவ்வூரைச் சிறப்பித்தார். ஆனால் பாட்டில் விழுந்த கறை மாறவில்லை.

மேலே விளக்கிய இரண்டு நிகழ்ச்சியையும் ஒப்பிட்டால் தனிப்பட்டவர்களின் செய்கையைப் பாடுவார் முத்தப்பர் பொதுமைப் படுத்திப் பாடியுள்ளமை புலனாகும். ஊர், பெயர் அறியமுடியாத பாட்டு மகிழ்ந்து பாடியது; ஊர்ப் பெயர் தெரியும் பாட்டு வருந்திப் பாடியது. ஒன்று இனச் சிறப்பை வாழ்த்தி அமைந்தது. மற்றொன்று ஊர்ப்பண்பாகப் பாடப் பெற்றது. வாழ்த்திப் பாடிய பாட்டு, செட்டி நாடு அல்லாத வேற்றூரில் நடந்த நிகழ்ச்சியாக இருக்க வேண்டும். செட்டிநாட்டு ஊரில் நடந்திருந்தால், பாடுவார் முத்தப்பர் அந்த ஊரையும் மக்களையும் வாழ்த்தியும் போற்றியும் பாராட்டியும் பாடியிருப்பர். இவர் அரியக் குடிக்குச் சென்றபோது, அந்தவூர் மக்களும் இவரைப் புறக் கணித்திருந்தனர். அப்போதும் ஒரு பாட்டுப் பிறந்தது.

அறிந்தும் அறியாத ஊர் :

புலவர்கள், மக்கள் தங்களை எப்போதும் மதித்துப் போற்ற வேண்டும் என்று எதிர்பார்த்தனர். அவர்கள் தங்களை மதியாத போது சினமுற்றனர். மக்களுக்கு நல்ல பண்பும் நல்ல் உணர்வும் வரவேண்டும் என்பதுதான் புலவர்கள் கருத்து. அருள்மொழிக் கவிஞர்கள் உள்ள உணர்ச்சியை அவர்கள் சொல்லும் செய்யுட்கள் காட்டு

கின்றன. அவர்கள்பாடும் பாடலில் அவர்களையும் மீறி விழும் சொற்கள் மெய்ம்மொழிகளாகி நிறைமொழியாகிப் பலித்து விடுகின்றன.

பாடுவார் முத்தப்பர் அரியக்குடிக்குச் சென்றபோது அவ் ஊரார் இவரை முன்பின் அறியாதவர் போன்றிருந்தார்கள். அங்கிருந்தவர்களில் எவரோ பாடுவார் முத்தப்பரை நன்கு அறிந்தவர் இருந்திருக்கிறார். அவர் இப்புலவரை அறியாதவர் போல இருந்தார். பின் புலவர் வாக்குக்கு அஞ்சி 'வருக வருக' என்று நகர மக்கள் வரவேற்றனர். அரியக்குடி நகரத்தாரின் இந்நிலையை

''அரியக் குடிநகரார் அத்தனைபே ரத்தனையும்
வரிசைக் குடியாக வாழ்க—பெரிய
தெரியாரைப் போன்றிருந்தார் தேடிவந்தார் பின்னர்
உரியாரைப் போன்றா ருகந்து''[10]

என்று முத்தப்பர் பாடினார். 'பெரிய தெரியாரைப் போன்றிருந்தார்' என்பது பாடுவாரை அறிந்த நகரத்தார்கள் அரியக்குடியில் இருந்தனர் என்பதைக் காட்டுகிறது. பின் பாடுவார் முத்தப்பர் என்று அறிந்து அவரைத் தேடி வந்து உபசரித்தனர். புலவர் இந்த நேரிசை வெண்பாவில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை அணுவளவும் குறையாமல் பாடி விட்டார்.

முத்தப்பர் பாடல் 'அரியக்குடி நகரத்தார் அத்தனைபே ரத்தனையும்' என்று பாடுகின்றது. இதில் சொன்னபடி அரியக்குடி நகரத்தார் புள்ளி எண்ணிக்கை கூடுவதுமின்றிக் குறைவதுமின்றி அவ்வாறே இருப்பதாகச் சொல்லு கின்றனர்.[11]

நிறை மொழிப் புலவர் :

நாடெங்கும் உலா வந்த பாடுவார் முத்தப்பர், செந் தமிழ்ப் புலவராய் விளங்கியது போலப் பொய்யாமொழிப் புலவராய் நிறைமொழி மாந்தராய்த் திகழ்ந்தார்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"[12]

என்பது திருவள்ளுவரின் திருவாய்மொழி. இத்திருக்குறளுக்கு இலக்கியமாக வாழ்ந்தவர் பாடுவார் முத்தப்பர். இவர் சொல்லிய சொற்கள் செயலாயின. இஃதே இவர் வாழ்க்கையின் தனிச் சிறப்பு. பாடுவார் முத்தப்பர் கற்ற தமிழ் அவருக்குப் பொய்யா மொழி கூறும் அரிய ஆற்றலை அருளியது.

தமிழறிவும் தமிழ்ப் பாப்புனையும் ஆற்றலும் வாய்ந்த பாடுவார் முத்தப்பர் தம் இனமரபுக்கிணங்க உப்பு வணிகம் மேற்கொண்டார். அவருக்கோ சந்தையில் பொருள் விற்கச் சென்றால், ஆயக்காரனுக்குக் கட்டணம் கொடுக்கவேண்டும் என்பதை அறியாத பருவம். சந்தைக்கு உப்பு விற்க முத்தப்பர் சென்றார். வணிகத்துக்கு முதன்முதல் நுழையும் போதே, சந்தையில் ஆயக்காரன் தனக்குரிய கட்டணத் தொகையைக் கேட்டு அவரை நிறுத்திவிட்டான். அவர் வணிகத்துக்குக் கொண்டுவந்த முதலே ஒரு பணம். ஒரு பணத்துக்கும் விற்பனை செய்ய உப்பு வாங்கியாகிவிட்டது. கடன் வாங்கிக் கட்டணத்தொகை கொடுக்கவும் யாருமில்லை. வியாபாரம் செய்து பொருள் ஈட்டலாம் என்று எண்ணிய முத்தப்பர் ஏமாற்றத்தால் வருந்தினார். ஆயக்காரனோ வியாபாரம் செய்ய முடியாதபடிச் சந்தையில் உப்பைத் தடுத்து நிறுத்திவிட்டான். முத்தப்பர் நிதானமாக விடுத்த வேண்டுகோளும் ஆயக்காரன் செவியில் ஏறவில்லை. இத்தகைய பேச்சுகளைக் கேட்டே பழக்கப்பட்ட அவன், இவர் பெருமையை யுணராது இருந்தான்.

முத்தப்பருக்கு காத்திருந்து காத்திருந்து காலம் ஓடிவிட்டது. பசி வேறு நெருப்பாய் எரித்தது. முத்தப்பரோ பசி பொறுக்கமாட்டார். முதற்கண் தொடங்கிய வியாபாரம்

இப்படி இழுபறியாக இருந்தது. முதற்கோணல் முற்றுங் கோணல் அன்றோ? ஆத்திரமும் கோபமும் ஆற்றாமையும் ஒருங்கிணைந்து அவர் உணர்ச்சியைத் தூண்டின. அப்போது தமிழ்ப்பாடல் ஒன்று உருவானது.

“தாயைக் கேட்டோர் பணம்வாங்கிச்
சந்தை தேடி உப்பளந்து
மேயப் போகும் பசுவைப்போல்
மேற்கே நாடிப் போகுங்கால்
தோயப் போட்டு வழிமறித்தான்
தோசி முகத்துச் சிவராமன்
ஆயக் காரன் அவன்இல்லம்
அடியோடு எரிந்து அழிந்திடவே”[13]

என்பது அவர்பாடிய பாட்டு. இளமையும் உலகியல் அனுபவமும் இல்லாத நிலையில் முத்தப்பரின் நெஞ்சக் கொதிப்பு எரிமலையாய்க் குமுறிப் பாட்டாய் வெளிப்பட்டது. அந்தோ! என்ன செய்வது? ‘அவன் இல்லம் அடியோடு எரிந்து அழிந்திடவே’ என்று பாடலில் அறம் விழுந்தது. அதுபோல ஆயக்காரச் சிவராமன் இல்லம் தீக்கிரையாயிற்று. புலவர் வாக்குப் பொய்யா மொழியாயிற்று. ஆயக்காரச் சிவராமன் வீடு எரிந்த நிகழ்ச்சியும் அவன் முத்தப்பரை வருத்தியதும் ஊரெங்கும் தெரிந்தது. அதனால் பாடுவார் முத்தப்பரின் தெய்வத் தமிழ் பயிலும் நாவன்மை நாடெங்கும் பரவிற்று.

இந்நிகழ்ச்சியைக் கூறும் பாடலிலும் ஆயக்காரன் பெயர் சிவராமன் என்றுள்ளதே யன்றி ஊர்ப் பெயரில்லை. இஃது எங்கு நடந்தது என்ற விவரம் தெரிந்திலது.

ஒருவர் சொல்லும் சொற்கள் அப்படியே நடந்துவிடும். அவர் சொன்னதற்கும் நடந்ததற்கும் என்ன தொடர்பு என்று அறிவியல் விளக்கம் தர முடியாது. இஃது இயற்கைக்கு

அப்பாற்பட்டது. இத்தகைய சொற்களையே 'நிறைமொழி' என்பர். பரிமேலழகர், 'நிறை மொழி' என்பது, அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தே விடும் மொழி'[14] என்று விளக்குவர். இதனை ஊரக வழக்கில், 'வாக்குப் பலிதம்' என்பர்.[15] பாடுவார் முத்தப்பருக்கு இந்தத் தெய்வ ஆற்றல் - வாக்குப் பலிதத்திறன் அமைந் திருந்தது. அத்திறமை அவர் மரபினர்களுக்கு நன்மையை விளைத்தது.

ஆங்காங்கே, சிறு சிறு நிகழ்ச்சிகளாக நடந்தவை முத்தப்பரின் புகழையும் மதிப்பையும் நாடெங்கும் பரப்பின. அவற்றுள் சிறந்ததும் உயர்ந்ததுமான நிகழ்ச்சி, பாடுவார் முத்தப்பர், வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயரொடு போட்டியிட்டதாகும்.

வெண்பாப்புலியும் நத்தமும் :

நத்தத்தைத் தலைநகராகக் கொண்டு, சில்லவார் குலத்தைச்சார்ந்த நாயக்க மரபினர்கள் ஆட்சி புரிந்தார்கள். இன்று நத்தம் என்று வழங்கும் ஊர் ஒரு காலத்தில் 'எரசு' நகரம் என்றும் 'எறிசை' என்றும்[15] வழங்கியது. இந்நிலப் பகுதியை ஆட்சிபுரிந்தவன் லிங்கமநாயக்கன். இவனை இம்முடிலிங்கேந்திரன்' என்பர். இவன் ஆதரவில் வாழ்ந்த புலவர் வெண்பாப்புலிக் கவிராயர்.

வெண்பாப்புலிக் கவிராயர், புலவர் மரபிலே பிறந்தவர். இவர் இலக்கண இலக்கியங்களைக் கற்றவர். இவர் பண்டார மரபினர். மிதிலைப் பட்டிக் கவிராயர் குடும்பத்துடன் நெருங்கிய உறவு பூண்டவர். இவர் நீண்டநாள் வாழ்ந்தவர். வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயர், மதுரை மாவட்டம் மேலூரைச் சார்ந்த மணப்பச்சேரி[16] என்ற ஊரினர். நத்தம் குறுநிலத்தலைவரான குமாரலிங்கர் மேல்

குமாரலிங்கர் குறவஞ்சி, குமாரலிங்கன் காதல் என்ற இரு நூல்களை இவரியற்றியுள்ளார். சிவகெங்கை இராசேந்திர பூபதி காதலும் இவர் இயற்றியதேயாம்.

வெண்பாப்புலிக் கவிராயர் மைத்துனன் அரவங்குறிச்சிச் சொக்கலிங்கக் கவிராயர். இவ்விருவரிடையே நடந்த கடிதத் தொடர்புக்குரிய ஓலைகள் மிதிலைப்பட்டிக் கவிராயர் வீட்டில் கிடைத்துள்ளன. அந்தப் பாடல்களை அரசு சுவடிகள் நூல் நிலையம் அச்சிட்டுள்ள தனிப்பாடல் திரட்டில் காண முடிகிறது.[17] அந்தப் பாடல்கள் சீட்டுக் கவிகளாக உள்ளன. அந்தப் பாடல்களில்

'வெண்பாவின் புனிதனாஞ் சொக்கலிங்க
கவிராச வேந்தன் கல்வி'[18]

'அற்புதச் சொக்கய்யன் மைத்துனன்
புலிசொக்கன் அன்புட னெழுதுமோலை'[19]

'வெண்பாப்புலிச் சொக்கலிங் கேந்திரசுவாமி
யிணையடியை மறவாத சொக்கன்'[20]

'கண்டான் துரைதுரை வெண்பாப்புலிச்சொக்க
லிங்கம்'[21]

என்று வருவனவற்றை ஆராய்ந்தால், வெண்பாப்புலிக் கவிராயரின் பெயர் 'சொக்கலிங்கக் கவிராயர்' என்று அறியப் பெறும்.

அரண்மனைக் கவிதை:

வெண்பரப்புலிச் சொக்கலிங்கக் கவிராயர், எறிசைலிங்கம நாயக்கன் (Erradatu Lingama Nayak) என்ற இம்முடிலிங்கேந்திரனைப் பாடிய பாடல் ஒன்று அவன் அரண்மனை முகப்பில் எழுதிவைக்கப்பட்டிருந்தது.[22] அப்பாட்டு,

''இம்முடிலிங் கேந்த்ரதுரைக் கேற்ப நடந்தோர்கள்
தம்முடிகொண் டேயுலகில் தாம்வாழ்வர்''[23]

என்பதாம். இப்பாட்டைக் கண்ட முத்தப்பர், அக்குறுநிலத் தலைவன் செய்த வன்செயலை அறிந்தவராதலின் அப் பாட்டைத் தொடர்ந்து

''...............................—சும்மாவோ
தப்பில் தலையரிவான்; சாட்சியொன்று வேண்டுமெனில்
அப்பனெனும் தொப்பவீர னாம்''[24]

என்று பாடி வைத்தார். பாடுவார் முத்தப்பர் எழுதிவிட்டு லிங்கம நாயக்கனுடைய நில எல்லையைத் தாண்டிவிட்டார். தன்னைத் தாழ்வுபடுத்திய இப்புலவரை எவ்வாறேனும் அவமானப்படுத்த வேண்டும், தண்டிக்க வேண்டும் என்ற எண்ணம் லிங்கம நாயக்கனுக்கிருந்தது.

அறம்பாடிய கவிதை:

நத்தத்திலிருந்து மிதிலைப்பட்டி வந்த பாடுவார் முத்தப்பர், லிங்கம நாயக்கன் தன்மீது பகைபாராட்டுவதை அறிந்து அவன் மீது ஒரு பாடல் பாடி அனுப்பினார்.

''பத்தலார்க்கு உதவுபதி எரசுமேவும்
பாக்கியனே யிம்முடிலிங் கேந்திராநின்
தத்துவாம் பரிகளெங்கே? கிரீடமெங்கே?
தண்டிகைபல் லக்குமெங்கே? தனந்தானெங்கே?
மெத்தைகொண்ட வீடுமெங்கே? யதனுள்மேவும்
மேலான பவுசொடுபண் டாரமெங்கே?
சுத்தவீ ரங்களெங்கே? சும்மாபோச்சோ
தொப்பைவீ ரனைவதைத்த தோஷந்தானே''[25]

இப்பாடலில் முத்தப்பர், தொப்பை வீரனைக் கொன்ற பழிபாவத்தால் எல்லாம் அழிந்தது என்று பாடுவர். ஆனால் பாட்டின் முதலடியோ அவனைப் பாராட்டுவது போல

அமைந்துள்ளது. பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டில், நத்தம் சமீன் போன்ற சமீன்கள், தாங்கள் தேடிய பொருளை யெல்லாம் தேவதாசியர்க்கு வழங்கி இன்பத்துய்ப்பில் செலவழித்தன. அதனையே, முத்தப்பர் 'பத்தலார்க்கு உதவுபதி' என்று குறிப்பர்.

மங்கையரின்பத்தில் மகிழ்ந்திருந்த லிங்கமநாயக்கனை எல்லாச் செல்வமும் இழக்குமாறு பாடுவார் முத்தப்பர், இவ்வாறு பாடினார். பாடுவார் முத்தப்பர் இங்ஙனம் பாடியமையால்தான் அவன் எல்லாச் செல்வங்களையும் இழந்தான் என்று கருதுவர், மக்கள். பாண்டிய நாட்டு வரலாற்றை ஆராயும்போது, நத்தம் சமீன் உரிமையாளன் லிங்கமநாயக்கன் எல்லாவற்றையும் இழந்து சிவகங்கையிலும் திருச்சியிலும் புகலடைந்தது வரலாற்றுண்மை என்று தெரிய வருகிறது.

லிங்கம நாயக்கன் வரலாற்றுண்மை:

பாடுவார் முத்தப்பர் வரலாற்றில் இடம் பெறும் லிங்கம நாயக்கன், நத்தம் சமீனை ஆண்டவன். லிங்கமநாயக்க னுடைய அதிகாரியாக இருந்த அணைக்குடியா பிள்ளைக்குப் பின் சொக்கையாபிள்ளை என்பவன் அதிகாரியானான். அப்போது, மதுரையிலிருந்த கான்சாகிபு சொக்கையா பிள்ளையைக் கைக்குள் போட்டுக் கொண்டு நத்தம் சமீனை நவாபை எதிர்க்குமாறு கேட்டான். ஆனால் நத்தத்தை ஆண்ட லிங்கமநாயக்கன் அதற்குச் சம்மதிக்கவில்லை. கான்சாகிப், நத்தம் சமீனைச் சொக்கையா பிள்ளைக்குத் தருவதாகச் சொல்லவே, அவன் வேலங்குடி, தத்தனேரி ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினான். லிங்கமநாயக்கன் தூக்கிலிடப்பட்டான். நத்தம் சமீன் உரிமையாளர் குமாரலிங்கனுக்கு எதிராகப் படையெடுத்தான். அவனோ சிவகங்கைக்குப் போய்ப் பின் திருச்சி சென்று நவாபின் ஆதரவில் இருந்தான்.

நத்தத்தைக் கைப்பற்றிய சொக்கையா பிள்ளையைச் சமீன் மக்கள் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் அவன் ஒரு தொட்டிய நாயக்கனைத் தலைவனாக்கினான்; அம்முயற்சியும் வெற்றி பெறவில்லை. இவ்வாறு ஆறு திங்கள் சொக்கையா பிள்ளையின் ஆட்சியில் நத்தம் சமீன் இருந்தது. நவாபு அனுப்பிய படைத்தலைவன் பூச்சி நாயக்கன் மீண்டும் நத்தம் சமீனைக் கைப்பற்றிக் குமார லிங்கனுக்குக் கொடுத்தான்.[26]

இந்த வரலாற்றையும் பாடுவார் முத்தப்பர் வரலாற்றையும் ஒப்பு நோக்கும்போது, பாடுவார் முத்தப்பர் நத்தத்திற்கு லிங்கமநாயக்கன் ஆளுகையின் போது வந்திருக்கிறார். அப்போதுதான் வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயர் பாடிய பாடலின் பிற்பகுதியை நிறைவு செய்திருக்கிறார். அப்பகுதியில் சுட்டப்பெறும் 'தொப்ப வீரன்' என்பான் வரலாறு தெரியவில்லை.

நத்தம் அரண்மனை முன் எழுதிய பாடலில், 'இம்முடி லிங்கேந்திரனை அனுசரித்து நடப்பவர்கள், தங்கள் தலையொடு உயிர்வாழ்வார்கள்; அவனை மீறி நடந்தால் தலையிழப்பர்; அதற்குச் சான்று அப்பன் என்னும் தொப்பை வீரன் என்ற கருத்து உள்ளது. முன்னிரண்டடிகள், பாராட்டுவன; பின்னிரண்டடிகள் பழிப்பன; பின்னிரண்டடிகள், முன்னிரண்டடிகளின் பாராட்டையும் இகழ்ச்சியாக்கிவிட்டன.

இந்தப் பாட்டின் பிற்பகுதியை நோக்கும்போது, லிங்கம நாயக்கன், தொப்பைவீரன் என்பானை என்ன காரணத்தாலோ கொலை செய்திருக்கின்றான். அக்கொலை அறத்துக்கு மாறானது. அதனை அறிந்த முத்தப்பர், தம் துணிவால் அதனைப் பாடலில் சுட்டி இகழ்ச்சியாக எழுதிவிட்டார். இதன் பின் 'பத்தலார்க்கு' என்ற பாடலைப்

பாடியனுப்பினார். இவர் பாடிய பின்தான், விங்கமநாயக்கன் உயிரிழந்தான். அவன் மகன் நத்தம் சமீனை இழந்து திருச்சியில் அடைக்கலம் புகுந்தான். எனவே பாடுவார் முத் தப்பரின் மொழி நிறைமொழியாகியது. தொப்பை வீரனைக் கொன்ற பழியே லிங்கநாயக்கனுக்கும் அவன் வழியினர்க்கும் ஏற்பட்ட துன்பங்களுக்குக் காரணமாகும். இவ்வாறு ஆறு திங்கள் இவர்கள் பெருந்துன்பத்துக்கு ஆளாகியிருக்கின்றனர் எப்படியோ, பாடுவார் முத்தப்பர் பாடிய பாட்டு மெய்ப் பாட்டாகி, நத்தம் சமீன் வரலாற்றுடன் ஒத்துச் செல்லு கின்றது.

லிங்கமநாயகனுக்கு ஏற்பட்ட அழிவும் தன் பாட்டுக்கு எதிர்பாட்டு எழுந்ததும் கண்ட வெண்பாப் புலிச் சொக்கலிங்கக் கவிராயர், பாடுவார் முத்தப்பரைத் தன் புலமையால் வென்று அடிமை கொள்ள வேண்டும் என்று கருதினார். எனவே முத்தப்பரின் சொந்தவூருக்கு வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயர் போந்தார். அப்போது முத்தப்பர், மிதிலைப்பட்டி போயிருப்பதாக அறிந்து தானும் அங்குச் சென்றார்.

வழி வழிப் புலமையும் தெய்வப் புலமையும் :

மிதிலைப்பட்டிக் கவிராயர் வீட்டில் பாடுவார் முத்தப்பரும் வெண்பாப்புலிக் கவிராயரும் சந்தித்தனர். இருவருக்குமிடையே இருந்த சீற்றமும் ஆத்திரமும் கவிதைப் போட்டியாக வெளிப்பட்டன. வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயர், மிதிலைப்பட்டி வேலுக் கவிராயர் வீட்டுக் கடாவின் தலை வெடிக்கப் பாடினார். அவர் பாடிய பாட்டு,

''எற்கவிக்கு நேரே எதிர்கவியும் சொல்லுதற்கோர்
பொற்கவியு முண்டோஇப் பூவுலகில்—நற்கவிசொல்
வேலுக் கவிராயர் வீட்டுக் கடாத்தலையே
சாலிரண்டு துண்டாவாய் தான்''[27]

என்பதாம். உடனே அங்கிருந்த ஆட்டுக்கடாவின் தலை வெடித்தது. அதற்கு மாறாக, பாடுவார் முத்தப்பர் கடாவின் தலை வெடிப்பில் திருநீறிட்டு முருகனை வேண்டி,

"கலையது படித்த வெண்பாக்
கவிப்புலி கவியைக் கேட்டுத்
தலையது துணிப்புண் டாடு
தவிக்கிற தந்தோ; முன்போல்
நிலையது பொருந்த என்று
நிகழ்த்தி னேன்முத்தப் பன் யான்
உலகினில் உள்ளோர் காண்மின்
உமையவள் சுதன் காப்பாமே"[28]

என்று பாடினார். ஆட்டுக் கடாவின் தலை முன்போல் பொருந்தி வெண்பாப்புலி மேல் பாய்ந்தது. பாடுவார் முத்தப்பரின் தெய்வத் தமிழாற்றலை உணர்ந்த வெண்பாப் புலிக் கவிராயர் வியப்புற்றார். பாடுவார் முத்தப்பரின் செந்தமிழ் வாழவைத்து உயிர்ப்பிக்கும் தமிழாய் இருப்பதை உணர்ந்து வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயர் அஞ்சினார். பரம்பரைத் தமிழ்ப் புலவரின் புலமை அருள் மொழிக் கவிஞரின் புலமைக்குத் தலை வணங்கியது. உடனே வெண்பாப்புலிக் கவிராயர் தன் முனைப்படங்கி 'முத்தப்பா! என்னைப் பெத்தப்ப' (பெற்ற அப்பா) என்று சொல்லிப் பாடுவாரைத் தழுவி மகிழ்ந்தார். மகிழ்ச்சியான்

"கற்றவர் கல்விக் குரையாணி
நீதங்கக் கட்டி நின்னைப்
பெற்றவ ளேசெல்வப் பேறுள்ள
தாய்நின் பிதாமுன் செய்த
நற்றவ மேதவம் நாட்டார்
வணிகர்க் கொர்ரத் தினம்நீ
கொற்றவ ரும்புகழ் முத்தப்ப
பூப குணரத் தினமே"[29]

என்று பாராட்டிப் பாடினார். முத்தப்பர் மீது இருந்த ஆத்திரமெல்லாம் அன்பாய் மாறிட வெண்பாப்புலிக் கவிராயர் அவரைப் பாராட்டினார்.

தமிழ்ப் புலவர்களிடையே, இத்தகைய போராட்டக் கதைகளும் கவிதைகளும் எழுந்ததாகத் தனிப்பாடல் திரட்டுகள் கூறுகின்றன. பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுப் புலவர்கள் வரலாறு முழுமையும் போட்டியும் பொறாமையும் நிறைந்ததாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. பாடுவார் முத்தப்ப செட்டியார் வரலாற்றில், இந்த நிகழ்ச்சி அவருடைய வாக்குப் பலித வன்மையையும் ஆற்றலையும் காட்டுவதாகத் திகழ்கின்றது. இது பொய்யா? மெய்யா? என்று ஆராய்ந்து முடிவெடுப்பதற்கில்லை. ஆனால் பாடுவார் முத்தப்பர், புலவரை வென்ற புலவராக வாக்குப் பலித முடையவராக நாட்டில் வலம் வரத் தொடங்கினார். இதனால் அவர் புகழ் நாடெங்கும் பரவியது.

திருமறைக்காட்டில், திருஞான சம்பந்தர் திருக்கோயிற் கதவைத் திறக்கப் பாடினார். திருநாவுக்கரசரோ அடைக்கப் பாடினார். பாடுவார் முத்தப்பர், ஆட்டுக்கடாவின் வெடித்த தலையைப் பொருந்தப் பாடிச் செயற்கரிய செய்தார். முருகன் அருள் பெற்ற முத்தப்பர், அருள்மனமுடையவராய் உயிர் நேயம் மிக்குக் கடாவைக் காத்தார், மிதிலைப்பட்டி வேலுக் கவிராயர் வீட்டுக் கடா மறுபிறப்பெடுத்தது. போன உயிரை மீட்டுப் பிழைக்க வைத்த முத்தப்பர் புகழ் நாடெங்கும் பரவியது.

நூலும் வாழ்வும்:

தன் நிறைமொழித் திறனால்-தெய்வப் புலமையால் பாடுவார் முத்தப்பர் நினைத்ததை முடிக்க வல்லவராகத் திகழ்ந்தார். அதை நிறைவேற்ற அவருடைய தமிழ்ப்

புலமையே அடித்தளமாக விளங்கியது. எனவே இவர் வாழ்க்கை வரலாறு பற்றிய குறிப்புகள் இவர் பாடிய பாடல் களில் காணப்படுகின்றன.

தந்தையும் அன்னையும் :

பாடுவார் முத்தப்பர், பாடும் புலவராக மாறிய காலத்தில் அவர் தந்தையார் கண்டுமகிழ உயிரோடு இருக்க வில்லை. இவர் பாடிய பாடலில் 'தாயைக் கேட்டோர் பணம் வாங்கி' என்று காணப்படுகிறது. எனவே பாடுவார் முத்தப்பர் இளமையிலேயே தந்தையை இழந்தவர் என்று புலனாகும். இவர் வெளிப்படையாகத் தந்தையைப் பற்றிப் பாடிய பாடல்களோ குறிப்புகளோ இல்லை. வேறு உறவினர் களைப் பற்றியோ இவர் மனைவியைப் பற்றியோ செய்திகள் ஒன்றும் கிட்டில.

புதல்வர்ப் பேறு :

செந்தமிழ்த்திறம் சான்ற முத்தப்பருக்குத் திருமணமாகி நீண்ட நாள்கள், மக்கட்பேறு இல்லை. புலவர் 'பிள்ளையில் செல்வம் கள்ளியிற் சோறே' என்று வருந்தினார். மக்களை இல்லாதவர்க்கு வாழ்வில் என்ன பயன் கிட்டும்? ஆதலின் தன் குலதெய்வமான இராங்கியம் கருப்பரைப் புதல்வரைத் தருமாறு வேண்டினார். 'வண்ணமால் நேமக் கருப்பனருள் முத்தப்பன் மைந்தனைப் பெறவருள் செய்வாய்'[30] என்பது தான் ஆசிரியர் வேண்டுதல்.

நகரத்தார்கள் தங்களுக்குப் பிள்ளை இல்லை என்றால் தம் குலதெய்வத்திடம் முறையிடுவர். பாடுவார் முத்தப்பர் புதல்வர்ப் பேற்றுக்காகத் தான் பட்ட பாடுகளைப்

''பாராத கோடாங்கி இல்லை! நான் சென்றுதுதி
பண்ணாத கோயில் இல்லை!
பணிந்தாடு தீர்த்தமும் சொல்லிமுடி யாதுநான்
பணிந்துசொல் குறைகள் ஏதும்

திராமல் உன்னிடம் வந்தடிமை யாயினேன்;
தீர்க்கவரம் ஈந்து நீயும்
சீக்கிரம் செயவேணும் என்றவுட னேகிருபை
செய்துதிரு நீறு தருவாய்!''[31]

என்று சொல்லிக் கருப்பர் திருவடிகளில் அடைக்கலம் புகுகின்றார்.

தனக்கு மகன் பிறந்தால், நகரத்தார் குல வழக்கப்படி, கருப்பரைப் போற்றிப் பணிந்து பெயரிட அவர் வாசலுக்கு வருவதாகப் பாடலில் அவர் உறுதி கூறுகிறார்.

''பேறான கர்ப்பந் தரித்துநிலை யாகிஆண்
பெற்றுமெய்த் தாய்தந் தையும்
பேறான மறுவருடம் உன்னாலயப் படியில்
பேரிடவ ரப்பண் ணுவாய்!''[32]

என்பது புலவரின் உறுதிமொழி. அந்த அறிஞரின் வேண்டுகோள் நிறைவேறியது. அவர்க்கு மகன் பிறந்தான். அவன் பெயர் (சர்க்கரைக்) கருப்பஞ்செட்டி. புலவர் வேண்டியபடியே குலதெய்வத்தின் பெயரை மகனுக்கு இட்டார். புதல்வர்ப் பேறின்றி வாடிய பாடுவார் முத்தப்பருக்கு அடுத்தடுத்து ஐந்து ஆண் மக்கள் பிறந்தார்கள். அவர் மரபு அருகுபோல் வேரோடி ஆல் போல் தழைத்தது.

புதல்வர்க்குப் பட்டப்பெயர் :

பாடுவார் முத்தப்பருக்கு ஐந்து ஆண்மக்கள். தான் கருப்பரிடம் வேண்டியபடி மூத்தமகனுக்குக் கருப்பையா என்று பெயரிட்டார். இந்த ஐந்து மக்களின் இயல்பைக் காட்டுமாறு முத்தப்பர் தன் உறவினர்களிடமும் நண்பர்களிடமும் ஒரு வசனம் சொல்லுவராம்.

"சர்க்கரைக் கருப்பஞ்செட்டி
சவ்வாது மெய்யன் செட்டி
சீனி அளகன் செட்டி
செவத்தராமன் செட்டி
எங்கும் பராபரம் ஏகப்பசெட்டி"[33]

இவர்களுடைய பண்புக்கேற்பவே தான் இப்பெயர்கள் அமைந்திருந்தன. நா. நடராஜன்

"மூத்தவர் கருப்பஞ்செட்டியாரும் மூன்றாமவரான அளகப்ப செட்டியாரும் இனிமையாகப் பேசுவதில் வல்லவர்கள். இரண்டாமவரான மெய்யப்ப செட்டியார் மணம் பரப்பும் மனம் வாய்ந்தவர். மற்றவரில் மூத்தவர் அழகில் சிறந்தவர். அவருக்கு 'ராமன் செட்டியார்' என்றே பெயரும் அமைந்தது. இளையவரான ஏகப்பசெட்டியார் செல்வாக்குப் பெறவும் செயலாற்றவும் வல்லவராயிருந்தார்"[34]

என்று இப்பெயர் வழக்கிற்கான காரணத்தை விளக்குகிறார். இவர்களில் அழகஞ் செட்டியாரின் வழியினர் இல்லை. ஏனைய மக்கள் வழிவந்தவர்கள் வாழ்கின்றனர்.

நோய் போக்கும் தமிழ் :

அருட்புலவராகத் திகழ்ந்த முத்தப்பரை மேகம் என்னும் ரோக நோய் வருத்தியது. நோய்க் காற்றாது பெரிதும் புலவர் தளர்ந்தார். சூலை நோயால் வாடிய திருநாவுக்கரசர், 'கூற்று ஆயினவாறு விலக்ககிலீர்' என்று பாடியதுபோல இவரும் இறைவனை வேண்டிப் பாடினார். இவ்வாறு கிரணிப்பட்டி முத்துமாரியம்மனைப் போற்றிப் பாடுவார் முத்தப்பர் பத்துப்பாடல்கள் இயற்றியிருக்கிறார். அடுத்து நடுவாற்று

மருதம்பிள்ளையாரை வேண்டிப் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். இவற்றில் காணப்படும் நோய் பற்றிய கருத்துகள் ஆராய்தற்குரியன.

பாடுவார் முத்தப்பர், எந்த வயதில் நோய்க்காளானார் என்பது தெரியவில்லை. விநாயகரை வேண்டிப் பாடியபின் நோய் நீங்கிற்றா என்பதும் புலனாகவில்லை. 'பாடுவார் முத்தப்ப செட்டியார்' என்ற வரலாற்று நூல்,

> "நாற்பதாவது ஆண்டிலே முத்தப்பரை மேகநோய் அணுகியது...நோயின் திறம் நன்குணர்ந்த முத்தப்பர் கிரணிப்பட்டிக்குப் போய் முத்துமாரியம்மன் திருமுன் 'நீயே சரணம்மா! இந்த நெடு நோயைத் தாயே! தவிர்த்து அருள் தருவாய்!' என்று உறுதிப்பாட்டோடு உரைத்து உண்ணா நோன்பு இருந்தார்...... மூன்றாம் நாள் இரவிலே அன்னை கனவிலே தோன்றி, 'முத்தப்பா! கண்டர மாணிக்கத்தையடுத்த (கொங்கரத்தி) நடுவாற்று மருதம் பிள்ளையார் கோயிலுக்குப் போய்ப் பத்து நாள் நோன்பிருந்தால் நோய் தீர்ந்து சுகம் எய்தும்' என்றுரைத்தாள்"[55]

என்று குறிக்கும், எனவே கிரணிப்பட்டி முத்துமாரியம்மனைத் தன் நோய் போக்க வேண்டினார் என்பது இவ்வாசிரியர் கருத்து.

கிரணியம்மனைப் பாடுவார் முத்தப்பர் பாடிய செய்யுட்கள் அனைத்திலும், அவ்வம்மையைச் சிவனுடைய துணைவி என்றும் திருமாலுடைய தங்கை என்றும் முருகன் உ விநாயகர் ஆகியோரின் தாய் என்றும் தொன்மங்களைக் (Myth) கொண்டு பாடியுள்ளார். மேலும் ஆசிரியர் அம்மையைத் தலைமுதல் திருவடியீறாகப் போற்றி அவளைப் பணிந்தால் கிட்டும் பயன்களைச் சொல்லுவர்.

ஆனால் ஒரு பாடலில் கூடத் தனக்கு நோய் இருந்த குறிப்புப் பற்றிய செய்தியில்லை. தனக்கு நோய் இருந்து அதைப் போக்கக் கீரணியம்மனை வேண்டியிருப்பின் ஆசிரியர், அச்செய்தியைத் தெளிவாகச் சொல்லிப் பாடுமியல்புடையவர். அத்தகைய குறிப்புகள் ஏதும் வெளிப்படையாகவோ தெளிவாகவோ பாடல்களில் இல்லை.

நோய் தீர்த்த பதிகம் :

பாடுவார் முத்தப்பருக்கு நோய் இருந்ததும் அதனை நீக்க வேண்டிப் பாடியதும் நடுவாற்று மருதம்பிள்ளையார் பதிகமேயாகும். அப்பதிகத்தில் கூட ஆசிரியர் கீரணியம்மனை நோய் நீக்க வேண்டிப் பாடியதும் அம்மை கனவில் தோன்றிப் பாடியதுமான செய்திகள் இல்லை. அஃது உண்மையாயின் கீரணியம்மன் அனுப்பியதைச் சொல்லியே மருதம்பிள்ளையாரை முத்தப்பர் பாடியிருப்பர். ஆகையால், கீரணிப்பட்டி முத்துமாரியம்மன் பதிகம், துதியாகவே முத்தப்பரால் பாடப்பட்டது.

நடுவாற்று மருதம்பிள்ளையார், வர சித்திவிநாயகர்; அவரை வழிபட்டால் தோல் நோய்களும் நச்சுப் பூச்சிகளின் தொல்லைகளும் அணுகாது. வெற்றிக் கடவுளாகப் போற்றப் பெறும் விநாயகரைப் பணிந்தால், தன் மேனி நோய் நீங்கும் என்று கருதிப்பாடுவார் முத்தப்பர் நடுவாற்று மருதம் பிள்ளையாரைப் பாடிப் போற்றினார். தோல் நோய் நீங்க விநாயகரையே வழிபடுவது மரபு. அப்பதிகத்தின் இறுதிப் பாடல்

''மேகமெனும் ரோகமது தேகத்தி லாகி
மெய்பொறுக்க மாட்டாமல் ஐயோஎன் றலறி
ஆகமிகு துயரம் தனைப்பொறுக்க லாற்றேன்
அத்துயரந் தீர்த்தெந்தன் மெய்ப்பிணி விலக்கித்

தேகபரி சுத்தமொடு தேகபல மாக்கிச்
சிந்தையும் நிறைகல்வி செல்வமெனக் கருளி
மாகமட்டும் புகழோங்கி வாழ்ந்துகொண்ட மட்டும்
மால்மருக னாகவந்த மருதம்பிள்ளை யாரே''[36]

என்பதாம். இப்பாட்டில், ஆசிரியர் தனக்கு ஏற்பட்ட நோயையும் அதன் வேகத்தையும் தன்னாற்றாமையையும் போக்கித் தனக்கு நல்ல வலுவான உடலும் மனமும் கல்வியும் செல்வமும் புகழும் தரவேண்டுகிறார்.

பாடுவார் முத்தப்பர் பாடிய பதிகங்களுக்கு, ஏதேனும் வரலாற்றுக் குறிப்பு எழுத வேண்டும் என்ற கருத்தால், கிரணிப்பட்டி முத்துமாரியம்மனை நோய் நீக்க வேண்டிப் பாடினார் என்ற கதை புனையப்பட்டது. அக்கதைத் தொடர்பால் நடுவாற்று மருதம்பிள்ளையார் பதிகத்துடன் பிணைக்கப்பட்டது. கிரணிப்பட்டி முத்துமாரியம்மன் பதிகம் துதிப்பாடல்களாலானது. நடுவாற்று மருதம் பிள்ளையார் பதிகம், குறை வேண்டிய பதிகம். இரண்டு பதிகங்களையும் இணைத்துச் சொல்லியது, ஆசிரியர் வரலாற்றைச் சுவைப் படுத்தவேயன்றி உண்மை வரலாறன்று.

சுரம் போக்கிய கருப்பண்ணசாமி :

பாடுவார் முத்தப்பர், தல்லாகுளம் கருப்பரகவலில், தனக்குக் கொடுஞ்சுரம் ஏற்பட்டிருந்ததாகவும் கருப்பர் மீது முத்தப்பர் கவிபாடியதாகவும் அதன்பின் நோய் நீங்கிய தாகவும் கூறுவர்.

''... ... ... நலம்பெறவே
வாய்ப்பாக என்கவிக்கு வன்சுரத்தை நீக்கிவைத்துக்
காப்பாற்றித் தந்த கறுப்பண்ணன் ...'' (87-89)

என்பது அகவல். வன்சுரம் போக்கக் கருப்பர் மீது பாடிய பாடல்கள் கிடைக்கவில்லை. கடுமையான சுரம் ஏற்பட்ட

போது கருப்பண்ண சுவாமியைப் பாடி ஆசிரியர் நோய் நீங்கப் பெற்றார். பாடுவார் முத்தப்பர் பாடல்களில் அவருக்கு ஏற்பட்ட நோய் பற்றி இவ்விரு குறிப்புகளே காணப்படுகின்றன.

வருவாயும் வாழ்வும் :

தன் வாழ்க்கை நிகழ்ச்சிகளை எல்லாம் வியத்தகு நிகழ்ச்சிகளாகக் காட்டிய பாடுவார் முத்தப்பர், தன் தமிழ்த் திறத்தாலேயே அனைத்தையும் அடைந்திருக்கிறார். அவர் தமிழ்ப் புலமை அவருக்கு நினைத்ததை முடித்துத் தந்திருக்கிறது. இவர் சிக்கலுக்குப் போனபோது, இவருடன் வந்தவர்களுக்கு வெற்றிலை பாக்குத் தேவைப்பட்டது. உடனே சிக்கல் சிங்கார வேலனை வேண்டிப் பாடினார். இவர் விழைந்த பொருள்கள் கிட்டின.[87]

இத்தகைய பல்வேறு நிகழ்ச்சிகள் முத்தப்பர் வரலாற்றில் உள்ளன. இவற்றின் மெய்ம்மை, பொய்ம்மை அறிய வாய்ப்பில்லை. தெய்வத்தன்மையுடைய புலவர் என்று காட்டுவதற்கு இத்தகைய கதைகளும் கவிதைகளும் பிற்காலத்தவர் புனைதலுண்டு. அந்த வரலாறுகளை ஒருமுகப்படுத்தி நோக்கினால், பாடுவார் முத்தப்பர், 'தெய்வத்தன்மை வாய்ந்த புலவர்; அவர் சொன்னால் பலிக்கும்' என்ற உண்மை புலனாகும்.

பாடுவார் முத்தப்பர், தமிழ்ப்புலவராகப் புகழ்பெற்றதும், வணிகம் செய்தாரா அன்றிப் பரிசில் பெற்று வாழ்ந்தாரா என்பது போன்ற வினாக்களுக்கு ஒருதலையாக விடையிறுக்க முடியாது. ஆனால், முத்தப்பருக்குக் கவலையின்றி வாழப் போதிய வருவாய் இருந்திருக்கின்றது. மக்கள் அருட்புலவர் என்று மதித்து வேண்டியன வழங்கியிருக்கின்றனர். இவரைப் பற்றிய வேறு விரிவான வரலாறுகளோ செய்திகளோ தெரியவில்லை.

நிறைந்த வாழ்வு

இவர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்? என்ன என்ன நூல்கள் இயற்றினார்? ஆகிய வினாக்கள் தொடர்பாக எழுதுவதற்குச் சான்றுகள் கிட்டில.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் முதற்புலவரான முத்தப்பர் ஐப்பசித் திங்களின் பத்தாம் நாள் இறைவனடி சேர்ந்தார். தன் மறைவு குறித்து அவரே

''தொகுதிபெறு சர்வசித்து வருடம் தன்னில்
துலாமாதம் தேதிபத்து சுக்ர வாரம்
பகுதிபெறு செயங்கொண்ட சோழீ சர்தம்
பாதமதிற் சேர்ந்துவெகு பலம்பெற் றேனே''[38]

என்று பாடினார் என்று குறிப்பிடுவர். இது பாடுவார் முத்தப்பர் பாடினாரா? அன்றி அவர் மறைவுக்குப் பின் வேறு யாரும் பாடினரா? என்பது புலனாகவில்லை. தெய்வத் தன்மை வாய்ந்த புலவர் பாடுவார் முத்தப்பர் என்று எண்பிக்கவே இத்தகைய முயற்சிகள் தோன்றின. முத்தப்பரின் வாழ்வியல், சென்ற இடமெல்லாம் சிறப் புடையதாய்த்திகழ்ந்தது.

இவருடைய மறைவு ஆண்டு, சர்வசித்து என்றும் சுபானு என்றும் இரண்டு வகையான[39] கருத்துகள் உள்ளன. ஆனால் ஐப்பசித்திங்கள் என்பதில் ஐயமில்லை. அவர் மறைந்த நாளில் செட்டியார்கள் மரபுப்படி, முத்தப்பர் மரபினர் அனைவரும் குருபூசை நடத்துகின்றனர். இன்றும் சிவப் பட்டியில் குருபூசை சிறப்பாக நடைபெறுகிறது.

அடிக்குறிப்பு

1. கீழச்சிவல்பட்டி என்பது ஒரு காலத்தில் அ. சிவப்பட்டி என்றே அழைக்கப்பட்டது.
2. நாராயணஞ்செட்டியார். ராம.மு.க.மு. (1954)—முத்தப்பர் நூல், ப.5 சுந்தர முதலியார் பாட்டு.
3. நடராஜன், நா. (1949)—பாடுவார் முத்தப்ப செட்டியார் ப.2
4. சோம.லெ (1960)—செட்டிநாடும் தமிழும்
5. சோம.லெ (1984)—செட்டிநாடும் செந்தமிழும் ப.41
6. தெட்சிணாமூர்த்தி. உ. (1981)—மெய்யப்ப செட்டியார், உமையாள் ஆச்சி மணிவிழா மலர் ப. 119. "வேட்டியும் லேஞ்சும்" என்று துவங்கும் பாடல்.
7. அக்காலத்தில் நகரத்தார்கள் உப்பு வாணிகம் செய்தனர் ஆங்கிலக் கும்பினியார் வியாபாரத்தாலும் ஆட்சியாலும் பாளையப்பட்டு, சமீன் ஆட்சி முறைகளாலும் நகரத்தார்களின் பழைய வாணிபம் தடைப்பட்டு வேறு வகையான வியாபாரமாக மாறியது.
8. தெட்சிணாமூர்த்தி. உ. (1981)—மெய்யப்ப செட்டியார், உமையாள் ஆச்சி மணிவிழா மலர். ப. 106
9. நடராஜன். நா. (1949)—பாடுவார் முத்தப்ப செட்டியார். ப.6
10. மேலது — ப.7
11. அரியக்குடியில் புள்ளி எண்ணிக்கை அப்படியே இருப்பதாக நம்புகிறார்கள். ஒன்று கூடினால் ஒன்று குறையும். கோயில் புள்ளிவிவரம், ஆண்டுக்கு ஆண்டு மக்கள் தொகை பெருகி வருவதாகக் காட்டுகிறது.

12. ... (1965)—திருக்குறளும் பரிமேலழகருரையும் உ. வே. வை.மு. கோபால கிருஷ்ணமாசார்யர் குறிப்புரையுடன். பா. எண்.28

13. நடராஜன். நா. (1949)—பாடுவார் முத்தப்ப செட்டியார். ப.4-5

14. ... (1965)— திருக்குறளும் பரிமேலழகருரையும் ஷெ ப.29

15. வெண்பாப்புலிக் கவிராயர் (1982) — குமாரலிங்கர் குறவஞ்சி, நூன்முகம். ப. 13.

16. மேலது — ப. 18

17. சந்திரசேகரன். தி. (1960) — தனிப்பாடற் திரட்டு மெட்ராஸ் கவர்ன்மெண்டு ஓரியண்டல் மானிஸ்கிரிப்ட்டு வெளியீடு. 55 காண்க

18. மேலது — பா.எண். 584 அடி 1

19. மேலது — பா.எண். 585 அடி 2

20. மேலது — பா.எண். 586 அடி 2

21. மேலது — பா.எண். 387 அடி 1

22. வெண்பாப்புலிக்கவிராயர் — (1982) — குமாரலிங்கர் குறவஞ்சி பக்க எண் இல்லை. ஆங்கில முன்னுரை. டாக்டர் ஆர். நாகசாமி.

23. நடராஜன். நா. (1949)—பாடுவார் முத்தப்ப செட்டியார் ப. 29

24. மேலது—ப.29

குமாரலிங்கம் குறவஞ்சி முன்னுரையில் இப்பன்னி ரண்டடி வேறுவகையாகக் காணப்படுகிறது. ப.19.

"... ... ... — செம்மைமொழி
தப்பிநடந் தானதற்குச் சான்று பழநியான்
அப்பனெனுந் தொப்பைவீ ரன்"

இதனால் தொப்பை வீரன், பழநியான் தந்தை என்று கருத வேண்டியுள்ளது.

25. நடராஜன். நா. (1949) — பாடுவார் முத்தப்ப செட்டியார் ப.30
26. வெண்பாப்புலிக் கவிராயர் (1982) — குமாரலிங்கர் குறவஞ்சி. ஆங்கில முன்னுரை டாக்டர் ஆர். நாகசாமி, பக்க எண் இல்லை.
27. நடராஜன். நா. (1949) – பாடுவார் முத்தப்ப செட்டியார் ப.35
28. மேலது — ப. 35
29. மேலது — ப, 37
30. நாராயணன் செட்டியார். ராம. மு. க. மு. (1954) — முத்தப்பர் நூல். ப. 31
31. தெட்சிணாமூர்த்தி. உ. (1981) — மணிவிழாமலர், ப.107
32. மேலது.
33. நடராஜன். நா. (1949) — பாடுவார் முத்தப்ப செட்டியார். ப.10. இவ்வாசிரியர் ஐந்து மக்களே குறிப்பிட்டுள்ளார். மணிவிழா மலரில் 'துடுக்கான முருகஞ்செட்டி' என்று ஆறாவதாக ஒரு மகன் குறிக்கப்பட்டுள்ளார்.
34. மேலது ப.10
35. மேலது ப.19
36. மேலது ப. 24
37. மேலது பக்.17-18
38. எங்கள் அண்ணன் தெ.சி.தெ. அழகப்ப செட்டியார் மனைவி அலமேலு ஆச்சி அவர்களின் தாய்வழி ஐயா இந்தப் பாடலைச் சொன்னார்கள் ஷியார் விறாமதி கயி. இிராமஞ்செட்டியார், எண்பதாண்டுக்குமேல் வாழ்ந்தவர்கள்.
39. விறாமதி கயி. இராமஞ்செட்டியார் சொன்னபடி ஆண்டு சர்வசித்து. நா. நடராஜன் சுபானு என்று குறிப்பர், நடராஜன். நா. (1949) — பாடுவார் முத்தப்ப செட்டியார் ப. 50

ஆசிரியர் காலம்

முன்னையோர் கருத்து :

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் முதற்புலவரான பாடுவார் முத்தப்பர் வாழ்ந்த காலம் பற்றிப் பல்வேறு கருத்துகள் வழங்குகின்றன. பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, முத்தப்பரின் காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி என்று குறிப்பிட்டார்.[1] நா. நடராஜன் இப்புலவர் கி. பி. 1760இல் பிறந்தார் என்று எழுதுவர்.[2] செட்டிநாடும் தமிழும் என்ற நூலில் சோமலெ, பாடுவார் முத்தப்பர் கி. பி. 1810இல் பிறந்தவர் என்று சுட்டுவர். இளங்கீரன் என்பார்[3] இளவரசன் நா. நடராஜன் கருத்தையே ஏற்றுக்கொண்டுள்ளார். உ. தெட்சிணாமூர்த்தி, முத்தப்பர் தோற்றம் 1750 என்றும் மறைவு 1823 என்றும்[4] எழுதுகிறார்.

பாடுவார் முத்தப்பர் காலத்தைத் தெளிவாக ஊகித்தெழுதிய இளவரசன் நா. நடராஜன் கருத்தையே பின் வந்தவர்கள், முன்பின் கணக்கிட்டுச் சுட்டியுள்ளனர். பாடுவார் முத்தப்பருடைய நூல்கள் பலராலும் பல்வேறு ஆண்டுகளில் அச்சிடப்பட்டுள்ளன. அவற்றில் அவரைப் பற்றிய முறையான வரலாறுகளோ வேறு செய்திகளோ தரப்பெறவில்லை.

மருது பாண்டியரும் அக்கினிசும் :

பாடுவார் முத்தப்ப செட்டியாருக்கு உடல் நலமில்லாமல் போனபோது நடுவாற்று மருதம் பிள்ளையாரைப் பாடி நோய் நீங்கப் பெற்றார். அவ்விநாயகர் பதிகத்தில், ஆசிரியர்

''அந்தமிகு கும்பினித் துரைமார் அநேகம்
அவர்களிலே பெரியதுரை அக்கினிசிற் றளவாய்
சிந்தமிகு பட்டாளம் எண்ணத் தொலையாது
ஜெயகவுரி ராசனும் தென்சீமைத் தளமும்
இந்திரன் தென்கோடி தொண்டைமான் சேனையும்
இரதகஜ துரகங்கள் பதினெண்ணாள் நின்றும்
மந்திரதம் புயமருது பாண்டியன்தன் பொருட்டால்
வந்திறங்க விடுதிவிட்ட மருதம்பிள்ளை யாரே''[5]

என்று பாடுவர் முத்தப்பர். அவர்கால அரசியல் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்து வந்தவர். அவருக்கு ஆங்கிலக் கும்பினியாரிடம் தனி ஈடுபாடும் மரியாதையும் இருந்தது. ஆதலின் அவர் இப்பாடலில், இருபக்கத்தாரின் போர் வெற்றி தோல்வியைப் பேசாமல், அவர்கள் தண்டு இறங்கியதை மட்டும் சொல்லியுள்ளார்.

அக்கினிசுத்தளவாய், மருதுபாண்டியரைப் பிடித்தற் காகவே படை திரட்டிக் கொண்டு வந்தான். மருது பாண்டியர், ஆங்கிலக் கும்பினியாரை எதிர்த்துப் போராடிய வீர சகோதரர்கள். இவர்களைப் பிடிக்க அக்கினிசுக்குத் துணையாகப் புதுக்கோட்டைத் தொண்டைமான் படைகளும் வந்திருந்தன. அக்கினிசு தன் படைகளுடன் மருது பாண்டியரைப் பிடிக்கப் பல இடங்களுக்கு விரட்டிச் செல்ல வேண்டியதாயிற்று. அப்படிச் சென்ற அக்னியூ, மருதம் பிள்ளையார் கோயிலருகில் தங்கியதைத்தான் முத்தப்பர் பாடுகிறார். பெரியமருது கும்பினியாரால் பிடிக்கப்பட்டுத்

தூக்கிலிடப்பட்டது 27-10-1801. எனவே ஜெனரல் அக்னியூ மருதம்பிள்ளையார் கோயில் அருகே படையிறங்கியது இதற்கு முன் நடைபெற்றது.

மருதுபாண்டியரைத் தாக்கப் படை விடுதி இறங்கியதைக் கூறும் நடுவாற்று மருதம் பிள்ளையார் பதிகம் கி பி. 1801ஆம் ஆண்டை ஒட்டிப் பாடப்பட்டது. படை இறங்கிய அணிமையில்தான் முத்தப்பர் இங்குச் சென்று பதிகம் பாடியுள்ளார். அதனால்தான் இச்செய்திகள் அவர் நினைவுக்கு வருகின்றன. இப்பதிகம் பாடிய போது பாடுவார் முத்தப்பருக்கு அறுபது வயதிருக்கலாம். எனவே இவருடைய பிறப்பாண்டு கி. பி. 1740 என்று கொள்வது பொருந்தும்.

நத்தம் சமீனும் முத்தப்பரும் :

பாடுவார் முத்தப்பர், மிதிலைப்பட்டியில் வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயரொடு போட்டியிட்டு வென்றார். வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயர், மணப்பச் சேரியில் பிறந்தவர். இவர் நத்தம் லிங்கம நாயக்கனையும் அவன் மகன் குமாரலிங்கனையும் பாடியவர். குமாரலிங்கர், குறவஞ்சி, குமாரலிங்கன் காதல், சிவகங்கை இராசேந்திர பூபதி காதல் என்பன இக் கவிராயர் பாடியவை.

நத்தம் லிங்கமநாயக்கன் தன் அரண்மனை முகப்பில் வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயர் பாடலை எழுதி வைத்திருந்தான். அப்பாடலுக்கு முத்தப்பர் எதிர்ப்பாட்டுப் பாடினார். அது காரணமாக இருவருக்கும் போட்டி ஏற்பட்டது. எனவே வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயர் காலம், பாடுவார் முத்தப்பரின் காலம் என்பது தெளிவு

நத்தம் சமீனை ஆண்ட லிங்கம நாயக்கன் வரலாற்றொடு தொடர்புடையது பாடுவார் முத்தப்பர் வரலாறு. முகமது

யூசுப்கான் (கான் சாகிபு) நத்தம் சமீனைப் பிறன் ஒருவனுக்குக் கொடுத்துவிட்டான். லிங்கம நாயக்கன் உயிரிழந்தான். அவன் மரபினர் சிவகங்கைக்குச் சென்று அங்கிருந்து திருச்சிராப்பள்ளி சென்றனர். இந்த நிகழ்ச்சி நடைபெற்றது கி. பி. 1764இல் ஆகும். கிட்டதட்ட ஆறு ஆண்டுகள் நத்தம் சமீனில் இக்குழப்பநிலை நிலவியது.

இந்நிகழ்ச்சிகள் நடைபெறும் முன் லிங்கமநாயக்கனைப் பாடுவார் முத்தப்பர் பாடினராதல் வேண்டும். கி.பி. 1758இல் பாடுவார் முத்தப்பர், நத்தம் அரண்மனைக் கவிதைக்கு எதிர்பாட்டுப் பாடினார். அதன் பின் வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயரொடு போட்டி நடந்து முத்தப்பர் வெற்றி பெற்றிருக்க வேண்டும். எனவே முத்தப்பரின் காலம் 1750 என்பது துணிபு.

கெவுரி வல்லப ராசேந்திரன் :

உச்சினிமாகாளியம்மன் கும்மியில் சிவகங்கை மன்னரை முத்தப்பர் குறித்துள்ளார்.

''சிவசகாயம்பெருஞ் சிவகங்கையின்
சீர்மையொரு குடைக்குள்ளாளும்
கெவுரிவல்லவ ராசராசேந்திர
கேசரிசெங்கோன் மிகவாழி'' (கண்ணி 89)

இதில் கெவுரிவல்லவ ராசேந்திரனை ஆசிரியர் வாழ்த்துவர். இவனையே சிவகங்கை இராசேந்திர பூபதி காதலும் பாடுகிறது. இவனுடைய காலம் கி. பி. 1800. முத்தப்பர் இக்காலத்தவர் என்பது உறுதி.

குழந்தைக் கவிராயரும் முத்தப்பரும் :

பாடுவார் முத்தப்பர் வாழ்ந்த காலத்தில் மிதிலைப் பட்டியில் விளங்கியவர் குழந்தைக் கவிராயர். இவர் முருகப்பதேவர் பிள்ளைத் தமிழ், மான்விடுதூது ஆகியன பாடியவர். இவர் வீட்டிலுள்ள சரசுவதி மகாலில் தான்

முத்தப்பருக்கும் வெண்பாப்புலிக்கும் போட்டி ஏற்பட்டது. குழந்தைக் கவிராயர் வாழ்ந்த காலம் — நாலுகோட்டை முத்துவிசைய இரகுநாதப் பெரிய உடையாத் தேவர் காலம். இவரைச் சசிவர்ண முத்துவிஜய ரகுநாத பெரிய உடையாத் தேவர் என்றும் எழுதுவர்.[6] இவர் காலம் கி. பி. 1730-1750. முடியவாம். எனவே குழந்தைக் கவிராயர் வாழ்ந்த பதினெட்டாம் நூற்றாண்டே பாடுவார் முத்தப்பரின் காலமுமாகும். பாடுவார் முத்தப்பர் நடுவாற்று மருதம் பிள்ளையார் பதிகத்தில், சசிவர்ண போஜ மகராஜன் முதலியோரையும் முத்துவிசைய ரகுநாதத்தேவர் மகன் முத்து வடுகுத்தேவரையும் பாடியுள்ளார். ஆதலின் இவர்கள் வாழ்ந்த பதினெட்டாம் நூற்றாண்டுதான் முத்தப்பர் வாழ்ந்த காலம் என்று கொள்வது சாலப் பொருந்தும்.

விறலிவிடுதூதும் முத்தப்பரும் :

கூளப்பநாயக்கன் விறலிவிடுதூது ஆசிரியர், சுப்பிரதீபக் கவிராயர், இராமநாதபுரம் விஜயரகுநாத சேதுபதி (1711-1725) காலத்தில் வாழ்ந்தவர். இக்காலத்தில் வாழ்ந்த முத்தப்பர் விறலிவிடுதூதினைப் படித்துச் செயங் கொண்டார் சதகத்தில் மேற்கோளாக்கினார்.[7] நடுவாற்று மருதம் பிள்ளையார் பதிகத்தில் இராமநாதபுரம் முத்துவிஜய ரகுநாத சேதுபதியைச் சுட்டுவர். எனவே இக்காலத்தை யொட்டி முத்தப்பர் வாழ்ந்திருக்கவேண்டும்.

முத்தப்பர் நூல்களில் உள்ளவற்றைக் கொண்டு ஆராயும்போது, இவர் பிறந்த ஆண்டு எந்த ஆண்டு என்று வரையறுத்துக் கூறமுடியவில்லை.[8] இவர் எழுபத்து மூன்று ஆண்டுகள் இந்நிலவுலகில் வாழ்ந்ததாகக் (கி.பி. 1690 முதல் 1763) கொள்ளலாம். எனினும் பாடுவார் முத்தப்பர் பதினெட்டாம் நூற்றாண்டில் பிறந்து மறைந்த புலவர் என்பதுதான் ஏற்றுக் கொள்ளத்தக்கது.

அடிக்குறிப்புகள்

1. சுப்பிரமணியபிள்ளை. கா. (1958) — இலக்கிய வரலாறு இரண்டாம் பாகம், சென்னை. ஆசிரிய நூற்பதிப்பு கழகம் ப. 436
2. நடராசன். நா. (1949) — பாடுவார் முத்தப்ப செட்டியார், கீழச்சிவல்பட்டி ப. 2.
3. சோமலெ (1960) — செட்டிநாடும் தமிழும். சென்னை ப. 111
4. தெட்சிணாமூர்த்தி. உ. (1981)—சு. செ. சேவு. மெய்யப்ப செட்டியார் மணிவிழா மலர் ப. 48 ஆ.
5. மேலது — ப. 75
6. கமால் எஸ். எஸ். (1987) — விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் ப. 52
7. சுப்பிரதீபக் கவிராயர் — கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது, காரைக்குடி கண்ணி.
8. இன்ன ஆண்டு முத்தப்பர் பிறந்தார் என்று சொல்வதெல்லாம் ஊகத்தின் அடிப்படையில்தான். இவருடைய சாதகமோ வேறு குறிப்புகளோ கிடைக்கவில்லை.

முத்தப்பரும் சேனாபதியடிகளும்

பாடுவார் முத்தப்பரொடு நெருங்கிப் பழகியவர்களில் சேனாதிபதி அடிகள் குறிக்கத்தக்கவர். இப்புலவரொடு அணுக்கமான உறவுடையவராக வேறு எவர் பெயரும் தெரியவில்லை. சேனாபதி அடிகள், நகரத்தார்களுக்கு உபதேசம் சொல்லும் இல்லஞ் சேரிப்பட்டணமாகிய பாதரக்குடி மடத்திற்குத் தலைமை பூண்டு விளங்கியவர்கள். இம்மடம் உருவான வரலாறே சுவையானது.

உபதேசம் கேட்டல் :

நாட்டுக் கோட்டை நகரத்தார்கள், தங்களுக்கு உபதேசம் செய்தற்கெனத் தனியாகக் குருபீடம் ஒன்றை அமைத்துக் கொண்டிருந்தார்கள். இங்குள்ள குருவிடம் இளமையிலேயே உபதேசம் கேட்பர். உபதேசம் கேட்டற் குரிய எல்லா இளைஞர்களும் ஒரூரில் ஒருங்கு கூடி உபதேசம் கேட்பர். நகரத்தார்கள் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த போது அவர்களைக் காத்தவர்கள் ஞானாசிரியர்களே. ஆதலின் நகரத்தாரனைவரும் ஞானாசிரியரிடம் பேரன்பு காட்டி நன்றி பாராட்டினர்.

நகரத்தார்களுக்கு உபதேசம் சொல்லும் மடம் கிளா மடத்தில் இருக்கிறது. இவ்வூரைக் 'கலாமடம்' என்றும் சொல்லுவர். இஃது ஆண்களுக்கு மட்டும் உபதேசம் சொல்லும் குருபீடமாகும். இவ்வாறு பெண்களுக்கு

உபதேசம் சொல்லும் குருபீடம் துழாவூரில் இருக்கிறது. இவ்வாறு ஆண்களுக்கு ஒன்றும் பெண்களுக்கு ஒன்றும் என இரண்டு பீடங்கள் நகரத்தார்களின் சமயவுணர்வை வளர்த்து வருகின்றன.

கலியுகம் 4644 (கி. பி. 1543) இல் நகரத்தார்கள் நாட்டரசன் கோட்டையில் வாழ்ந்தபோது, ஏற்பட்ட கலகத்தில் பெண்களின் கற்புக்குப் பழுது ஏற்பட்டது. அவர்களை நகர முறைமைப்படி செய்யக் கிளாமடம் துழாவூர் ஆதீனங்களை அணுகி நகரத்தார்கள் அனுமதி, வேண்டினர். அவர்களோ, "அறிந்து செய்தால்தான் குற்றம்; இஃது அறியாமல் நடந்தது. இதற்கு அறநூல் களில் தண்டனை கூறப்படவில்லை; எனவே பெண்களைத் தண்டிக்கலாகாது" என்று அறிவுறுத்தினர்.

நகரத்தார்களோ, இனிமேல் அந்தப் பெண்களை வைத்திருந்தால் மானக்கேடு என்று சொல்லி அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று கேட்டனர். இரண்டு குரு பீடங்களும் அதனைத் தடுக்க முடியாமல், கண்ணோட்டம் காரணமாகத் தங்கள் இசைவை அளித்துவிட்டுக் காசிக்குத் தீர்த்தமாடச் சென்றனர்.

புதிய மடம் உருவாதல் :

காசிக்குச் சென்றவர்களில், பெண்களுக்கு உபதேசம் செய்யும் துழாவூர் நிரம்பவழகிய தேசிகர் மூன்று ஆண்டுகளில் திரும்பி வந்து விட்டார். ஆனால் ஆண்களுக்கு உபதேசம் செய்யும் ஞானாசிரியர் பன்னிரண்டு ஆண்டுகள் வரை வரவில்லை. இதற்கிடையில் உபதேசம் கேட்கவேண்டிய நகரத்தார் இளைஞர்களின் எண்ணிக்கை பெருகியது. அவர்களில் சிலர்

> "...வேறு குருஸ்தானம் நியமித்துக் கொள்ள வேண்டுமென்று யோசித்துத் திருப்புனவாயிலில் வேறு செட்டிகளுக்கும் வேளாளருக்கும் குருவாயிருக்கிற குருஸ்தானத்தை அடைந்து தீட்சை உபதேசம் முதலியன பெற்றுக் கொண்டார்கள்"[1]

இப்படிப் புதிதாக ஒரு குருபீடம் தோன்றியது. ஆனால் இருபத்தோராண்டுகள் சென்றபின் கிளாமடம் ஞானாசிரியர் காசியிலிருந்து ஊர் திரும்பினார். பாதரக்குடி குருவிடம் உபதேசம் கேட்டவர்களின் வழிமுறையினர் அவரிடமே கேட்டு வரவேண்டும். கிளா மடத்தில் கேட்டவர்களும் அவர் வழியினரும் அந்த குருவிடமே கேட்டு வரவேண்டும். இவ்வாறு ஒரு மரபு வகுக்கப்பட்டது.

சேனாபதியடிகள் :

புதிதாகத் தோன்றிய பாதரக்குடி மடத்திலுள்ள ஞானாசிரியரே சேனாபதி அடிகள். இவர் அம்மரபில் யாருக்குப் பின் வந்தவர் என்றறிய வாய்ப்பில்லை. ஆனால் இவர் முத்தப்பரின் இனிய நண்பர். இருவரும் பழநி, குன்றக்குடி போன்ற ஊர்களுக்கு ஒன்றாகச் சென்றிருக்கின்றனர். சேனாபதியடிகள் அந்தண மரபைச் சார்ந்தவர். இவர் மரபினர் திருப்புனவாசலிலிருந்து இங்கு வந்தவர் என்பர். திருப்புனவை என்பதே பாதரக்குடியைக் குறிக்கும் என்றும் கூறுகிறார்கள்.

பழஞ்சோற்றுப் பெருமை :

ஒருமுறை, பாதரக்குடி மடத்திற்குப் பாடுவார் முத்தப்பர் போயிருந்தார். அவர் போனநேரம் இரண்டும் கெட்ட நேரம்; உணவு உண்ணாமல் முத்தப்ப செட்டியார் பசியோடு சென்றார். பாடுவார் முத்தப்பரை அடிகள் அன்போடு வரவேற்று இருந்த பழைய சோற்றை

உண்ணுமாறு வேண்டினார். பசித்து வந்த முத்தப்பருக்கு அஃது அமுதாய்த் தித்தித்தது. பசி நீங்கியதும் பாடுவார் முத்தப்பர் பாராட்டுப் பாடினார்.

தலஞ்சேரும் மூவேந்தர் புவிவளர
ஞானமுடி தரித்தோன் கீர்த்தி
நலஞ்சேர்ந்த தனக்கி ணையான் வணிகேசர்க்
கைந்தெழுத்தை நவிலுங்கோமான்
வளஞ்சேரும் புனவயற்பா தரக்குடிச்சே
னாபதிதன் மடத்தில் உண்ணும்
பழஞ்சோற்றுக் கிணைவருமோ மற்றமட
பதிகள்செயும் பவிசு தானே![2]

இந்தப் பாடலில் ஆசிரியர், பாதரக்குடி மடத்தின் சிறப்பையும் உயர்வையும் நகரத்தார் தொடர்பையும் நன்கு நவின்றுள்ளார்.

பாதரக்குடி சேனாபதி அடிகளும் பாடுவார் முத்தப்பரும் நெருங்கிய நட்பினர். முத்தப்பர், பழஞ்சோறு உண்டு பாராட்டியதும் இதனை உணர்த்தும். இவ்விருவரும் குன்றக்குடிக்குப் போயிருந்தனர். அன்று வெள்ளிமயிலில் முருகன் வலம் வந்தான். அப்போது முத்தப்பர் மழை பெய்யப் பாடினார்.[3] இது போலப் பழநிக்கும் இருவரும் சென்றனர்.

பழநியில், சேனாபதியடிகளுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. சில நாள்கள் ஓடின. ஆயினும் அடிகளாரின் உடல் நலமுறவில்லை. திருஞான சம்பந்தர் ஆலவாய் அண்ணலை வேண்டி வழுதி சுரம் தீர்த்தது போல முத்தப்பர் குன்றக்குடிக் குமரனையும் பழநி ஆண்டவனையும் நோய் நீக்க வேண்டினார். இவ்வாறு வழிவழிச் செய்திகள் கூறுகின்றன. இதனை உறுதிப்படுத்த பாடுவார் பாடல்களில் குறிப்பில்லை.

அருள்புரிய வேண்டுதல் :

சேனாபதி அடிகளுடைய தமிழ்ப் பண்பையும் அன்பையும் பாடுவார் முத்தப்பர் இப்பதிகங்களில் புகழ்ந்துள்ளார். சேனாபதி அடிகள் சிறந்த தமிழ்ப் புலவர்; அன்னாருக்கு அருள் புரிவது பெரும்பாரமா? என்பது பாடுவார் முத்தப்பர் வினா. 'சேனாபதிக் குருசிகா மணிக்கு அருளும் நீ செய்குவதும்மா பாரமா?'[4] என்று முருகனை அருளுமாறு வேண்டுபவர், அவன் குடும்பத்தாரின் கருணை மனத்தைச் சொல்லி அவனை இரங்க வைக்கின்றார். சிவபெருமான் தன்னடியவனான மார்க்கண்டனுக்குக் கருணை காட்டி என்றும் பதினாறு வயது அருளினார். முருகன் தாய், உமையம்மை, கவிராச பண்டிதனுக்கு மகளாகச் சென்று உணவு படைத்தாள்; முருகன் மாமன் திருமால், கணி கண்ணன் சொல்கேட்டுப் படநாகப்பாயைச் சுருட்டிக் கொண்டு அவன் பின்னே சென்றான். மெய்யன்புடையோர் மொழி கேட்டுக் கருணை புரிந்தவாறு சேனாபதி அடிகளுக்கும் முருகன் அருள வேண்டும் என முத்தப்பர் துதிக்கிறார்.

'பழநியாண்டவனைப் பாடும்போது, அருணகிரிநாதர் நாவில் அட்சரம் எழுத அருள் செய்தாய்; குகையிலடைபட்ட நக்கீரரைக் காத்தாய்; பகழிக் கூத்தருக்குக் காட்சியளித்தாய்; இவ்வாறெல்லாம் அருள்புரிந்த முருகனே சேனாபதிக்குருவுக்கும் அருள் செய்க' என்று பாடுவார் முத்தப்பர் வேண்டினார்.[5]

பண்பியல்புகள் :

சேனாபதி அடிகள், பெருஞ்செல்வர் என்றும் கொடையாளி என்றும் இப்பதிகங்களில் முத்தப்பர் போற்றுவர். அடிகள் 'சீரிலகு சங்க நிதி'[6] யுடையவர்; 'செம்பொன் மகமேரனைய சேனாபதி'[7] என்றும் 'தேமேவு

சுகிர்த நிதி'[8] வாய்ந்தவர் என்றும் 'இருநிதி படைத்தவர்'[9] என்றும் முத்தப்பர் குறிப்பர். சேனாபதி அடிகள் பால் செல்வம் இருந்தது போலக் கொடை மனமும் இருந்தது. அதனைச் 'செல்லனைய கொடையாளி சேனாபதிக் குரு சிகாமணிக்கு அருள்புரிகுவாய்'[10] என்றும் 'அந்தணர் பசுந் தமிழ்க் கவிஞர் மனம் மகிழ நிதி அள்ளிக் கொடுக்க இந்தச் செகமீதிலே வந்த சேனாபதிக்குரு சிகாமணி'[11] என்றும் தெளிவாகப் பாடுவர். செல்வம் நிறைந்த கொடைத் தன்மையுடைய சேனாபதி அடிகள், பண்பாலும் உயர்ந்தவர் என்பதை ஆசிரியர் 'தெள்ளமுத குணசாலி'[12] என்ற தொடரால் பாராட்டுவர்.

உருமில் சுற்றம் :

பாடுவார் முத்தப்பர், இன்னொரு பாட்டில் இவருடைய உறவினர்கள் பற்றி விரிவாகக் குறிப்பர். வீழிநாத சிந்தாமணி என்பவர், சேனாபதியடிகளின் சிறியதந்தையார்; அடிகளின் மாமன் சொர்ணமேரு. இவர் தந்தை செவந்தி மறையவன்.[13] சேனாபதியடிகளின் ஆன்மார்த்த பூசைக் குரியோர் பெரியநாயகி உடனாய பழம்பதிநாதர்.[14] குன்றக்குடி ஆறுமுகப் பெருமானையும் பழநி பழநியாண்டவனையும் பாடிய பதிகங்களில் பாடுவார் முத்தப்பர், சேனாபதி அடிகளைப் பற்றிய பல்வேறு செய்திகளைப் பாடியிருக்கிறார்.

குன்றக்குடி ஆறுமுகனைப் பாடிய பாடல்களில், 'சேனாபதிக்குரு சிகாமணிக்கு அருள் புரிகுவாய்'[15] என்றும் 'சேனாபதிக் குரு சிகாமணிக்கு அருளும்நீ செய்குவதும் மாபாரமா?'[16] என்றும் பாடுவர். இரண்டாவது பாடலன்றி ஏனைய பாடல்கள் அனைத்தின் ஈற்றடியிலும் 'சிகாமணிக்கு அருள்புரிகுவாய்'[17] என்ற தொடரமைந்துள்ளது.

பழநியாண்டவனைப் பாடிய பதிகப் பாடல்களின் இறுதியடிகளில் 'சேனாபதிக்குரு மனோரதப்படி அருள் செய்வாய்'[18] என்று பாடுவார் முத்தப்பர் உரைப்பர். சேனாபதியடிகளின் எண்ணம் என்ன என்பதை முத்தப்பர், பாடல்களில் விளக்கிச் சொல்லவில்லை.

பாடுவார் முத்தப்ப செட்டியார் வரலாறு எழுதிய வர்கள், 'சேனாபதியடிகளுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டது; அஃது மணி, மருந்துகளுக்குக் கட்டுப்பட வில்லை; அந்நிலையில் பாடுவார் முத்தப்பர் முருகனை வேண்டிப் பாடி நோய் நீக்கினார்', என்று குறிப்பர்.[19] பழநிப் பதிகத்தில் இந்தக் குறிப்புச் சிறிதுமில்லை. குன்றக்குடிப் பதிகத்தில், 'சேனாபதிக் குருசிகாமணிக்கு அருளும்நீ செய்கு வதும் மாபாரமா?'[20] என்று காணப்படுவது கொண்டு இதனை அடிகளைக் காக்கப் பாடியது என்று கருதுகின்றனர்.

குன்றக்குடிப்பதிகம், பழநிப்பதிகம் இரண்டும் முத்தப்பரால் வெவ்வேறு அமயங்களில் பாடப்பட்டவை. குன்றக்குடிப் பதிகம், சேனாபதி அடிகளின் நோய் நீங்கப் பாடியது. பழநிப் பதிகம் சேனாபதியடிகளின் உள்ளக் கருத்து நிறைவேறப் பாடியது. பாடுவார் முத்தப்பர் நோய் போக்குதற்காகப் பாடியிருந்தால், அதைத் தெளிவாகக் குறிக்குமியல்பினர்; மறைத்துப் பாடும் பழக்கம் இவரிட மில்லை. நடுவாற்று மருதம் பிள்ளையார் பதிகத்தில் தனக்கு நோய் ஏற்பட்டதைச் சொல்லித் தன்னைக் காக்க வேண்டுவர். பழநிப்பதிகத்தில் அத்தகைய போக்கில்லை. எனவே பழநிப் பதிகம் சேனாபதி அடிகளின் மனக்கருத்தை நிறைவேற்றப் பாடுவார் முத்தப்பர் பாடியதாகும்.

சேனாபதி அடிகள், பாடுவார் முத்தப்பரின் உறவு நெருக்கமுடையதாக இருந்தது. வணிக மரபில் பிறந்த முத்தப்பர். பாடுவராய்ப் புலவரான பின் பாதரக்குடி

சேனாபதியடிகளாரொடு பெரிதும் வாழ்ந்தார். இவ்விரண்டு பதிகங்களில் காணப்படும் செய்திகளைக் கொண்டு, சேனாபதி யடிகள்பால் இவர் காட்டிய ஆழ்ந்த அன்பும் மரியாதையும் வெளிப்படும்.

இந்த ஞானாசிரியரைப் பற்றித் திருமுகவிலாசத்திலும் நகர வாழ்த்திலும் முத்தப்பர் குறித்திருக்கிறார்.

''தேசா திபர்புகழும் செய்ய திருப்புனவை
ஆசான் அழகர் அடிபணிவோர்—...''
(திருமுகவிலாசம்: 192)

''சீராக வாழும் திருப்புனவை மாமுனியை
ஆராய்ந்து போற்றும் அரிய குலத்தவர்கள்
பாண்டிநாட் டாசான்தன் பாதம் பணிந்திடுவோர்''
(நகரவாழ்த்து 4—5)

இவ்வாறு இரண்டு நூல்களிலும் நகரத்தார்களின் ஞானாசிரியரைப் பற்றி உரைப்பன இவருக்கு அவரொடு உள்ள நெருங்கிய தொடர்பை உணர்த்துவதாகும். ஆனால் சேனாபதியடிகள் என்ற பெயர் இங்கு இல்லை.

பாதரக்குடி சேனாபதியடிகளைப் பாடுவார் முத்தப்பர் பாடிய தனிப் பாடல்களும் உள்ளன. அவையனைத்தும் அடி களின் செல்வச் சிறப்பையும் கொடைத்திறத்தையும் உணர்த்துவன. ஒருவெண்பாவில் 'செவ்வந்தி மறையோனு தவிய கண்மணியே,[21] என்றும் 'புனவயற் சேனாபதிக் குருவே,[22] என்றும் உரைப்பர். இன்னொரு பாடலில் புலவர் திருமாலைப் பலவாறு விளித்து, 'எங்கள் குரு தேசிக சேனாபதியை/மாதவனே! காத்தருள் செய்வாய்,[23] என்று வேண்டுவர். இவ்வாறு பாடுவார் முத்தப்பர், பாதரக்குடி சேனாபதி அடிகளைப் பாடுவதைப் பார்க்கும் போது, சேனாபதி அடிகள் சிறந்த புலவராகவும் முத்தப்பரின் நெருங்கிய நண்பராகவும் விளங்கியிருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது.

அடிக்குறிப்புகள்

1. காசிவிசுவநாதன் செட்டியார். வெ. பெரி. பழ. மு. (1941)—நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம் ப.21
2. நடராஜன். நா. (1949)—பாடுவார் முத்தப்ப செட்டியார் பக் 15—16
3. மேலது — பக் 16—17
4. மேலது — பக் 26
5. நடராசன். நா. & நாகப்பன். ராம. (1951)—திருமுக விலாசமும் முருகன் தோத்திரமும் பா. எண். 3.
6. மேலது — பா. எண். 1 அடி எண் 4
7. மேலது — பா. எண். 3 அடி எண் 4
8. மேலது — பா. எண். 9 அடி எண். 4
9. மேலது — பா. எண். 10 அடி. எண். 10
10. மேலது — பா. எண். 4 அடி எண் .4
11. மேலது — பா. எண். 7 அடி எண். 2—3
12. மேலது — பா. எண். 8 அடி எண். 4
13. மேலது — பா. எண். 9 அடி. எண். 1
14. மேலது — பா. எண். 10 அடி எண். 1
15. மேலது — பா. எண். 1 அடி எண். 4
16. மேலது — பா. எண். 2 அடி எண். 4
17. மேலது — பா. எண். 1, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, எல்லாப் பாடல்களிலும் ஈற்றடி.
18. மேலது — பா. எண்கள் 1 முதல் 10. ஒவ்வொரு பாட்டின் இறுதியடி.
19. நடராஜன். நா. (1949) — பாடுவார் முத்தப்ப செட்டியார் பக். 24—25
20. நடராசன். நா. & நாகப்பன். ராம (1951) — திருமுக விலாசமும் முருகன் தோத்திரமும் பா. எண். 2 அடி எண்.4
21. நடராஜன். நா. (1949) — பாடுவார் முத்தப்ப செட்டியார் ப. 15 ‘‘பூவே’’ என்று தொடங்கும் வெண்பா.
22. மேலது —
23. மேலது — ‘‘திருவளமும்’’ என்று தொடங்கும்வெண்பா.

முத்தப்பர் பண்பியல்பு

பாடுவார் முத்தப்பர் சிறந்த புலவராகத் திகழ்ந்தது போலச் சிறந்த பண்பாளராகவும் விளங்கினார். அவர் தமிழ்ப் புலவராக விளங்கினாரேயன்றி இரவலராக வாழ்ந்த குறிப்பில்லை. அவர் பாடிய நூல்களிலோ பாடல்களிலோ பரிசு வேண்டிச் செல்வர்களையோ மன்னர்களையோ பாடியமைக்குச் சான்றில்லை. இவர் தனக்கும் தன் குடும்பத் திற்கும் தேவையான பொருளை வணிகத்தின் மூலமே பெற்றிருக்க வேண்டும். பொருள்தேடும் முயற்சியுடன் இவர் தமிழ் நூலாக்கத்திலும் ஈடுபட்டிருக்கிறார்.

உதவும் பண்பு:

செல்வம் மிக்க செட்டியார்களிடையே செல்வாக்கு மிக்கவராகப் பாடுவார் முத்தப்பர் திகழ்ந்தார். அதனால், செட்டியார்களைத் தேடிவரும் புலவர்கள் முத்தப்பரைக் கண்டு பரிந்துரை பெற்றுச் சென்றனர். தமிழ்ப் புலவனான ஊனையூர் பண்டாரத்துக்கு இவர் திருமுகம் பாடிக் கொடுத் திருக்கிறார். அவனும் பெரும் பரிசுகள் பெற்றான். சங்க காலந்தொட்டுப் பல தமிழ்ப் புலவர்களை ஈன்ற வேம்பற்றூர் புலவரான மார்த்தாண்டப் புலவருக்கும் சீட்டுக்கவிபாடி முத்தப்பர் கொடுத்தார். இவற்றால், பாடுவார் முத்தப்பர் தமிழ்ப் புலவர்களுக்கு உதவும் மனப்பான்மையுடையவராகத்

திகழ்ந்தமை புலனாகும். மேலும் அன்றைய செட்டிநாட்டில் முத்தப்பருக்கு இருந்த மதிப்பையும் செல்வாக்கையும் இந்நிகழ்ச்சி காட்டும்.

மக்கள் நலம் நாடல் :

பாடுவார் முத்தப்பர் தன்னுடைய வாக்குப்பலித வன்மையால் மக்களுக்கு நலம் பயக்கும் நல்ல செயல்களையே புரிந்தார். அவர் காலத்தில், செட்டிநாட்டில் கடும் வறட்சி நிலவியது. அஃது எத்தனை ஆண்டுகள் இருந்தது என்று தெரியவில்லை. நெடுமரம் மலையரசியம்மனைப் பாடுங்கால் 'மாதமொரு பன்னிரண்டாய் மழையிலாமலே[1] 'என்று முத்தப்பர் பாடுவர். இடையில் சிறு தூற்றல் விழுந்தது; இருந்த விதையை விதைத்துவிட்டோம். அப்பயிர் விளைந்திட மழைவேண்டும் என்று நெடுமரம் மலையரசி யம்மனைப் பாடினார். இது போலக் கொன்னையூர் மாரியம்மனையும்[2] காட்டுக் கருப்பையாவையும்[3] ஆசிரியர் பாடி மழை பெய்யச் செய்தார்.

குன்றக்குடி முருகனுக்கு வெள்ளிமயில் வாகனம் செய்து வெள்ளோட்டம் நடை பெற்றது, அப்போது பாதரக்குடி சேனாபதி அடிகள் வேண்ட முத்தப்பர் மழை பெய்யப் பாடினார். அவ்வாறே மழையும் பொழிந்தது. இடைவிடாது பெய்யவே, மீண்டும் மழை நிற்க முத்தப்பர் பாட வேண்டிய தாயிற்று.[4] இவ்வண்ணம் தன்னுடைய செயற்கரிய புலமைத்திறத்தால், முத்தப்பர் உலகம் வளமுறப் பாடிப் போந்தார். மக்கள் நல்வாழ்வில் இவர் கொண்ட அக்கறை இந்நிகழ்ச்சிகளால் வெளிப்படும்.

பாடுவார் முத்தப்பர் தன் தெய்வப் புலமைத் திறத்தைத் தன்னலங் கருதிப் பயன்படுத்திக் கொண்டதாக யாண்டு மில்லை. அவர் தன்னினமக்களும் தன்னைச் சார்ந்த மக்களும்

பசியும் பிணியும் நீங்கி வளமுற வாழவே தன் பாட்டுத் திறத்தைப் பயன்படுத்தினார்.

அரசியல் ஆர்வம்:

செட்டியார்கள் தொழிலில்/வணிகத்தில் அக்கறை உள்ளவர்களே அன்றி அரசியலில் ஆர்வமுடையவர்கள் அல்லர் . ஆனால் அவர்கள் அரசியல் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருப்பர்; ஆட்சியாளர்கள் மனம் மகிழுமாறு நடந்து கொள்ள முயல்வர். இவ்வியல்பினை முத்தப்பர் பாலும் காணமுடிகின்றது. முத்தப்பர் காலத்தில் தமிழ்நாடு கும்பினியார் கையில் இருந்ததேயன்றி இங்கிலாந்து அரசின் நேரடி ஆட்சிக்கு வரவில்லை. புலவர் வாழ்ந்த காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சி நல்லாட்சியாகத் தோன்றியிருக்கிறது.

கிழக்கிந்தியக் கம்பெனியார் தமிழகத்தை ஆண்டபோது வாழ்ந்த பாடுவார் முத்தப்பர், ''இங்கிலீசுக்கொடி பறக்கவே இளையாத்தக்குடி சிறக்கவே'' என்று அருள்வாக்கிட்டார். ஆங்கிலேயர் ஆட்சிக்குக் கீழ்ப் பல நாடுகளும் இருந்தபோது, நகரத்தார்கள் எல்லாநாடுகளுக்கும் போய் வணிகம் செய்து வருவது எளிதாக இருந்தது. முத்தப்பர் அருள்வாக்கிற்குப் பின்புதான், நகரத்தார்களின் கடல் கடந்த வாணிகமும் வளர்ந்தது; நகரத்தார்களுக்குப் பொருளும் குவிந்தது. தமிழகம் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்தவரை நகரத்தார்கள் செல்வம் செழித்து உயர்ந்திருந்தனர். இதற்குக் காரணம் பாடுவார் முத்தப்பரின் 'இங்கிலீசுக் கொடி பறக்கவே இளையாத்தக்குடி சிறக்கவே' என்பதுதான். இளையாத்தக் குடி என்பது நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் அனைவரையும் குறிக்கும் பொதுத் தொடராகும்.

பாடுவார் முத்தப்பர் வெள்ளையர்களைப் போற்றிப் புகழ்ந்தே பாடியுள்ளார்.

''தர்ம துரையான கம்பெனியாரிந்தச்
சத்தசமுத்திரத் தீவுமுதல்
நம்மதென்றே புவியோ ரெட்டுக்குநல்ல
ராஜரீகம்செய்யு நாளையிலே''[5]

என்று உச்சினிமாகாளியம்மன் கும்மியில் சுட்டினார். அந்நூலின் இறுதியில் சிவகங்கை ஆட்சியாளர்களை வாழ்த்துவதுடன் 'கம்பெனியார் வாழி'[6] என்றும் வாழத்துவர்.

மருதம்பிள்ளையாரைப் பாடும் பதிகத்தில், மருது பாண்டியரை அடக்கப் படையொடு வந்த தளபதி அக்னீசை (AGNEW) ஆசிரியர் பாடினார். அப்படை எந்த நோக்கத்தில் யார் யாரொடு வந்தது என்பதையும் இவர் குறிப்பர். எனவே பாடுவார் முத்தப்பர் அவர்கால அரசியலில் ஆர்வமுடையவராகவும் இருந்திருக்கிறார் என்று புலனாகிறது.

பசிபொறுக்காமை :

பாடுவார் முத்தப்பர் காலத்தொடு உணவு உண்ணும் பான்மையர்; பசி பொறுக்காத பண்பினர்; பசிவேளையில் எதையாவது உண்ண வேண்டும்; அறுசுவை உணவுதான் வேண்டும் என்பதில்லை. இவர் உப்பு வணிகத்திற்குச் சென்ற போது, இவர் பசி போக்கிய செட்டியாரை வாழ்த்திப் பாடியிருக்கிறார்.[7] சேனாபதி அடிகள், பழங்கஞ்சி வழங்கி உணவிட்டதைப் பாராட்டி அவ்வுணவுக்கு ஈடிணையில்லை என்று போற்றுகிறார்.[8] இவ்விரு நிகழ்ச்சிகளும் பசித்த நேரத்துணவு வழங்கியவர்களைப் பாராட்டியவை. உணவு வேளையில் சென்றபோது, தன்னைப் பார்க்காது புறக்கணித்த செவ்வூரார் போக்கைக் கண்டித்துப் பாடினார். 'பசித்தார் முகம் பாரார்' என்று பாடினார்.[9] இவற்றை நோக்கும்போது, முத்தப்பர் பசிபொறுக்காதவர் என்று கருதத் தோன்றுகிறது.

சமய உணர்வு :

பாடுவார் முத்தப்பருக்கு அழுத்தமான சமயப்பற்று இருந்தது. சிவனடிமறவாச் சிந்தையும் செவ்வேளை மறவாத மனப்போக்கும் இப்புலவர் இயல்புகளாம். செயங்கொண்டார் சதகம் என்று நூறு பாக்களால் சிவபெருமானைப் போற்றிப் பாடினார். இச்சதகத்திலுள்ள இரண்டு பாக்கள், இவர் வெண்ணீற்றைப் போற்றிய பாங்கினையும் உள்ளன்போடு சிவபூசைசெய்ய வேண்டியதையும் வலியுறுத்துகின்றன.

இவருக்குச் சைவ சமயப் பற்றும் சிவசின்னங்களில் பேரீடுபாடும் உண்டு. செயங்கொண்டார் சதகத்தில், 'வெண்ணீறே வினையகற்றும் உண்மையுடன் தரிப்பவர்க்கே மெய்யதாமே'[10] என்ற பழமொழியைத் தழுவியுள்ளார். இம்மொழியை விளக்கத் திருஞான சம்பந்தர் திருநீற்றால் வழுதிசுரம் தீர்த்ததைக் குறித்தார். இதே நூலில் இன்னொரு பாடலில், போலிச் சிவனடியார்களைச் சுட்டினார். அப்பாடல்,

''பூமிதனிற் சிலறாண்டு இருகரமுங்
    குவித்திருகண் பொருத்திக் கொண்டே
காமியர்களாய்ப் பாரில் மனங்கிடக்க
    வாயிலர ஹரவென் றாற்போல்
நேமியணி வான்பெரிய தேடரிய
    செயங்கொண்டார் நியமவான் நாட்டில்
மாமிதலை மேல்கையும் வேலிப்புறத்
    தினில்கண்ணும் வைத்த வாறே''[11]

என்பதாகும். இப்பாட்டில் ஆசிரியர் எந்தப் புராணக் கதையையும் பயன்படுத்தவில்லை. உள்ளொன்று நினைத்துப் புறமே சிவபூசை செய்வாரைப் பாடுவார் அடையாளம் கண்டு இகழ்கின்றார். இதனால் இவர் தம் உண்மைச்

சிவபத்தி புலனாகின்றது. மெய்யன்போடு சிவபூசை செய்ய வேண்டும் என்று ஆசிரியர் வலியுறுத்துகின்றார்.

விரதங்களும் பயனும் :

மனிதனிடம் கடவுள் பற்றையும் சமய உணர்வையும் ஊட்டுவன விரதங்கள். மனிதன் நெறிப்பட வாழ விரதங்கள்' விழாக்கள், சடங்குகள் ஆகியன இன்றியமையாதவை. திருமுகவிலாசத்தில் முருகனைக் குறித்த சில விரதங்களைச் சொல்லியும் பயனை விளக்கியும் ஆசிரியர் பாடுவர்.

முருகனை வழிபட்டால் என்ன என்ன பயன் கிடைக்கும் என்று பாடுவார் முறைப்படுத்திக் கூறுவர். முருகன் உடல் நலத்தைத் தந்து பேச்சாற்றலையும் வீரத்தையும் அருள்பவன். அவனை கார்த்திகை அன்று வணங்கினால் மனக்கலக்கத்தைப் போக்கிப் பயனைப் பெருக்குவான். சஷ்டிவிரதம் மேற்கொண்டால் குறையாத பாக்கியத்தை அளிப்பான். சோமவார விரதத்தைப் பின்பற்றினால் விரதிகள் உள்ளத்தில் நியமத்தைக் கொடுப்பான். வெள்ளிக் கிழமை விரதத்தை மேற்கொண்டால் முருகன் அடியார் உள்ளத்திலேயே இருப்பான்.[11]

இவ்வண்ணம் கார்த்திகை விரதம், சஷ்டி விரதம், சோம வார விரதம், வெள்ளிக்கிழமை விரதம் என்னும் நான்கு விரதங்களையும் அவற்றைப் பின்பற்றினால் அடையும் பயன்களையும் அடுக்கியும் முறைப்படுத்தியும் இப்புலவர் பேசுகின்றார். இங்குச் சொல்லப்பெறும் விரதங்கள் அனைத்தும் செட்டிநாட்டாரால் பின்பற்றப்பட்டவை.

அடிக்குறிப்புகள்

1. நடராஜன். நா. (1949)—பாடுவார் முத்தப்ப செட்டியார் பக். 38-39.
2. தெட்சிணா மூர்த்தி. உ. (1981)—சு.செ.சேவு. மெய்யப் செட்டியார் மணிவிழா மலர். ப. 99

3. மேலது—ப.62

4. மேலது—பக். 16-17

5. முத்தய்யா செட்டியார்.சி.கரு.சி மு. (1937)—உச்சி மாகாளியம்மன் பேரில் கும்மி. கண்ணி. 33

6. மேலது—கண்ணி 88

7. நடராஜன்.நா. (1949)—பாடுவார் முத்தப்ப செட்டியார் ப. 12

8. மேலது—பக். 15-16.

9. மேலது—ப.6

10 காசிவிசுவநாதன் செட்டியார். வெ.பெரி.பழ.மு. (1941)- ஜெயங்கொண்டார் சதகமும் திருமுகவிலாசமும் நாட்டுக் கோட்டை நகரத்தார் சரித்திரமும். சதகம் பா.எண். 13

11. மேலது—திருமுகவிலாசம். கண்ணி 61-63.

நூலறிபுலவர்

பாடுவார் முத்தப்பசெட்டியார் நிறை மொழி மாந்தராய்த் தெய்வத் தன்மையுடைய புலவராய் விளங்கினார். நகரத்தார்கள் இவரைத் தெய்வப் புலவர் என்று பாராட்டிப் போற்றினர். பாடுவார் முத்தப்பர் தெய்வ அருள் பெற்றுத் திடீரெனப் பாடல்களைப் பாடியவர் என்று பலரும் நினைக்கின்றனர்; ஆனால் இவர் நூல்களும் பாடல் களும் 'இவர் முறையான தமிழ்அறிவு பெற்றவர்' என்பதற்குச் சான்று பகருகின்றன.

பாடுவார் முத்தப்பர் பாடிய நூல்களாலும் பாடல் களாலும் இவர் பல தமிழ் நூல்களைக் கற்றறிந்தவர் என்று வெளிப்படுகிறது. தமிழின் தலைசிறந்த நூல்களையும், ஆசிரியர்களையும் கருத்துக்களையும் பாடுவார் முத்தப்பர் தம் நூல்களில் சுட்டியுள்ளார்.

திருக்குறளும் நந்திக்கலம்பகமும் :

பாடுவார் முத்தப்பர், தமிழ்ப்புலவர்களில் தலைசிறந்த திருவள்ளுவரைச் செயங்கொண்டார் சதகத்தின் முருக வணக்கப் பாடலில் ''அகரமுதலவ்வெழுத்தென் றாயதிலே முப்பால் சொன்னவன் றாள் போற்றி''[1] என்று போற்றுவர். இப்புலவர் திருவள்ளுவர் இயற்றிய முதற்குறளின் முதற்சீரை மொழிந்துள்ளார். திருவள்ளுவர் என்று பெயரை மாத்திரம் சுட்டாது, நூலின் முதற்பாடல்—முதற் சீரையும் சுட்டியது

திருக்குறள் பயிற்சி உண்டு என்பதைக் காட்டும். அன்றி நூலின் மீது அவர் கொண்ட சிறப்பையும் உணர்த்தும். தமிழின் தொன்மையான நூல்களில் பாடுவார் முத்தப்பர். திருக்குறளையே சொல்லியுள்ளார்; பத்துப்பாட்டு, எட்டுத் தொகை போன்ற நூல்களைக் குறிக்கவில்லை.

நந்திவர்மப் பல்லவன் சாவதற்கு நந்திக்கலம்பகத்தில் சொல்லானந்தம், பொருளானந்தம் போன்ற குற்றங்கள் அமைத்து அறம் வைத்துப்பாடப்பட்டுள்ளது. இம்மரபு வழிக் கருத்தினைப் பாடுவார் முத்தப்பரும் ஏற்றுள்ளார். அவர் அப்பாடலில் யாக்கை நிலையாமையைச் சொல்லித் தமிழ் நலத்தைச் சுவைக்க வேண்டும் என்று வற்புறுத்து கிறார்.[2] நந்திவர்மன் தன் உயிரினும் மேலாகத் தமிழ்ச் சுவை நிறைந்த கலம்பகப் பாடல்களைக் கேட்கவிரும்பினான் என்று ஆசிரியர் சித்திரிக்கிறார்.

அறம் பாடுவதில் புகழ்பெற்ற பாடுவார் முத்தப்பர், அறம்வைத்துப் பாடிய நந்திக்கலம்பகத்தையும் தமிழ்ச் சுவையையும் குறித்துள்ளார். இஃது அவர் தம் தமிழ்ப் பற்றையும் தமிழ் நினைத்ததைச் செய்யும் வல்லமை யுடையது என்பதையும் காட்டும்.

திருக்குறள், நந்திக்கலம்பகம் போன்றவற்றைச் சுட்டும் இவ்வாசிரியர், இன்பச்சுவை நிறைந்த பிற்காலக் கூளப்ப நாயக்கன் விறலிவிடுதூதையும் மேற்கோள் காட்டுகிறார்.

விறலிவிடுதூது—மேற்கோள் :

'குலவித்தை கல்லாமல் பாதிவரும்' என்ற பழமொழியை விளக்கப் பாடுவார் முத்தப்பர் கூளப்பநாயக்கன் விறலிவிடு தூதிலிருந்து ஒரு பகுதியை எடுத்துக்காட்டுவர். முத்தப்பர்

''பிலமுற்ற சிங்கமொரு கன்றினும்
படியெழுதி பின்னே செம்பொன்
விலைபெற்ற கரியையரிக் கன்றுதுள்ளிப்
பாய்ந்தகதை மெய்யா மென்றே
சிலைபெற்ற கூளேந்திரன் விறலிதனில்
விளங்குதன்றே[3].............''

என்று கூறுவர். இப்பாட்டில், கூளப்பநாயக்கன் விறலிவிடு தூதுச் செய்தியைத் தழுவி ஆசிரியர் பாடினார். நூலின் பெயரைக் 'கூளேந்திரன் விறலி' என்று குறித்துள்ளார்.

''சீவகனுக் கன்றொருபெண் சிங்கமொரு கன்றீனும்
பாவனைபோ லேயெழுதிப் பக்கத்தில்—ஒவியமாக்
காரானை யொன்றெழுதிக் காட்டவரிக் கன்றுதுள்ளிப்
போராடிப் பாய்ந்தகதை பொய்யலவே''
(203 - 204)

என்ற கூளப்பநாயக்கன் விறலிவிடுதூதுப் பகுதியே செயங் கொண்டார் சதகத்தில் எடுத்துக்கொள்ளப் பெற்றது. இது சீவக சிந்தாமணியில் உள்ளது. ஆனால், ஆசிரியர் கூளப்ப நாயக்கன் விறலிவிடுதூதையே மேற்கோள் காட்டுகிறார்.

நூற்பயன் :

நூல்களையும், நூற்செய்திகளையும் சொல்லுவது போல நூலின் பயனையும் செயங்கொண்டார் சதகம் சொல்லு கிறது. பாரதம் கேட்ட 'செனமே செயன்' குட்ட நோய் நீங்கப் பெற்றான். தான் கேட்ட பாரதக் கதை, பொய்க் கதை என்றதும் நீங்கிய குட்டநோய் மீண்டும் வந்தது. இதனைப்

'பண்டுகுட்ட ரோகியுந்தான் பாரதங்
கேட்டா னோயும்பஞ் சாயோடி
விண்டுவரும் கதையைப் பொய்யென்றான்
மறைந்தகுட்ட மேலாச் சன்றோ'[4]

என்று செயங்கொண்டார் சதகம் குறிப்பிடுகிறது. இவ்வாறு பாரதம் கேட்டலின் பயனையும் அதன் மீது நம்பிக்கை வைக்கவேண்டியதன் தேவையையும், ஆசிரியர் வலியுறுத்து கிறார்.

இவர் சொல்லும் பிறநூல்களாவன விவேக சிந்தாமணி[5], பஞ்சதந்திரம்[6] என்பனவாகும். இவற்றையெல்லாம் ஒரு சேர நோக்கும்போது, அறநூல்களையும் சிற்றிலக்கியங் களையும் பயின்றவர், பாடுவார் முத்தப்பர் என்பது புலனாகும். இதிகாசங்களான பாரதம், இராமாயணம் போன்றவற்றையும் நளவெண்பா, நைடதம், போன்ற வற்றையும் ஆசிரியர் செயங்கொண்டார் சதகத்தில் பழமொழியை விளக்கப் பயன்படுத்தியுள்ளார்.

புலவரும் கதைகளும்

பாடுவார் முத்தப்பர் தான் பாடியவற்றில் பல தமிழ் நூல்களைக் குறிப்பிடுதலைப் போலப் பல புலவர்களின் வரலாற்றையும் கூறிப் பழமொழிகளை விளக்குவர். அவை மரபு வழியாக வந்தவை.

சங்கப்புலவருள் ஒருவர் நக்கீரர்; ஆனால் சமயப் புலவராகத் திகழ்ந்த நக்கீரரையே பாடுவார் முத்தப்பர் பாடியுள்ளார். இவர் முருகன் அருள்பெற்ற பெரும்புலவர்; இவரைப் போல முருகன் அருள் பெற்ற மற்றொரு புலவர் பகழிக்கூத்தர். முருகன் அன்பர்களான இவ்விருவரும் அருள் பெற்றவாற்றை எண்ணிப் பாடுவார் முத்தப்பர் தம் பாக்களில் பேசுகின்றார்.

1. நக்கீரர் :

நக்கீரர் பற்றிய பல்வேறு வகையான வரலாறுகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணப்படுகின்றன. செயங் கொண்டார் சதகத்திலும்[7] குன்றக்குடி முருகன் பதிகத்

திலும்[8] நக்கீரர் பற்றிய ஒரே கதையை ஆசிரியர் பாடுவர். சதகத்தில் சுருக்கமாக இடம் பெற்ற இக்கதை, பதிகத்தில் விரிவாக உள்ளது.

''மல்லல் உற்றிடு பாண்டி நாட்டிற் பரங்குன்றில்
வளர் சரவணப் பொய்கையில்
வந்துநற்கிரன் நிஷ்டையிலிருக்கின்ற சிறு
வரையின் மாருத விசையினால்

நல்லரசினிலை நீரினங் கரையில் வீழ்ந்துமீ
னாகவும் பறவை எனவும்
நலந்திழுத் திடர்ப்படல் கண்டு கண்ணாலிந்த
ஞாயத்தினை வியக்க

அல்லல் செய்தலகை யவரைக் குகைதன்னிலே
அடைத்திடப் பரமன் எனவும்
அடுக்கலை இழுத்துத் தகர்த்துக் கடுஞ்சிறை
அகற்றும் வீரப்பிர தாபா!'' (9)

இப்பாட்டில், நற்கீரர் என்று பெயர் காணப்படுகிறது. நக்கீரர் திருப்பரங்குன்றம் சரவணப் பொய்கைக் கரையில், நிட்டையிலிருந்ததாகவும், அவர் மனத்தைச் செலுத்தி முழுமையாக வழிபாட்டில் ஈடுபடாது கண்ணெதிரே நடந்த காட்சியைக் கண்டதாகவும், அதனால் பூதம் அவரைக் குகையில் சிறையிட்டதாகவும் அவரை முருகன் விடுதலை செய்து உயிர் காத்ததாகவும் பாடுவார் முத்தப்பர் பாடுகின்றார்.

குகையில் அடைபட்ட நக்கீரர் திரு முருகாற்றுப்படை பாடிச் சிறை நீக்கம் பெற்றார். இதனைப் பாடுவார் முத்தப்பர் கூறிற்றிலர். செயங்கொண்டார் சதகவுரை 'சுப்பிரமணிய சுவாமி பேரில் அகவல்' பாடி விடுதலை பெற்றார் என்றுரைக்கும், [10] பழநிப்பதிகத்தில், 'கனதயிரிய

மான இறையவர்களுக்குரம் கற்பித்து நற்கீரர் தன் கண் கலக்கம் கண்டு வரையிற் குகைதனில் கவியினாற்பாடியழவும்' என்று முத்தப்பர் குறிப்பர். இதில்[11] கவி பாடியதாகச் சுட்டப் பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படை பாடியதாக இல்லை.

2. பகழிக்கூத்தர்:

பழனிப் பதிகத்தில், பாடுவார் முத்தப்பர் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்பாடிய பகழிக் கூத்தரைப் புகழுவர். பகழிக்கூத்தர், பிள்ளைத்தமிழில் வாரானைப்பருவம் பாடிய போது முருகன் மயில் மீது வந்து காட்சி கொடுத்தான். இதனைத்

"தனதடிமையான பகழிக்கூத்தன் நற்சுவை
 ததும்பவும் உரைத்த பிள்ளைத்
தமிழுக்கு வாரானை சொல்லவும் மயிலில்என்
 சாமிநீ வரவில்லையோ?"[12]

என்று பாடினார். திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழையும் அதன் ஆசிரியர் பகழிக் கூத்தரையும் பழனி முருகனைப் பாடும்போது கூறுவது இவர்தம் பரந்துபட்ட தமிழ்ப் புலமையை உணர்த்துவதாகும்.

3. கவிராச பண்டிதர் :

முருகன் அருள் பெற்ற புலவர்களைப் போல அம்மையின் அருள் பெற்ற புலவர்களையும் பாடுவார் முத்தப்பர் தன் பாக்களில் குறிப்பர். அவர்களுள் கவிராசபண்டிதரும் அபிராமிப்பட்டரும் சுட்டத்தக்க சான்றோர்கள் ஆவர்.

அருட்புலவராகத் திகழ்ந்த பாடுவார் முத்தப்பர் அருளாளர்களாக விளங்கிய பல புலவர்களையும் தம் செய்யுள் களில் குறித்துள்ளார். சேனாபதிக்குரு சிகாமணியின் மனக் கருத்து நிறைவேறும்படி பாடிய குன்றக்குடி முருகன் தோத்திரப் பதிகத்தில், கவிராஜபண்டிதரைப் பாடியுள்ளார்.

''கானாறு குழவிஉன் தாய் அன்பு புனைகின்ற
கவிராஜ பண்டிதன் பின்
காசிமட்டும் சென்று அன்னம் சமைத்துக்
கனிந்து அளித்திட வில்லையா?''[15]

என்பது அப்பதிகத்தின் இரண்டாம் பாடலின் இரண்டாவது அடி.

கவிராச பண்டிதர், கி.பி. 1600 இல் வாழ்ந்த புலவர்; வீர சோழன் நல்லூரைச் சார்ந்தவர்; வேம்பத்தூர் அந்தண மரபினர். இவர் சௌந்தரியலகரி, ஆனந்தலகரி ஆகியவற்றைத் தமிழில் இயற்றியவர். இவர் காசிக்குச் சென்ற போது உமையம்மை இவர் மகளைப் போல உடன் சென்று உணவாக்கிக் கவிராஜரைக் காத்தாள். அவ்வரலாற்றையே பாடுவார் இங்குக் கூறுகிறார்.

பாண்டிய மன்னனுக்கு நாரையின் மூக்கிற்கு எதனை உவமை கூறலாம் என்ற ஐயம் எழுந்தது. அதற்குப் பொருத்தமான உவமையை அறியத் தமிழ்ச் சங்கத்தாரை மன்னன் நாடினான். அவர்களால் தக்க உவமை கண்டு சொல்ல முடியவில்லை. சோழ நாட்டிலிருந்து பரிசில் பெறப் பாண்டியநாடு வந்த சக்தி முற்றப்புலவர், மதுரை மாநகரில் இரவு நேரத்தில் வாடையால் வருந்திக்கிடந்தார். அப்போது அவர் கண்களில் நாரைகள் பட்டன. அந்நாரைகளைத் தன் மனைவிக்குத் தூதுவிடுவதாகப் பாடல் புனைந்தார். நகர் சோதனைக்கு வந்த பாண்டியன் சத்திமுற்றப் புலவரின் பாட்டைக் கேட்டான். அதில் அவன் நாடிய உவமை இருந்தது. அவ்வுவமை

''பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்''[16]

என்பதாகும். சத்திமுற்றப்புலவரின் உவமை நலம் பாண்டியனை மகிழச் செய்தது. இந்த வரலாற்றைச்

செயங்கொண்டார்[15] சதகத்தின் எண்பதாம் பாட்டு எடுத்துரைக்கிறது. பாடுவார் முத்தப்பர் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த சத்திமுற்றப் புலவர் பெயரைச் சொல்லாமல் அவர் வரலாற்றை அமைத்துள்ளார்.

பாடுவார் முத்தப்பர் செயங்கொண்டார் சதகத்தில் பழமொழிகளை விளக்கப் புலவர் வரலாறுகளைப் பயன் படுத்துகிறார். அகத்தியர்[16], கணிகண்ணன்[17] மாணிக்க வாசகர்[18], கம்பர்[19], அம்பிகாபதி[20], பட்டினத்தார்[21] காளிதாசன்[22], நிரம்ப அழகியர்[23] போன்ற பலர் வரலாற்றைச் சதகத்தில் பாடியுள்ளார். இவற்றை ஒருங்கே நோக்கும்போது, தமிழின் தலைசிறந்த புலவர் அனை வரையும் பாடுவார் முத்தப்பர் அறிந்திருந்தார் என்பது விளங்குகிறது.

சதக வழிகாட்டி :

அவையடக்கம் கூறப்புகுந்த பாடுவார் முத்தப்பர், தண்டலையார் சதகத்துடன் தான் பாடிய செயங் கொண்டார் சதகத்தை ஒப்பிடுவர். தண்டலையார் சதகம் மதயானை என்றும் செயங்கொண்டார் சதகம் சிற்றெறும்பு என்றும் கூறி மதயானை முன்னே சிற்றெறும்பு நடந்தது போலத் தான் பாடியதாகப் புலவர் பெருமான் பேசுவர்.[24] இதனால், பாடுவார் முத்தப்பர் முன்னைப் புலவர்களை மதித்த பண்பு வெளிப்படும். தன்னைத் தலைசிறந்த புலவன் என்று வியவாத அவர்தம் தன்னடக்கக்குணமும் தெரியவரும்.

படிக்காசுப் புலவர் பதினேழாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். இவரியற்றிய நூலே தண்டலையார் சதகம். இதனைத்தான் பாடுவார் முத்தப்பர், செயங்கொண்டார் சதகம் பாட வழிகாட்டியாகக் கொண்டார். தண்டலையார்

சதகம், சிவபெருமானைப் போற்றுவது போலச் செயங் கொண்டார் சதகமும் சிவபெருமானைப் போற்றுவது. செயங் கொண்ட சோழீசர், பாடுவார் முத்தப்பர் பிறந்த நேமங் கோயில் சிவபெருமானாவர். அக்கடவுளைப் போற்றிப் பாடுவது செயங்கொண்டார் சதகம்.

தண்டலையார் சதகத்தில் காணப்படும் பழமொழிகள் சிலவற்றையும் கதைகளையும் தொடர்களையும் செயங் கொண்டார் சதகத்தில் காணமுடிகிறது. ‘பெண்ணென்ற வுடன் பேயுமிரங்குந் தானே’ என்பது தண்டலையார் சதகம். ஆனால் இப்பாடலின் முற்பகுதியில், படிக்காசுப் புலவர், ‘பெண்ணாசை கொடிது என்றும் பெண்புத்தி உதவாது என்றும் பெண் வார்த்தை தீது என்றும் பெண் சென்மம் ஒரு சென்மமா? என்றும் இழித்துரைப்பர். தொடர்ந்து பெண் மயக்கத்தால் பெண் என்றால் இரங்குவர் என்று பாடுவர். பழமொழியை விளக்க வந்த படிக்காசுப் புலவர், பெண் பிறப்பை இழிவாகக் கருதி விளக்கியுள்ளார்.[25]

செயங்கொண்டார் சதகத்திலும் ‘பெண் ணென்றால் பேயுமொக்க இரங்கும்’ என்ற இதே பழமொழி காணப் படுகிறது. ஆனால் பாடுவார் முத்தப்பர் பெண்ணை இழி பிறவியாகச் சுட்டிலர். முருகன் வள்ளிக்கு வேங்கை மரமாக நின்ற வரலாற்றைச் சொல்லி இப் பழமொழியை விளக்குவர்.[26] ஒரே பழ மொழியை இரண்டு புலவர்களும் வெவ்வேறு அடிப்படையில் விளக்கினர். பாடுவார் முத்தப்பர் பெண்மையை மதித்துப் பழமொழியை விளக்கியமை போற்றத் தக்கது.

‘தன்வினை தன்னைச் சுட வோட்டப்பம் வீட்டைச் சுடவுந் தான் கண்டோமே’[27] என்று தண்டலையார் சதகம் சொல்லும். இப்பழமொழியைச் செயங்கொண்டார் சதகம், ‘பிறர்க்குத் துன்பங் காணச் செய்த தீவினைதானும் செய்த

வர்க்கே சாருமெனச் செப்புவாரே'[28] என்று பட்டினத்தார் வரலாற்றைக் கூறி விளக்கும். ஒரே கருத்தை வெவ்வேறு சொற்களால் இரண்டு நூல்களும் விளக்குகின்றன.

தண்டலையார் சதகம், உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று செய்யும் போலிச் சிவனடியார்களை 'ருத்திராக்கப் பூனை என்று குறிக்கும். அப்போலிச் சிவனடியார்களின் திருவேடத்தைக் 'காதிலே திருவேடம்; கையிலே செபமாலை: கழுத்தில் மார்பின் மீதிலே தாழ்வடங்கள்; மனத்திலே கரவடமாம் வேடமாமோ'[29] என்று தண்டலையார் சதகம் புனையும். பாடுவார் முத்தப்பர். சிவபூசை செய்யும்போது போலி அடியார்களின் மனப்போக்கு உள்ள நிலையைச் சித்திரித்துக் காட்டுவர். அந்தப் பாடல்,

''பூமிதனிற் சிலறாண்டு இருகரமுங்
குவித்திருகண் பொத்திக் கொண்டே
காமியர்களாய்ப் பாரில் மனங்கிடக்க
வாயிலரஹரவென் றாற்போல்
நேமியணி வான்பெரிய தேடரிய
செயங்கொண்டார் நியமவான் நாட்டில்
மாமிதலை மேல்கையும் வேலிப்புறத்
தினில் கண்ணும் வைத்த வாறே'' (59)

என்பதாகும். இரண்டு சதகங்களும் வெவ்வேறான பழமொழிகளை விளக்க ஒரே கருத்தை எடுத்துக் கொண்டன. தண்டலையார் சதகத்தைக் கற்ற பாடுவார் முத்தப்பர் அந்நூல் நெறியில் தன் நூலைக் கொண்டு சென்றிருக்கிறார். ஒவ்வொரு பாடலிலும் கதை கூறி விளக்கும் முத்தப்பர், இப் பாட்டில் கருத்தைக் கூறியே பழமொழியை விளக்கியது புதுமையாகும்.

படிக்காசுப்புலவர் 'சுந்தரர்க்குத் தூது சென்ற தண்டலைநீ ணெறியாரே'[30] என இறைவனை விளிப்பர்.

பாடுவார் முத்தப்பர் 'சுந்தரற்குத் தூது சென்ற செயங் கொண்டாரே'[31] என்று அதே தொடரைக் கையாண் டுள்ளார். தண்டலையார் சதகப் பாடல்கள் அனைத்தும் அறுசீர் விருத்தத்தால் ஆனவை; செயங்கொண்டார் சதகப் பாடல்களும் அறுசீராசிரிய விருத்தப்பாடல்களேயாம். இவ்வாறு தண்டலையார் சதகம், பாடுவார் முத்தப்பருக்குச் செயங்கொண்டார் சதகம் பாட வழிகாட்டியாக உள்ளது.

திருவேங்கட சதக - ஆட்சி :

பாடுவார் முத்தப்பர் குறிக்கும் இன்னொரு சதகநூல், மணவாள நாராயண சதகம், இதனைத் திருவேங்கட சதகம் என்றும் வழங்குவர். பாடுவார் முத்தப்பர் இச்சதகப்பாடல் கருத்தைச் சுட்டி நூற்பெயரையும் குறிப்பர். மணவாள நாராயண சதகம் பதினெட்டாம் நூற்றாண்டின் முற் பகுதியில் தோன்றியது.

> "விருப்பமறை யோர்தனக்குப் பிறந்தநிரு
> வனைஉவணன் விழுங்கு வாயில்
> நெருப்பெனச்சுட் டதனால்செங் கருடனிரு
> தனைவிடுத்தா னெனவோர் பாட்டில்
> திருப்பதிவேங் கடசதகந் தனிலுரைத்தார்"[32]

என்பது செயங்கொண்டார் சதகம். திருவேங்கட சதகத்தைத் திருப்பதி வேங்கட சதகம் என்று முத்தப்பர் கூறுகிறார். "வால கருடன்பண்டு கண்டகதை யல்லவோ"[33] என்று திருவேங்கட சதகம் சொல்வதையே இவ்வாசிரியர் தன் சதகத்தில் பாடியுள்ளார்.

தண்டலையார் சதகம், திருவேங்கட சதகம் இரண்டினையும் பாடுவார் முத்தப்பர் பயின்றுள்ளமை இதனால் புலனாகும்.

சிற்றிலக்கிய வகைகள் :

செயங்கொண்டார் சதகத்தில், பல்வேறு நூல்களையும் பல்வேறு புலவர்களையும் குறித்த பாடுவார் முத்தப்பர், திருமுக விலாசத்தில் பல சிற்றிலக்கிய வகைகளைக் கூறுகிறார். அவர் மானிடர் பலரைப்பாடி வருந்தியதைச் சொல்லும்போது சிற்றிலக்கியத்தையும் அதற்குக் கிட்டும் பரிசில் தொகையையும் சேர்த்துரைக்கின்றார். அவர் கூறும் சிற்றிலக்கிய வகையும் கிடைக்கும் பரிசுப் பொருளும் :-

மஞ்சரி	—	ஒருபணம்
வண்ணம்	—	முக்கால்பணம்
பதம்	—	அரைப்பணம்
நாடகத்துறை	—	பழைய வேட்டி
பத்துவிருத்தம் சீட்டுக்கவி	—	ஒருவேளை உணவு
வெண்பா	—	ஒரு பாக்கு/புகையிலை.

இவை தமிழில் வழங்கும் எளிய இலக்கிய வகைகள்;[34] ஆனால் அரிதாகப் பாடப்படுபவை. பாடுவார் முத்தப்பர் முறையாகவும் அழுத்தமாகவும் தமிழிலக்கண இலக்கியங்களைப் படித்தமையாலேயே, பல இலக்கிய வகைகளைச் சுட்டுகிறார்.

திருமுக விலாசத்தில் குறித்த இலக்கிய வகைகளில் இவர் பாடியவை பத்துவிருத்தம் (பதிகம்) சீட்டுக்கவி, நாடகத் துறை (குளுவநாடகம்) என்பனவே. இவற்றில் இயம்பப் பெறாத திருமுகவிலாசம், சதகம், வாழ்த்து, முதலிய இலக்கிய வகைகளை இப்புலவர் பாடியுள்ளார். பகழிக் கூத்தரின் பிள்ளைத் தமிழைக் குறிப்பர். பல சிற்றிலக்கிய வகைகளைச் சுட்டுவதனாலும் பாடியிருப்பதாலும், பாடுவார் முத்தப்பருக்குத் தமிழ் இலக்கியத்தில் பரந்துபட்ட அறிவு இருந்தமை உணரப்பெறும்.

புலவர் வேண்டுவன :

தான் பாடிய நூல்களிலும், செய்யுள்களிலும் தமிழ்ப் புலவர்களையும் நூல்களையும் நவின்ற பாடுவார் முத்தப்பர், கிரணிப்பட்டி முத்துமாரியம்மன் பதிகத்தில் தன் விழைவைக் கூறுகின்றார். அவர், தான் பழைய நூல்களையும் புதிய நூல் களையும் அறிந்து அறிவு பெறவேண்டும் என்றும் செந்தமிழ்க் கவிதைகளை எடுத்துச் சொல்லத் தனக்கு இனிய குரல் வேண்டும் என்றும் முத்துமாரியம்மனை வேண்டுகிறார்.

> ''மெய்தோன வேணுமுயர் பழையகவி புதியநூல்
> மிகவுமறிவாக வேணும்
> மிக்க நற்றமிழ் சொல்ல நற்சாரீரமும் வேணும்''[35]

என்பது ஆசிரியர் அம்மைபால் வேண்டுவனவாம். இதனை ஆராய்ந்தால், தொன்மை இலக்கியங்களைக் கற்பதிலும்' புதியநூல்களை ஆராய்வதிலும் பாடுவார் முத்தப்பருக்கு அறிவு வேட்கையும் ஆர்வமும் இருந்தது வெளிப்படும். எனவே பாடுவார் முத்தப்பர் அருள்பெற்ற புலவராக இருந்ததுடன் அறிவுபெற்ற புலவராகவும் திகழ்ந்தார். அவரைத் தெய்வப் புலவர் என்று போற்றுவதுடன் நூலறி புலவர் என்றும் பாராட்ட வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. சந்திரசேகரன், தி. (1955 - செயங்கொண்டார் வழக்கம் (உரை விளக்கத்துடன்) முருகர் வணக்கம். அடி எண். 3
2. மேலது - பா.எண். 87
3. மேலது - பா.எண். 63 அடி 1-3
4. மேலது - பா.எண்.29 அடி 1-2
5. மேலது - பா.எண். 2, 64.
6. மேலது - பா.எண். 68
7. மேலது - பா.எண். 97

8. நடராசன், நா & நாகப்பன், ராம. (பதி) (1951) - திருமுக விலாசமும் முருகன் தோத்திரமும் : ப. 20; பா.எண். 4.
9. ஷ்டி : ஷ்டி
10. சந்திரசேகரன், தி (1955) - செயங்கொண்டார் வழக்கம். ப. 101
11. நடராசன், நா. & நாகப்பன், ராம. (பதி) (1951) - திருமுகவிலாசமும் முருகன் தோத்திரமும்: ப 25 பா.எண். 9
12. ஷ்டி : ஷ்டி
13. ஷ்டி : ஷ்டி
14. அருணாசலம், மு. (1970) - தமிழிலக்கிய வரலாறு - பதின் மூன்றாம் நூற்றாண்டு, திருச்சிற்றம்பலம், காந்தி வித்தியாலயம். ப. 449.
15. "பார்புகழும் பாண்டியற்குச் சங்கத்தார்
பேரறிவால்பகரொண் ணாத
நாரைமூக் குவமைபனங் கிழங்கென்றே
ஒருபுலவன் நவின்றா னன்றே
சீருலவு கங்கைதிங்கள் அக்கரவு
கொன்றையணி செயங்கொண் டாரே
காருலவு புவியிலுள்ளோர் ஆகாசந்
தனையும் வடிக் கட்டுவாரே"
16. சந்திரசேகரன், தி. (1955) - செயங்கொண்டார் வழக்கம் பா.எண். 79
17. ஷ்டி : பா.எண். 82.
18. ஷ்டி : பா.எண். 92.
19. ஷ்டி : பா.எண்கள். 11, 80, 93.
20. ஷ்டி : பா. எண். 20.
21. ஷ்டி : பா. எண். 73.
22. ஷ்டி : பா. எண். 75.
23. குமரகுருபரன் பிள்ளை. டி. எம். (1959) (பதி) — செயங் கொண்டார் வழக்கம் உரையுடன். ஸ்ரீவைகுண்டம்,

ஸ்ரீகுமரகுருபரன் சங்கம் பா. எண். 86. இப்பாடலுக்குப் பாட பேதமாக அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகப் பதிப்பில் வேறுபாடல் உள்ளது. இரண்டிலும் இறுதியடிதான் ஒன்று போல உள்ளது. கீழ்த்திசை சுவடிகள் நூலகப்பதிப்பில் கம்பரையும் புகழேந்தியையும் இணைத்துக் கதை அமைந்துள்ளது.

24. சந்திரசேகரன். தி. (1955)—செயங்கொண்டார் வழக்கம் உரை விளக்கத்துடன். ப. 2. அவையடக்கப் பாட்டு.
25. இராமசாமி நாயுடு (1905) (பதி) — பழமொழி விளக்கம் என்னும் தண்டலையார் சதகம், சென்னை மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை. பாடல். எண். 85.
26. சந்திரசேகரன். தி. (1955) — செயங்கொண்டார் வழக்கம். பா. எண். 53.
27. இராமசாமி நாயுடு (1905) (பதி) பழமொழி விளக்கம் என்னும் தண்டலையரர் சதகம்: பா. எண். 65.
28. சந்திரசேகரன். தி. (1955) — செயங்கொண்டார் வழக்கம். பா. எண். 73
29. இராமசாமி நாயுடு (1905) (பதி) — பழமொழி விளக்கம் என்னும் தண்டலையார் சதகம்: பா. எண். 29
30. மேலது. பா. எண். 32
31. சந்திர சேகரன். தி. (1955) — செயங்கொண்டார் வழக்கம். பா. எண். 31
32. மேலது: பா. எண். 72
34. நாராயண பாரதி (1905) — மணவாள நாராயண சதகம் என்னும் திருவேங்கட சதகம், சென்னை, மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை. பா. எண். 2. அடி. எண். 4.
33. நடராஜன். நா. & நாகப்பன். ராம. (பதி) — திருமுக விலாசமும் முருகன் தோத்திரமும். கண்ணி 100—105
35. நடராஜன். நா. & நாகப்பன். ராம. (பதி) (1951) — ஜெயங்கொண்டார் சதகமும் தேவி தோத்திரமும். ப. 32. பாடல் 10 அடி எண். 1—2.

திருமுகவிலாசம்

திருமுகமும் கடிதமும் :

திருமுகவிலாசம், பாடுவார் முத்தப்பர் இயற்றிய சிற்றிலக்கியங்களில் ஒன்றாகும். இது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் அடங்காத புதிய வகையாகும். திருமுகம், விலாசம் என்ற இரண்டு சொற்கள் சேர்ந்து உருவான தொடர், திருமுகவிலாசம் என்பதாகும். திருமுகம் என்ற சொல் கடிதத்தைக் குறிக்கும். கோவலன் மாதவியைப் பிரிந்து வந்தான். அப்போது, மாதவி அவனுக்குக் கடிதம் எழுதக் கருதினாள். அதனை இளங்கோவடிகள் 'திருமுகம் போக்கும் செவ்வியளாகி'[1] என்று இயம்புவர். இதனால் கடிதத்தைத் திருமுகம் என்பது தொன்மை வழக்கு என்றுணரலாம். இன்று ஊரக வழக்கிலும் கடிதத்தைத் திருமுகம் என்னும் மரபுண்டு.[2] நன்னூல் பாயிரம், திருமுகத்தை 'ஓலைத் தூக்கு'[3] என்று சுட்டும். ஆயினும் திருமுகம் என்பதே பயின்ற வழக்கு.

பெயராராய்ச்சி :

விலாசம் என்ற சொல் விளையாட்டு என்று பொருள் படும். ''வீதியில் விலாச முற்றிடு நாளில்''[4] என்று இச்சொல் வில்லி பாரதத்தில் இதே பொருளில் பயிலுகின்றது. தமிழில் விலாசம் என்ற பெயரால் பல்வேறு நூல்கள் தோன்றியுள்ளன. டம்பாச்சாரி விலாசம், விநாயகர்

திருமுகவிலாசம் போன்ற நூல்களில் இச்சொல் இப்பொருளிலேயே ஆளப்பட்டிருக்கிறது. ஆகலின் 'திருமுக விலாசம்' என்ற பெயர் 'திருமுகத்தின் விளையாட்டு' என்றும் கடிதத் திருவிளையாடல் என்றும் பொருள்படுமாறு அமைந்தது. முருகன் திருமுகம் கொடுத்து விளையாட்டுச் செய்கின்றமையான் இது திருமுகவிலாசம் எனப் பெற்றது.

கி.பி. 1868 இல் திருமுகவிலாசத்தைப் பதிப்பித்த சிதம்பரம் கருணானந்த சுவாமிகள்

''சுப்ரமணியர் புலவருக்குத் திருமுகந்தந்தாற்போல் பாடியதால்
திருமிக விலாசம் எனக் காரணப் பெயராயிற்று''[6]

என்று நூற்பெயரை விளக்குவர். திருமுகவிலாசம் முழுமையும் திருமுகமாயின் திருமுகம் என்றும் சீட்டுக்கவி என்றும் பெயர் அமையும். இந்நூலில் திருமுக வாசகமே இல்லை.

பாடுவார் முத்தப்பர், முருகன் திருமுகம் தந்ததாகவும் அதனால் பயன் விளைந்ததாகவும் நூலை இயற்றி யிருக்கிறார். இதில் முருகன், சிவன், அம்மை, விநாயகர், திருமால் ஆகியோரைப் பற்றிய வரலாறுகள் இகழ்வது போலப் புகழப்பட்டிருக்கின்றன. இதுவே நூலின் பெரும் பகுதி. இப்பகுதி நகைச்சுவை நிறைந்தது; அங்கதமாக விளங்குவது. அதனால்தான் ஆசிரியர் இந்நூலுக்குத் திருமுகவிலாசம் என்று பெயரிட்டிருக்கிறார்.

நூல் எழுந்த சூழல்:

திருமுகவிலாசம், ஊனையூர் வீரபண்டாரம் மகன் சுப்பிரமணிய பண்டாரத்திற்குப் பரிசில் வழங்கியமைக்கு நகரத்தாரைப் பாடுவார் முத்தப்பர் பாடியதாகும். இப்புலவர் திருமுகவிலாசம் பாடியதற்கு வேறொரு காரணமும் சொல்லப்பெறுகிறது. இக்காரணம் மெய்யா? பொய்யா? என்று முடிவு செய்யச் சான்றுகள் கிடையாது.

பழைய காலத்தில், அனைத்து ஊர்களிலும் வாழும் நகரத்தார்கள் ஆண்டுக்கொருமுறை, செட்டிநாட்டில் ஓரிடத்தில் ஒருங்கே கூடுவர். அதற்கு நகரக் கூட்டம் என்று பெயர். அக் கூட்டத்தில் தங்கள் சமுதாயத்துக்கேற்ற அறங்களை வகுத்தும் தனிப்பட்டவர்களுக்கிடையே உள்ள வழக்குகளைத் தீர்த்தும் அமைகுவர். நகரக் கூட்ட முடிவைத் தவறு என்றோ பிழை என்றோ ஆய்வு செய்யக்கூடாது. நகரக் கூட்ட முடிபே, முடிந்த முடிபு ஆகும். சில நேரங்களில், ஆள் மிகுதியாகச் சேருகின்ற பக்கம் வழக்கு வெற்றியாக முடியும். இந்தப் பெரும்பான்மை முறையால் அறம் குலைவதும் உண்டு. 'வலுவே வழக்கு அதுவே நியாயம்' என்பதுதான் நிலை.

நகரத்தார்கள் ஒன்று கூடி எடுத்த முடிபு ஒன்றினை முத்தப்பர், அறம் அன்று என்று தெளிவாக உணர்ந்து அது தவறு என்று பேசிவிட்டார், அதனைக் கேள்வியுற்ற நகரத்தார், அதுகுறித்து விசாரிக்கப் புலவரை அழைத்தனர். இச்சூழலில் எதற்கும் அஞ்சாத முத்தப்பர் நகரத்தாருக்குத் தாழ்ந்து போக விரும்பவில்லை. புலமைத் திறமும் தெய்வத்துணையும் உடைய அவர், தன்மான உணர்வால் அறம் பிழைத்தமையை ஏற்றுக்கொள்ள இசையவில்லை. அது புலவர்களுக்குரிய இறுமாப்பாகும். ஆயினும் அவர் தனிமனிதன் சமுதாயத்தை எதிர்த்து நிற்கவும் அதனால் விளையும் சிக்கல்களைக் காணவும் வேண்டாம் என்று எண்ணினார். இருதலைக் கொள்ளி எறும்பு போல இடர் எய்திய நிலையில் அவர்க்கு ஒரு வழி தோன்றியது.

அல்லலுற்ற பாடுவார் முத்தப்பருக்கு, மதுரை சோமசுந்தரனார் எழுதிய திருமுகப் பாசுரம் நினைவிற்கு வந்தது. அந்தத் திருமுகம் போல ஒன்றனை முத்தப்பர் இயற்றி ஊனையூர்ப் பண்டாரத்திடம் கொடுத்தனுப்பினார்.

முருகன் பேசுவதாகவும் முருகன் நகரத்தார் வரலாற்றைக் கூறித் திருமுகம் அனுப்பியதாகவும் பாடியதை அறிந்த நகரத்தார் மகிழ்ந்தனர்; பாடுவார் முத்தப்பரின் மேல் குற்றம் சுமத்தியவர்கள் வாயடைத்துப் போயினர். புலவரின் வாக்குப் பலித ஆற்றலும் நகரத்தாரை அச்சுறுத்தியது. எனவே பாடுவார் முத்தப்பரின் மீது எழுந்த சிக்கல் எவ்வகையான தீர்வுமின்றி மறைந்தது. அவர்க்கு எதிராகப் பேசியவர்கள் வாயடைத்துப் போயினர்.

மரபுச் செய்தியும் நூலும் :

இதனை உறுதிப்படுத்த திருமுகவிலாசத்திலோ வேறு செய்யுட்களிலோ எந்த வகையான குறிப்புமில்லை. திருமுகம் கொண்டு சென்ற ஊனையூர்ப் பண்டாரம் கொற்ற மங்கலத்திற்குப் போனார். அங்கே நகரத்தார், உலகாயி கோயிலுக்கு வடக்கேயுள்ள விடுதியிலும் அங்குள்ள மா மரத்திற்கு மேற்கே உள்ள காவணத்திலும் கூடியிருந்தனர். இங்குத்தான் ஊனையூர் சுப்பிரமணியபண்டாரம் திருமுகம் கொண்டு சென்றான்.[6] இதனைத் திருமுகவிலாசம் தெற்றெனச் சொல்லுகிறது. எனவே நகரக் கூட்டம் கொற்றமங்கலத்தில் கூடியது உண்மையாகும்.

கொற்றமங்கலம் (கொத்தமங்கலம்) செட்டிநாட்டு ஊர்களில் ஒரு பழைமையான ஊர். இங்கு நகரக்கூட்டம் நடந்தபோது ஊனையூர் சுப்பிரமணிய பண்டாரம் சென்றார். ஊனையூர், கொத்தமங்கலத்திற்கு அருகிலுள்ள ஊராகும். பாடுவார் முத்தப்பர் செயங்கொண்டார் சதகம் அரங்கேற்றியபோது ஊனையூர்ப் பாரதியார் பாடல்பாடிச் சிறப்பித்திருக்கிறார். ஆதலால் ஊனையூர்ப் புலவர்களுக்கும் பாடுவார் முத்தப்பருக்கும் தொடர்பு இருந்தமை வெளிப் படும். எனவே ஊனையூரைச் சார்ந்த பண்டாரம், பாடுவார் முத்தப்பர் உதவியை நாடி வந்திருக்கலாம். ஊனையூர்ப்

பண்டாரத்தின் பெயரும் அவன் தந்தை பெயரும் ஊர்ப் பெயரும் திருமுகவிலாசத்தில் தெளிவாகக் கூறப் பட்டுள்ளன.[7]

கொற்றமங்கலத்தில் நகரக் கூட்டம் கூடியதற்கான காரணம் பற்றித் திருமுகவிலாசம் ஏதும் சொல்லவில்லை. மரபு வழியாகச் சொல்லப் பெறும் காரணத்தை உறுதி செய்ய வேறு சான்றுகள் இல்லை. ''இனிதாய் நடந்து கொற்ற, மங்கலத்திற் சென்றேன் வணிகேசர் **சங்கதியாய்க் கூடி**''[8] என்று திருமுகவிலாசம் உரைக்கிறது. நகரக் கூட்டத்துக்கான காரணத்தைச் சொல்ல வந்த புலவர் 'சங்கதி' என்று மட்டுமே இயம்புகிறார். இதற்கு விரிவான வேறு விளக்கமும் கிடைக்கவில்லை.

நகரக்கூட்டம், பாடுவார் முத்தப்பர் பற்றியது என்றோ வேறுவகையான தென்றோ எவ்வகைக் குறிப்பும் திருமுக விலாசத்தில் காணப்பட்டிலது. ஆகையால், பாடுவார் முத்தப்பர் தன் குற்றத்தைப் போக்கத் திருமுகவிலாசம் பாடினார் என்று துணிவதற்கில்லை. ஊனையூர்ச் சுப்பிரமணிய பண்டாரத்திற்குப் பொருளுதவி செய்யவே பாடினார் என்று கொள்வது நனிபொருந்தும்.

புலவரின் உதவும் பண்பு :

ஊனையூர்ப் பண்டாரம், முருகன் அடியவன்; தமிழ்ப் புலவன்;[9] பாடுவார் முத்தப்பரொடு நட்புரிமையுடையவன். அவன் வறுமையால் வாடியமை கண்டு அவனுக்குப் பொருளுதவி செய்யப் பாடுவார் முத்தப்பர் விரும்பியிருக் கின்றார். நகரத்தார் சமுதாயத்திலும் ஊர்களிலும் பண்டாரமரபினருக்குத் தனி மதிப்பும் மரியாதையும் உண்டு. திருமணம், ஈமச்சடங்கு, திருநாள், திவசம், போன்ற சிறப்பு நிகழ்ச்சிகள் அனைத்திலும் ஊர்ப்

பண்டாரத்திற்கு உரிமை வழங்கியிருந்தனர், நகரத்தார்கள். இத்தகைய நெருக்கமுடைய பண்டார மரபினருக்கு முத்தப்பர் உதவிட இன்னொரு காரணமும் உண்டு.

திருமுகவிலாசத்தில் வரும் ஊனையூர்ச் சுப்பிரமணிய பண்டாரம், கற்பனைப் பாத்திரம் அல்லன். அவன் உலகில் வாழ்ந்த மனிதன். அவனோ தமிழ்ப்புலவன். அதனால் தான் பாடுவார் முத்தப்பர் சுப்பிரமணிய பண்டாரத்துக்கு உதவி செய்ய முயன்றிருக்கிறார். திருமுகம் கொடுத்துப் பிறருக்கு உதவுவது பாடுவார் முத்தப்பர் இயற்கை. எனவே தான் பழமரம் நாடும் பறவைகளைப் போலப் புலவர்கள் பாடுவார் முத்தப்பரை நாடிவந்திருக்கின்றனர். நிம்பை மார்த்தாண்டப் புலவருக்குப் பொருளுதவி செய்யுமாறு நேம நகரத்தார்க்குப் பாடுவார் முத்தப்பர் சீட்டுக்கவி கொடுத்திருக்கின்றார். இம்மார்த்தாண்டப் புலவர், வேம்பத்தூரைச் சார்ந்த அந்தணப் புலவர். இவருக்கு நேமம் நகரத்தார்கள் பொருளுதவிசெய்தனர். இதே புலவருக்கு முத்தப்பர் வழங்கிய சீட்டுக் கவியை மதியாத ஆத்தங்குடிக் காடப்ப செட்டியாரை இவர் தமிழ்ச்சுவை அறிக என்று அறிவுறுத்தியுள்ளார்.[10] இத்தகைய உதவும் மனப்பான்மை யுடைய பாடுவார் முத்தப்பர் ஊனையூர்ச் சுப்பிரமணிய பண்டாரத்திற்குத் திருமுகம் பாடிக் கொடுத்திருக்கிறார்.[11] அதனைக் கொற்றமங்கலம் நகரக் கூட்டத்தில் கொடுத்துப் பண்டாரம் பரிசில் பெற்றான். எல்லாச் சிறப்பும் நிலையான வருமானத்துக்கான கட்டளையும் பெற்றபின் பண்டாரம் முத்தப்பரைக் கண்டான். அனைத்தையும் அறிந்து தன் சொல்லைப் போற்றிய நகரத்தார்களைப் பாடுவார் முத்தப்பர் திருமுகவிலாசம் பாடிப் போற்றினார். ஆதலால் தான் திருமுகப்பாடலாக அமையாமல் திருமுகவிலாசமாக நூல் பாடப்பட்டுள்ளது.

திருமுகமும் திருமுகவிலாசமும் :

பதினோராம் திருமுறையிலுள்ள திருமுகப் பாசுரம், திருமுகம் பாடுவார்க்கு வழிகாட்டியாகும்.

இது மதுரை சோமசுந்தரக்கடவுள் பாணபத்திரருக்கு உதவி புரிய வேண்டுமென்று சேரமான் பெருமாள் நாயனார்க்கு எழுதியது. இத்திருமுகப் பாசுரம், கடித அமைப்பினது; பன்னிரண்டடிகளால் அமைந்த நேரிசை ஆசிரியப் பாவால் ஆனது.

இப்பாசுரத்தின் முதல் நான்கடிகளில் திருமுகம் எழுதிய சிவபெருமான் சிறப்பும் அடுத்த நான்கடிகளில் திருமுகம் பெறும் சேரமான் பெருமான் சிறப்பும் அடுத்த நான்கடிகளில் திருமுகத்துக்குக் காரணமான பாணபத்திரர் சிறப்பும், அவருக்குப் பொருள் வழங்குக என்ற ஆணையும் பாடப் பட்டுள்ளன. திருமுக அமைப்பைத் திருமுகப் பாசுரம் முழுமையாகப் பெற்றிலங்குகிறது.

கடிதம் (திருமுகம்) யாருக்கு யாரால் எழுதப்பட்டது என்ற செய்தி தெளிவாக இருக்க வேண்டும். கடிதத்தில், எழுதுநர், பெறுநர், உள்ளடக்கச் செய்தி என்று மூன்றும் இருப்பது இன்றியமையாதது. இம்மூன்றில் ஒன்று குறைந்தாலும் கடிதத்தின் தனித்தன்மை அழிவது வெளிப் படை.

மாதவி எழுதிய மடல் இதற்கு நல்ல சான்று. மாதவி, கோசிகன் மூலம் கோவலனுக்கு அனுப்பிய மடலில் எழுதுநர், பெறுநர் குறிக்கப் பெறவில்லை. ஆனால் கோவலன் மடல் எழுதியவள் மாதவி என்பதை எப்படி உணர்ந்தான்? மடல் கொணர்ந்த கோசிகன் மாதவியின் குடும்ப நண்பன். அவன் குருக்கத்திக் கொடியை மாதவியாக்கிப் பேசினான். அவற்றால், கோவலன் மடல் வந்த இடத்தை உணர்ந்தான்.

இவற்றுக்கும் மேலாக, மடலொடு இணைந்திருந்த மாதவி கூந்தலும் அதன் மணமும் எழுதியவள் மாதவி என்று புலப்படுத்தியது. இதனைச் சிலப்பதிகாரம்.

''உடனுறை காலத் துரைத்தநெய் வாசம்
குறுநெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்திக்
காட்டியது.............''[12]

என்று கூறும். வேனிற் காதையில் மாதவி எழுதிய திருமுகத்திலும் எழுதுநர், பெறுநர் குறிக்கப்பெறவில்லை. கோவலன் பிரிந்ததும் மாதவி எழுதி வசந்தமாலையிடம் அனுப்பினாள். கோவலன் அதனையும் மறுத்துவிட்டான். அம்மடலிலும் எழுதுநர், பெறுநர் ஆகிய குறிப்புகள் இல்லை. கடிதம் என்பதற்கு ஏற்பக் கடிதவாசகமாவது வேண்டும். கடித வாசகம் மாதவி எழுதிய இரு கடிதங்களிலும் இருந்தன. திருமுகவிலாசத்தில் கடிதவாசகம் இல்லை.

பாடுவார் முத்தப்பரின் திருமுகவிலாசத்தில் இத்தகைய அமைப்பில்லை; குன்றக்குடி முருகன் அடியவன், பங்குனி உத்திரத் தேரடியில் நின்று முருகனை அழைத்தான்; முருகன் அவனை அழைத்து அவன் குறை கேட்டுத் தன்நிலை கூறி நகரத்தார் பற்றிக் கூறித் திருமுகத்துடன் அவர் பால் அனுப்பினான். அங்குச் சென்ற முருகனடிமை, சிறப்புப் பெற்றான்.

முன்னிகழ்ச்சியும் பின்னிலக்கியமும் :

இந்த அமைப்பை நோக்கும் போது, பாடுவார் முத்தப்பர், முதற்கண் பண்டாரத்துக்குத் திருமுகம் எழுதிக் கொடுத்து நகரத்தார்களைக் கண்டு பொருளும் சிறப்பும் உரிமையும் பெற்றிருக்க வேண்டும். நகரத்தார்கள் தன் திருமுகம் கண்டு சிறப்புச் செய்ததை உணர்ந்து, அதனை ஒரு நாடகம் போலத் திருமுகவிலாசம் என்ற பெயரால் பாடுவார்

முத்தப்பர் பாடியிருக்கவேண்டும். அதனால்தான் திருமுக விலாசத்தில் கடிதவாசகம் காணப்படவில்லை. அன்றியும் பண்டாரம் பெற்ற சிறப்பும் இறந்தகாலத்தால் சொல்லப் பட்டிருக்கிறது.[18]

எதிர்காலத்தில் சொல்லவேண்டியவற்றை இறந்த கால வாய்பாட்டால் சொல்லும் இலக்கண மரபும் உண்டு.[14] ஆனால் பண்டாரம் பெற்ற பரிசுகளில் நகரத்தார் அனைவரும் ஒருங்கே கூடி முடிவெடுத்துப் பரிசில் வழங்கும் உரிமைச் சாசனம் தந்த குறிப்பு உள்ளது. இதனை

"... ... ... — கொண்டாடித்
திட்டமுடனே வணிகர் செய்யும்கல் யாணமதில்
கட்டளையாய் ஓர்பணமும் கண்டெழுதிச்—சட்டமுடன்
சாதனமும் தந்தார் சஞ்சலமெலாம் தீர்த்தார்" (233-235)

என்ற பகுதி காட்டும். இக்கருத்தும் நடையும் சுப்பிரமணிய பண்டாரம் எல்லாச் சிறப்பும் பெற்றபின்பே திருமுகவிலாசம் இயற்றப்பட்டது என்ற உண்மையை உணர்த்தும்.

பாடுவார் முத்தப்பர், தன்னை மதிக்கவில்லை என்றால் சீறிச் சினந்து வசைபாடும் இயல்புடையவர். அதே போலத் தன்னைத் தன் கவியைப் போற்றி மதித்தால் அவரைப் போல வாழ்த்திப்பாடும் புலவர் வேறு எவருமிலர். ஆதலின் தன் சீட்டுக்கவி கண்டு சிறப்புச் செய்த தன் இன மக்களைப் போற்றி வாழ்த்தித் திருமுகவிலாசம் இயற்றினார் என்பது வெள்ளிடை மலை. இதனைத் திருமுகவிலாச அமைப்பும் நடையும் உணர்த்துகின்றன. ஊனையூர் சுப்பிரமணிய பண்டாரத்துக்குப் பாடுவார் முத்தப்பர் பாடிக் கொடுத் திருந்த திருமுகப் பாடல் கிடைக்கவில்லை. அந்த வரலாறு தொடர்பான திருமுகவிலாசம் மட்டுமே கிடைத்திருக்கிறது.

பாடுவார் முத்தப்பர், திருமுக விலாசத்தில் தன்னையே முருகன் என்று உருவகப்படுத்தி இருக்கின்றார். முத்தையா என்பதன் வேறொரு வடிவம் முத்தப்பன் என்ற பெயர்; இது பழநியப்பன் என்ற பெயர் போன்றது. இப்பெயர் முருகனுக் குரியது. புள்ளிருக்கு வேளூர் முருகன் செல்வமுத்துக்குமார சாமி எனப் பெறுவான். அவனை 'முத்தையன்' என்பர். வேளூர் முத்தையன் பெயரைப் பெற்ற பாடுவார் முத்தப்ப செட்டியார் தன் எண்ணங்களையும் கருத்துகளையும் முருகன் கூறுவதாகத் திருமுகவிலாசத்தில் உரைக்கின்றார்.

நூலமைப்பு:

திருமுகம், விலாசம் என்ற இரண்டு இலக்கிய வகைகளைப் பின்னிப் புதிய இலக்கிய வகையாகப் பிறந்தது, திருமுக விலாசம். திருமுக விலாச அமைப்பில் தமிழின் ஆற்றுப்படை இலக்கியச் சாயல் பளிச்சிடுகின்றது.

பரிசில் பெற்ற ஒருவன், இரவலன் ஒருவனை வழியில் கண்டு தனக்குப் பரிசு வழங்கிய தலைவன் புகழையும் பெருமையையும் கூறி அவன்பால் செல்லுமாறு வழிகூறி அனுப்புவது ஆற்றுப்படை. அதனைப் போலத் திருமுக விலாசத்தில், வறியவன் குன்றக்குடி முருகனை நாடிப் பரிசில் வேண்டுகிறான்; முருகனோ தன்னிலையும் தன் சுற்றத்தின் நிலையும் கூறித் தன் இயலாமையைத் தெரிவிக்கின்றான்; இரவலனோ முருகனை விடுவதாக இல்லை. முருகன் தன்னடியார்களான நகரத்தார்பால் அவர்தம் வரலாறும் சிறப்பும் சொல்லி அனுப்புகிறான். முருகனால் ஆற்றுப் படுத்தப்பட்ட இரவலன் நகரத்தாரிடம் பெரும் சிறப்பும் பரிசிலும் பெறுகின்றான். இன்ன இன்ன நிலங்களைக் கடந்து சென்றால் வள்ளலை அடையலாம் என்றும் வேறு பல சிறப்புகளும் கிட்டும் என்றும் ஆற்றுப்படை கூறும். திருமுகவிலாசத்தில் அதற்கு மாறாக முருகன் நகரத்தார்க்குக்

கடிதம் கொடுக்கின்றான். ஆங்கிலேயர் ஆட்சியில் வேண்டியவர்க்குக் கடிதம் கொடுத்துப் பரிந்துரை செய்யும் உலகியல் மரபு, திருமுக விலாசத்தில் பின்பற்றப்பட்டது.

மனிதன் தானே நேரில் சென்று சொல்ல முடியாத போது, கடிதம் எழுதித் தன் கருத்தைத் தெரிவிக்கின்றான். திருமுகவிலாசத்தில், முருகன் திருமுகம் கொடுத்ததாக வருகின்றதே யன்றிக் கடித வாசகம் என்ன என்று ஆசிரியர் பேசவில்லை.

திருமுகவிலாசம் ஒரு கதையைப் போலவும் ஒரு நாடகம் போலவும் அமைந்தது. இதன் அமைப்பு :

1-70 பங்குனி உத்திரத் தேரடியில் நின்று பண்டாரம் முருகனைக் கூப்பிடுதல்.

71-85 முருகன், இடும்பனை அனுப்பிப் பண்டாரத்தைக் கூப்பிடவும் அவன் முருகன் திருக்காட்சி கண்டு தன் குறையைக் கூறுதல்.

86-88 முருகன், பண்டாரத்தொடு பேசுதல்.

89-109 பண்டாரம் தன் வறுமை கூறல்

110-172 முருகன் தன்னிலையும் சுற்றத்தின் நிலையும் கூறிப் பண்டாரத்தைப் புறக்கணிப்பாகப் பேசுதல்.

173-179 பண்டாரம் நீயே கதியல்லால் நீடுகதியில்லை என்று முருகனிடம் அடைக்கலம் புகல்.

180-221 முருகன் பண்டாரத்தை ஆதரிக்க முடிவு செய்து நகரத்தார் வரலாற்றைக் கூறல்.

222-224 திருமுகம் பெற்ற பண்டாரம் கொற்ற மங்கலம் சென்று நகரத்தாரைக் கண்டு திருமுகம் கொடுத்தல்.

225-226 நகரத்தார் திருமுகம் பெற்றுப் போற்றுதல்.

227-230 பண்டாரம் தான் முருகனிடம் போனதும் அவன் அனுப்பியதும் ஆகியவற்றை நகரத்தாரிடம் கூறுதல்.

231-235 பண்டாரம் பரிசில் பெற்றமை

236-237 வாழ்த்து.

துவக்கமும் நிறைவும் :

திருமுகவிலாசத்தைப் பாடத் தொடங்கும் பாடுவார் முத்தப்பர், 'இரு நிதியம்'[15] என்றே துவங்குகிறார். இத்தொடர் பெருஞ்செல்வம் என்றும் சங்க நிதி, பதுமநிதி என்னும் இருவகைச் செல்வம் என்றும் பொருள் தருவது. நூலின் முதற்சொல்லும் முதற்சீரும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்குச் செல்வம் சேர்ப்பதாய்த் திகழ்கின்றது. திருமுகவிலாசத்தின் நிகழ்ச்சித் தொடக்கமோ சிவபெருமான் மன்மதனை எரிப்பதாகின்றது. முதற்சீரில் உள்ள நன்மை, முதல் நிகழ்ச்சியில் இல்லை. அஃது எரித்தலாய்க் காணப்படுகிறது.

திருமுகவிலாசம், நிறைவுறும்போது இரவலன் பரிசு பெற்றதாக முடிகின்றது. நிகழ்ச்சி நன்மை தருவதாகின்றது. நூலும் வாழ்த்தாக இறுகின்றது.

''துங்கமலையான் வாழி துய்யதமிழோர் வாழி
எங்கும் படியாள் இறைவாழி—மங்களமாய்
வாழு குமரேசர் மகராஜர் தென்னிளசை
ஏழு நகரார் வாழியே'' (236-237)

குன்றக்குடி முருகனையும் தமிழ்ப்புலவர்களையும் ஆட்சியாளர்களையும் நகரத்தார்களையும் திருமுகவிலாசம் வாழ்த்துகின்றது. தமிழ்க் காப்பியங்களிலும் புராணங்களிலும் பின்பற்றிய வாழ்த்து, திருமுகவிலாசத்திலும் காணப்படுகிறது.

பாடுவார் முத்தப்பர், நூலாக்கத்திறன் திருமுகவிலாச அமைப்பால் வெளிப்படுகிறது. நூலின் முதற்பகுதியே, சுப்பிரமணிய பண்டாரம் முருகனைக் 'குமரேசா' என்று கூவியழைக்கும் பகுதி. அப்பகுதியின் முற்பகுதியில் முருகன் பிறப்பு வரலாறு சொல்லப்படுகிறது. ஆசிரியர் அதனைக் கதை போலக் கூறுகிறார். சரவணப் பொய்கையில் முருகன் ஆறுருவாய்க் கிடந்தான். அவனை ஒருங்கே அணைத்தெடுத்துப் பார்வதி ஒருருவமாக்கிக் கந்தன் என்றாள்.[16] முருகன் வரலாற்றைப் பொருத்தமுற இணைத்துப் பாடுவார் பாடியுள்ளமை இனிமையானது.

இதனையே, பாடுவார் முத்தப்பர் ஆறுமுகன் என்ற குன்றக்குடி முருகன் பெயர்க்கு உரிய காரணமாக விளக்குகிறார்.

''ஆறு தலையும்சேர்த் தாவ லுடனாசை
மீறி யெடுத்துமடி மீதில்வைத்தே—ஆறிரண்டு
காலும் உருவுமிரு காலாக்கிச் சேர்த்தெடுத்து
வேலுமொன்றாய் மிக்ககரம் பன்னிரண்டாய்ச்—சீலமுடன்
ஆறுசிர சாய்த்தேவர்க் காறுதலை யாமெனப்பேர்
ஆறுமுகம் என்றே அரனுரைக்க—...'' (32.34)

என்பது திருமுகவிலாசம். சிவபெருமானொடு வந்த பார்வதி, சரவணப் பொய்கையிலிருந்த ஆறு குழந்தைகளை ஒன்றாக்கினாள்; அவனோ அமரர் துயருக்கு ஆறுதலாக இருப்பவன். ஆதலின் அவன் பெயர் ஆறுமுகம் என்றாயிற்று. இவ்வாறு குன்றக்குடிச் சண்முகநாதனுக்குரிய பெயரைப் பொருத்தமுறத் திருமுகவிலாசம் எடுத்துரைக்கின்றது. முருகனின் வேறு எந்தப் பெயருக்கும் திருமுகவிலாசம் விளக்கம் தரவில்லை,

முருகனழைப்பு

குன்றக்குடிச் சண்முகநாதனை, பண்டாரம் பங்குனி உத்திரத்தேரடியில் நின்று அழைக்கின்றான்.

''நீலநிறச் சேவல்தன்னை நித்தங்கை யிற்பிடித்துக்
கோலமயி லேறும் குமரேசா—...'' (51)

என்பது போலப் பல அடைமொழிகளைக் கொடுத்துக் கவிஞர் முருகனைக் கூப்பிடுகின்றார். இங்கு எதுகையும் மோனையும் அமைந்து இனிமை தருகின்றன. இந்தக் கண்ணிகள் முருகனை அழைப்பனவாய்த் தத்துவ உண்மை உணர்த்துவன.

முருகனை விளிக்கும் ஒவ்வொரு கண்ணியும் பெயராக முடிகின்றது. அவை ஆறுமுகனே, மயில்வாகனா, ஆறுபடை வீட்டுக்கு அதிகாரா, காங்கேயா என்பன. ஆயினும் குமரேசா என்ற விளியே மிகுதி.

அன்புச்சுவை :

குமரனைக் கண்டு பண்டாரம் பேறு பெற்ற வகையைப் பாடுவார் முத்தப்பர் பக்திச்சுவை தோன்றப் புனைந்துள்ளார். பண்டாரம் குமரனைக் கண்டபோது அவனுடைய செந்தாமரைத் தடம் போன்ற திருவடிகளே முதற்கண் காட்சியளித்தன. அவனுடைய ஆறுமுகங்களும் சந்திர உதயம் போலக் குளிர்ச்சியாகக் காட்சிதந்தன. கிடைத்தற்கரிய காட்சியைக் கண்ட பண்டாரம் முருகனைப் பல சொல்லித் துதித்தான்.

''கந்தா கடம்பா கதிர்வேலா கங்கைபெற்ற
மைந்தா மயூர கிரிவாசா - நந்தாக்
கருணைக் கடலே கனிந்துருகிப் பாடும்
அருணைகிரி நாதர்க் கருள்வோய் - திருவிருக்கும்
பூங்கொடியாள் வள்ளி புனத்துக் கொருநிழலாய்
வேங்கைமர மாகிநின்ற வேலோனே......'' (80-82)

இங்குக் கந்தன், கடம்பன், கதிர்வேலன், காங்கேயன் என்றழைக்கும் ஆசிரியர், முருகன் தமிழுக்கு இரங்கும்

பண்பை முதற்கண் சுட்டுகிறார். அருந்தமிழ்ப் புலவனான அருணகிரிநாதனுக்கு அருள் செய்தமை அவருக்கு நினைவிருக்கிறது. பக்திச் சுவை தோன்ற ஆசிரியர் முருகனைப் போற்றுவர்.

முருகன் திருமுகவிலாசம் :

இதனைத் தொடர்ந்து அமையும் பகுதி, முருகனுக்கும் பண்டாரத்துக்கு மிடையே நடைபெறும் உரையாடலாகும். எல்லாம் வல்ல முருகப் பெருமான் தன் ஆற்றாமையையும் இயலாமையையும் புலவனிடம் கூறுவது வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் உள்ளது. நகரத்தார்களைப் பெருமைப் படுத்தவே முருகன் இவ்வாறு இயம்புகின்றான். அதனால் இதனை 'முருகன் திருமுகவிலாசம்' என்றே கூறவேண்டும். இதனைப் போலப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் முத்துராமலிங்க சேதுபதியின் அரசவைப் புலவருமான சரவணப் பெருமாள் கவிராயர், விநாயகர் திருமுகவிலாசம் பாடியிருக்கிறார்.[17] எனவே தெய்வங்கள் திருமுகம் எழுதுவதாக்கி அதன் விளைவுகளைச் சொல்லிப் பாடும் போக்குத் தமிழிலக்கிய உலகில் இருந்திருக்கிறது என்பது தெரியவரும்.

இறுதியில் நகரத்தார்களைப் பண்டாரம் காணலும் பரிசில் பெறலுமாகத் திருமுகவிலாசம் முடிகின்றது. இது தான் நூலின் பொருள் அமைப்பு. பாடுவார் முத்தப்பர் ஒரு குறிப்பிட்ட பொருளை வரையறுத்துக் கொண்டு தெளிவாகச் சொல்ல வேண்டியதைச் சொல்லுகிறார்.

ஏரெழுபது, செங்குந்தர் பிரபந்தத் திரட்டுப் போன்ற சாதியைப் புகழ்ந்து பாடும் நூல்கள், சாதியை மட்டும் சிறப்பிப்பன. திருமுகவிலாசம் வெறும் சாதிச் சிறப்பை மட்டும் சிறப்பிக்கவில்லை; சைவ சமயக் கடவுளர்களையும்

திருமாலையும் சிறப்பித்து இறைஅன்பு ஏற்படுமாறு செய்கின்றது. ஒவ்வொரு நகரத்தாரும் உணர்ந்துகொள்ள வேண்டிய புராணக்கதைகள் திருமுகவிலாசத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

சிவபெருமான், பாணபத்திரருக்கு உதவி செய்யுமாறு சேரமான் பெருமாளுக்குத் திருமுகப் பாசுரம் அனுப்பினார். அவர் மகன் ஆறுமுகப் பெருமான், தமிழ் நாவலன் ஊனையூர்ச் சுப்பிரமணியப் பண்டாரத்துக்குப் பொருள் உதவி செய்யுமாறு நகரத்தார்க்குத் திருமுகம் எழுதினான். நகரத்தார்கள் முருகன்பால் மாறா அன்புடையவர்கள் ஆதலின் முருகன் திருமுகம் பெரும் பேறு பெற்றார்கள்.

பாணபத்திரர் திருமுகம் பெற்ற வரலாறு, திருவிளையாடல் புராணத்தில் கதையாகிக் காப்பியமானது. அத்தகைய வரலாறு முருகன் திருமுகத்துக்கு வேண்டும் என்று அதனை விளக்கி உரைப்பதே பாடுவார் முத்தப்பரின் திருமுகவிலாசம். பதினோராம் திருமுறையிலுள்ள திருமுகப் பாசுரம், திருவிளையாடல் புராணம் ஆகிய இரண்டும் இணைந்து ஆசிரியரின் கற்பனையில் உருவான ஒரு புதிய வடிவமே திருமுகவிலாசம். இது முருகனைச் சிறப்பிப்பதாய் - நகரத்தார்களைப் புகழ்வதாய்த் திகழ்கின்றது.

திருமுகவிலாசமும் நகரத்தார்களும்

தெய்வபக்தியும் இனவரலாறும் :

தமிழ்ப் புலவர்கள், தங்கள் இனத்தாரையும் தங்களை ஆதரித்த இனத்தார்களையும் புகழ்ந்து தனி நூல்கள் பாடியுள்ளனர். மன்னன் ஒருவனையோ வள்ளல் ஒருவனையோ புகழ்ந்து பாடுமாறு ஒரு சாதியைப் புகழ்ந்து பாடுகின்ற வழக்கமும் உண்டு. உழவர்களைச் சிறப்பிக்கும் நூலான ஏர் எழுபதைக் கம்பர் இயற்றினார். காணியாளர் அகவல்'

செங்குந்தர் பிள்ளைத்தமிழ், சிலை எழுபது போன்ற நூல்களும் சாதியைப் பாடிய நூல்களே.

பாடுவார் முத்தப்பர் பாடிய திருமுகவிலாசம் நாட்டுக்கோட்டை நகரத்தாரைப் பாடியநூல்; ஆனால் நூலில் சாதி உணர்வினும் தெய்வவுணர்வு மேலோங்கி நிற்கின்றது. குன்றக்குடி முருகனையும் சிவபெருமானையும் பார்வதியையும் திருமாலையும் வஞ்சப் புகழ்ச்சியாக நெஞ்சாரப் புகழ்ந்து, இடையே நகரத்தாரையும் போற்றுவது திருமுகவிலாசம் இது தெய்வபக்தியை வளர்த்து நகரத்தார் வரலாற்றைப் பாடுகின்றது.

குன்றக்குடிக்குமரன், ஊனையூர் சுப்பிரமணிய பண்டாரத்திடம் நகரத்தார் பெருமையையும் கொடைத் திறத்தையும் கூறி அவர்கள்பால் ஆற்றுப்படுத்துகிறான். முருகனால் வரலாறு சொல்லப்பெற்ற பெருமை வாய்ந்தவர்கள் நகரத்தார்கள். நகரத்தார் முருகனடியார்கள்; காவிரிப்பூம்பட்டினத்தில் வைசிய கோத்திரத்தினராய்ச் செல்வராய் வாழ்ந்தவர்கள். பாண்டிய நாட்டிற்கு நல்ல வணிகக்குடி வேண்டும் என்பதற்காகச் சோழநாட்டிலிருந்து பாண்டியமன்னனால் அழைத்துவரப்பட்டவர்கள். அம்மரபினரும், தங்கள் தேசிகர் ஆணையினாலும் அறிவுரையினாலும் துணையினாலும் தாம் குடிபெயர்ந்து வந்தனர். சோழ நாட்டிலிருந்து வந்த இவர்களில் ஒரு பகுதியினர் இளையாற்றங்குடியிலும், இன்னொரு பகுதியினர் மாத்தூரிலும் தங்கினர்.” என்று நகரத்தார் வரலாறு திருமுகவிலாசத்தில் புலப்படுத்தப்படுகிறது.

புலவர்களின் கருத்தொப்புமை :

செட்டிநாட்டுப் புலவர் பலரும் நாட்டுக்கோட்டை நகரத்தார் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வந்தவர்கள்

என்று குறிப்பர். மிதிலைப்பட்டிக் கவிராயர் மரபைச் சார்ந்த குழந்தைக் கவிராயர், முருகப்பதேவர் பிள்ளைத் தமிழில்

''கும்புற்ற காவிரிப் பூம்பட்டி னத்தில்நல்
குடியென்று மாற னந்நாள்
கூட்டவந்து ....''[18]

என்று சுட்டுவர். சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாட்டுக்கு நகரத்தார் அழைத்துவரப்பட்டனர். பாடுவார் முத்தப்பர் காலத்தைச் சார்ந்த பெரும் புலவர் முத்துக்குட்டிப்புலவர். இவரியற்றியது கண்ணுடையம்மன் பள். இப்பள்ளில்

''சென்றுநற்குடி மாறனழைக்கச்
சிறந்த காவேரிப்பூம் பட்டணத்தில்
அன்றிருந்து பொற்றேரேறி வந்தோர்
அருவியூர் சுந்தரம் தன்னிளசை
யென்று மூன்றிலிளசை யைஞ்னூற்றுவாழ்
ஏழுமாநகர் வாழும் வணிகர்
நன்றிசேர் கண்ணுடையாளைப் போற்றும்
நகரமெங்கள் நகரங்காணாண்டே''[19]

என்று இதே வரலாறு இடம் பெற்றுள்ளது. பாடுவார் முத்தப்பர், பாண்டியநாட்டில் இளையாத்தங்குடியிலும் மாத்தூரிலும் குடியேறியதாகக் கூற முத்துக்குட்டிப் புலவரோ அருவியூர், சுந்தரம், இளையாத்தக்குடி ஆகிய மூன்று ஊரிலும் குடியேறியதாகச் சுட்டுவர். ஏழு நகரத்தார் குளுவ நாடகம் ஏழு நகரத்தார் பேரில் பள்ளு நாடகம் ஆகிய இரண்டிலும் இவ்வாறே கூறப்பட்டுள்ளது.[20]

மிதிலைப்பட்டிக் கவிராயர் மரபினர் பாடிய கிரணியம்மன் கும்மியும்

"காவிரிப் பூம்பட்டணத்தில் இருந்தொரு
காவலன் மாறனழைத்துவர
பூவிரிப் புனல்மிகும்பாண்டியநாட்டினிற்
பொங்கத்துடன் வந்தமர்ந்தாளே"

என்று நகரத்தார் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வந்தமையைச் சுட்டும்.[21]

நகரத்தார்கள் சோழ நாட்டிலிருந்து பாண்டிய மன்னனால் அழைத்து வரப்பட்டவர்கள். இதனைத் திருமுகவிலாசமும் அக்காலத்தில் எழுந்த பிற இலக்கியங்களும் உணர்த்துகின்றன. எனவே நகரத்தார் வரலாற்றில் ஓர் உண்மைப் பகுதியையே திருமுகவிலாசம் பாடுகின்றது.

சமய உணர்வும் பொதுமைநிலையும் :

நகரத்தார்கள் உருத்திராக்க மணிந்து திரு நீறு பூசிச் சைவர்களாய்த் திகழ்வர். திருப்புவனம் ஆசான்பால் உபதேசம் கேட்பர். இவர்கள் சிவக்கொழுந்தின் பால் பேரீடுபாடுடையவராயினும் முருகன் பாலும் மாறாத அன்பினர். எனவே கடல் கடந்து சென்ற நாடுகளிலும் இம்மரபினர் முருகன் கோயில் கட்டி வழிபாடு செய்தனர் செட்டிநாட்டைக் குன்றக்குடியை மையமாக வைத்துத் தெற்கு வட்டகை, மேல வட்டகை, கீழ வட்டகை என்று பாகுபாடு செய்வர். குன்றக்குடி ஆறுமுகநாதன் நகரத்தார்களை 'நம்மடியார்'[22] என்றும்

"சிகரத்தில் ஏற்றிவைத்த தீபம்போல் ஏழு
நகரத்தார் எல்லாம் நமதடியார்—......"[23]

என்றும் இயம்புகின்றான். இவ்வாறு நகரத்தாரை முருகனடியாராகக் காட்டும் ஆசிரியர் இம்மரபினர் சமயப் பொதுமையாளர் என்பதையும் நூலுள் உணர்த்துகிறார்.

நகரத்தார்கள், சைவசமயம் சார்ந்தவர்களானாலும் திருமாலையும் வழிபாடு செய்வோராவர்.

'அஞ்செழுத்தை யுட்செபிப்போ ரல்லும் பகலுமெனை
நெஞ்சில்விட்டு நீங்காத நிண்ணயத்தார்—ரஞ்சிதமாய்த்
திருமாற் கடிமைசெய்வோர் தெய்வமெல்லா மொன்றென்
றுரிமையுடன் போற்றிவளர் வுற்றோர்—......'' (189-190)

என்றும் மகேசுவரர்பூசை, அரிபூசை, மும்மூர்த்தி பிரதிட்டை[24] ஆகியன செய்வோர் என்றும் திருமுக விலாசத்தில் பாடுவார் முத்தப்பர் பாடிப் போந்தார்.

நகரத்தார்கள், தொன்று தொட்டுத் தங்களுக்கென உபதேசம் சொல்லத் தனியே குருவை அமைத்துக் கொண்டிருந்தனர். இவரிடம்தான், நகரத்தார்கள் உபதேசம் கேட்க வேண்டும். இவர் ஆண்களுக்கு மட்டுமே உபதேசம் கூறுவார். பல ஆண்டுகளுக்கு ஒருமுறை, உபதேசம் கேட்க வேண்டிய நகரத்தார் அனைவரும் ஒருங்குகூடி ஓரிடத்திலேயே உபதேசம் கேட்பது மரபு. இவ்வாறு உபதேசம் சொல்லும் குரு, ''பாண்டி நாட்டாசான்''[25] என்றும் 'திருப்புனவை ஆசான்'[26] என்றும் போற்றப் பெறுவர். சிவனடிமறவாச் சிந்தையும் முருகனைப் போற்றும் மனமும் வாய்ந்த நகரத்தார்கள் சமயநிலையும் ஞான உபதேசம் பெறுதலும் திருமுகவிலாசத்தால் அறியப் பெறுகின்றன.

தாரும் கொடியும் :

சைவ சமயச் சார்புடைய நகரத்தார்கள், தனிக்குழுவாக வாணிபம் செய்தனர். அதனால் தங்களுக்கெனத் தனி அடையாள மாலையும் கொடியும் இவர்களிடம் இருந்தன.

நகரத்தார் மரபுக்குரிய அடையாள மாலையும் கொடியும் இன்னவை என்பது

''சிரகப்பூந்தாரணிந்தோர் சிங்கக் கொடி படைத்தோர்
காரிணையாச் செம்பொன் கவிக்கிவோர்—......'' (200)

என்ற திருமுக விலாசக் கண்ணியால்தான் அறியப் பெறுகிறது. இன்று அடையாள மாலையோ கொடியோ இல்லாத நிலையில், ஒரு தொன்மரபினைத் திருமுகவிலாசம் உணர்ந்து கொள்ளச் சான்றாக விளங்குகிறது.

நகரத்தார் கொடைநலம் :

நகரத்தார்கள் என்றும் கொடை வளம் மிக்கோர். பரிசு நாடிச் செல்லும் பண்டாரத்திடம் குன்றக்குடி முருகன், நகரத்தார்களின் கொடைக்குணத்தை எடுத்துரைக்கின்றான். ''இருநிதியம் வேண்டினா ருக்குதவி மிக்ககனத்தைப்பெற்றோர்'' என்று பொதுவாகப் புலவர், நகரத்தார்களின் கொடையைப் போற்றுகிறார். தொடர்ந்து, பத்துக் கண்ணிகளில் நகரத்தார்கள், அன்னதான மடம் வைத்தல் ஊருணி, கிணறுகள் வெட்டுதல் போன்ற அறங்கள் செய்தலைப் பாராட்டுகிறார். ஆனால் தனிப்பட்ட எவரையும் சுட்டி அவர்கள் அறம் செய்ததாகச் சொல்லவில்லை. ஆயினும் இப்புலவரின் ஒரு கண்ணி நகரத்தார்களின் அறச்சிறப்பை நன்குக்காட்டும்.

''நாடறியப் பூவுலகில் நான்முந் திரிதேடிக்
கோடி யளிக்குங் கொடையாளர்—......'' (213)

என்று நகரத்தார்களின் கொடைத்திறத்தைப் பாடுவார் உணர்த்துகிறார்.

பண்டாரம் பெற்ற பரிசில் :

கொத்தமங்கலம் சென்ற ஊனையூர்ப் பண்டாரம், நகரத்தாரிடம் பெற்ற பரிசில் இரண்டு தன்மையன. ஒன்று ஆடைகள், தங்க நகை, நெல் என்பன போன்றவை. அவை அப்போதே கூடியிருந்த நகரத்தாரால் வழங்கப்பட்டவை.

இன்னொரு பரிசில் நகரத்தார் திருமணத்தில், ஊனையூர்ப் பண்டாரத்திற்கு ஒரு பணம் கொடுக்கவேண்டும் என்னும் நகரக் கட்டளை. திருமண வீட்டிற்குக் கட்டணப் பணம் வாங்கவந்தவன் எத்தனை வகையான சிறப்புப் பெற்றிருப்பான். இஃது அவனுக்கு நிலையான வருவாய். இப்படி இரண்டு வகையாகப் பண்டாரம் பரிசில் பெறுகிறான்.

நகரத்தார் திருமணங்களில் ஊனையூர்ப் பண்டாரத்துக்கு ஒரு பணம் கொடுக்கும் மரபு நீண்டகாலமிருந்தது. இந்திய விடுதலைக்குப்பின் பண மதிப்புக் குறைந்தமையான், பண்டாரம் வழியினர் இதை வாங்க வருவதில்லை. புலவரின் தமிழாற்றல், ஒரு சமுதாயத்தில் உண்டாக்கிய வழக்கத்தைப் பொருளாதார மதிப்பு நிறுத்திவிட்டது.

வறுமைப் புனைவு :

தமிழ்ப் புலவர்கள் வறுமையில் வாழ்ந்தவர்களாதலின் அவர்தம் கவிதைகளில் வறுமைப் புனைவு வனப்புறவும் உலகியலை ஒட்டியும் அமைந்துள்ளது. திருமுகவிலாசம், புலவன் வறுமைத் துயரையும் அதனைப் போக்க அவன் வள்ளல்களை நாடிச் சென்றமையையும் அங்கு அவன் நூல்களுக்குக் கிட்டிய மதிப்பையும் அவன் வருத்தத்தையும் நன்குணர்த்துகின்றது. ஆற்றுப்படை, வறுமைத்துயரைச் சித்திரிக்கும்.

“.............. ....—சந்ததமும்
போகா வறுமை புலிபோல என்னுயிரும்
பாகாரும் தன்மைப் பசுப்போல—வேகமுறும்
துன்பக் கருடனுடன் தோயரவம் என்னுயிரும்
இன்பம் அணுவத்தனையு மில்லாமல்—முன்புகண்ட
நச்சரவைப் பாய்ந்து நடனமிடுந் தோகைமயில்
பச்சோந்திக் கஞ்சும் பழமையைப்போல்—
மெச்சுசெல்வம்

இல்லா வறுமையினால் இல்லாள்முன் வாய்பேசச்
செல்லாமல் நெஞ்சம் தியங்கியே—நல்லோர்கள்
கூடுசபைக்கு ஏகமனம் கூடாம லேவிரைந்தே
ஓடிஒளித்தேன் உறுக ணால் - ... (88 - 93)

இது தமிழ்ப் புலவனான பண்டாரத்தின் வறுமைச் சித்திரிப்பு.

போகாவறுமை :

வறுமைகொடியது. வறுமை வறியவனை மட்டும் வாட்டாது அவனைச் சார்ந்திருக்கும் சுற்றத்தையும் வாட்டும் தன்மையது. நோய் உடன் பிறந்து கொல்லும்; வறுமை உடன் இருந்து கொல்லும்.

''நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது''[4]

என்று திருவள்ளுவர் நெருப்பினும் நிரப்புக்கொடியது என்பர். வறுமையோ எவ்வளவு முயன்றாலும் வீட்டை விட்டுப் போகாது. பலர் வறுமையொடு போராடித் தன் வாழ்வை முடித்துக் கொண்டதும் உண்டு. எனவே பாடுவார் முத்தப்பர் வறுமையின் இயல்பை உணர்ந்து 'போகா வறுமை' என்று அடைகொடுத்து அதன் தன்மையைக் கூறுகிறார்.

உவமையும் உளவியல்பும்:

பண்டாரம் வறுமையின் பிடியில் சிக்கித் திண்டாடி யதைக் கூற வந்த பாடுவார் முத்தப்பர் சீரிய உவமைகளை அமைத்துள்ளார். புலியிடம் சிக்கிய பசுவும் கருடனிடம் சிக்கிய பாம்பும் வறுமையிடம் சிக்கிய பண்டாரத்துக்கு உவமையாயின. வறுமையால் வாடிய பண்டாரம் தன் மனைவியின் முகத்தைக் காணவே கூசுகின்றான். இதனை உவமை வழியே பாடுவார் முத்தப்பர் வெளிப்படுத்தினார்.

பொருளில்லாதவனை மனைவியும் மதிக்க மாட்டாள். குடும்பச் செலவுக்குக் கணவனை எதிர்பார்த்திருக்கும்

மனைவி வெறுங்கையனாய்வரும் கணவனை எவ்வாறு மதிப்பாள்? எனவே வெறுங்கையனாய் வந்த கணவன், மனைவிக்கு அஞ்சும் நிலையை உளவியலடிப்படையில் பாடுவார் முத்தப்பர் சித்திரிக்கின்றார். இதற்கு உவமை உதவுகின்றது.

மயில் நஞ்சுடைய கொடிய பாம்புக்கு அஞ்சாது அதனைத் தாக்கிக் கொன்றுவிடும். அதே மயில், நச்சுத் தன்மையற்ற பச்சோந்தியைக் கண்டு அஞ்சும்; பாம்போ கடித்து நஞ்சையூட்டி உயிரைப் போக்கிவிடும். ஆனால் பச்சோந்தி எவ்வகைத் தீமையும் விளைக்காது. பாம்புக்கு அஞ்சாது பச்சோந்திக்கு அஞ்சும் மயிலின் நிலையைப் பண்டாரத்துக்கு ஆசிரியர் உவமிக்கின்றார். அஞ்சக் கூடாத மனைவியைக் கண்டு பண்டாரத்தின் வறுமை அஞ்ச வைக்கின்றது. இதுதான் வறுமையின் கொடுமையும் கடுமையும் ஆகும்.

வறுமையால் உடலும் உள்ளமும் வாடும் போது யாரையும் பார்க்க மனம் விரும்பாது. இதுதான் மனித மனத்தின் இயற்கை. கற்றோர் அவைக்குச் சென்று கலந்துரை யாடி மகிழும் பண்டாரம் வறுமையால் ஒரு மூலையில் ஒடுங்கி ஒளிந்திருந்தான். இங்ஙனம் வறுமையால் வரும் வாட்டத்தைப் பாடுவார் முத்தப்பர் பாத்திரத்தின் மன நிலை கொண்டும் உவமை வழியும் நன்கு உணர்த்துகிறார்.

வறுமை யொழிப்பு.

தன் வறுமையைப் போக்கப் பண்டாரம் பழமரம் நாடும் பறவையைப் போல நாடெங்கும் பலரை நாடிச் சென்றான். 'நாடுதொறும் சென்று நடந்து அலுத்து,'[28] ச் சோர் வடைந்ததாகப் பண்டாரத்தின் நிலையைப் பாடுவார் முத்தப்பர் சுட்டுவர். நாடெங்கும் சுற்றிய தமிழ்ப் புலவனான

பண்டாரம், பரிசு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் பெயர்களைக் கேட்டும் பாடல்களும் நூல்களும் பாடினான்.[29] தகுதியற்ற அந்தப் புரவலர்களைப் பண்டாரம் தகுதிக்கு மேலே புகழ்ந்தான். ஆயினும் அவனுக்குப் பரிசுகளோ பொருள்களோ கிடைக்கவில்லை.

தமிழகச் செல்வர் நிலை :

பண்டாரம் பாடிய புரவலர்கள் தமிழ்ச் சுவை அறியாதவர்கள்; தமிழ்ப் புலவர்களை மதித்துப் போற்றா தவர்கள். இவர்களைப் பாடிச் 'சலித்து அலுத்து'ப்[30] போனதாகத் திருமுகவிலாசம் கூறுகிறது. பண்டாரம் பாடிய சிற்றிலக்கியங்களுக்குக் கிடைத்த உயர்ந்த பரிசுத்தொகை ஒருபணம்; இது 'மஞ்சரி' என்னும் நூல் வகைக்குக் கிட்டியது. பண்டாரம் தன் தமிழ்ப்புலமை மதிக்கப்படாமையைக் கண்டதும் உள்ளம் நைந்தான். அவன் மனக் குமுறலை,

> "..............................—புவிக்குளொரு
> பாக்குக்கும் வெற்றிலைக்கும் பாவிகளைச் சொற்புலவர்
> சாக்குக்கும் பாடிச் சலிப்பாகி— நாக்குலர்ந்து
> ஏடும்புண் ணாகி யெழுத்தாணி யுந்தேய்ந்து
> பாடும் மனமும் பரிதவித்தே—யேடெழுதிச்
> சுண்டுவிர லுங் காய்த்துத் தொண்டைகம்மல் பாடியதாற்
> கண்டதல்லா லோர் பலனுங் கண்டிலேன்—..." (102-105)

என்று திருமுகவிலாசம் பாடுகிறது. தமிழ்ப் புலமையால் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள், அறிவும் ஆற்றலும் இருந்தும் பொருள் இன்மையால் பட்ட இன்னல்களை—வேதனையை இப்பகுதி விளக்குகிறது.

தமிழ்ப்புலவர்களைப் போற்றாத தமிழகச் செல்வர்கள் போக்கு வருந்தத்தக்கது. அவர்கள் வல்லடி வம்பர்களின் மிரட்டலுக்கு அஞ்சியும், காமச்சுவையூட்டும் தேவரடியார்

களான பரத்தையர்களுக்கும், அடித்துதைக்கும் முரடர்களுக்கும் தங்கள் பொருள்களைக் கொடுத்தனர். இதனை

''... ... ...—வண்டரவர்
செப்புமுலை வேசையர்க்குந் தீக்குத் திருடருக்குந்
தப்புமுன்னே கட்டித் தலைகீழாய்—மெய்யூஞ்சல்
ஆட்டுவார்க் கும்சவுக் கோடுஐந்து மணிக்கயிற்றின்
மூட்டுவார்க் கும்கொடுப்பர் மூடரவர்—பாட்டினர்க்குச்
செய்யார் இனியவர்பாற் செல்வதினிற் சாரமில்லை''
(105-108)

இவ்வாறு அக்காலச் செல்வர்—தமிழ்ப் புரவலர் நிலையைப் பாடுவார் முத்தப்பர் நன்கு புலப்படுத்துகிறார்.

பாடுவார் முத்தப்பர் வாழ்ந்த காலத்திய தமிழ்ப்புலவர் நிலையும் தமிழகப்புரவலர் நிலையும் இதுதான். பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தமிழகச் செல்வர்கள் தமிழ்ப் புலவர்களை இங்ஙனம் மதிப்பின்றியே நடத்தினர்.

தமிழை ஆதரித்தோர் போக்கு :

பாடுவார் முத்தப்ப செட்டியார், திருமுகவிலாசத்தில் பண்டாரத்தைக் கருவியாகக் கொண்டு தன் உள்ளக் கருத்தை வேதனையை வெளிப்படுத்துகிறார். வேம்பத்தூர் மார்த்தாண்டப் புலவரை அவமதித்த ஆத்தங்குடி காடப்ப செட்டியாரைப் பாடுவார் முத்தப்பர் பின்வருமாறு பாடுகிறார்.

அம்பல காரா என்று
ஆயிரம் தரம்சொன் னாலும்
வம்பருக் களிக்கும் செம்பொன்
மறையவர்க் கருமை என்றாய்
நம்பியோர்க் கீயாச் செம்பொன்
நஞ்சினும் கொடிய தாகும்
தம்பிகா டப்பா நீயித்
தமிழ்ப்பயன் அறிந்து கொள்வாய்.[31]

திருமுக விலாசத்தில், இதே கருத்துச் சற்று விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. பண்டாரம் கூற்றாகப் பாடுவார் முத்தப்ப செட்டியார் பாடியவை எல்லாம் அக்காலத் தமிழக நிலையின் வெளிப்பாடேயாகும்.

பாடுவார் முத்தப்பர் காலத்திய புலவர்கள் பாடல்களும் இதே கருத்தைத் தெரிவிக்கின்றன. இராமச்சந்திரக் கவிராயர்.

''கல்லாத ஒருவனைநான் கற்றாய் என்றேன்
காடெறியும் மறவனைநா டாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானைப் புலியே றென்றேன்
மல்லாரும் புயனென்றேன் சூம்பற் றோளை
வழங்காத கைய னைநான் வள்ளல்என்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லை என்றான்
யானும் என்குற்றத்தால் ஏகின் றேனே''[32]

என்று தன் அவலநிலையைப் பாடுகின்றார். திருமுக விலாசத்திலும் இதே போக்குக் காணப்படுகிறது. இக்காலத்தில் புலவர்கள், பொருள் ஒன்றனையே கருதிச் செல்வர்களை அளவுக்கு மிகுதியாகப் புகழ்ந்தனர். ஆனாலும் புலவர்களையோ அவர்தம் புலமையையோ மதிக்காதும் அறியாதும் செல்வர்கள் பொருள் வழங்கவில்லை.

மரபு வழி வளர்ச்சி :

செல்வரைப் பாடிப் பரிசில் பெறாத புலவர்கள் தங்கள் உள்ளத்துயரையும் வேதனையையும் இறைவனிடம் சொல்லித் துயரை ஆற்றிக் கொண்டனர்.[33] செல்வர் பரிசு ஒன்றும் கொடாமல் வேட்டை நாய் போலத் தம் மீது பாய வருவதாகத் திருப்பரங்குன்ற முருகன் பால் இராமச்சந்திரக் கவிராயர்,

"...................... கயவர்க் கெல்லாம்
இணக்கம் வரும்படி தமிழைப்பாடிப்பாடி
எத்தனை நாள் இருந்திருந்திளைப்பேன் ஐயா"[34]

என்று தன்னிலையை நவிலுகின்றார். தமிழ்ப் புலவர்களைச் செல்வர்கள் போற்றாத போது, அவர்கள் தம் துயரத்தை இறைவனை நோக்கித்தான் உரைத்தனர்.

இத்தகைய மரபொன்றனைத் தழுவிப் பாடுவார் முத்தப்பரும், தமிழ்ப் புலமைவாய்ந்த சுப்பிரமணிய பண்டாரம் தன் வறுமைத் துயரைக் குன்றக்குடிக்குமரனிடம் கூறுவதாகவும் அவன் வேறொருவரிடம் ஆற்றுப்படுத்துவ தாகவும் திருமுகவிலாசத்தை யாத்துள்ளார்.

புலப்பாட்டு நெறி :

திருமுகவிலாசம், ஒருவர் பேச அதற்கு மறுமொழியாக இன்னொருவர் பேச நாடகமாக அமைந்துள்ளது. இந்நூலின் முற்பகுதி, திருமுகவிலாசத்தில் வரும் பாத்திரங்களின் கூற்றாகவும் பின்பகுதி முழுமையும் பண்டாரத்தின் கூற்றாகவும் விளங்குகிறது. பண்டாரம் முருகனை விளிக்கின்றான்; அவன் குரல் கேட்டு முருகன் அழைக் கின்றான். பண்டாரத்தை அழைக்க முருகன் இடும்பனை அனுப்புகின்றான். முருகன் திருமுகவிலாசத்தின் துணைப் பாத்திரம்; பண்டாரமே நூலின் தலைமைப் பாத்திரம். அவன் வாழ்வும் வறுமையும் வளர்ச்சியும் வளமும் தாம் நூலில் இடம் பெறுகின்றன. இடும்பன் சிறு பாத்திரம். முருகன் பண்டாரம் உரையாடல் இனிமையும் சுவையும் உடையதாக அமைந்து சிறப்புறுகின்றது.

நூலின் பிற்பகுதி, முழுமையும் பண்டாரம் நகரத்தார்கள் பரிசளித்தல் பற்றியும் பிறபற்றியும் கூறுவதாகிறது. இங்கு நூலின் முற்பகுதிபோல நாடகப் போக்கில்லை. காப்பியங்

களைப் போலச் செய்திகளைச் சொல்லுதலே காணப் படுகிறது. பாடுவார் முத்தப்பர், திருமுகவிலாச நூலாக்கத்தில், நாடக முறையாகச் கூறுதலையும் கருத்தைச் செய்தியாகக் கூறுதலையும் கையாண்டிருக்கிறார். சுவை கருதி ஒரேபோக்கைப் பின்பற்றாமல் இருவகை மரபுகளைப் பின்பற்றுகிறார்.

இலக்கிய நயம் :

திருமுகவிலாசம் உணர்த்தும் இலக்கிய நயம், சங்க நூல் களின் இலக்கிய நயத்திலிருந்து வேறானது. பாடுவார் முத்தப்பர், திருமுகவிலாசத்தில் இயற்கையைப் புனைந்தோ கருப்பொருள் காட்சிகளைப் பாடியோ நூலை இயற்ற வில்லை. சமயச்சடங்குகளும் கடவுளர் பற்றிய கதைகளும் தாம் அமைந்து நுலை ஆக்கியுள்ளன. புலவர்கள் நயத்தை வெளிப்படுத்துவதற்குப் பின்பற்றும் இலக்கியக்கொள்கைகள் காலத்துக்குக் காலம் மாறுபடும். ஒரு காலத்தில் நயமாகக் கருதப்பட்டதும் சுவையாக விளங்கியதும் இன்னொரு காலத்தில் விடப்பட்டது. எனவே பாடல்களின் பாடு பொருளும் சொல்லும் முறையும் மாறின.

திருமுகவிலாசத்தில் கடவுளரைப் பற்றிய வரலாறுகள் ஒருங்கு அடுக்கிச் சொல்லப்பட்டுள்ளன. தெய்வங்களைப் பற்றி விரிவாகவும் பாரித்தும் உரைத்த புராண வரலாறுகள் சிறு சொற்றொடர்களாக இங்குச் சொல்லப்பட்டுள்ளன. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பாங்கு, வரலாற்றை உய்த்துணர்ந்து மகிழச் செய்யும் நீர்மையது. இந்த இலக்கியக் கொள்கையைப் பின்பற்றித் திருமுகவிலாசம் கடவுளர்களைப் புனைகின்றது.

கடவுளரைப் பாடும்போது அவர்களின் அரிய செயலையும் இகழ்ச்சிக்குரிய செயலாகப் பாடுவது

பதினைந்தாம் நூற்றாண்டில் எழுந்த மரபு. காஞ்சிபுரம், வரதராசப் பெருமாள் கருட வாகனத்தில் உலா வந்தபோது காளமேகப் புலவர்

"பெருமாளும் நல்ல பெருமாள் அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள் - பெருமாள்
இருந்த இடத்தில் இராமையினால் ஐயோ
பருந்தெடுத்துச் செல்கிறதே பார்"

என்று பாடினார். அக்காலத்தில் இவ்வாறு பாடுவதையே இலக்கிய நயம் என்று கருதினர். இப்பாட்டில் உவமையோ இயற்கைப் புனைவோ இல்லை. ஆனால் திருமால் கருடவாகனத்தில் வருதலைப் பருந்து தூக்கிக் கொண்டு செல்வது என்று கூறுவது நயமாகின்றது.

கடவுளரை இவ்வாறு புகழாப்புகழ்ச்சியாகப் பாடுவதையே புலவர்கள் சிறிது என்று கருதினர். இவற்றையே படித்து மக்களும் சுவைத்தனர். இங்ஙனம் பல பாடல்கள் தனிப் பாடல் திரட்டுகளிலும் சிற்றிலக்கியங்களிலும் காணப்படுகின்றன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் கையாளாத இந்த இலக்கியக் கொள்கை, பதினைந்தாம் நூற்றாண்டு தொடங்கிப் பெருகியது. தொடர்ந்து வந்த மரபினைத் தழுவிப் பாடுவார் முத்தப்பர் திருமுக விலாசத்தில் இதனைப் பயன்படுத்துகிறார். சிவபெருமான் காளை வாகனத்தையுடையவர் என்பதையும் தில்லையில் திருநடனம் புரிகின்றார் என்பதையும்.

"... ... ...சீலமுடன்
மாடெடுக்கப் பெற்றார் மருக்கொண்டார் தில்லைதனி
லாடெடுத்தா ரென்றுபெய ராயினார் - ..." (117-118)

என்று திருமுகவிலாசம் உணர்த்துகின்றது. இவ்வாறு கடவுளரைப் பற்றிய அடிகள் எல்லாம் சொல்லும் முறையால் இன்பம் பயப்பனவாய்த் திகழ்கின்றன.

திருமாலைப்பாடும் போது

"குருந்தேறிக் கொண்டார் குதிரைகிடை யாமற்
பருந்தேறிக் கொண்டார் ... - ..." (143)

என்றும் முருகனைப் பாடுங்கால்

"... ... ... - முந்தமுந்தக்

கோழி பிடித்தேன் குறத்திதனை மாலையிட்டேன்
பேழை வயிற்றனுக்குப் பின்னானேன்—..." (155-156)

என்றும் பாடுகின்றார், ஆசிரியர். இத்தகைய புனைவு, புலவர்களுக்கும் நகரத்தார்களுக்கும் சுவையூட்டுவதாக விளங்குகிறது. உயர்ந்த செயல்களை எளிய காரியங்களாகப் பாடும் நயம் படிப்போர்க்கு முருகியல் இன்பம் ஊட்டுவதாகும்.

நிலை இருப்பு - வேல்:

கடவுளைப் போற்றும் பண்புடைய பாடுவார் முத்தப்பர். மேலே விளக்கிய இலக்கியக் கொள்கையைப் பின்பற்றிக் கிண்டலும் கேலியும் நிறைந்த நகைச்சுவையுடன் திருமுகவிலாசத்தை ஆக்கியுள்ளார். குன்றக்குடிக் குமரன், முதற்கண் புராண நிகழ்ச்சிகளைக் கொண்டு சிவ பெருமானைப் பேசுகிறான். இங்குத் திருத்தொண்டர் புராணம், திருவிளையாடல் புராணம் ஆகியவற்றிலுள்ள கதைகள் இடம் பெறுகின்றன. இங்ஙனமே பார்வதி, விநாயகர், திருமால் ஆகியோர் செய்தியாகப் பல புராணக் கதைகள் சொல்லப் பெறுகின்றன. இறுதியில் முருகன் தன் கதையைச் சொல்லி இம்மை வாழ்வுக்கு என்னால் ஒன்றும் இயலாது என்று உரைக்கிறான்.

"... ... ... - **நிலையிருப்பு**
வேலொழிய என்கையில் வேறுபொருள் உண்டானால்
சாலவுரைப் பாய்நான் தருகின்றேன் - ஞாலமிசை
பங்கமிலை நாங்கள்பட்ட பாடெல்லாம் உன்னிடத்தில்

சங்கதியாய்ச் சொன்னேன் தமிழ்ப்புலவா - எங்கள்பிழைப்பு
இப்படியெல் லாமிருக்க என்பாலில் உன்துயரம்
எப்படிச்சொல் வாய் ... ...'' (169-172)

என்பது முருகன் வினா. முருகன் வேலே தன்பால் உள்ளது. என்று கூறுவது அவனுடைய வலிமையையும் அல்லன கடியும் ஆற்றலையும் உரைப்பதாகும்.

இம்மை வாழ்வுக்குத் தன்னால் ஏதும்செய்ய இயலாது என்பதனைத் தெரிவிக்கின்றான். மீண்டும் பண்டாரம் முருகனிடம் மன்றாடுகின்றான். அப்போது அவன்,

''நம்மால் அழைத்தகவி நாவலா வுன்னைநான்
சும்மா விடாமலொன்று சொல்லக்கேள் - ...'' (182)

என்று துவக்கி நகரத்தாரைப் பற்றி உரைக்கின்றான். இம்மைக்கும் மறுமைக்கும் அருள் செய்வல்ல முருகன், பண்டாரம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ நகரத்தார்பால் அனுப்புகின்றான்.

முருகனைப் போற்றிக் கொண்டாடும் நகரத்தார்கள் அவனடியாரையும் போற்றிக் கொண்டாடுதல் இயல்பு. அத்துணிவுதான் முருகனுக்கும் இருக்கின்றது, அதனாலே தான் தன்னடியானைத் தன்னடியார் திருக்கூட்டத்திற்கு அனுப்புகிறான். அவ்வாறு அனுப்பும் போது தன் பால் பொருளேதும் இல்லை என்பதைக் கூற 'நிலையிருப்பு வேல் ஒழிய என்கையில்வேறு பொருள் இல்லை' என்று முருகன் கூறுவது நகரத்தார் கணக்கு முறையையும் பேச்சு வழக்கையும் உள்ளடக்கியது.

எண்ணலங்காரம் :

பாடுவார் முத்தப்பர் இலக்கிய உத்திகளையும் பயன் படுத்து நூலை ஆக்கியுள்ளார். அணி நூல்களில் எண்ணலங்காரம் என்பதொன்று. எண்களை வரிசைப்படுத்தி நயந்தோன்றுமாறு புலவர் பாடுவர்.

ஒன்று முதல் பத்துமுடிய எண்கள் தொடர்ந்து வருமாறு சில கண்ணிகள் திருமுகவிலாசத்தில் பயிலுகின்றன. இதில் ஒன்றுமுதல் பத்துமுடிய வரும் எண்கள் வருகின்றன! ஒன்பது மட்டும் இல்லை. இதனை எண்ணலங்காரம் என்று குறிப்பிடுவர்.

"ஒருமான் மகள்தன்உடன் உள்ள தெய்வமங்கை
இருமாத ருக்கும் இறைவா—கருணைதரு
மும்மூர்த்தி கள்தமக்கு மூர்த்தியே நால்வேதச்
சிம்மா தனத்திருக்குந் தேவனே—செம்மைமிகும்
அஞ்சு முகன்உதவும் ஆறுமுக னேயேழு
மஞ்சுலவு மங்கை மலையோனே—ரஞ்சிதமாய்
எட்டானைக் கொம்பைநெஞ்சி லேற்றிரத்னப் பத்திகளைத்
திட்டமுட னேயழுத்தும் சேவகத்திற்—கெட்டிஎனும்
பத்துமுடி ராவணனைப் பட்டுருவ வாளிதொட்ட
கைத்திகிரி யோன்மருகா காவலனே..." (55-59)

இதில் எண்கள் பொருத்த முற அமைந்தும் முருகன் முழு முதல் தன்மையைக் காட்டியும் விளங்குகின்றன.

பாடுவார் முத்தப்ப செட்டியார் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் முருகன் மேல் கொண்ட பேரன்பைக் காட்டவும் அவர்கள் தொன்மை வரலாற்றையும் உயரிய பண்புகளையும் உணர்த்தவும் திருமுகவிலாசத்தைப் பாடி யுள்ளார். இச்சிற்றிலக்கியம் நகைச் சுவையொடு அங்கத மாகக் கடவுளரைப் புகழாப் புகழ்ச்சியாகப் போற்றுகிறது.

அடிக்குறிப்பு

1. சாமிநாதையர். வே. (1960) - சிலப்பதிகார மூலமும் அரும் பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், சென்னை ஏழாம் பதிப்பு, காதை 8 அடி எண். 53

2. சிற்றூர்களில், கோயில் திருநாளை அறிவிக்க ஊரலுவலர் அனுப்பும் கடிதத்தைத் 'திருமுகம்' என்று குறிப்பர்.
3. சாமிநாதையர் உ.வே. (1933) - நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும் நூற்பா எண். 53 அடி எண். 1
4. வில்லிப்புத்தூரார் (1959) - வில்லிபாரதம், சம்பவ உருக்கம் 119, சென்னை, மர்ரேப் பதிப்பு.
5. சிதம்பரம் கருணானந்த சுவாமிகள் (1868) - திருமுக விலாசம் நூலின் இறுதி காண்க.
6. முத்தப்ப செட்டியார் (1933) - திருமுகவிலாசம், ஈப்போ, மெர்க்கண்டைல் பிரஸ், கண்ணிகள் 222-223
7. ஷை - ஷை கண்ணி 87-88
8. ஷை - ஷை கண்ணி 222-223
9. ஷை - ஷை
பண்டாரத்துடன் உரையாடும் முருகன், அவனைத் தமிழ்ப் புலவன் என்றே போற்றுகிறான்.
அ) ''பன்னுதமிழ் நம்மேற் பகர்கின்றான்'' கண்ணி 72
ஆ) ''வாய்ப்பா யுரைத்த தமிழ்வாணனே'' கண்ணி 85
இ) தகுதியற்றவர்களை யெல்லாம் வீமன் என்றும் விதுரன் என்று புகழ்ந்தும் புலவர்க்குத் தக்க பரிசில் கிட்டவில்லை என்று பண்டாரம் வருந்துகின்றான். கண்ணி 94 - 107. முடிய உள்ள கண்ணிகளில் இதையே பாடுவார் முத்தப்பர் பாடுகின்றார்.
ஈ) பண்டாரத்தைக் குமரன் 'தமிழ்ப்புலவா' (கண்ணி 171) என்றே அழைக்கின்றான்.
10. நாராயணஞ் செட்டியார், ராம.மு.க.மு. (1954) - முத்தப்பர் நூல் ப. 13
11. ஊனையூர்ச் சுப்பிரமணிய பண்டாரத்திற்குப் பாடிக் கொடுத்த திருமுகப் பாட்டுக் கிடைக்கவில்லை. பாடுவார் முத்தப்பரியற்றிய பல பாடல்களும் நூல்களும் கிட்டில.

12. சாமிநாதையர். வே. (1960) - சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும். காதை 13 அடி 83-85

13. முத்தப்ப செட்டியார் (1933) - திருமுகவிலாசம் கண்ணி 232 - 234

14. மீனாட்சி சுந்தரனார் தெ. பொ (1971) - தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - கல்லாடனார் விருத்தி. சென்னை, அரசினர் கிழ்த்திசைச் சுவடி நூலகம், நூற்பா எண். 237

15. முத்தப்ப செட்டியார் (1933) - திருமுகவிலாசம் கண்ணி 1

16. கந்தபுராணம் கந்தன் என்ற பெயருக்குக் காரணம் இவ்வாறுதான் உரைக்கின்றது.

17. கந்தையாபிள்ளை ந.சி. (1960) - தமிழ்ப்புலவர் அகராதி சென்னை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம். பக் 157-158

18. சந்திர சேகரன் தி. (1959) - பிள்ளைத் தமிழ்க்கொத்து அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூல் நிலையம், சென்னை. முருகப்பதேவர் பிள்ளைத்தமிழ் - சிறுதேர்ப் பருவம் பாடல் எண். 2 அடி 1.

19. முத்துக்குட்டிப் புலவர் (1852) - கண்ணுடையம்மன் பள் பாடல் எண். 22

20. சோமலெ. (1984) - செட்டிநாடும் செந்தமிழும் - வானதி பதிப்பகம், சென்னை. பக் 535-546

21. பெருமாள் ஏ.என் (பதி) - கும்மிப்பாடல்கள் - சிரணியம்மன் கும்மி கண்ணி 51

22. முத்தப்ப செட்டியார் (1933) - திருமுகவிலாசம் இப்போ கண்ணி 182

23. ஷை. கண்ணி 216

24. ஷை கண்ணி 214

25. ஷை. கண்ணி 191

26. ஷெ. கண்ணி 192

27. கோபால கிருஷ்ணமாசார்யர் உ.வே.வை (1965) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் ப.எண். 1049

27. முத்தப்ப செட்டியார் (1933) - திருமுகவிலாசம் - ஈப்போ கண்ணி 94

29. தமிழ்ப்புலவர்கள், யாரைப் பாடப் போகின்றார்களோ அவர்கள் பெயர்களை அறிந்து அதற்கேற்பப் பாடலைப் புனைந்து சொல்லுவர். இப்படி ஒவ்வொருவர் பெயரையும் கேட்டுப் பாடல்புனைந்து பெறும் பரிசு மிகக்குறைவானது. அதனைத் தான் திருமுகவிலாசம் 94வது கண்ணியில் 'நடந்தலுத்துப்பேர் கேட்டு' என்று பாடுவார் முத்தப்பர் பாடுகிறார்.

30. முத்தப்ப செட்டியார் (1933) - திருமுகவிலாசம் ஈப்போ கண்ணி 99

31. நாராயணஞ்செட்டியார். ராம.மு.க.மு. (1954) - முத்தப்பர் நூல் ப. 13

32. இராமசாமிப்புலவர் (1954) - தனிப்பாடல்திரட்டு முதல் தொகுதி, சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பக். 278-279

33. அமிர்தலிங்கம் த. (1984) - தமிழ்க்கவிதைகளில் வறுமைப் புனைவு, சென்னை செவ்வேற் பதிப்பகம். பக் 69-73

34. இராமசாமிப் புலவர் (1954) - தனிப்பாடல்திரட்டு முதல் தொகுதி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ப. 269

குதிரையடியும் அகவலும்

நகரத்தார்களின் கருப்பர் வழிபாடு :

சிவனடி மறவாத சிந்தையுடைய நகரத்தார்கள், தங்களுக்கு எனத் தனித்தனியே ஒன்பது சிவன் கோயில்களை உரிமையாகப் பெற்றிருக்கிறார்கள். அஃதன்றித் தாங்கள் வாழும் ஊர்களிலும் தங்கள் இனத்துக்கெனச் சிவன் கோயில் கட்டி வழிபடுகின்றனர். இவர்கள் தங்களினக் கொள்வினை கொடுப்புவினைக்காக ஒன்பது கோயில்களைப் பகுத்துக் கொண்டிருக்கின்றனர். சைவ சமயத்தில் அழுத்தமும் ஈடுபாடும் உடைய இம்மரபினர், கருப்பர் வழிபாட்டிலும் ஈடுபாடு காட்டுவது வியப்பைத் தருகிறது.

நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் வாழ்க்கையில் அய்யனார் கோயில்களும் அங்காளம்மன் கோயில்களும் பேரிடம் பெற்றுள்ளன. இவற்றில் ஒன்றைக் கோயிலின் தலைமைக் கடவுளாகக் கொண்டு பரிவார தெய்வங்கள் பல இடம்பெறுகின்றன. பரிவார தெய்வங்களில் கருப்பர், சின்னக்கருப்பர், பெரிய கருப்பர், கலங்காப்புலிக் கருப்பர், மின்னோடி போன்றவை குறிக்கத்தக்கவை. இக்கோயில்களும் பெரும்பாலும் செட்டிநாட்டு எல்லைக்குள்ளேயே அமைந்தவை.

நகரத்தார்கள் தம் இல்லத்தில் நடைபெறும் திருமண நிகழ்ச்சிக்குப் பின்னும், குழந்தை பிறந்த பின் பெயர்

வைப்பதற்கும், ஆண்டுதோறும் தைத் திங்களில் அய்யனார் கோயிலுக்குச் சென்று அபிடேகம் செய்து விதைப்புக் கொடுத்து வழிபடுவர். சிவ வழிபாட்டிலும் சிறுதெய்வ வழிபாடு நகரத்தார் பால் அச்சவுணர்வுடனும் அழுத்தத் துடனும் பின்பற்றப்படுகிறது.

அய்யனார் கோயிலில் உள்ள கருப்பர், நகரத்தார்களின் குலதெய்வம். அய்யனாரையும் கருப்பரையும் தங்கள் குலதெய்வமாக 'நகரத்தார்கள் போற்றி வருகிறார்கள். இதனால்தான் நகரத்தார்களிடையே 'கருப்பையா' என்ற பெயரும் 'முத்துக்கருப்பன்' பெரிய கருப்பன், சின்னக் கருப்பன், கருப்பாத்தாள், கருப்பாயி போன்ற பெயர்களும் மிகுதியாக வழங்குகின்றன.

பதினெட்டாம் படி - தலைமையிடம் :

அய்யனார் கோயிலிலோ அங்காளம்மன் கோயிலிலோ உள்ள தெய்வம் கருப்பர். ஆனால் நகரத்தார்களும் இவர் களொடு கலந்து வாழும் நாட்டார்களும் வேளார்களும் எல்லாக் கருப்பர்களுக்கும் தலைமையிடமும் தலைவனும் பதினெட்டாம் படிக்கருப்பரே என்று நம்புகின்றனர். பதினெட்டாம் பெருக்கின் போது தமிழ்நாட்டில் வாழும் ஊரகமக்கள் தங்களூர்ச் சாமியாடிகளொடு அழகர் மலைக்கு வந்து தீர்த்தமாடிப் பதினெட்டாம்படியில் வழிபட்டு வருதலை இன்றும் காணமுடியும். சில கருப்பர் தெய்வங்கள், பதினெட்டாம் படிக்கருப்பரைக் கட்டிக் கொண்டு போகும் போது தோன்றியவை என்று நம்புகின்றனர்.[1] இவ்வாறு செட்டிநாட்டில் வாழும் செட்டியார்களும் ஏனையோரும் அய்யனாரையும் கருப்பரையும் ஈடுபாட்டுடன் வழிபடு கின்றனர்.

திருமால் வழிபாட்டின் ஒரு கூறு :

கருப்பர் வழிபாடு சிறுதெய்வ வழிபாடு எனினும் இது திருமால் வழிபாட்டின் ஒரு பகுதியே. நாட்டுப்புற மக்கள் தங்கள் மனத்துக்கும் சூழலுக்கும் வாழ்வுக்கும் ஏற்றவாறு கருப்பரை வழிபடுகின்றனர். திருமால் வழிபாட்டுக்கும் கருப்பர் வழிபாட்டுக்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது. திருமாலும் நீலநிறமுடையவன்; கருப்பரும் அத்தகைய வண்ணனே. திருமாவின் நிறம் கருப்பு; அவன் அந்நிறத்தாலேயே ஊரக வழிபாட்டிலும் கருப்பன் எனப்பட்டான். கருப்பரைப் பாடிய சிற்றிலக்கியங்கள் அவன் நெற்றியில் திருமண் காப்பு இருப்பதாகச் சொல்லுகின்றன. எனவே திருமால் வழிபாடு வேதமுறை, ஆகமமுறைகளில் இருந்து விலகி ஊரக வழிபாட்டு முறைகளில் கருப்பர் வழிபாடாக வளர்ந்துள்ளது.

கருப்பர், அல்லோரை அழித்து நல்லோரை வாழ வைக்கும் தெய்வம்; காத்தற் கடவுள். அறங்கேட்கும் தெய்வம். இவை தாம் திருமாலுக்குரிய தொழில்கள். ஆதலால் கருப்பர் வழிபாடு திருமால் வழிபாட்டின் ஒரு கூறேயாகும்.

பாடுவார் முத்தப்பர் வாழ்ந்த காலத்திலேயே, நகரத்தார்களிடையே கருப்பர் வழிபாடு நன்கு வேரூன்றித் தழைத்திருந்தது. ஆதலின் இவர் தன் குலதெய்வமான இராங்கியம் கருப்பரைப் பாடியுள்ளார்; அன்றித்தல்லாகுளம் கருப்பரையும் பாடியுள்ளார்.

கருப்பர் பழமை :

இராங்கியம் என்று இன்று வழங்கும் ஊரின் பெயர் இராச சிங்கமங்கலம் என்பதாம். இவ்வூர்க்கு மிக அண்மையில் உள்ள ஊரே மிதிலைப்பட்டி. இங்குப் பழமையான புலவர்

மரபினர் வாழ்ந்தனர். அம்மரபினர்பால் இருந்த ஏட்டுச் சுவடிகள் தாம் டாக்டர் உ.வே. சாமிநாதையருக்குக் கிடைத்தன. இம்மரபினர் இயற்றிய செய்யுட்களில் இராங்கியம் கருப்பரைப்பற்றிய சிறு குறிப்புகள் காணப்படு கின்றன. இதனால் இராங்கியம் கருப்பரின் தொன்மை வெளிப்படும்.

கருப்பர் குலதெய்வம் :

இராங்கியம் கருப்பரைத்தம் குலதெய்வமாகக் கொண்டு வழிபடுகின்ற குடும்பத்தில் பிறந்தவர், பாடுவார் முத்தப்பர். இராங்கியம் கருப்பர் அருள் செய்வதிலும் அறம் கேட்பதிலும் வல்லவர். அதனால் அவரைக் குலதெய்வமாகக் கொண்டவர் களும் பிறரும் அவர்பால் அச்சம் கொண்டு அன்பு பூண்டு வழிபடுவர்.

பாடுவார் முத்தப்பர், இராங்கியம் கருப்பர் மீது குதிரையடி, தனிப்பாடல்கள் ஆகியன இயற்றியுள்ளார். குதிரையடியின் மையக் கருத்து, கருப்பர் குதிரை மீது ஏறி அடியார்க்கு அருள் செய்ய வருதலாகும். இதனைப் பவனி யாக/உலாவாக வருதல் என்று கருதவேண்டும். கருப்பர் ஏறிய குதிரை புறப்பட்ட வகையும் குதிரை மீதிருந்த கருப்பரின் வீறார்ந்த தோற்றமும் தாம் குதிரையடியில் விவரிக்கப்பட்டுள்ளன.

அமைப்பும் கருத்தும் :

குதிரையடியில் முதற்கண், குதிரை வருணனை இடம் பெறுகிறது. குதிரை அழகும் வீறார்ந்த தோற்றமும் உடையது; ஐந்து வகையான சாரிகைகளையும் கற்று மனத்தில் அடக்கிக் கபடமாகி மேன்மை நிறைந்தது; நீராகிய உணவைத் தெவிட்ட உண்டு கண் சிவந்தது. ஆரவாரத்துடன் வேகம் மிகுந்து கனைத்து மேலே பெருங்காற்றுப் போலச் சீறி

விரைந்து புறப்பட்டது; உலகைத் தன் முடியில் தாங்கிய ஆதிசேடன் தலையானது ஆட்டிவிட்ட பம்பரம் போலச் சுழன்றிடச் செய்றது; வருணதேவனையும் அவனுடைய கடலாகிய பெரும் சேனையையும் அரை நொடியில் சேறாகக் கலக்கித்தாண்டியது; வெற்றி முரசொலிக்கும் போர்க் களத்தில், மிகுந்த அச்சம் தோன்றச் சினத்துடன் எழுந்து வெள்ளிய அலைகளையுடைய கடலைக் குழம்பாகக் கலக்கி மேரு மலையைத் தூளாக்கியது. இவ்வண்ணம் நடனமிடும் வெள்ளைக் குதிரை வந்தது.

குதிரை, சவாரி செய்தவற்கு ஏற்ப வாயிலே கடிவாளம் முதுகிலே வைடூரியத்தால் இயன்ற சேணம்; அதன் மீது ஏறியிருந்து ஓட்ட அங்கவடி; எட்டு மணிகளாலான மாலை, கழுத்துச் சங்கிலியாகத் திகழ்ந்தது. அதன் பின்புறம் அழகுடன் கம்பீரமாக விளங்கியது. காலில் சிலம்பு, தண்டை, சதங்கை, மணி ஆகியன இருந்து ஒலித்தன.

இதற்கு அடுத்த பகுதி, கருப்பரைப் புனைகின்றது. இராங்கியம் கருப்பர், வெற்றி வாய்ந்த நகுலனைப் போலக் கால்சட்டை அழகுற அணிந்து தலையில் இலை போன்ற குஞ்சத்துடன் தலைப்பாகையும் முத்துத்துராயும் கட்டி இருக்கிறார். இடுப்பில் ஒட்டியாணமும் பெங்களூர்க் கத்தியும் வைத்து இறுக்கிச் சரிகையாடை புனைந்து திகழ்கிறார். கருப்பர் நெற்றியில் சவ்வாதுப் பொட்டு மணக்கிறது. காதுகளில் கடுக்கனும் முருகும் கழுத்தில் முத்துமாலையும் பதக்கமும் கண்டிகையும் சலசலக்கின்றன. நேரான கைகளில் தங்கக் கடையம். கருப்பரின் திருவடிகள் அங்கவடியை மிதித்திருக்கின்றன. கருப்பர், வெற்றியைக் குறித்துத் தாக்கும் ஈட்டியைக் கையில் பிடித்து உள்ளார்; பூச்சக்கரக் குடை நிழல் செய்கின்றது. இத்தகைய புனைவொடு கருப்பர் குதிரை மீது எழுந்தருளுகின்றார்.

கருப்பர் குதிரைமீதேறிவர அவர்க்கு முன்னே அவர் தகுதியை உணர்த்துமாறு விருதுகளும் ஆடம்பரங்களுமான அரசமரியாதைக்கான அணிவரிசைகள் செல்லுகின்றன. செந்நிறத்தையுடைய தோம்புத்துணியாலான வண்ணப் பாவாடை வீச வெண்சாமரை இருபுறமும் போடப் பொன் சுருட்டி, வெற்றிக்கொடி முதலியன ஆடம்பரத்துடன் வந்தன. மேளவாத்தியம் ஒலிக்க பெண்கள் நடனமாட மகரயாழ் இசைக்க யானை மீதிருந்து பேரிகைகள் முழங்கின. வாணம், மத்தாப்புகளும் தீவட்டிகளும் கதிரவன் போல ஒளி வீசின. கட்டியங் கூறுவோர் 'கருப்பண்ண சுவாமி வாரார்! பராக்கு! பராக்கு! எச்சரிக்கை' என்று கட்டியம் கூற மதுரகவி வாணர் வாழ்த்துரைக்க அணி சென்றது.

வீரப்பன் பூசாரி மரபினர் போற்றிப் பணிய நான்கு திசையும் புகழத் தேவலோகத்தவரும் துதிக்க வேதஉருவான குதிரைமேல் வனப்புமிக எழுந்தருளிவரும் அருள் நிறைந்த ஆண்டவன்; மூவுலகிலும் நாளும் வளர்கின்றவன் கருப்பண்ண சுவாமி.

இவ்வண்ணம் வெள்ளைக்குதிரையில் கருப்பண்ண சுவாமி (கருப்பர்) ஏறிவர முன்னே மன்னரைப் போல அரச மரியாதை அணிவகுத்துச் செல்ல அருளாட்சி நடத்து கின்றார்.

கருப்பர் ஏறிவரும் குதிரையைப் பாடுவார் முத்தப்பர் நாட்டியக் குதிரை என்று கூறுகிறார். குதிரையின் நடனத்துக்குரிய தாளத்தைச் 'செகண கணதகத தாதரிகடத் தித்திமி தெய்யாத் தெனத்தசெனதம், சேர்ந்தரிசே குதித்திமி'[2] என்று குதிரையடி சுட்டும். நடனமங்கை அணி கலன்களைப் புனைவது போல நாட்டியக் குதிரையும் பல்வேறு அணிகளைப் பூண்டு அழகுடன் திகழ்கின்றது.

பாட்டுடைத் தலைமை :

பாட்டியல்களோ நிகண்டுகளோ கூறாத ஒரு சிற்றிலக்கிய வகை 'குதிரையடி' குதிரையடியின் பாட்டுடைத் தலைவன் கருப்பரே அன்றிப் பிற தெய்வம் இல்லை. வேறு தெய்வங் களின் மேல் குதிரையடி பாடப்படவில்லை. இவ்விலக்கிய வகை, கருப்பரின் ஊர்தியான குதிரையொடு கருப்பரையும் இணைத்துப் பாடுகிறது. எனவே இந்நூல் வகையில் கருப்பரையன்றி வேறு தெய்வம் பாட்டுடைத் தலைமை பெறுவதற்கு இல்லை.

செட்டியார்களின் பிரிவை உணர்த்தும் கோயில் சிவன் கோயிலாக இருக்கும். ஆனால் அவர்களின் குல தெய்வக் கோயில் அய்யனார் கோயிலாகும். நகரக் கோயிலுக்கும் குலதெய்வக் கோயிலுக்கும் எவ்வகைத் தொடர்புமில்லை. நகரக் கோயில்கள், ஆகம முறைப்படி கட்டப்பெற்றுப் பூசை செய்யப் பெறுவன. அய்யனார் கோயிலில் ஒரு காலப் பூசையே நடைபெறும். வேளார் என்னும் மரபினர் அங்குப் பூசை புரிகுவர். ஒரு நகரக் கோயிலைச் சார்ந்தவர்கள், பல்வேறு அய்யனார் கோயிலையும் கருப்பரையும் வழிபடு கின்றனர். சிவன் கோயிலில் அறுபத்துமூவர் வரிசையாக அமைந்திருப்பது போல அய்யனார் கோயிலில் கருப்பர்களும் வரிசையாக அமைக்கப்பட்டிருப்பர். இந்தக் கருப்புத் தெய்வங்களே குதிரையடியில் தலைமை பெற்றுப் பாட்டுக் குரியனவாக விளங்குகின்றன.

வட்டார இலக்கியம் :

கருப்பர் வழிபாடு, செட்டிநாட்டில் நகரத்தார் களிடையே ஆழமாக வேரூன்றி இருக்கிறது. அதனால் கருப்பரைப் பாடும் இவ்விலக்கிய வகையும் செட்டிநாட்டு வட்டாரத்திலேயே உருவாகியுள்ளது. இதனைப் பாடிய புலவர்களும் நகரத்தார் மரபைச் சார்ந்தவர்களே.

ஆதலினால் இவ்விலக்கிய வகை வேறு வட்டாரங்களில் காணப்பெறவில்லை. இதனைச் செட்டிநாட்டு 'வட்டார இலக்கிய வகை' என்பது பொருந்தும்.

குதிரையடிவிருத்தம் - வாகனக்கவி :

கடவுளர்களின் ஊர்திகளையும் தெய்வமாகக் கொண்டாடும் மரபு உண்டு. சிவபெருமானின் காளையும் திருமாலின் கருடனும் முருகனின் மயிலும் போலக் கருப்பரின் குதிரையும் சிறப்புப் பெறும். அருணகிரிநாதர், முருகன் ஊர்ந்து வரும் மயிலை "கிரவுஞ்சகிரி கிழிபட நடாவு மயிலே"[3] என்றும் "எண்டிசை யசைய வையாளி யேறு மயிலே"[4] என்றும் மயில் விருத்தத்தில் பாடுவர். அவ்வாறு பாடுவார் முத்தப்பர் கருப்பர் ஏறும் குதிரையைப் புனைகின்றார். அதனால், இது குதிரையடி விருத்தம் எனப்பட்டது. முருகன் ஊர்தியான மயிலைப் பாடுவது, மயில் விருத்தம். அது போலக் கருப்பர் ஊர்தியான குதிரையைப் பாடுவது 'குதிரையடி விருத்தம்' எனப்பெறும். தெய்வத்தின் வாகனங்களைப் பாடுவதால், இவற்றை 'வாகனக் கவி' என்று கூறுவதும் பொருந்தும்.

புதிய இலக்கியம் உருவாதல் :

நகரத்தார்கள் வழிபடும் அய்யனார் கோயிலுக்கு முன்பாகக் குதிரைகள் ஒன்றோ இரண்டோ கட்டப் பெற்றிருக்கும். இக்குதிரைகள் சுதையாலானவை. இரண்டு குதிரைகள் இருப்பின் இரண்டும் ஒன்றையொன்று பார்த்த வண்ணம் எதிர்ப்பக்கங்களில் இருக்கும். அவை தாவி பாய்ந்த கோலத்தனவாய், முன் கால் இரண்டையும் தூக்கிக் கொண்டு நிற்கும். இக்குதிரையிலேறி வந்தே கருப்பர் தம்மைக் காப்பாற்றுவார் என்று எண்ணி அடியார்கள் சேமங்குதிரை கட்டியுள்ளார்கள்.

இச்சேமங்குதிரையை அய்யனார் கோயிலில் தனிப்பட்ட குடும்பத்தினர் கட்டியிருப்பர்; அன்றிப் பொதுவாகக் கட்டி யிருப்பதுமுண்டு. ஆபத்தானசூழலில், தன்னைக் காப்பாற்றி யமைக்கு நன்றி பாராட்டும் முகமாகக் கட்டப்படுவது முண்டு.[6] நெய்வாசல் திட்டாணிக் கருப்பர் கோயில், இலங்குடி பகச்சால அய்யனார் கோயில், கொராட்டிக் கருப்பர் கோயில், இராங்கியம் கருப்பர் கோயில், இளையாத்தக்குடி அங்காளம்மன் கோயில் ஆகியவற்றில் சேமங்குதிரை கட்டப்பட்டிருத்தலைக் காணமுடியும்.

சேமங்குதிரை, வெயிலிலும் மழையிலும் நிற்பதால் விரைவில் அதன் மெருகு குலைந்து விடும். அது சுதையா லானமையால் விரைவில் அழிந்து விடும். எனவே அடிக்கடி சேமங்குதிரையைப் புதுப்பிக்கவேண்டும். திருக்கோயிலைத் திருப்பணி செய்யும்போது சேமங்குதிரையையும் புதுப்பிப்பர். சேமங்குதிரையைக் கட்டியவர்கள் பொருள் வசதியைப் பொறுத்தும், மீண்டும் மீண்டும் குதிரைகள் கட்டப்பெறும். சேமங்குதிரையைப் புதுப்பிக்கும்போது முழுவதையும் இடித்து விட்டே புதிதாகக் கட்டுவதுதான் வழக்கம். எனவே சேமங்குதிரையின் வடிவம் காலத்திற்குக் காலம் மாறி மாறி அமைகிறது.

அய்யனார் கோயிலில் உள்ள சேமங்குதிரையே 'குதிரையடி' பாடுதற்கு அடிப்படையாகும். குதிரையில் ஆரோகணித்துவரும் கருப்பரைக் கண் முன்னே நிறுத்துவது போலப்பாடுவாரின் குதிரையடி காட்டுகிறது. குதிரையடியில் குதிரைக்குரிய அணிகலன்கள் பலவும் அணிவிக்கப் பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. அந்த அழகுக் காட்சிக்கு உருவம் கொடுத்தது போலச் சுதைச் சிற்பமுள்ளது. பாடுவார் முத்தப்ப செட்டியார் காலத்துக்கு முன்பிருந்தே கோயில்களுக்கு முன் சுதையாலான குதிரைச் சிற்பங்கள்

இருந்தன என்றும் அவையே குதிரையடி பாடுதற்குப் பாடுவார் முத்தப்பருக்கு எழுச்சியூட்டின என்றும் கருதுதல் சாலும். கருப்பர் வெள்ளைக் குதிரையில் ஏறி காப்பாற்ற வருவது போன்ற உணர்வைக் குதிரையடி ஏற்படுத்துகிறது.

குதிரைச் சிறப்பு :

சிற்றிலக்கிய வகைகளில் சின்னப்பூ, தசாங்கம், விருத்த இலக்கணம் என்ற மூன்றும் குதிரையை ஓர் உறுப்பாக்கிப் பாடுகின்றன. தூது நூல்களில், தசாங்கம் பாடும்போது குதிரைபற்றிப் பாடும் குறிப்புண்டு. புறப் பொருளில் 'குதிரை நிலை' என ஒரு துறை தனியே உண்டு. பிங்கல நிகண்டு, பிரபந்தத் திரட்டுப் போன்றவை மன்னர்க்குரிய குதிரையின் இயல்பைக் கூறுகின்றன. அங்குச் சொல்லப்பெறும் கருத்துகள் பாடுவார் முத்தப்பரின் குதிரையடியிலும் காணக்கிடக்கின்றன. குதிரை பற்றி ஆங்காங்கே சிறுசிறு குறிப்பாக இடம் பெற்ற கருத்துகள், குதிரையடியில் ஒன்றாக ஒரு முகப்படுத்தப்பட்டுத் தனி முதன்மையுடையனவாய்ச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

இரண்டின் இணைப்பு :

குதிரையை முதன்மைப் படுத்திய குதிரையடி. வேறு சில இலக்கியக் கூறுகளை இணைத்துக் கொண்டு புதுஉருவம் பெற்றது. அரசர்களின் வருகையை அறிவித்தற்கு அரசுகளில் கட்டியம் கூறும் கட்டியக்காரர்கள் இருந்தனர். அவ்வாறே, கடவுளர் எழுந்தருளும் போதும் கட்டியம் கூறும் மரபுண்டு. அருணகிரிநாதர் 'தந்தை யென் றொப்பிடும்' என்று தொடங்கும் சிதம்பரம் திருப்புகழில் 'எட்டந் திகையர் கொற்றமுங் கட்டியம் பாடநிர்த்தம் பவுரி கொண்ட வேலா'[6] என்று கட்டியம் பாடலைச் சுட்டினார். வைணவக் கோயில்களில் கட்டியம் கூறல் உண்டு. சந்நிதி

முறை பாடிய பிரபந்தங்களில் சின்னக் கட்டியம், பெரிய கட்டியம் இரண்டும் இடம் பெற்றன. சோணாசல பாரதியாரின் கம்பைச் சந்நிதி முறையில் மேற்கூறிய இருவகைக் கட்டியங்களும் பாடப் பெற்றிருக்கின்றன. நகரத்தார்கள் பழநிக்குக் காவடி யெடுத்து நடந்து போகும் போது கட்டியம், எச்சரிக்கை ஆகியன கூறியே செல்லுவர். கட்டியம், எச்சரிக்கை போன்றவை செட்டிநாட்டு வழக்கில் உள்ளவை. அவற்றை இணைத்து உருவான ஒரு புதிய வடிவம், குதிரையடி.

இலக்கிய நலம் :

குதிரையடி உரையும் பாட்டும் கலந்து ஒரு முடிவு பெற்றிடும். இதில் பயிலும் உரை நடை எதுகையும் மோனையும் கலந்த இனிய ஓட்டமுள்ள நடை. இடையிடையே வருகின்ற இரு சீர் நான்கடி ஒரு பொருள் பற்றியவை. எனவே இதனை வஞ்சித் துறை எனலாம். இதனை நான்கடிகளாகக் கொள்ளாது இரண்டடிகளாகக் கொண்டு இரண்டடிகளும் அளவொத்திருப்பதால் 'வெண் செந்துறை' என்றும் கொள்ளலாம். குதிரை விரைந்து நடனமாடுமாறு இக்குதிரையடியின் ஓசை நயமும் ஒலிக்கிறது.

கி. பி. 1898இல், இரங்கோன் பிறையர் அச்சுக் கூடத்தில், அச்சிடப்பட்டுள்ள இக்குதிரையடி புதுக் கவிதைகளைப் போல அச்சாகியுள்ளது.

குதிரை மீது வீற்றிருக்கும் கருப்பர்க்கு ஆசிரியர் நகுலனை உவமித்தார். நகுலனைப் போலக் கருப்பர் ஆடைகள் புனைந்துள்ளார். பஞ்சபாண்டவருள் நகுலன் உயிரினங்களைப் பேணி வளர்ப்பதில் வல்லவன். இவன் ஆடு, மாடு, குதிரை முதலிய உயிரினங்களைப் பேணிக்

காப்பதில் வல்லவன். அவனைப் போல உழவுக்கு வேண்டிய உயிரினங்களைக் காத்து வளர்ப்பவன் கருப்பன். இவ்வுவமை மூலம் ஆசிரியர் கருப்பரின் தடங்கருணையை உய்த்துணர வைக்கின்றார்.

தல்லாகுளம் கருப்பரகவல் :

தல்லாகுளம் கருப்பரைப் பாடுவார் முத்தப்பர் பாடிய அகவல் ஒன்று அச்சாகியிருக்கிறது.[7] இந்த அகவலைப் பாடுவார் முத்தப்பர் எப்போது பாடினார்? எங்குப் பாடினார் என்பதற்கான சான்றுகள் கிட்டில. அழகர் மலை — பதினெட்டாம் படிக்கருப்பொடு இணைத்துத் தல்லாகுளம் கருப்பரை ஆசிரியர் பாடியிருக்கிறார். இதனைத் தல்லாகுளம் 'கருப்பரகவல்' என்பர்.

நூற்பெயரும் அமைப்பும் :

தல்லாகுளம் கருப்பரகவலை நூற்றுப் பதினைந்து அடிகளையுடைய தாய்ப் பாடுவார் முத்தப்ப செட்டியார் பாடினார்.[8] சுப்பிரமணியர் அகவல், விநாயகரகவல், திருச்செந்தூரகவல் எனப்பாடப்பட்டது போலக் கருப்பர் மீதும் 'கருப்பரகவல்' இயற்றப்பட்டிருக்கிறது. கருப்பரைப் பற்றிய செய்திகளைச் சொல்லி அவரைப் போற்றுவதால் இந்நூலுக்கு இப்பெயர் பொருந்தும். நூலின் பெயரில் அகவல் (ஆசிரியப்பா) என்று இருப்பினும் இதன் யாப்பு கலிவெண்பாவாகவே திகழ்கிறது. எனவே 'கருப்பர் கலிவெண்பா' என்பதே பொருந்தும்.

இந்நூலின் முதற்கண் பழமுதிர் சோலையின் இயற்கை வனப்பு இடம் பெறுகிறது. பின் அங்கு விளங்கும் சோலைமலை அழகரின் பெருமையும் அவருடைய வாசல் பிரதானி சிறப்பும் வருகின்றன. வாசல் பிரதானியான பதினெட்டாம் படிக்கருப்பர், தல்லாகுளம் கருப்பராய்த் தல்லாகுளம் வந்தமைக்கான காரணம் சொல்லப்

பெறுகிறது. அடுத்துக் கருப்பரின் இயல்புகள் விரிந்துரைக்கப் படுகின்றன. தொடர்ந்து கருப்பரின் கேசாதிபாத வருணனை ஆசிரியர் கண்ட காட்சியாகக் கூறுகின்றார். அதன்பின் நூற்பயனும் வாழ்த்தும் விளங்க நூல் நிறைவு பெறுகின்றது.

கருப்பரகவல், பழமுதிர் சோலையின் இயற்கை நலத்தை முதற்கண் புனைகின்றது. இப்புனைவு. பழமுதிர் சோலை என்னும் பெயருக்கு விளக்கந் தருவது போல விளங்குகிறது. வாழை, பலா, இலுப்பை, எலுமிச்சை போன்ற பல மரங்கள் பழம் நிறைந்திருந்தன. அப்பழமரங்களில் ஆண், பெண் குரங்குகள் மனம் போன போக்கில் தாவிக் குதித்து விளையாடின. அதனால் கனி வகைகள் உடைந்து சாறு வெள்ளமாய்ப் பரந்தது. கனிச் சாற்று வெள்ளம் மலையிலிருந்து ஓடிவந்து கீழிறங்கித் தெற்கும் மேற்கும் வெள்ளமாய்ப் பாய்ந்தது. அதுவே வையையாறு.

சோலைமலையின் சிறப்பைக் குரங்குகளையும் கனிகளையும் வைத்துக் கொண்டு ஆசிரியர் பாடியுள்ளார். சோலை மலையாய்த் திகழும் அழகர் மலையில் குரங்குகளின் ஆட்டமும் கனிகளின் பெருக்கமும் இன்றும் காணத்தக்கது.

பாடுவார் முத்தப்பர், சோலைமலை அழகரைக் கண்ணனாகவும் இராமனாகவும் கண்டு போற்றுகிறார் இதிகாசக் கதைகளையும் புராணக் கதைகளையும் பாடுவதில் ஆசிரியருக்குத் தனியார்வம் உள்ளது. அதனால் அவற்றை எதுகை மோனையுடன் ஆசிரியர் பாடுகிறார்.

அழகர் மலையில் திகழும் பதினெட்டாம் படிக்கருப்பர், அழகரின் வாசல் பிரதானி, மதிமந்திரி. அழகர் சொத்துக்கு அவரே காவலர். இந்தக் கருப்பரின் புகழ் விளங்குவது சோனைமலை மட்டிலுமா? இல்லை; தமிழ்

நாடெங்கும் கருப்பர் அருளாட்சி நடாத்துகின்றார். கருப்பர் கொலுவீற்றிருக்கும் திருத்தலங்கள் இலங்குடி, இராங்கியம், கீரணிப்பட்டி, தெற்கிளையாத்தக்குடி, அமராவதி, நத்தம், நெல்லை நகர், நேமம், கோட்டூர், மாம்பூண்டி, கொரட்டி, திருப்பத்தூர், நாட்டரசன் கோட்டை என்பனவாகும். இவற்றில் பல நகரத்தார் குலதெய்வமாகக் கொண்டாடும் கருப்பர் உள்ள ஊர்கள், என்பது குறிக்கத்தக்கது. இங்குப் பாடுவார் முத்தப்பர் அறிந்த பல கருப்பர்களைச் சுட்டுகிறார்.

அழகர் மலைப் பதினெட்டாம் படிக்கருப்பன், தல்லா குளத்திற்கு வருவானேன்? அதற்கு முத்தப்பர் அவர் அறிந்த—கேட்ட காரணத்தைக் கூறுகிறார். அழகரின் அன்புத் தங்கை மீனாட்சி, வையை ஆற்றில் மதுரைச் சிவபெருமானை மணந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப் பதினெட்டாம் படிக்கருப்பன் தல்லாகுளத்திற்கு வந்துள்ளான்.

தல்லாகுளம் கருப்பர் இயல்புகளைச் சொல்லி ஆசிரியர் அவனைப் போற்றுகிறார். தொட்டியத்துப் பில்லி சூனியங்களை விரட்டுகின்றவன் என்றும் அன்பர்களை அஞ்சாதே என்று சொல்லிச் செல்வம் ஈபவன் என்றும் பிசாசுகளை அடக்கி ஒடுக்குபவன் என்றும் வள்ளல் போல் ஏழைகளைக் காப்பவன் என்றும் பண்புகளை அகவல் எடுத்தியம்புகின்றது.

இந்தப் பகுதி முழுமையும் அக்காலத்தில் தமிழகத்தி லிருந்த சில சமய நம்பிக்கைகளைக் காட்டுகிறது. பில்லி, சூனியம், ஏவல் வைத்தல் போன்ற சில மாந்திரீகச் செயல்கள் இன்றும் வழக்கில் உள்ளன. ஒருவனை அழிக்கவும் துன்புறுத்தவும் மாய மந்திரங்கள் மூலம் ஏவல் வைப்பர். இந்தக் காரியத்தைச் செய்பவன் மாந்திரீகன்



நத்தம் அரண்மணையின் இன்றைய நிலை

என்றும் மந்திரவாதி என்றும் அழைக்கப் பெறுவான். இத்தகைய ஏவல், பில்லி, சூனியங்களால் தொல்லைப் படுவோர் அழகர் மலை சென்று நீராடி அழகரை வழிபட்டுப் பதினெட்டாம் படிக்கருப்பரை வணங்கினால் ஏவல் பில்லி சூனியம் போன்றவை அழிந்துவிடும். அவற்றால் எந்த விதமான தீமையும் ஏற்படாது. இத்தகைய கருப்பரின் பேராற்றலை,

> '' தொட்டியத்துப் பில்லிதனை சூனியத்து எல்லைகளில்
> கட்டியடிக்கும் கனக்காரன் ... ... '' (65-66)

என்று அகவல் சுட்டும். இதனால்தான் தமிழ் மக்கள் பலர் ஆண்டுதோறும் அழகர் மலைக்குப் போய் வருவதைக் கட்டாயமாகப் பின்பற்றுகின்றனர்.

கருப்பரகவல், கருப்பரின் கேசாதி பாதத்தைப் புனைகின்றது. கருப்பர் கொண்டை போட்டிருக்கிறார். அதில் தாயத்தும் முல்லைச் சரமும் சிவந்த சரிகைத் தலைப்பாகையும் இருந்தன. நெற்றியில் கத்தூரிப் பொட்டு மணக்கிறது. காதில் முத்துக் கடுக்கனும் முருகும் திகழ்கின்றன. மார்பில் சரப்பளி; இடுப்பில் சமுதாடு; அரையிலே தங்க அரைஞாண்; காலில் கொலுசும் பொற் சிலம்பும் திகழ்ந்தன. இத்தகைய அணி பணிகளைப் பூண்ட கருப்பர் கனக விழியும் மணிக் கழுத்தும் தாக்கான வல்லார் புயமும் தாமரைக் கரங்களும் வாய்த்தவர்.

இத்தகைய தோற்றத்துடன் தல்லாகுளம் கருப்பர் பாடுவார் முத்தப்பருக்குக் காட்சியளித்தார். அக்காட்சியைக் கண்குளிரக் கண்டு தன் பழவினையைப் போக்கி ஆசிரியர் நலம் பெற்றார். இதற்குப் பின் நூற்பயனும் வாழ்த்தும் இருக்க நூல் முடிகின்றது.

திருமுக விலாசத்தில் குன்றக்குடிக் குமரன் திருக் காட்சியைக் கண்டு பாடுவார் முத்தப்பர் புனைவர்.[9] அவ்வாறே இங்கும் கருப்பர் காட்சியைக் கண்டு புனை கின்றார். திருமுகவிலாசத்திலும் கருப்பர் அகவலிலும் கடவுளர்பால் ஈடுபட்டு ஆசிரியர் புனைந்துள்ளார். ஈண்டுப் பத்திச்சுவை மேலோங்கி நிற்கிறது. இவ்வகவலின் முதற்கண் அமையும். இயற்கைப் புனைவு, இலக்கிய நயமும் கற்பனைச் சிறப்பும் வாய்ந்தது.

பாடுவார் முத்தப்ப செட்டியார் தன் குலதெய்வமான இராங்கியம் கருப்பரைத் தனி இலக்கியவகை குதிரையடியில் பாடியுள்ளார். குலதெய்வமல்லாத தல்லாகுளம் கருப்பரையும் கருப்பர் அகவலில் பாடியிருக்கிறார். அபிராமிப் பட்டர், திருக்கடவூர் அபிராமியம்மையைப் பாடியது போலப் பாடுவார் முத்தப்பரின் பாடல்கள் அமைந்துள்ளன. அந்த அளவுக்கு ஈடுபட்டுக் கருப்பர் கருணையில் மனம் தோய்ந்து ஆசிரியர் பாடியது குறிப்பிடத் தக்கது.

குளுவநாடகம் :

பாடுவார் முத்தப்பர் நெய்வாசல் திட்டாணிக் கருப்பர் மீது பாடிய இன்னொரு சிற்றிலக்கியம் குளுவநாடகம்.[10] இந்நூல் இதுகாறும் அச்சாகவில்லை. இந்நூலில் வரும் குளுவன் பல்வகையான பறவைகளையும் விலங்குகளையும் பல்வேறு இடங்களில் பிடித்து வந்ததைக் கூறுவான். பாடுவார் முத்தப்பர், குளுவ நாடகத்தில், சிவல்பட்டியை ஒட்டிய பல சிற்றூர்களின் பெயர்களையும் கண்மாய்களின் பெயர்களையும் பறவைகளைப் பிடித்த இடங்களாகக் குறிப்பர். அடுகப்பட்டி, நெய்வாசல், மஞ்சினிப்பட்டி, பாண்டணி போன்ற ஊர்ப் பெயர்களும் கண்மாய்ப் பெயர் களும் குளுவ நாடகத்தில் பயிலுகின்றன.

குளுவநாடகம் என்பது குறவஞ்சி நாடகத்தின் பின் பகுதியை மட்டும் தனியாக்கி உருவான இலக்கியம். செட்டிநாட்டில் பல குளுவ நாடகங்கள் தோன்றியுள்ளன. எனவே இதனையும் செட்டிநாட்டு இலக்கியவகை எனில் பிழையாகாது. குதிரையடியில் கருப்பரைப் பாடியது போலக் குளுவ நாடகத்திலும் ஆசிரியர் கருப்பரையே பாடியிருக்கிறார்.

தனிப் பாடல்கள் :

குதிரையடி, குளுவ நாடகம் என்று சிற்றிலக்கிய வகைகளால் கருப்பரைப் பாடியது போலப் பல தனிப்பாடல்களிலும் பாடுவார் முத்தப்பர் கருப்பரைப் பாடியிருக்கிறார். அவற்றுள் கிடைத்தவை ஒரு திருத்தாண்டகமும் ஆறு விருத்தங்களும்தாம்.

செட்டி நாட்டுக் கருப்பர் வழிபாடு, பதினெட்டாம் படிக் கருப்பர் வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புடையது. அழகர்மலை பதினெட்டாம் படிக்கருப்பர், மலையாளத்திலிருந்து வந்ததாகக் கூறுவர். இதனால் நகரத்தார் வழிபடும் கருப்பரில், மலையாளக் கருப்பர் என்று ஒரு தெய்வத்துக்குப் பெயர் வழங்கும். முத்தப்பர் பாடிய திருத்தாண்டகமும் 'மலையாளத்துரையான்'[11] என்று சுட்டும். நகரத்தார்களும் நாட்டார்களும் 'இராங்கியம் கருப்பர்' என்று அழைப்பர்; ஆனால் 'பெரிய கருப்பண்ண சுவாமி'[12] என்ற பெயரும் இவருக்கு உண்டு.

தளபதிகளின் தலைவன் :

செட்டி நாட்டில், அய்யனாரைத் தலைமைக் கடவுளாகக் கொண்டு பரிவார தெய்வங்கள் அமைந்திருக்கும். அவ்வாறன்றி அங்காளம்மனைத் தலைமைத் தெய்வமாக்கிப் பரிவார தெய்வங்கள் இருப்பதுமுண்டு. வயிரவன்பட்டி அய்யனார் கோயிலிலும் நெய்வாசல்

திட்டாணிக்கருப்பர் கோயிலிலும் அய்யனார் நடுநாயகமாக இருக்கக் கருப்பர் பரிவார தெய்வமாக விளங்குவர். வடக்கிளையாத்தக்குடியிலும் இராங்கியத்திலும் தலைமை பெற்று நடுநாயகமாக விளங்கும் தெய்வம் அங்காள பரமேசுவரி; கருப்பர் பரிவார தெய்வம். இராங்கியம் கருப்பரை

''விண்ணுலகு நிகரகோ புரங்கள்மா டங்கள்
மேன்மைசேர் ஆல யத்துள்
வீற்றிருந் தருள்செல்வி அங்காளி வாசலில்
மேவுதள பதியா திபா'' (பா. எண். 1 அடி 3)

என்று அங்காளம்மனின் தளபதியர்க்கெல்லாம் தலைமைத் தளபதியாகக் கூறுகிறார்.

காக்கும் தெய்வம் — கருப்பர் :

'காலிட்ட தண்டையும்' என்ற பாடல், கருப்பரின் திருஉருவத்தை அடியிலிருந்து முடிவரை (பாதாதிகேசமாக) யாகப் புனைகின்றது. இப்பாடலில் கருப்பர் நெற்றியில் திருநீறும் திருநாமமும் திகழ்வதாக ஆசிரியர் சுட்டுவர்.

கருப்பர், காக்கும் தெய்வம்; அடியார்கள் செல்லுமிடங் களுக்கெல்லாம் துணையாக வந்து காப்பாற்றுபவன்; பேய், பிசாசுகளை ஓட்டிக் கருணை புரிபவன்; ஏவல், பில்லி, சூனியம் போன்ற தீமைகளை அழித்தோட்டுபவன்; இவ்வாறு எல்லாத் தீமைகளில் இருந்தும் அடியார்களைக் காப்பாற்றும் வீரத்திறமுடைய கருப்பன் என்று அவன் இயல்புகளைப் பாடுவார் முத்தப்பர் சொல்லிப் பாராட்டுவர்.

''நீவழித் துணையாக வரவேணும்''[18]

''சென்றிடு வழிக்கெலாம் மாறாது துணையான
சேவகனு மாக வருவாய்''[19]

என்ற இப்பகுதிகள் கருப்பர் தனக்குத் துணை வரவேண்டும் என்பதைக் காட்டுவன. இவ்வாறு பாடுவார் முத்தப்புருக்குக் கருப்பர் துணைவந்த நிகழ்ச்சியுமுண்டு.[15]

அழகர் மலைப் பதினெட்டாம் படிக்கருப்பர் ஏவல் பில்லி சூனியங்களைப் போக்கி அடியார்க்கு அருள் புரிபவர்; ஆதலின் எல்லா இடங்களிலும் விளங்கும் கருப்பரும் இவ்வன்மையுடையவர் என்பது தெளிவு. 'மடுவான பூதப் பிசாசுகள் உருட்டாது'' என்றும் ''பில்லிசூ னியம்ஏவல் வஞ்சனை சூதொன்றும் வந்திடாது'' என்றும் 'துண்ணெனத் தலைசுத்தி ஆட்டிப் பிசாசை நிர்த் தூளிசெய் தேசித் தியாய்ச் சொல்லரிய முப்பூசை வாங்கும்...'[16] என்றும் தீய சக்திகளைப் போக்கிப் கருப்பர் காப்பார் என்றும் இந்தத் தனிப் பாடல்கள் உணர்த்துகின்றன.

வேண்டுவன :

கருப்பரிடம் தனக்கு வேண்டுவன இன்ன இன்ன என்று பாடுவார் முத்தப்பர் இந்தப் பாடல்களில் வேண்டுகிறார். அவ்வேண்டுகோளில் 'தீயரைப் பாடாமல் நின் சரணம் மீதினில் செந்தமிழ் பாடவேணும்'[17] என்பது குறிக்கத் தக்கது. தான் பாடும் பாடல்களைக் கருப்பர் கேட்டு மகிழ்வதாகப் பாடுவார் முத்தப்பர் சுட்டுவர்.[18]

குலதெய்வம் போற்றல் :

ஒரு பாடலில் ஆசிரியர், இராங்கியம் கருப்பர் தனது குலதெய்வம் என்பதை மிக நயம்பட

''அடியடியின் வாழைபோல் எனதுகுல கோத்திரம்
அத்தனையும் அடிமை கொண்டு
ஆதரித் திடுகின்ற எனதுகுல தெய்வமே''
(பா எண் 4. அடி. 1)

எனப்பாடுவர். தலைமுறை தலைமுறையாகக் குலதெய்வ வழிபாடு நகரத்தார்களிடம் தொடர்ந்து வருகின்றது. புறத்

திணையில் 'குடிநிலை'[19] என்று கூறுவது போன்றும். பெரியாழ்வார் 'ஏழாட்காலும்[20] உன் அடியார்கள்' என்று கூறுவது போன்றும், தான் கருப்பரை வழிபடுவது வழிவழி வருவது என்று முத்தப்பர் உணர்த்துகின்றார். கருப்பரின் பழவடியார் தான் என்று உறவு பாராட்டுகிறார், ஆசிரியர்.

நகரத்தார்கள் ஒவ்வோராண்டும் தைமாதம் பிறந்ததும் தங்கள் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று வழிபடுவர். அன்றித் திருமணம் முடிந்த பின்பும், மகனுக்குப் பிள்ளை பிறந்து பெயரிடும்போதும், பிறவாறு வேண்டும் போதும், குல தெய்வத்தின் கோயிலுக்குச் செல்வர். அவ்வாறு அடிக்கடி பாடுவார் முத்தப்பர் சென்றிருக்கிறார். மிதிலைப்பட்டிக் கவிராயர்களொடு தொடர்புடைய முத்தப்பர், இராங்கியத்தைக் கடந்து தான் சென்றிருக்க வேண்டும். இவற்றால் இராங்கியம் கருப்பர் கோயிலொடு பாடுவார் முத்தப்பருக்கு நெருக்கமான தொடர்புண்மை தெரியவருகிறது.

பூசாரியின் சிறப்பு :

பாடுவார் முத்தப்பர் காலத்தில் இராங்கியம் கருப்பர் கோயில் பூசாரியாக விளங்கியவர், வீரப்பன். இவர் சிவபதவி அடைந்தபோது ஆசிரியர் கையறுநிலையாகப் பாக்கள் இயற்றியுள்ளார். குதிரையடியில் 'பூசாரி தோத்திரம் வீரப்பன் மரபினர்'[21] என்பர். இதனால் குதிரையடி, வீரப்பன் மறைவுக்குப் பின் பாடியது என்பது புலனாம். பூசாரி வீரப்பன், முத்தப்பர்க்கு நெருங்கிய நண்பராகவும் வழிகாட்டியாகவும் விளங்கியவர் அதனால்தான், அவர் மீது கையறுநிலை பாடியுள்ளார். அதில் பூசாரி வீரப்பனை 'வீரப்பேந்திரன்' என்பர். பூசாரி பெயருடன் இந்திரன் என்ற பெயரை இணைத்துள்ளதை, இவர் பால் பாடுவார் காட்டும் மதிப்பையும் மரியாதையையும் அன்பையும் வெளிப்படுத்தும்.

கையறுநிலைப் பாக்களில், பூசாரி வீரப்பன் பாடுவார் முத்தப்பரின் தமிழைக் கேட்பதில் ஆர்வமுடையவராகத் திகழ்ந்ததைக் 'கவிகேட்ட இருசெவியும் எப்பக் காண்பேன்'[22] என்று வருந்துவர். ஆத்திரமும் சிற்றமும் உடைய முத்தப்பரை அடக்கி அமைதி யூட்டுவதில் பூசாரி வீரப்பன் ஈடுபட்டிருக்கிறார். அதனை எதிர் மறையாகப் 'பாடிஆடி—வாக்கினால் கற்றவரை மறுத்துவா என்ற தில்லை'[23] என்பர்.

கையறுநிலைப் பாடல்களில், பூசாரி வீரப்பனுடைய எழிலார்ந்த தோற்றத்தையும் ஈடும் எடுப்பும் அற்ற உருவச் சிறப்புகளையும் அவலந் தோன்ற ஆசிரியர் சொல்லி வருந்துகின்றார். தெய்வ அருளும் திறமையுமுடைய பூசாரிகளின் காலத்தில்தான் கோயிலுக்குப் பொருள் வருவாயும் சொத்தும் புகழ்ச்சியும் சேரும். அத்தகைய சீரிய பூசாரியாக வீரப்பன் விளங்கினார்.

பாடுவார் முத்தப்பர் தம் குலதெய்வமான கருப்பர் மீது பேரீடுபாடு கொண்டு பல பாடல்களைப் பாடியுள்ளார். அவரியற்றிய குதிரையடியும் திட்டாணிக் கருப்பர் குளுவ நாடகமும் தனி இலக்கிய வகைகளாகிச் சிறப்புடன் விளங்குகின்றன.

அடிக்குறிப்பு

1. வேலங்குடிக் கருப்பர், அழகர்மலைப் பதினெட்டாம் படிக் கருப்பரைக் கட்டிக் கொண்டு வந்தது என்றும் அந்த மந்திரவாதி ஊருணிக் கரையில் வைக்கக் கருப்பர் அப்படியே இருந்துவிட்டார் என்றும் கூறுகின்றனர். இதனால் வேலங்குடிக் கருப்பர் சாமியாடி அழகர்மலை போவதில்லை.
2. (1898) இராசி சிங்கம் கருப்பண்ணசுவாமி பேரில் குதிரையடி. ப.3.
3. அருணகிரிநாதர் (1974) — மயில்விருத்தம். பா. எண் 1. அடி 4, மதுரை, ஜெ.மு. சாமி.

4. மேலது பா. எண் 9. அடி 4.
5. தெ.கி.தெ. தேனப்ப செட்டியாரை இரங்கோன் சீனப் பிசாசிடம் இருந்து காப்பாற்றியதால், அவர்கள் பொதுக் குடும்பத்திலிருந்து வயிரவன்பட்டி மக்கமடை அய்யனார் கோயிலில் சேமங் குதிரை கட்டியிருக்கின்றனர்.
6. அருணகிரிநாதர் (1974) — திருப்புகழ், பா. எண் 628, அடி 2
7. (1959) — கொரட்டிக் கருப்பர் வழிபாட்டு நூல் சா.நா.அ. அழ.அ. அழகப்ப செட்டியார் சாந்தி வெளியீடு.
8. ஷ்டி பக். 16-18
9. நடராசன். நா. (1951) — திருமுகவிலாசமும் முருகன் தோத்திரமும். கண்ணிகள் 74-79.
10. இது நெய்வாசல் திட்டாணிக்கருப்பர் குளுவநாடகம் எனப்படும். இன்னும் அச்சாகவில்லை. இந்நூலின் ஏட்டுப் பிரதி கண்டவிராயன்பட்டியில் உள்ளது.
11. நாராயணன் செட்டியார் (1955) — முத்தப்பர் நூல் ப.
12. அழைப்பிதழ், பாடல்கள் ஆகியவற்றில் இவ்வாறே குறிக்கின்றனர். ஆனால் வழக்கில் 'கருப்பர்' என்று வழங்குகிறது.
13. தெட்சிணாமூர்த்தி உ. (1981) — சு.செ.சேவு. மெய்யப்ப செட்டியார் மணிவிழா வெளியீடு பக் 171-174.
14. ஷ்டி (1981) — ஷ்டி ப. 106
15. தெட்சிணாமூர்த்தி 2. (1981) — ஷ்டி ப. 106
16. மேலது.
17. மேலது
18. மேலது.
19. வெள்ளைவாரணன். க. (1983) — புறத்திணையியல் — உரைவளம். நூற்பா எண். 4
20. அண்ணங்கராசாரியர் (1962) — திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும் பா. எண் 2
21. தெட்சிணாமூர்த்தி. அ. (1981) — சு. செ. சேவு. மெய்யப்ப செட்டியார் மணிவிழா வெளியீடு ப. 124
22. மேலது. ப. 120
23. மேலது. ப. 120

பெண் தெய்வப்பாக்கள்

கிரணிப்பட்டி முத்துமாரியம்மன், நெடுமரம் மலையரசி கொன்னையூர் மாரியம்மன், பாகனேரி புல்வாய் நாயகியம்மன், உச்சினி மாகாளியம்மன் ஆகிய பெண்தெய்வங்களைப் பாடுவார் முத்தப்பர் பாடியுள்ளார். கிரணிப்பட்டி முத்துமாரியம்மனைப் பாடிய பாடல்கள் துதியாகப் பாடப் பட்டவை. ஏனைய கடவுளரைப் பாடியவை யெல்லாம் ஏதேனும் வேண்டுகோள் அமையப் பாடபட்டவை. உச்சினிமாகாளியைத் தவிர ஏனைய தெய்வங்கள் எல்லாம் செட்டிநாட்டில் உள்ளவை.

கீரணிப்பட்டி முத்துமாரி :

கிரணிப்பட்டி முத்துமாரியம்மனைப் பத்துப் பாடல்களால் ஆன பதிகத்தால் பாடுவார் முத்தப்பர் பாடியுள்ளார்.[1] முத்து மாரியம்மன், கல்வாச நாட்டின் தலைமைத் தெய்வமெனத் திகழ்வது. இவ்வம்மனைக் கிரணியம்மன் என்றும் முத்துமாரியம்மன் என்றும் மக்கள் வழங்குவர். கிரணிப்பட்டி முத்துமாரியம்மன் கோயில், நகரக் கோயிலான இளையாத்தக்குடிக் கோயிலுக்குக் கட்டுப் பட்டது. தொன்று தொட்டு இளையாத்தக்குடிக் கோயில் நிர்வாகத்தில் அடங்கியது.

கீரணிப்பட்டி முத்துமாரியம்மனை நகரத்தார்கள் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து கொண்டு வந்தார்கள். இதனைக்

“காவிரிப் பூம்பட் டினத்தில் இருந்தொரு
காவலன் மாறனழைத்துவர
பூவிரிப் புலன்மிகும் பாண்டிய நாட்டினிற்
பொங்கத்துடன் வந்தமர்ந்தாளே”[2]

என்று சீ (கீ) ரணியம்மன் கும்மிப்பாடல் தெரிவிக்கின்றது. நகரத்தார்கள் வாழ்ந்த தொண்ணூற்றாறு ஊரில் கீரணிப் பட்டியும் ஒன்றாகும்.

முத்தப்பர் குடும்பத்தார் போற்றி வழிபட்ட தெய்வம் கீரணிப்பட்டி முத்துமாரியம்மன். இவ்வம்மனைப் பாடிய எல்லாப் பாடல்களிலும் ‘வாரிதிதிகழ் புவியிலுயர் கிரணிநன் னகரில்வளர் மாரிமக மாயிஉமையே’[3] என்பதே மகுடமாகக் காணப்படுகிறது. இவ்வம்மையை ‘மாரி’ என்றும் ‘மகமாயி’ என்றும் ‘உமை’ என்றும் ஆசிரியர் போற்று கின்றார்; வேறு பெயர்களால் சுட்டவில்லை. அம்மையை இறைவன் ஒரு பாகம் கொண்ட அன்னை உமையவளாகக் கருதிப் பல்வேறு புராணக் கதைகளைச் சொல்லிக் கீரணி யம்மனைப் போற்றுகிறார். அம்மையிடம் தனக்கு வேண்டு வனவாகப் பலவற்றை இப்புலவர் சொல்லுகிறார். அம்மையைப் புகழும் புகழ்ச்சிப் பாடல்களாக இந்தப் பதிகம் திகழ்கிறது.

உச்சினிமா காளியம்மன் கும்மியில் காப்புச் சொல்லும் போது ‘வையகம் போற்றிய கீரணியூர் முத்து மாரியம்மாளை மறவேனே’[4] என்பர். ஆசிரியர் கீரணிப்பட்டி முத்துமாரி யம்மனிடம் தனி ஈடுபாடுள்ளவர். இவர் தனக்கு ஏற்பட்ட நோய் தீரவே இம்வம்மனைப் பாடினார் என்பர். இதற்குப் போதிய சான்றுகள் பாடலில் இல்லை.[5]

நெடுமரம் மலையரசி :

சிவப்பட்டி - திருப்புத்தூர் நெடுஞ்சாலையில், சிறுகூடல் பட்டி தாண்டியதும் உள்ள ஊர் நெடுமரம். இதனை 'நெடுமறம்' என்றும் கூறுவர். இவ்வூரில், பழமையான சிவன் கோயில் ஒன்று உளது. நலிவடைந்த பிரிவினர் மிகுதியாக வாழும் நெடுமரத்தின் ஊர்த் தெய்வம் மலையரசியம்மன். இந்த அம்மனை எல்லா இனத்தவர்களும் வணங்கிக் கொண்டாடுவர்; அருள்பாலிப்பதில் அம்மை பேரருள் உடையவள்.

பாடுவார் முத்தப்பர் வாழ்ந்த காலம், மழைபெய்யாது வறண்டு போன காலம்; முத்தப்பர், பல தெய்வங்களைப் பல சமயங்களில் மழை வேண்டிப் பாடியிருக்கிறார். பாடுவார் முத்தப்பர் அந்தந்த வட்டாரத்துக்குப் போகும் போது அங்குள்ள மக்கள் வேண்ட இவர் அங்குள்ள தெய்வங்களை மழை வேண்டிப் பாடினார். நெடுமரம் மலையரசி யம்மனையும் கொன்னையூர் மாரியம்மனையும் மழை வேண்டிப் பாடியபாக்கள் கிடைத்திருக்கின்றன.

நெடுமரம் மலையரசியம்மனைச் சக்தியாகப் போற்றியே ஆசிரியர் பாடுவர். அப்பாட்டில் ஓராண்டு காலம் மழையில்லை என்றும் இடையே சிறிது தூறவே இருந்த விதையையும் விதைத்து விட்டிருக்கின்றோம் என்றும் வருணனை அழைத்து மழைபெய்ய உத்தரவிட வேண்டும் என்றும் பட்டத்து மலையரசியை முத்தப்பர் வேண்டுகிறார்.

பாடுவார் முத்தப்பர் மகன், பொய் வழக்கொன்றில் சிறைவைக்கப்பட்ட பொழுது அவனை விடுவித்துதவுமாறு இவ்வம்மையைப் பாடியுள்ளார்.[6] இது பற்றிய தெளிவான விவரங்கள் தெரிந்தில. இந்தப் பாடலில் சொல்லுவன வற்றை உறுதி செய்ய வேறு ஆதாரங்கள் இல்லை.

கொன்னையூர் மாரி :

கொன்னையூர் முத்துமாரியம்மனையும் பாடுவார் முத்தப்பர் மழை வேண்டிப் பாடியிருக்கிறார்.[7] இவர் கொன்னையூர்க்குச் சென்றபோது இந்தப் பாட்டைப் பாடி யிருக்க வேண்டும். இவர் பாடினால் மழை பெய்யும் என்பதையறிந்து அன்பர்கள் வேண்ட அம்மையைப் பாடி யிருக்கிறார். கீரணிப்பட்டி முத்துமாரியம்மனைப் போலக் கொன்னையூர் மாரியம்மனும் செட்டி நாட்டில் வாழும் நாட்டார்களாலும் நகரத்தார்களாலும் போற்றப்பெறும் தெய்வமாகும்.

பாகனேரி புல்வாய் நாயகி :

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைத் தோற்று வித்தவர்களில் ஒருவரான திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியார் பிறந்த ஊர் பாகனேரி. செட்டிநாட்டு ஊர்களில் இஃதொன்று. பாகனேரி ஊராருக்கும் சிவகெங்கை சமஸ்தானத்திற்கும் எல்லைத் தகராறு ஏற்பட்டது. ஓராண்டு காலம் வழக்கு நடைபெற்றது; ஒன்பதாயிரம் ரூபாய் செலவாயிற்று. ஆயினும் வழக்கு முடியவில்லை.

அவ்வூர் மக்கள் வேண்டுகோளுக்கு இணங்கப் பாகனேரி புல்வாய் நாயகியம்மனை வழக்கில் வெற்றி தருமாறு முத்தப்பர் பாடினார். அவர் வேண்டுகோள் பலித்தது. பாகனேரிக்கு வழக்கு வெற்றியாய் விளைந்தது. இதற்கு நன்றி பாராட்டு முகமாகப் பாகனேரி மக்கள் பாவலர்க்குப் பொங்கற்பானை கொடுத்து வந்தனர்.

இப்பாடல்களில், 'தென்பாக நாடு'[8] என்றும் 'ஆறூரு நாடு'[9] என்றும் நாட்டுப் பிரிவை ஆசிரியர் சுட்டுகிறார். அம்மையைப்பற்றி வேறு செய்திகளோ குறிப்புகளோ பாடல்களில் கிடையாது.

முத்தப்பர் அம்மையைப் பாடியவற்றுள் உச்சினிமா காளியம்மனைப் பாடியது தனித்தன்மை வாய்ந்தது. இது மக்களின் பொது நலத்தினைக் கருதிப் பாடியது.

உச்சினி மாகாளி :

உச்சினி மாகாளியம்மன் கும்மி, பாடுவார் முத்தப்பர் இயற்றிய நாட்டுப் பாடல் இலக்கியம். இக்கும்மியின் இறுதியில் ஆசிரியர்

''அத்தனியம்பிகை மாமலையத்துவசன்
அருளும்ராசகு மாரிமின்னாள்
முக்கனியுச்சனி மாகாளிமேற் செட்டி
முத்தய்யன்சொல் தமிழ் வாழியவே'' (90)

என்று பாடியிருக்கிறார். சக்தி வடிவான மாகாளி அம்பிகையைப் போற்றிக் கொள்ளை நோய் வராமல் பாடுவதால் இதற்கு உச்சினி மாகாளியம்மன் கும்மி என்ற பெயராயிற்று. உச்சினி மாகாளியைப் பற்றிய கும்மி என்றும் விரியும்.

ஆசிரியர், காளியைத்தான் கும்மியில் பாடுகின்றார். ஆனாலும் விக்கிரமாதித்தன் வழிபட்ட உஜ்ஜையினி மாகாளி மிகச் சிறந்த தெய்வம். இக்காளி விக்கிரமாதித்தனுக்கு ஆயிரமாண்டுகள் வயது கொடுத்தாள். இக்காளியின் அருளாலேயே அம்மன்னன் சிறப்புற்றாள். எல்லாக் கொடிய நோய்களும் உச்சினி மாகாளியால் ஏற்படுவதாக மக்கள் நம்பினர். அதனால்தான் முத்தப்பர் உச்சினிமாகாளியைக் கும்மிப் பாடலில் போற்றுகிறார்.

பாடல் பிறந்த கதை :

உச்சினிமாகாளியம்மன் கும்மியைப் பாடுவார் முத்தப்பர் பாடிய காரணம் என்ன என்று அவர் வெளிப்படக் கூறவில்லை. அக்கும்மியை ஆராய்ந்தால் அவர் பாடியதன்

நோக்கம் தெளிவாகப் புலனாகும். பாடுவார் முத்தப்பர் வாழ்ந்த காலத்தில் செட்டிநாட்டில் வற்கடம் (பஞ்சம்) ஏற்பட்டிருக்கிறது. அஃது எந்த ஆண்டு ஏற்பட்டது? என்றோ எந்தப் பகுதியில் ஏற்பட்டது? என்றோ தெளிவாகத் தெரியவில்லை. உச்சினிமாகாளியம்மன் கும்மி யிலும் வற்கடம் பற்றிய குறிப்புண்டு.[10]

இத்தகைய கொடுங்காலத்தில் இளையாத்தக்குடி, ஆவினிப்பட்டி, இராங்கியம், துலையானூர், கீரணிப்பட்டி, உள்ளடங்கிய பகுதியில் கொள்ளைநோய் (cholera) தோன்றியது.[11] இந்நோய், கட்டுப்படுத்த முடியாததாய் மக்களின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாய் விளங்கிற்று. எனவே அதனைக் கட்டுப்படுத்த—மக்களின் உயிரைக் காப்பாற்ற ஆசிரியர் இக்கும்மியை இயற்றியிருக்கிறார்.

இஃது உண்மை; நடந்த வரலாறு என்றுரைக்குமாறு இக்கும்மியின் இறுதியில், முத்தப்பர்

"பார்வதியாளுல கத்தில் நடத்திய
பாங்குகள் தானொரு பாட்டாச்சே" (85)

என்று பாடிப் போந்தார். காளியம்மன் நாட்டில் நடத்திய வற்றையே தான் பாட்டாகப் படம் பிடித்ததாக ஆசிரியர் இயம்புவது குறிக்கொள்ளத்தக்கது. ஆதலின் பாடுவார் முத்தப்பர், உலகில் நடந்த நிகழ்ச்சிகளையே பாடியுள்ளார்.

சொற்பலிதமுடைய பாடுவார் முத்தப்பரின் வாக்குப் பலிக்கும் என்பதை உணர்ந்த மக்கள், கொள்ளைநோய் (Cholera) பரவாமல் தடுக்கப் புலவர் பெருமானை வேண்டினர். அவரும் அதனையேற்று, உச்சினி மாகாளியம்மன் தமிழ் நாட்டு ஊர்களையெல்லாம் விடுத்து அவளின் இருப்பிடமான உச்சையினிக்கே போவதாகக்

கற்பனை செய்து கும்மியைப் பாடினார். இதன் கருத்தே, கொள்ளை நோய் நாட்டை விட்டுப் போகவேண்டும் என்பதுதான்.

அம்மைநோய் பார்த்திருக்கும் போது, அந்நோயின் கொடுமையைத் தவிர்க்க மாரியம்மன் தாலாட்டு என்ற நூலை மக்கள் பாடுவர். அது போலக் கொள்ளை நோயின் கொடுமையைப் போக்க உச்சினிமாகாளியம்மன் கும்மி என்ற சிற்றிலக்கியத்தைப் பாடுவார் முத்தப்பர் பாடியிருக்கிறார். இதனை எளிய தமிழில் இனிமையாகக் கல்லா மக்களுக்கு என முத்தப்பர் இயற்றித் தந்தார்.

கும்மி—அமைப்பு :

உச்சினிமாகாளியம்மன் கும்மியை இரண்டு பகுதியாக வகுத்துப் பாடுவார் முத்தப்பர் ஆக்கியுள்ளார். முற்பகுதி கடவுள் வாழ்த்து, விக்கிரமாதித்தன் வரலாறு ஆகியன பற்றிக் கூறுவதாகும். விக்கிரமாதித்தன் உச்சினிமாகாளியின் அன்புக்கு உகந்த அடியவன். அவன் வரலாற்றைப் பாடுவார் முத்தப்பர், செயங்கொண்டார் சதகத்தில், 'மந்திரங்கால் மதிமுக்கால்'[12] என்னும் பழமொழியை விளக்கப்பாடுவர். விக்கிரமாதித்தன் காளியை வழிபட்டுத் தன்னாட்டை இரண்டாயிரம் ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

கும்மியின் இரண்டாம் பகுதி, கும்மி ஆசிரியர் கால நடப்புகளை விளக்குவதாகும். இதில் கலிகாலக் கொடுமையும் அதனால் கொள்ளை நோயைக் காளி நாட்டில் பரவவிட்டதும் அதனைப் போக்க மக்கள் மேற்கொண்ட வழிபாடுகளும் இடம் பெறுகின்றன. முத்தப்பர் கும்மியை என்றும் துதிநூலாகப் படிக்குமாறு இவ்விரண்டு பகுதியையும் இணைத்துப் பாடியுள்ளார்.

இக்கும்மியின் முதற்கண் விநாயகர் காப்பு உள்ளது அவ் விநாயகரின் பெயர் ‘கரிமுகவன்’ என்பர் ஆசிரியர். இது வெண்பா யாப்பில் அமைந்தது. இவ் விநாயகர் எங்குள்ளவர் என்பது தெரியவில்லை.

உச்சினிமாகாளியம்மன் கும்மியில், தொண்ணூறு கண்ணிகள் உள்ளன. முதல் பதினொன்றில், பல்வேறு ஊர் களில் உள்ள தெய்வங்களைக் காப்பாக்கியிருக்கிறார். அடுத்துக் கும்மியடிக்கப் பெண்களை அழைத்தலும் விக்கிர மாதித்தன் வரலாறு கூறுதலும் (12-20) இடம் பெறுகின்றன. பின் உச்சினிமாகாளியின் ஆற்றலும் திருவிளையாடலும் விக்கிரமாதித்தனைச் சாலிவாகனன் வென்று ஆட்சி செய்தலும் (21-32) கூறப் பெறுகின்றது. இதுவரை உள்ள பகுதி முதற்பகுதியாம். இதன் கண் காளியின் பழமைச் சிறப்பும் வரலாறும் கூறப்பட்டுள்ளன.

கும்மியின் பிற்பகுதி, பாடுவார் முத்தப்பர் காலத்திய நடப்பு வரலாற்றைப் பேசுகிறது. ஆங்கிலக் கம்பெனியார் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் நடந்தது என்று ஆசிரியர் கூறத்தொடங்குகிறார். தொடர்ந்து கலி காலத்தின் கொடுமையையும் பொருள்களின் விலை ஏற்றத்தையும் ஆசிரியர் விவரிக்கிறார். அறம் பிழைத்துப் பாவம் பெருகிய மையால் உச்சினிமாகாளியம்மன் உலகத்தின்மீது கொள்ளை நோயை ஏவி விட்டாள். (33-45) நோய் நாடெங்கும் பரவிப் பலர் உயிரை உண்டது. (46-55)

இக்கொடிய நோயைப் போக்கச்செய்தவற்றை ஆசிரியர் அடுத்து (56-82) முறைப்படுத்திக் கூறுவர். கொள்ளை நோயினை (Cholera)விளக்கிப் பத்திரிக்கைகள்வந்தன. வீர வசந்தராயர்போந்தார்.அவர் காளியம்மனைப் பூரண கும்பம் வைத்து வரவேற்றுக் கிராம தெய்வங்களுக்குப் பொங்கலிட்டு அறங்கள் செய்யுமாறு வேண்டினார். இவ்வாறு காளியைப்

போற்றியதால், அவள் தன்னிருப்பிடம் போகக் கருதிப் புறப் பட்டாள். அவள் தன் கோயில் போய்ச் சேர்ந்து வானவர் இந்திரன் போற்ற வீற்றிருந்தாள்.

இத்தகைய காளியின் சிறப்பைச் சொல்லிக் கும்மி கொட்டுங்கள் என்று சொல்லிக் கும்மி வாழ்த்துடன் முடி கின்றது.

கிராமத்து வழிபாடு :

ஊர்களிலுள்ள கிராமத்து மக்கள் வேறு எந்த நோய்க்கும் அஞ்சமாட்டார்கள். கொள்ளை நோய் எனும் பேதி (Cholera), அம்மை இரண்டும் ஊர்க்குள் புகுந்து விட்டால், எவ்வாறேனும் மக்கள் அதனை அனுப்ப முயல்வர். இவ்விரு நோய்களும் காளியின் சிற்றத்தால் வருவன என்று நம்புவர். அதனால் தான் கோடை காலத்தில் காளி போன்ற தெய்வங் களுக்குப் பால்குடம் எடுத்தல், சந்தனக் காப்பிடுதல், பூச் சொரிதல் போன்ற குளிர்ச்சிதரும் திருவிழாக்களை நடத்துவர்.

நாட்டில் கொள்ளைநோய் பரவியதும் மக்களனைவரும் கிராம தெய்வங்களை வழிபடலாயினர் என்பர், முத்தப்பர். தெய்வங்களுக்குப் பொங்கல் வைத்துக் கொட்டுமுழக்குடன் கொண்டாடினர். மக்களனைவரும் சோமவார விரதம் மேற் கொண்டனர். அந்தந்த ஊர் மக்கள் தங்கள் கிராம தெய்வங் களுக்கு அன்புடன் பூசை திருமஞ்சனம் ஆகியன செய்து வணங்கினர்.

நித்திய பூசை நடைபெறாத கோயில் எல்லாம் புதுப் பிக்கப் பெற்றுப் பொங்கலிடப்பட்டன. மக்களுக்குப் போக்க முடியாத தொல்லை வரும்போதுதான், தெய்வங்களைப் பற்றியும் கோயிலைப் பற்றியும் நினைவு தோன்றும். கொள்ளை நோய் அச்சுறுத்தவே

''எண்ணையறியாத தெய்வமெலாமினி
எங்குங் கருத்தது மங்குலைப் போல்
கொண்ணைப்பூக் காணாத தெய்வமெல்லாம் நறும்
வண்ணமலர்கள் முடித்ததுவாம்'' (74)

என்பர், ஆசிரியர். இவ்வாறு முத்தப்பர் அக்காலத்தில் தெய்வங்களைப் போற்றிய பான்மையை விவரிப்பர்.

தெய்வமாடும் பூமாந்தர் :

சிற்றூர்களில் நிகழும் வழிபாட்டில் ஓரின்றியமையாத கூறு, சாமியாட்டம். கிராம தெய்வங்களுக்கும் அதற்குக் கட்டுப்பட்ட பரிவார தெய்வங்களுக்கும் தான் சாமியாடிகள் இருப்பர். சிவன் கோயில்களில் சாமியாடிகளோ சாமி யாட்டங்களோ இருப்பதில்லை. சிறுதெய்வ வழிபாட்டில், ஆவேசம் வந்தாடுகின்ற சாமியாட்டம் தலையாய பகுதி.

ஒரு கிராமத்தில் உள்ள தெய்வங்களுக்கேற்பச் சாமி யாடிகள் இருப்பர்; எந்தச் சாதியார் பூசாரியாக இருக்கின்றனரோ அவர்களே சாமியாடியாகவும் இருப்பர். ஒரு கிராமத்தில் எல்லாச் சாதியாரினும் சாமியாடிகள் உண்டு. இவர்கள் வழி வழியாகச் சாமியாடி வருவர். ஆண் தெய்வமாயின் ஆண் உடைகளும் பெண் தெய்வமாயின் பெண் உடைகளும் அணிகலன்களும் பூண்டு சாமியாட்டம் நடைபெறும். கிராமத்தில், சாமியாடிகளுக்குத் தனிமதிப்பும் மரியாதையும் உண்டு. இவர்கள் கோடாங்கி பார்த்துக் குறியும் சொல்லுவர்.

கிராமத்தில் மழைபெய்யவில்லை என்றாலும் கொடிய நோய்கள் பரவினாலும் பில்லி சூனியம் பிசாசுத் தொல்லைகள் ஏற்பட்டாலும் சாமி அழைத்து ஊரார் கேட்பர். கிராம தெய்வம் சாமியாடிமேல் நின்று கேட்ட கேள்விக் கெல்லாம் விடையளிக்கும். பேதி என்னும்

கொள்ளை நோய் வந்த போது மக்கள் ஒருங்கு கூடிச் சாமியழைத்துக் கேட்டனர். அதனை

''ஆருமேலாவேசம் வந்தாலுமந்த
ஊருச்சனங்கள்வ ளைத்துக்கொண்டு
காருமம்மாவென்று சொல்லியேதிரு
நீறுகள்வாங்கித் தரிப்பராம்'' (76)

என்று பாடுவார் முத்தப்பர் பாடுவார். சாமியாடுகின்ற இடத்தில் பலருக்கும் ஆவேசம் வரும். கொள்ளை நோயால் பிடிக்கப்பட்ட மக்கள் தங்கள் துயர்தீர அனைவரையும் வணங்கித் திருநீறு பெற்றுக்கொண்டனர்.

தெய்வமாடும் பூ மாந்தர்க்குப் பானகம், மோர், இளநீர் தண்ணீர், பால் ஆகியனற்றை அருந்தக் கொடுத்தனர். பாக்கு வெத்திலையும் வழங்கினர். இவ்வாறு அன்பாய் வழங்கிக் காளியின் சினத்தைப் போக்க முயன்றனர். இன்றும் சாமியாட்டம் நடக்கும் கிராமங்களில் இத்தகைய நிகழ்ச்சி களைக் காணமுடியும்.

வழியனுப்பல் :

பெரியம்மை, கொள்ளைநோய் போன்றவை பரவுகின்ற காலத்தில், இக்கொடிய நோய்களைக் கிராம தெய்வங்களின் துணையுடனே ஊர் எல்லை வரை அழைத்துச் சென்று வேற்றூர்க்குத் துரத்திவிடுவர். இங்ஙனம் செய்யும் ஒரு சடங்கு நிகழ்ச்சி கிராமங்களில் உண்டு[15]. அது மாதிரிக் கொள்ளை நோயின் தெய்வமான காளிக்கு மக்கள் வேண்டு வனவெல்லாம் வழங்கிக் 'கொட்டியதப்புட னேயடுத்தூ ரினில் கூட்டிக்கொண்டு விட்டு மீள்வார்'[14]. இன்று மருத்துவக் கண்டுபிடிப்புகளால், கொள்ளை நோயும் அம்மை நோயும் நாட்டிலில்லை. அவை மிகுதியாக இருந்த நாளில், மருத்துவ உதவி கிட்டாத மக்கள் தெய்வங்களே இதற்குக்

காரணம் என்று நம்பி அவற்றைப் போற்றினர். எல்லா மக்களும் வழியனுப்பவே உச்சினிமாகாளியம்மன் தன் வாழ்விடமே போய்ச் சேர்ந்தாள். வானவரும் இந்திரனும் போற்றக் காளி உச்சினியில் வீற்றிருந்தாள்.

உச்சினிமா காளியம்மன் கும்மி, செட்டிநாட்டு வட்டாரத்திலுள்ள நாட்டுப்புற மக்களின் சமய வழி பாட்டையும் நம்பிக்கையையும் காட்டுகிறது. சைவ சமயம் உணர்த்தும் ஆகம வழிபாட்டு முறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட வழிபாட்டைக் கும்மியில் காண்கின்றோம். இந்த வழிபாட்டின் எச்சங்கள் முத்தப்பர் குறிக்கும் சில ஊர்களில் காணமுடியும்.

அடிக்குறிப்பு

1. இந்தப் பத்துப்பாக்களையும் 'தேவி தோத்திரம் என்ற பெயரில் இளவரசன் நா. நடராசன் அவர்கள் அச்சிட்டுள்ளார்.
2. பெருமாள் ஏ.என். (1985)—கும்மிப்பாடல்கள் சீரணி முத்துமாரியம்மன் கும்மி. கண்ணி 59.
3. நடராசன் நா. & நாகப்பன். ராம (பதி)—ஜெயங் கொண்டார் சதகமும் தேவி தோத்திரமும் பா. எண்கள் 1.10
4. — உச்சினிமாகாளியம்மன் கும்மி. கண்ணி 3.
5. இது பற்றி 'வாழ்வியல்' என்ற பகுதியில் விளக்கி யுள்ளோம்.
6. தெட்சிணாமூர்த்தி உ. (1981)— சு. செ. சேவு. மெய்யப்ப செட்டியார் உமையாள் ஆச்சி மணிவிழா மலர் பக் 115-116
7. ஷை ப. 99
8. அண்ணாமலை. பழ. (1986)—செட்டிநாடு ஊரும் பேரும் பக். 77-78

9. ஷ ப.
10. தெட்சிணாமூர்த்தி. உ. (1981)—மணிவிழா மலர் ப. 179
11. இங்குச் சொல்லப்பட்ட ஊர்களிலுள்ள தெய்வங்களையே ஆசிரியர் காப்பில் குறிக்கின்றார். எனவே இந்தப்பகுதியில் பேதி நோய் இருந்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.
12. காசிவிசுவநாதன் செட்டியார். வெ.பெரி. பழ. மு. —செயங்கொண்டார் சதகமும் திருமுகவிலாசமும் நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரமும் பக் 39-40
13. இவ்வாறு இன்றும் நடக்கிறது. பிசாசுகள், அகால மரணமடைந்து போவோர் வருவோரைப் பய முறுத்துபவர்களை ஊர்த்தெய்வம் வெருட்டி விரட்டும். நூலாசிரியர் சிறுவராக இருந்தபோது இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடந்திருப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறார்.
14. தெட்சிணாமூர்த்தி. உ. (1981) - மணிவிழா மலர் ப. 183

நகரவாழ்த்து

ஒன்பது கோயில் நகரத்தார்களை வாழ்த்திப்பாடும் நூல் நகர வாழ்த்தாகும். எல்லா நகரத்தார்களையும் சுட்டும் வண்ணம் இந்நூலில் 'நகரம்' என்ற சொல் அமைந்திருக் கிறது. எனவே நகரவாழ்த்து என்பது நகரத்தார்களை வாழ்த்துகின்ற நூலாகும்.

புலவர்கள் பரிசில் பெற்றால் புரவலனை வாழ்த்துவர்; இங்கோ, ஆசிரியர் ஒரு திருமண நிகழ்ச்சியை விவரித்து அம்மணமக்களைப் போற்றி அவர்களினத்தை வாழ்த்து கின்றார். நூலின் இறுதியில் 'ஐந்நூற்றுவர் எனவே இன்பமுடன் வாழ்ந்திருந்தார்'[1] என்று வாழ்த்தி முடிக் கின்றார். இந்நூல் முழுமையும் திருமண நிகழ்ச்சிகள் தாம் இடம் பெற்றுள்ளன. ஆனால் மணமகன் பெயரோ மணமகள் பெயரோ அவர் குடும்பப் பெருமைகளோ பெயர்களோ நூலில் கிடையாது. மணமக்களை வைத்துக் கொண்டு ஆசிரியர் அந்த இன மக்களை வாழ்த்துகின்றார். அதனால் இந்நூல் நகரவாழ்த்து என்று பெயர் பெற்றிலங்குகின்றது.

நூலமைப்பு :

நகரவாழ்த்தின் துவக்கத்தின் முதற்கண் ஒரு நேரிசை வெண்பா உள்ளது. இது விநாயகரைக் 'குஞ்சரமே' என்றும் முருகனை 'ஆறுமுகமே' என்றும் விளிக்கும். பொதுவாகவே

விநாயகரையும் முருகனையும் தான் முத்தப்பர் சுட்டுகிறார். குறிப்பிட்ட எந்தக் கடவுளையும் அவர் சொல்லி வணங்க வில்லை.

இந்நூல் 'சீர்' என்ற மங்கல மொழிகொண்டு துவங்குகிறது. நூலில் மொத்தம் நூற்றெழுபது கண்ணிகள் இருக்கின்றன. அவற்றில் முதலிரண்டு கண்ணிகளில் ஆசிரியர் விநாயகரை வணங்கி வினை தீர்க்க வேண்டுகிறார். (1-2). நகரத்தார்கள் பற்றிய பல்வேறு சிறப்புகளைச் சொல்லி, அவர்களைத் தேசிகர் நாட்டிலிருந்து பாண்டிய மன்னன் அழைத்துவந்த வரலாற்றை ஆசிரியர் சொல்லுகிறார் (3-26). பாண்டியநாடு நோக்கிவரும் நகரத்தார்கள் திருத் தலங்களில் மடங்கள் அமைத்தமையைத் தொடர்ந்துவரும் பகுதி குறிக்கும். (27-30)

பாண்டிய நாடு வந்த நகரத்தார்கள் இங்கு எப்போதும் குற்றமின்றியிருப்போம் என்று இயம்பி அரியூர், சுந்தரம், இளையாத்தக்குடி ஆகிய ஊர்களைத் தலைமையாக்கி வாழ்ந்தனர். இளையாத்தக்குடியினர், ஒன்பது நகரக் கோயிலுக்கும் குன்றக்குடிக்கும் திருப்பணி செய்தமை பேசப் படுகின்றது. (31-57).

காளை ஒருவன் திருமணத்தையும் அம்மணத்திற்கு அனைவரையும் அழைத்த சிறப்பையும் திருமணச் சடங்கு களையும் பரிசுப் பொருள்கள் வழங்குதலையும் எஞ்சிய பகுதி கூறுகின்றது. நூலின் இறுதி நகரத்தை வாழ்த்தியும் நூலுக்குப் பயன் கூறியும் முடிகின்றது.

திருமண முறைமை :

நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் திருமண முறையை நகர வாழ்த்து நயந்தோன்ற விவரிக்கின்றது. இளைஞன் ஒருவனுக்குத் திருமணம் செய்ய அழகி

ஒருத்தியைத் தேர்ந்தெடுத்துப் பேசி முடித்தனர். பாடுவார் முத்தப்பர் 'காளை ஒருவனுக்கு' [2] என்றும் 'மணக்கூறை தான் உடுத்தி' [3] என்றும் மணமக்களைப் பற்றி உ.ரைப்பர். உலா இலக்கியங்களில், தலைவனைக் கண்டு மகளிர் காமுறல் போல் யானை மீது ஊர்வலம் வரும் மணமகனைக் கண்டு மகளிர் காமுறுவர். எனவே தக்க வயது வந்த பின்னர்த் திருமணம் செய்யும் வழக்கமே நகரத்தார்பால் இருந்தது; குழந்தை மணம் நடந்ததாகத் தெரியவில்லை.

பேசி முடித்தல் :

இவன்தான் மணமகன்; இவள் தான் மணமகள் என்று உறுதி செய்து கொள்ளுதலை, மணமகன் வீட்டார் மணமகளுக்கு அணிகலன்களைக் கொடுத்தலைக் கொண்டு முத்தப்பர் காட்டுகிறார். திருமணத்தை உறுதி செய்து கொள்வது மணமகள் மனையில்தான் நடைபெற்றது.

"பூட்டுவன பூட்டிப் பொருந்துவதெல் லாம்முடித்து
தேட்டாளர் தங்கள்மனை சென்றங்கு இருந்தனராம்"
(62)

இக்கண்ணியில், பெண் வீட்டுக்கு வந்து விட்டு மாப்பிள்ளை வீட்டார் தங்கள் வீட்டுக்கு வருவதைக் கூறுகிறார், ஆசிரியர். எனவே திருமணம் உறுதிசெய்வது மணமகள் மனையில் நடைபெற்றது என்பது தெளிவு. திருமணம் உறுதி செய்து கொள்வதைப் பேசி முடித்துக் கொள்வது என்றும் கெட்டி செய்து கொள்வது என்றும் செட்டி நாட்டில் வழங்குவர். இன்றோ இந்நிகழ்ச்சி மணமகன் வீட்டில் நடைபெறும். பேசி முடித்துக் கொண்டபின் மணமகளுக்கு மணமகன் பெற்றோர் வேவு கொடுத்தனர். மறையவர்[4] திருமணத்திற்குரிய நாள் எஃது என்று தேர்ந்தெடுத்துக் கொடுத்தார். திருமணம் உறுதியானது.

திருமண அழைப்பு :

திருமண நாள் உறுதியான பின் திருமணத்திற்கு அனைவரையும் அழைக்க மணமகன் வீட்டார் சென்றனர். உறவின் முறை (பங்காளி), அரியூரார், சுந்தரத்தார், இளையாத்தக்குடியார், பாண்டிய மன்னன் ஆகியோர்க்குத் திருமணம் சொன்னார்கள். திருமணத்திற்குப் பாண்டியன் உலுப்பை கட்டிக் (பரிசுப் பொருள்கள்) கொண்டு வந்தான். ஏனையோரும் வந்தனர். திருமணத்துக்கெனத் தெருவெலாம் அழகுபடுத்தப்பட்டிருந்தது. திருவளரும் காவணத்தில் செம்பொற்குடம் நிறைத்துத் தூங்கா விளக்கு ஏற்றித் தரை மெழுகிக் கோலமிடப்பட்டிருந்தது.

மாப்பிள்ளை ஊர்வலம் :

மணமகனான இளசை நகர் வேந்தனுக்குத் தலைப்பாகை கட்டிக் காதில் சவடிக்கடுக்கன் இட்டு மார்பில் பதக்கம் அணிவித்தனர். மணமகனை மாமன் மனையில் ஏற்றியிருக்க வைத்தான். தேங்காய், பழம் வைத்து விநாயகர் பூசை நடைபெற்றது. அரசாணிக்காலும் முளைப்பாலிகையும் விளங்கின. மணவாளருக்கு அனைவரும் அரிமணம் இட்டனர். பல இன்னிசைக் கருவிகள் முழங்கின. தாய், தந்தை, தேசிகர் முதலியோரை வணங்கிய மணமகனை மாமன் எடுக்கி மதயானை மேல் வைக்க ஊர்வலம் புறப் பட்டது. மாப்பிள்ளை ஊர்வலம், கயிலாச நாதர் கோயிலை அடைந்தது.

மணமகன் யானையை விட்டிறங்கித் திருக்கோயிலுக்குள் சென்று கைகால் கழுவி இறைவனை வலம் வந்து வணங்கினான். அவன் பயிலான முத்தாரம் பாங்குடனே கயிலாச நாதருக்குச் சாத்துமாறு அளித்தான்; தன் மரபு தழைத்தோங்கக் கடவுள் தாள் பணிந்தான். அப்போது மறையவர் இறைவனுக்குச் சாத்திய மாலையும் திருநீறும்

மணமகனுக்கு அளித்தார். மீண்டும் மணமகன் யானைமேல் ஏறிவர ஊர்வலம் மணமகள் மனைநோக்கி வந்தது. சுற்றத்தாரெல்லாம் ஆரத்தி எடுத்து விளக்கு வைத்தனர்.

யானைமேல் வந்த மணமகன், செல்வி மொழியாள் இருக்கும் வீதி வந்தான். பெண் வீட்டுக்கு முன் சென்று யானை நின்றது. வஞ்சியரில் மூத்தோர் வரவேற்றுக் குத்து விளக்கு வைத்து வாழ்த்துரைத்தனர். ஆனைமேல் இருந்த மணமகன் மீது பெண்ணின் உடன்பிறந்தோர் ஒன்பான் மணிகளை விட்டெறிந்து விளையாடினர். மைத்துனக் கிழமையுடையோர் விளையாடியபின், மணமகன் யானை விட்டிறங்கி மணமனை புகுந்தான்.

திருமணம் :

மணமகள் இல்லம் புகுந்து வீற்றிருந்த மண மகனுக்கருகே, பெண்ணை மாமன் நடத்தி வந்து அவனுக்கு வலப்புறம் இருக்கவைத்தான். விநாயகரை வழிபட்டு உயர் வணிகர் ஓமம் வளர்த்தனர். மணப் பெண்ணுக்குக் கூறைப் புடைவை உடுத்தியிருந்தனர். திருப்பூட்டுதற்குத் திரு மாங்கிலியம் தன்னை வணிகர் தொட்டுக் கொடுத்தனர். மணமகன் செய்ய கையினால் வாங்கி மணமகளுக்குத் திருப்பூட்டினான். 'நன்றாய் இனிது வாழ்க' என்று அன்பு செறி வணிகர் அரிமணம் இட்டார்கள். தங்கள் குலத்துக்குரிய சாத்திரம் எல்லாம் நகரத்தார்கள் செய்து முடித்தனர்.

மணமகன், சிறுமடவாள் வலதுகை விரல் கோர்த்து அரசாணிக்காலோடு தெய்வ வேதிகையை வலம் வந்து தனி வீட்டில் புகுந்தான். பெற்றோரும் உடன்பிறந்தோரும் மணமகளுக்குச் சீதனம் வழங்கினர். மாப்பிள்ளையும் பெண்ணும் கனகமணி மண்டபத்தில் பூச்சப்பிரமஞ்சத்தில் வீற்றிருந்தனர். இவ்வாறு பாடுவார் முத்தப்பர் ஒரு திருமண நிகழ்ச்சியை நகர வாழ்த்தில் விவரித்திருக்கிறார்.

திருமணச்சடங்குகள்—அன்றும் இன்றும் :

காப்புக் கட்டுதல் :

நகரவாழ்த்து, நகரத்தார்களின் பல்வேறு திருமணச் சடங்கு முறைகளை எடுத்துரைக்கின்றது. இதில் சொல்லப் பெறும் பல சடங்குகள் இன்றும் வழக்கில் உள்ளன. பாடுவார் முத்தப்பர், திருமணச் சடங்கில் காப்புக் கட்டுதலையே முதலாவதாகக் குறிப்பர். விற்றூற்று மூதெயினனார், அகநானூற்றில்

> ''மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
> பழங்கன்று கறித்த பயம்புஅமல் அறுகை
> மண்ணுமணி யன்ன மாயிதழ்ப் பாவைத்
> தண்ணறு முகையோடு வெண்ணூல் சூட்டி''[5]

என்று காப்புக் கட்டுதலைச் சுட்டுவர். தமிழர் திருமணங் களிலும் திருவிழாக்களிலும் காப்புக் கட்டுதல் இன்றியமை யாத நிகழ்ச்சி[redacted]. ஆண்டாளும் 'காப்பு நாண் கட்டக் கனாக் கண்டேன்'[6] என்று கூறுவாள். அவ்வாறே பாடுவார் முத்தப்பரும் காப்புக் கட்டுதலைத் தலைமைச் சிறப்புடைய தாகக் குறிக்கின்றார்.

வேவெடுத்தல் :

நகரத்தார்களிடையே வேவெடுத்தல் என்று ஒரு சடங்கு உண்டு. இந்த வேவு, கல்யாண வேவு. ஆடிவேவு, மாமவேவு, பொங்கல் வேவு எனப் பலதிறத்தது. விரும்பியவற்றை வழங்குதல் வேவாகும். வேவெடுத்தல் என்பதன் மெய் வடிவம் 'வேள்வெடுத்தல்' என்பதாகும். வேள்வெடுத்தல் என்றால் என்ன?

> ''மணமகன் வீட்டாருக்கு மணமகள் வீட்டாரும்
> மணமகள் வீட்டாருக்கு மணமகன் வீட்டாரும்
> விருந்துக்குரிய வரிசைப் பண்டங்களை யனுப்புதல்''[7]

வேள்வெடுத்தலாகும் என்று தமிழ் லெக்சிகன் விளக்கும். வேவில் விருந்துக்குரிய பொருள்களே இடம் பெறும். இன்று திருப்பூட்டி முடிந்த பின்பு தான் வேவு எடுப்பர். நகர வாழ்த்தில் மணமகன் வீட்டார் மணமகளுக்குத் திருமணத்திற்குமுன் வேவு கொடுத்தமை சொல்லப்பட்டிருக் கிறது.

> ''பண்டிதருக்கு உள்ள பலவரிசை அத்தனையும்
> கொண்டுசென்று வேவு கொடுத்தார் மருமகட்கு'' (63)

என்ற நகர வாழ்த்தின் கண்ணி, மணமகன் வீட்டார் மணமகளுக்கு வேவு கொடுத்ததைத் தெரிவிக்கிறது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை, செட்டியார் களிடையே பெண் மக்கள் குறைவு. அக்காலத்தில் பெண்ணுக்குப் பணம் வாங்கிக் கொண்டு திருமணம் செய்தார்கள்[3] வரதட்சணைப் பேய் போல அஃது ஒரு காலத்தில் செட்டிநாட்டைப் பிடித்திருந்தது. அந்நிலையை வைத்து நோக்கும்போது, மாப்பிள்ளை வீட்டார் பெண்ணுக்கு வேவு அளித்தனர், என்று சொல்லுவது ஏற்றுக் கொள்ளத்தக்கது. இன்று பெண் வீட்டார்க்கு மாப்பிள்ளை வீட்டார் எடுக்கும் வேவு ஒன்றுமில்லை.

அரசாணி கட்டுதல் :

நகரத்தார்களின் திருமணத்தில் அரசாணி கட்டும் பழக்கம் உண்டு. அரசாணியைப் பங்காளிகள் தான் கட்டுவர். அரசாணிக்கால் வைத்துக்கட்ட தனியே சிமிட்டியால் கட்டப் பட்ட மேடை இருக்கும். இம்மேடையை மணைக்கு முன்னே தூக்கி வைப்பர். அதன் நடுவே உள்ள பள்ளத்தில் பால் ஊற்றிப் பவளத்தை இடுவர். பின் கிளுவை, பாலை ஆகிய வற்றின் கொம்புகளை வைத்து அரசிலை, மாவிலை முதலிய வற்றை இடைமடுத்துக் கட்டுவர். இதனையே அரசாணி கட்டுதல் என்று வழங்குகின்றனர். நகர வாழ்த்து .

"நாயகக் காலான நடுப்பந்தற் கால்தனிலே
தர்ப்பைஅர சந்தழையும் சீரான மாந்தளிரும்
கற்பக விருட்சகக் கால்கதிக்கத் தான்நாட்டி
இரத்தினங்கள் ஒன்பதையும் நேராகவே சேர்த்துச்
சுற்றிஅர சாணிதன்னைச் சுகமாய் அலங்கரித்து"
(89-91)

என்று உண்மையும் கற்பனையும் கலந்து வருணிக்கின்றது.

அரசாணி கட்டும் பழக்கத்தைப் பெரியாழ்வார் திருமொழியும் கூறுகின்றது. 'அமரர் பதியுடைத் தேவி யரசாணியை வழிபட்டு'[9] என்பது அப்பகுதி. இதனால் திருமணத்தில் மணமக்கள் அரசாணியை வழிபடுதல் புலனாம். இப்பழக்கம் நகரத்தாரன்றிப் பிற இனத்தாரிடமும் காணப்படுகின்றது.[10] பாடுவார் முத்தப்பர் அரசாணி கட்டுதலைப் பொதுவாகத்தான் சுட்டுகின்றார். திருமணத்தில் அரசாணி ஒரு வழிபாட்டுப் பொருளாகும்.

முளைப்பாலிகையும் அரிமணமும் :

அரசாணிக்குமுன் ஐந்து முளைப் பாலிகை இருக்கும். இக்கிண்ணங்களில் அரசு இலையைக் கட்டி அவற்றில் ஆட்டுப் புழுக்கையைப் போட்டு வைத்திருப்பர். முளைப்பாரி நெல்லை இக்கிண்ணங்களில் தான் இடுவர். இதற்குத்தான் அரிமணம் இடுதல் என்று பெயர்.

"செந்நெல் பயறு சீர்த்துவரை எள்ளுடனே
நன்னலமாய்ச் சேர்த்து நலமாய் முறைதெளித்து
வைரவை டூரியத்தால் வாகாக வேசமைத்த
செயிர்சீர் முடியதனைச் செல்வனுக்கே தான்புனைந்து
அன்புசெறி வணிகர் அரிமணமும் இட்டார்கள்"
(93-95)

என்று நகரவாழ்த்து அரிமண மிடுதலை விவரிக்கின்றது. நவதானியங்களை முளைக்கவைத்துப் பார்த்தல், தமிழகப்

பழக்கங்களில் ஒன்றாகும். இந்த ஆண்டு விளையுமா? விளையாதா? என்றுஅறிய ஊர்த்திருவிழாவில் 'முளைவீடு' என்று தனியே அமைத்தும் 'முளைக் கொட்டு' வைத்தும் விதைகளை முளைக்க வைத்துப் பாட்டாளி மக்கள் காண்பர். அது போலத்தான் இல்லற வாழ்வின் பயனை அறிய முளைப் பாலிகை அமைக்கப் பெறுகிறது. பாடுவார் முத்தப்பர் இந்தச் சடங்குகள் எல்லாம் மணமகன் வீட்டில் நடைபெறுவனவாகக் காட்டுகிறார்.

பூ வெறிதல் :

மணமகன் யானை மீதேறித் தன் வீட்டிலிருந்து கோயிலுக்குச் சென்று பின் மணமகள் வீடு நோக்கிப் போனான். மாப்பிள்ளை ஊர்வலம், மணமகள் வீட்டுமுன் சென்றது. யானை மீதிருந்த மணமகனுடன் மங்கையர்கள், மூப்பியர்கள், மைத்துனன்மார்கள் அனைவரும் தங்கை மணவாளரை எதிர்கொண்டு விளையாடினர்.

''மாணிக்கம் நீலம் வைரம் வைடூரியமாம்
ஆணிப்பொன் முத்துஅவர் கள்கையில் நின்றிலங்க
ஆனைமேலிருந்த தங்கள் அரிவை மணவாளரிடம்
மேனி நிறையஅவர் விட்டங்கு எறிந்திடுவார்''

என்று ஒன்பான் மணிகளை எறிந்து விளையாடுதலை எடுத்துரைப்பர். இன்று மணிகளுக்கு மாறாகப் பூக்களை எறிகின்றனர். பெண்களும் கலந்து கொண்டதாக நகரவாழ்த்துத் தெரிவிக்கின்றது. மணமகன் யானை மீது செல்லுகிறான்; இன்று குதிரை மீது செல்லுகிறான்; இன்று அம்மரபும் மறைந்தது. அதனால் பூ எறிதல் என்ற சடங்கே இல்லை.

கோயில் மாலை :

நகரத்தார் திருமணத்திற்குக் கோயில் மாலை அவரவருடைய கோயில்களிலிருந்து வருதல் வேண்டும்.

அவ்வாறு வருதற்கு நகரக் கோயிலில் திருமணத்திற்கு மூன்று நாள் முன்னர்ப் போய்ப் பாக்கு வைக்க வேண்டும். நகரக் கோயில் மாலை வந்தால்தான் திருமணம் முறையானது என்று ஏற்றுக் கொள்ளப் பெறும். நகர வாழ்த்தில் மணமகன் இளையாத்தக்குடிக்கைலாசநாதர் கோயில்சென்று மாலை வாங்கியதாகக் கூறுவர். இளையாத்தக்குடியில் இருந்தமை யால் இவ்வாறு நிகழ்ந்தது. நகரத்தார்கள் எல்லாம் நகரக் கோயில் இருந்த ஊர்களை விடுத்து வேற்றூர்களில் குடியேறிய போது இப்போதுள்ள மரபு தோன்றியிருக்க வேண்டும். நகரக் கோயிலுக்குப் போவது பிள்ளையார் கோயிலுக்குப் போவதாக மாறியது. பாடுவார் முத்தப்பர், மணமகன் எந்தக் கோயிலைச் சார்ந்தவள் என்றோ மாலை வந்தது என்றோ கூறிலர்.

திருமணச் சடங்குகள் :

நகரவாழ்த்து, நகரத்தார்களின் பல்வேறு திருமணச் சடங்குகளைத் தெரிவிக்கின்றது:-

அ) நகரத்தார் ஊர்களில் பஞ்சாங்கக்காரர் என்று ஒருவர் இருப்பார். இவர் அந்தண குலத்தைச் சார்ந்தவர். நகர வாழ்த்தும் மறையவரே திருமண நாள்பார்த்துக் கொடுப்பதாகக் கூறுகிறது.[11]

ஆ) மாப்பிள்ளை அழைத்து வரும் போது பெண் வீட்டு உறவினர் வீடுகளில் எல்லாம் ஆரத்தி (ஆலத்தி) எடுப்பது வழக்கம். இதனை நகர வாழ்த்தும் சுட்டும்.[12] குதிரையேறித் தீவட்டி பிடித்துக் கொண்டு வீடு வீடாக மாப்பிள்ளைக்கு ஆரத்தி எடுப்பர். இப்போது குதிரையேறும் பழக்கம் நின்றபடியால் ஆரத்தி எடுப்பதும் நின்று விட்டது.

இ) திருமணத்தில் மணமகளுக்கு மணக்கூறை வழங்குவர். இஃது எல்லா இனத்தாரிடையேயும் உள்ளது. மணமகன்

வீட்டார் கொடுக்கும் மணக்கூறை உடுத்தியே பெண்ணைத் திருப்பூட்ட அழைத்துவருவர்.[13]

ஈ) திருமணத்தில் மணமகனையும் மணமகளையும் அவரவர் மாமன்மார் தான் அழைத்துவருவர். அவ்வாறே நகர வாழ்த்தும் குறிக்கிறது.[14]

உ) பாடுவார் முத்தப்பர், நகர வாழ்த்தில் மணமகனே மணமகளுக்குத் தாலிகட்டுவதாகக் கூறுகிறார்.

''செங்கையினால் வாங்கிச் செய்யதிரு மங்கலியம்
தரித்தான் கழுத்தில் சால மணவாளன்''(153)

என்பது நகர வாழ்த்து. இன்று மாப்பிள்ளை தான் மணமகளுக்குத் திருப்பூட்டுகிறார். ஆனால், செட்டிநாட்டில் இடைக் காலத்தில், நகரத்தார்களில் வயதில் மூத்தவர் தான் பெண்ணுக்குத் திருப்பூட்டினர்.[15] பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவரையொருவர் மணவறையின் போது தான் பார்த்துக் கொள்வர். இன்று இப்பழக்கம் இல்லை.

ஊ) திருமணம் முடிந்தபின் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் சீதனம் கொடுத்ததாக முத்தப்பர் உணர்த்துகிறார். பெண்ணின் தகப்பன், தும்பிப்பதக்கம், சொர்ண முத்து மாலைகள், ஆழிமோதிரம், பொன், வெள்ளி, வெண்கலம் ஆகியன வெல்லாம் வழங்கினார். பெண்ணின் அண்ணன் வளையல், மோதிரம் முதலியனவற்றைக் கொடுத்தான்.[16] இவ்வாறு மணமக்களுக்குப் பெண் வீட்டார் சீதனங்கள் வழங்கினர். பாடுவார் முத்தப்பர் காலத்தில் சாதாரணமாக இருந்த இந்தப் பழக்கம் இன்று சமுதாயத்தில் பலபெண்களுக்குத் திருமணம் நடைபெறுவதற்கு முட்டுக் கட்டையாக விளங்குகிறது. நகரத்தார் திருமணத்தின் பல்வேறு சடங்குகளைப் பாடுவார் முத்தப்பர் இந்நூலில் நன்கு விவரித்துள்ளார்.

பாண்டிய நாடு வருகை :

திருமுகவிலாசம், நகரத்தார்கள் சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாட்டுக்கு வந்த வரலாற்றைச் சுருக்கமாகத் தெரிவிக்கின்றது.[17] இதற்கு விரிவுரையாகவும் விளக்கமாகவும் திகழுமாறு நகரத்தார் வரலாற்றை நகர வாழ்த்துரைக் கின்றது. இதில் சோழநாடு என்றோ காவிரிப் பூம்பட்டினம் என்றோ பெயரில்லை. 'தேசிகர்தம் நாடணுகி'[18] என்ற தொடரே உள்ளது. ஆயினும் அது சோழ நாட்டையே குறிக்கும்.

நான்கு திசைகளிலும் நல்ல குடிகளைத் தேடிப் பாண்டிய மன்னன் சென்றான்; அப்போது நகரத்தார்களின் செந்தாமரை போல் சிறந்தமுகம் பார்த்தயர்ந்து பிந்தாத செந்தமிழைப் பேணுமவர் பெற்றிகண்டு பாண்டியன் தன் நாட்டுக்கு அழைத்து வந்தான். இவர்களை மன்னன் என்றும் காப்பதாக உறுதி கொடுத்தான். பாண்டியன் தனக்கு முடி சூட்டும் உரிமையை இவர்களுக்கு வழங்கினான். ஆயிரத்தைந் நூறு தேர் செய்து அவற்றில் நகரத்தார்களை அழைத்து வந்தனன்.

சோழ நாட்டிலிருந்து காவிரி கொள்ளிடம் தாண்டி இடை மருதூர் வந்து நகரத்தார்கள் மடம் அமைத்தனர். பின் வெள்ளாற்றங்கரை வந்து ஓங்காரக் குடியில் தங்கினர். அனைவரும் ஒன்று கூடி இங்குச் சாதிமுறை ஒழுங்கினை வகுத்துக் கொண்டனர். பின் அரியூர், சுந்தரம், இளையாத்தக்குடி என்ற மூன்று ஊர்களில் குடியேறினர்.

கோயில் திருப்பணி :

இவ்வாறு இளையாத்தக்குடியில் இருந்தவர்கள். ஏழூர் நகரத்தார்களாகப் பெருகினர். அவர்கள் தங்களுக்கெனத்

தனித்தனியே கோயில்களை உண்டாக்கிக் கொண்டனர். திருமுகவிலாசத்தில் ஒன்பது நகரக்கோயில் இறைவன்-இறைவி பெயர்களை ஆசிரியர் சுட்டுவர்.[19] நகரவாழ்த்தில் அந்தக் கோயில்களை ஏற்றுக்கொண்டு வழிபாடு செய்த காலத்தில் அக்கோயில்களில் நடைபெற்ற திருப்பணிகளையும் ஆசிரியர் விவரித்துள்ளார்.

பழந்தொடர்புணர்த்துதல் :

நகரத்தார்கள் அனைவரும் நாநாதேசி திசை யாயிரத்தைந்நூற்றுவர் என்னும் வணிகக் குழுவைச் சார்ந்தவர்கள். எனவேதான் இவர்கள் வழிபடும் பிள்ளையார் பட்டிப் பிள்ளையார்க்குத் தேசி விநாயகர் என்று பெயர் ஏற்பட்டது. தேசி என்ற பெயர் வணிகர்களின் தலைவன் பெயர். முத்தப்பர் (பூவாண்டிபட்டி) சூரக்குடி இறைவனை

''நயம்பிறக்கும் சூரை நகரில் புகழ்வேண்டி
வயங்குதமிழ் நல்வணிகர் வான்தலைவ னாம்பெயரால்
திகழ்கின்ற நல்லிறைவர் தேசிக நாயகர்...'' (49-50)

என்று போற்றுவர். தேசிகநாதர் என்னும் சிவபெருமான் பெயருக்கு, வரலாற்றொடு பொருந்திய வகையில் பெயர்க் காரணத்தைப் பாடுவார் முத்தப்பர் விளக்குவர்.

இது போல நகரவாழ்த்தில், பாடுவார் முத்தப்பர் நகரத்தார் அனைவரையும் 'ஐந்நூற்றுவர்'[20] என்றும் 'ஆயிரத்தைந்நூற்றுவர்'[21] என்றும் சுட்டுவர். பாண்டிய மன்னன் ஆயிரத்தைந்நூறு தேரில் வணிகர்களை அழைத்து வந்தான் என்று கூறுவதும் இதனைத் தழுவியதே. இச்சுட்டும் நாநாதேசி திசையாயிரத்தைந்நூற்றுவர் என்னும் வழக்கை அடிப்படையாகக் கொண்டதேயாகும். இவ்வாறு இப்புலவர்

நகரத்தார்களின் பழந்தொடர்பை உணர்த்துமாறு மேற்கண்டவற்றைக் கூறுகிறார்.

எழுநகரம் - இளையாத்தக்குடி :

'இளையாத்தக்குடி' என்பது தனிக்கோயில் பிரிவை உணர்த்துவது. ஆயினும் எல்லாக்கோயில் நகரத்தாரையும் இப்பெயர் உணர்த்துவதாக முத்தப்பர் தன்னூல்களில் பயன்படுத்துகிறார். ஒன்பது நகரக் கோயிலைச் சொல்லும் போதெல்லாம் இளையாத்தக்குடியையே ஆசிரியர் முதற்கண் இயம்புவர். நகர வாழ்த்தில் வரும் மணமகன் இளையாத்தக் குடிக்கோயிலைச் சார்ந்தவனாகவே ஆசிரியர் பாடுகிறார். 'இங்கிலீசுக் கொடி பறக்கவே இளையாத்தக்குடி சிறக்கவே, என்ற இவர்வாக்கிலும் இளையாத்தக்குடி நகரத்தார் அனைவரையும் குறிப்பதாகவே உள்ளது. எனவே இளையாத்தக்குடி நகரம் என்ற வழக்கு அனைத்து நகரத்தாரையும் சுட்டும் பொதுவழக்கு; கல்வெட்டுகளிலும் இவ்வாறே வழக்கு உள்ளது.

சோழ நாட்டிலிருந்து வந்த நகரத்தார் அனைவரும் முதற்கண் இளையாத்தக்குடியிலேயே தங்கினர். அங்கிருந்து பல்கிய பின் வெவ்வேறு ஊர்களுக்குப் போயினர். ஆதலால் இளையாத்தக்குடி நகரம் என்பது பாடுவார் முத்தப்பரால் பொது வழக்காகத்தான் கையாளப்பட்டிருக்கிறது.

உலா வருதல் :

நகர வாழ்த்தில், மணமகன் ஊர்வலமாக வரும் காட்சியைப் புனையும் ஆசிரியர் உலா இலக்கிய மரபைப் பின்பற்றுகிறார். அது அவ்விளைஞனின் உயர்ந்த பண்புகளைக் காட்டப் பயன்படுகிறது.

மணமகன் யானைமேல் ஊர்வலம் வந்தான். அவன் பவனிவரும் பீடு கண்டு மடவார் எல்லாம் மாரன் எய்ய

மலர்வாளி ஊடுருவ மயங்கி நின்றனர். உலா இலக்கியங்களில் பாட்டுடைத்தலைவன் பவனி வருதலைக் கண்டு எழுபருவ மகளிர் காதல் கொண்டு நிற்பதைப் போல நகரவாழ்த்தையும் ஆசிரியர் அமைத்திருக்கிறார். மணமகனை நாரணனாகவும் முருகனாகவும் மன்மதனாகவும் இந்திரனாகவும் கண்டு மகளிர் மயங்கினர். இறுதியில் புனவைநன் முனிவன் சீடன் என்ற அறிந்து மனத்தில் அவனை நிறுத்தினர். அவனை எங்கள் மனைக்கு வருக என்றும் மங்கை நல்லாளை விளையாடத் தருவோம் என்றும் அவனை மனைக்கு அழைத்தனர். இப்படியே மாதர் உள்ளம் இயம்பத் தெருக் கடந்தான், மணவாளன்.

முத்தப்பர், உலா மரபைத்தழுவி இவ்வாறு அமைத்தாலும் இங்கு எழுபருவ மகளிரைக் கொண்டு பாடவில்லை. ஆயினும் மணமகனுடைய சிறப்பையும் உயர்வையும் பண்பையும் காட்ட இப்பகுதி பயன்படுகிறது.

நூல் எழக் காரணம் :

நகரவாழ்த்து, எப்போது ஏன் பாடப்பட்டது என்ற வரலாறு தெரியவில்லை. நூலின் இறுதியில்

> ''முடிக்குரிய நல்வணிகர் முன்பாடும் இவ்வாழ்த்தைப்
> படிப்போருங் கேட்போரும் பண்புடனே
> வாழ்ந்திடுவார்'' (169)

என்று பாடுவர், ஆசிரியர். இதனை நோக்கும்போது ஆசிரியர் இந்த நூலை நகரத்தார்கள் முன்னிலையில் பாடியிருக்க வேண்டும் என்று புலனாகின்றது.

திருமுகவிலாசம் பாடிக்கொடுத்த ஊனையூர்ச் சுப்பிரமணிய பண்டாரத்திற்குத் திருமண வீடுகளில் ஒரு பணம் வழங்குமாறு நகரத்தார்கள் முடிவெடுத்தனர்.[22] அதைப் பெறுவதற்கு வரும் பண்டாரம் திருமணத்தில் வாழ்த்திப் பாட இந்நூலை இயற்றிக் கொடுத்தார் என்று

துணியலாம். நகரத்தார் திருமணங்களில் இத்தகைய வாழ்த்துகள் சொல்லப்பட்டதாகத் தெரியவில்லை. திண்டுக்கல் வட்டாரத்தில் வாழும் காராள வேளாளர் இடையே இத்தகைய வாழ்த்துச் சடங்கு உள்ளது. வாழ்த்துப் பாட்டும் வழங்குகிறது.[23] இசுலாமியரிடையேயும் இத்தகைய வாழ்த்து இலக்கியம் காணப்படுகிறது.[24] இவற்றை நோக்கும் போது நகரவாழ்த்து, ஊனையூர்ச் சுப்பிரமணிய பண்டாரத்துக்கு எனப் பாடப்பட்டது என்றும் நகரத்தார் திருமணங்களில் ஒரு காலத்தில் பாடப்பட்டது என்றும் கொள்வது பொருந்தும்.

அடிக்குறிப்புகள்

1. தெட்சிணாமூர்த்தி. உ. (1981) - மணிவிழா மலர் நகர வாழ்த்து - கண்ணி 168
2. மேலது - கண்ணி 58
3. மேலது - கண்ணி 152
4. மேலது - கண்ணி 64
5. வேங்கடசாமி நாட்டார். ந.மு. (1961) - அகநானூறு உரையுடன் பா.எண். 136 அடி எண். 10-13
6. விசுவநாதன். அ. (1986) - ஆண்டாள் திருமணம் பா. எண். 82 அடி எண். 4
7. ... (1934) - தமிழ்லெக்ஸிகன் ஆறாம் தொகுதி - முதற் பகுதி ப. 3843.
8. பெண்ணுக்குப் பணம் இருபதாயிரம், இலட்சம் என்று பணம் வாங்கிக் கொண்டு திருமணம் செய்தனர். இதனால் சொ. முருகப்பா, தமிழ்க்கடல் இராய. சொ. போன்றவர்கள் 'பெண் விலைக் கண்டனச் செய்யுட்கள்' இயற்றி இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். பின்னாளில் பெண் மக்கள் பிறப்பு எண்ணிக்கை கூடி நிலை மாறியது.
9. அண்ணங்கராசாரியர் (1962) - திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும் பா. எண். 299 அடி எண். 3.

10. இராஜம்மாள். தை.(1985)-திண்டுக்கல் வட்டாரக் காராள வேளாளர் குலமுறைச்சடங்குகள்.எம்.பில்.ஆய்வேடு ப. 53
11. தெட்சிணாமூர்த்தி. உ. (1981) - மணிவிழா மலர். நகர வாழ்த்து - கண்ணி. 64
12. மேலது - கண்ணி 136
13. மேலது - கண்ணி 152
14. மேலது - கண்ணிகள் 102; 148.
15. கட்டுரையாசிரியர் சிறுவராக இருந்த போது வயதான பெரியவர் திருப்பூட்டுதலைப் பார்த்திருக்கிறார். மிதிலைப் பட்டி முத்தையா செட்டியார், பல பெண்களுக்குக் கீழ வட்டகையில் திருப்பூட்டியிருக்கிறார். கட்டுரையாசிரியர் சிறிய தகப்பனார் பேரன்மார்கள் அனைவர் திருமணத்திலும் மிதிலைப்பட்டி முத்தையா செட்டியாரே திருப்பூட்டினார்.
16. தெட்சிணாமூர்த்தி. உ. (1981) - மணிவிழா மலர் நகர வாழ்த்து கண்ணி 159-162
17. நடராசன். நா. & நாகப்பன். ராம (1951) - திருமுக விலாசமும் முருகன் தோத்திரமும். கண்ணிகள் 183-184
18 தெட்சிணாமூர்த்தி. உ. (1981) - மணிவிழா மலர் நகர வாழ்த்து - கண்ணி 12.
19. நடராசன். நா. & நாகப்பன். ராம. (1951) - திருமுக விலாசமும் முருகன் தோத்திரமும் - கண்ணிகள் 201-209
20. தெட்சிணாமூர்த்தி. உ. (1981) - மணி விழாமலர் நகர வாழ்த்து - கண்ணி 168
21. மேலது - கண்ணி 32
22. நடராசன். நா. & நாகப்பன். ராம. (1951) திருமுக விலாசமும் முருகன் தோத்திரமும் கண்ணி 234.
23. இராசம்மாள். தை. (1985) .திண்டுக்கல் வட்டாரக் காராள வேளாளர் குலமுறைச் சடங்குகள். ப. 99 - 112.
24. நயினார் (1953) - சீதக்காதி வள்ளல் பக். 1-31

செயங்கொண்டார் சதகம்

நூலின் பெயர் :

பாடுவார் முத்தப்பர் பாடிய செயங்கொண்டார் சதகம் செட்டி நாட்டு மக்கள் படித்துச் சுவைத்த இலக்கியம். இந்நூல், குன்றக்குடிக்கு அருகிலுள்ள நேமம் சிவன் கோயிலில் வீற்றிருக்கும் செயங்கொண்ட சோழீசரைப் பாடுவதாகும் செயங்கொண்டாரைப் பற்றிய சதகம், செயங்கொண்டார் சதகம் ஆயிற்று. இது நூறு பாடல்களையுடைய நூல். இந் நூலுக்குப் பாடலின் எண்ணிக்கை அடிப்படையால், இப் பெயர் ஏற்பட்டது.

> ''வடமொழிப் பெயர்களைத் தமிழ் இலக்கிய வகைகளுக்கு வைத்துக் கூறும் முறைக்கேற்ப, நூறு பாடல்களால் அமையும் இலக்கிய வகையும் நூறு எனப் பெயர் பெறாமல், நூறு என்ற பொருளைத் தரும் சதம் என்ற வடசொல்லடிப்படையில் சதகம் என்றாயிற்று''[1]

வடமொழிப் பெயர் பெற்று விளங்கும் இச்சிற்றிலக்கிய வகை நூல்கள், இறைவன் பெயர்களாலேயே வழங்குவன. அவ்வாறே இந்நூலும் செயங்கொண்ட சோழீசர் பெயரைப் பெற்றுச் செயங்கொண்டார் சதகம் என வழங்குகிறது.

செயங்கொண்டார் சதகத்திற்குச் செயங்கொண்டார் வழக்கம் என்ற பெயருமுண்டு. இந்நூலை வெளியிட்ட நகரத்தார்கள் அனைவரும் சதகம் என்ற பெயராலேயே வெளியிட்டிருக்கின்றனர். தமிழ்நாடு அரசு கீழ்த்திசை சுவடிகள் நூல் நிலையம், 'செயங்கொண்டார் வழக்கம்' என்ற பெயரில் இந்நூலை அச்சிட்டிருக்கிறது. இந்நூலின் முதற் பாட்டு, 'குறு விருத்தப் பாமாலை' என்று நூலைச் சுட்டும். ஆனால் இப்பெயர் வழக்கில் இல்லை. 'உலக வழக்கத்தை யெடுத்து ஒரு நூறு விருத்தஞ் செய்தான்' என்று ஆசிரியர் பழமொழியைக் குறிப்பர். எனவே வழக்கம் என்பது பழமொழி என்று கொண்டு இதற்குச் செயங்கொண்டார் வழக்கம் என்ற பெயரும் வழங்கியிருக்கிறது.

நூலமைப்பு :

இந்நூலின் பாடல் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பழமொழி காணப்படுகின்றது. அதேபோல ஒவ்வொரு பாட்டும் செயங்கொண்டாரை விளிப்பதாகவும் துதிப்பதாகவும் பாடப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு கூறுகளுடன் நூலைச் சுவையூட்டும் பகுதி, கதைப் பகுதியே. புராண இதிகாசக் கதைகளும் ஊரகக் கதைகளும் (Folk tales) அமைந்து நூலைப் படித்து இன்புறச் செய்கின்றன.

இச்சதகத்தின் முதற்கண் வெயிலுகந்த கணபதி, குன்றக்குடி முருகன், கலைமகள் ஆகிய தெய்வங்களுக்குக் காப்புச் சொல்லப்பட்டுள்ளது. இதனை யடுத்த பாடல், அவையடக்கமாகும். தண்டலையார் சதகத்துக்கு முன் செயங்கொண்டார் சதகம் யானைக்கு முன்னே சிற்றெறும்பு நடந்தது போன்றது என்று உரைக்கின்றது. தண்டலையார் சதகத்தினும் தன்னூல் தாழ்வானது என்று ஆசிரியர் சொல்லுகிறார்.

இந்நூலின் ஒவ்வொரு பாடலின் மூன்றாம் அடியிலும் செயங்கொண்டாரை விளித்து ஆசிரியர் பாடியிருக்கிறார். பெரும்பாலான பாடல்களில், இவ்விளி மூன்றாம்சீரில் காணப் படுகிறது. இச்சதகப் பாக்களை ஆசிரியர் 'குறு விருத்தம்' என்பர். எல்லாப் பாடல்களும் அறுசீர் ஆசிரிய விருத்தங்களே.

நூலின் நோக்கம்:

பாடுவார் முத்தப்பர் தன் இனமக்களைப் பற்றிப் பல்வேறு பாக்களில் போற்றி வாழ்த்துகின்றார். ஆனால் செயங்கொண்டார் சதகம், அவருடைய கோயில் மரபுச் சிவபெருமானைப் போற்றிப்பாடும் பாடாண்பாட்டு அன்றிப் பிறிதன்று. இச்சதகம் சிவபெருமான் துதி நூல் என்பதில் ஐயமில்லை. '...ஓரினத்தாருக்குப் பெருமை சேர்ப்பதை நோக்கமாகக் கொண்டு பாடியதைச் செயங்கொண்டார் சதகத்திலும் காண்கிறோம்'[3] என்று திறனாய்வாளர் எழுதியது, மேலோட்டமாக நூலைக்கண்டு செய்த முடிவாகும். இந்நூல் செயங்கொண்டாராகிய சிவபெருமானைப் போற்றுவதேயன்றி நகரத்தார்கள் நலம்பெற ஆசிரியர் பாடியதன்று.

நூல் அரங்கேற்றம் :

சிவபெருமானைப் போற்றிப் பாடிய செயங்கொண்டார் சதகம், நேமம் செயங்கொண்ட சோழீசர் திருமுன் அரங்கேற்றப்பெற்றது. செவிவழிச் செய்தியாக வழங்கும் இதனை உண்மை என்று கொள்வது பொருத்தமேயாகும். இந்நூல் அரங்கேற்றத்திற்கு யார் தலைமையேற்றிருந்தார் கள் என்பது தெரியவில்லை. அரங்கேற்றத்திற்கு வந்திருந்த ஊனையூர்ப் பாரதியார்,

''ஓங்குபத்மா சூரனைக்கண் டோடியொளித் தார்; விசயன்
வாங்குதனு வால்பூசை வாங்கினார்; —ஈங்கிருக்கும்
நன்னேமச் சோழீச னார்செயங்கொண் டார்என்றால்
என்னசெயங் கொண்டார் இவர்?''[4]

என்று முத்தப்பரை நோக்கிப் பாடினார். அரங்கேற்றத்தின் தொடக்கத்திலேயே, சிவபெருமான் பெயரையே நகையாடுவ தாய்க் கேள்வி பிறந்தது. இவ்வினா நூலைப் பற்றியதன்று; ஆனால் நூலின் பாட்டுடைத் தலைவனான சிவ பெருமானைப் பற்றியது. சிவபெருமான் பத்மாசூரனுக்கு அஞ்சி ஒளிந்தார்; அருச்சுனனிடம் வில்லால் அடிவாங்கினார். தோல்விகளையே கண்ட இவர் செயங்கொண்டாரா? என்று ஊனையூர்ப் பாரதியார் கேட்டார்.

பாட்டைக் கேட்ட முத்தப்பர், சிவபெருமான் திருப் பெயரையன்றோ புலவர் பொய்யாக்க முயல்கின்றார் என்று எண்ணி விரைந்து அவர் வினாவுக்கு அதே யாப்பில் விடை யளித்தார். இவர் பாட்டில், ஊனையூர்ப் பாரதியாரின் வினாத் திரும்ப வருகின்றது.

''என்னசெயங் கொண்டார் இவரென்றால் முப்புரத்தைச்
சொன்னமய மாச்சமைத்த சோழீசர்—பின்னுஞ்
சிரித்துச் செயங்கொண்டார்; சித்தசனைக் கண்ணால்
எரித்துச் செயங்கொண்டா ரே''[5]

என்பது முத்தப்பர் விடை. ஊனையூர்ப் பாரதியார், சிவ பெருமான் தோல்வி கண்ட இடங்களை யெல்லாம் தொகுத்துத் தோல்வி கொண்டார் என்றார். அதற்குத் தக்க மறுமொழி கொடுப்பது போலச் சிவபெருமான் வென்ற இடங்களைச் சொல்லி அவர் 'வெற்றி கண்டார்' என்று தெளிவுபடக் கூறுகிறார், முத்தப்பர். பாடுவார் முத்தப்பர், சிவபெருமானைப் போலப் பாரதியாரைச் செயங் கொண்டார்.

இதன்பின் எவ்வகை இடர்ப்பாடும் இன்றிச் செயங்கொண்டார் சதகம் இனிது அரங்கேறியது. 'இது தைத்திங்கள் முதல் நாளில்'[6] நடைபெற்றது என்பர்.

இதற்குச் சான்று இல்லை. நகரத்தார்கள் நல்ல நாள் பார்த்தே எதனையும் செய்வர். தைத்திங்கள் முதல் நாள் கரிநாள்; ஆதலின் அன்றைய தினம் அரங்கேற்றம் நடைபெற்றிருக்க முடியாது; வேறொரு நாளிலேயே நிகழ்ந் திருக்க வேண்டும். அஃது எந்நாள் என்று தெரியவில்லை.

பரிசன்று; பரிவு :

அரங்கேற்றம் நிறைவு பெற்றதும் பாடுவார் முத்தப்பருக்கு நகரத்தார் பரிசில்களும் பாராட்டுகளும் வழங்கினர். அவர்களின் போற்றுதலாலும் அன்பாலும் உள்ளம் மகிழ்ந்த முத்தப்பர் தன் மனக்கருத்தை வெளிப் படுத்தி நகரத்தார்களை வாழ்த்தினார்.

> ''பரிவினையே வேண்டியிந்நூல் பாடிவந்தோம்; மிக்க
> பரிசும் உள தென்றளித்தீர்; பற்றி—ஒருசிலையை
> வில்லாய் வளைத்த செயங் கொண்டார் திருவருளால்
> எல்லாரும் வாழ்வீர் இருந்து''[7]

என்பது அவர் வாழ்த்துப் பாட்டு. இப்பாட்டு, 'இந்நூல் பரிசுபெறப் பாடவில்லை; அன்பு வேண்டியே பாடியது' என்று இயம்புகிறது.

நகரத்தார்களை வாழ்த்தி முத்தப்பர் பாடிய 'பஞ்சாட்சரப் பதிகம்' என வழங்கும் ஐந்து பாடல்களும் இவ்வமயத்தில்தான் பாடப்பட்டன.

பாட்டுடைத் தலைவன் :

செயங்கொண்டார் சதகப் பாட்டுடைத் தலைவன் செயங்கொண்ட சோழீசர். அப்பெருமானைத் திருமுக விலாசத்தில்,

> ''... ... ... அவ்ளிநிதி
> செய்யும் நியமச் செயங்கொண்ட சோழீசர்
> தையல் சவுந்தரியைத் தாள்பணிவோர்...'' (204-205)

என்று பாடிப்பரவுவர், கவிஞர். செயங்கொண்டார் சதகம் நூல் முழுமையும் முத்தப்பர் நேமங் கோயில் இறைவனை யும் இறைவியையுமே பாடிப் பணிகின்றார்.

''இக்கோவில் செயங்கொண்ட சோழ மன்னனால்
பிரதிட்டை செய்யப்பெற்றது. அதனால் 'செயங்
கொண்ட சோழேசர்' என்பது சுவாமி பெயர் ஆயிற்று'[8]

இஃது ஏற்றுக் கொள்ளத்தக்கதே யாகும். இப்பெயர் நேமம் திருக்கோயில் சிவபெருமானுக்குரிய பழம்பெயராகும். இப் பெயரைப் பாடல் தோறும் அமைத்துப் பாடுவார் முத்தப்பர் இச்சதகத்தை இயற்றியுள்ளார்.

செயங்கொண்டாருக்கும் சௌந்தரிய நாயகிக்கும் நேமங் கோயிலில் தனித் தனிச் சந்நிதி. ஆனால் முத்தப்பரோ, இறைவனை அம்மையப்பராகவே நூல் முழுமையும் காட்டுகிறார். ''செல்லாருங்குழலி சவுந்தரியை யிடப்பாகம் வைத்த செயங்கொண்டார்''(22) என்றும் ''தென்னமே நகரில்வாழ் சௌந்தரநாயகி மகிழ்ந்த செயங்கொண்டாரே'' (30) என்றும் இறைவனை மாதொரு பாகனாகப் பாடி மகிழ்வர். இன்னும் பல பாடல்களில் இக்கருத்தை வலியுறுத் தும் குறிப்புகள் உள்ளன.

''களபணி தனத்தி சௌந்தரி பாகர்'' (40) (45)

''மைப்படியும் கண்ணி சவுந்தரி பாகம்'' (46)

''கொடியிடைப் பெண் சௌந்தரியாள் இடப்பாகர்''(48)

''சிலைநுதலாள் சவுந்தரநாயகியை யிடப்பாகம்
வைத்த'' (65)

''கச்சணியும் தனத்தி சவுந்தரி பாகர்'' (25) (95)

தோற்றப் பொலிவு :

சிவபெருமானுக்குச்சிறந்த அழகான சடைமுடி; இம்முடி களைகண் அற்றவரைக் காக்கும் தன்மை வாய்ந்தது.

இதுவே கலையிழந்த சந்திரனை யேற்றுக் காத்தது. இக் கருத்தை உணர்த்தும் வண்ணம் ''வெண்ணிலவைச் சடையில் வைத்த'' (26) என்று ஆசிரியர் உரைக்கின்றார். மேலும் ''இண்டை புனை சடையாரே'' (15) என்றும் ''பெண்ணாளைச் சடையில் வைத்த'' (13) என்றும் சடை யழகையும் ''தாதவிழும் கொன்றையணி'' (58) என்றும் ''சிருலவுங் கங்கைதிங்கள் அக்கரவு கொன்றையணி'' (80) என்றும் அணியழகையும் ''வேழப் போர்வையைத் தரித்த'' (18, 79) என்று உடையழகையும் முத்தப்பர் பாடியுள்ளார். சிவபெருமான் தோற்றப்பொலிவை மிகச் சிறப்பாக இவர் பாடிப்போந்தார்.

சிவமெருமான் அணிந்த படைக்கலங்கள் பலவற்றையும் சதகம் சுட்டுகிறது. ''மழுவேந்தும் கரத்தாரே'' (4) (19); ''பாணி மழுவணி'' (39) ''பாணிதனில் மழுவணிந்த'' (41); ''பரசணியுங்கரத்தாரே'' (20); ''துய்யபினாகச் சிலையீர்'' (73); எனக் கருவிகள் சிவபெருமான் திருக்கரங்களில் திகழ்தலை முத்தப்பர் சுட்டுவர். ''மானணியுங்கரத்தார்'' (7) என்றும் ''மறிக்கிசைந்த கரத்தாரே'' (23) என்றும் இவர் சிவனைப் போற்றிப் புனைவர்.

முழுமுதற் கடவுள் :

ஆசிரியர் நேமங்கோயிலில் உள்ள வேறு எக்கடவுளையும் இச்சதகத்தில் குறித்தாரல்லார். சிவபெருமானையே முழு முதற்கடவுளாகக் கருதியமையால் அவரையே ஆசிரியர் போற்றுகிறார். அதனால் திருமாலும் இந்திரனும் வந்து பணிபுரிவதாகப் பாடியுள்ளார். ''கைத் திகிரியோன் பணியும்'' (17); ''ஆழிதனில் பள்ளிகொள்ளும் மால் பணியும்'' (51) ''பேச்சிமுலையுண்ட முகில் பணி செயங் கொண்டாரே'' (55); ''முகட்டா லிலையும் துயில்வோன் பணி செயும்'' (93, 47, 59) என்பன திருமால் பணிதலைக்

காட்டுவன. ''வெள்ளானைக்கு இறைபணியும் செயங் கொண்டாரே'' (14) என்பது இந்திரன் தொழுவதை உணர்த்துகின்றது. சிவனைப் பற்றிய புனைவில் பல்வேறு புராணக்கதைகளை அமைத்துச் சதகத்தை ஆசிரியர் சுவை தோன்ற அமைத்திருக்கிறார். அவை பின்வருமாறு:-

1. **அருச்சுனன்—சிவன் தொடர்பு**

அ) ''வில்லிசையன் தேர்வெல்லக் கணைகொடுத்த செயங்கொண்டார்'' (1)

ஆ) ''வில்லோடே மோதிய தோள் செயங்கொண்டார்'' (10)

மேருமலையை வில்லாக வளைத்தது

இ) ''பருவரையை வில்வளைத்த செயங் கொண்டார்'' (3)

ஈ) ''மேருவை வில்லாய் வளைத்த' (10)

உ) நாணரவால் பொன் மலையை வளைத்த'' (94)

ஊ) ''வடவரையைச் சிலையாக வளைத்த'' (98)

நஞ்சுண்டது

எ) ''விண்ணவர்க்காய் விடத்தை யுண்ட'' (53)

2. **நான்முகன் தலையைக் கிள்ளியது**

அ) ''செங்கையுகிரால் வேதன் சிரத்தில் ஒன்றைத் துணித்து விட்ட செயங் கொண்டாரே'' (11)

ஆ) ''நன்னய வேதன் சிரசைக் கரத்தினில்கொள் செயங்கொண்டாரே'' (38)

யமனை வென்றது

இ) ''செஞ்சரணத் தால்யமனை வென்றசெயங் கொண் டாரே'' (5)

மன்மதனை எரித்தது

ஈ) "தீப்போலே விழிகாட்டி மதனுடலை எரித்துவிட்ட
செயங்கொண்டாரே" (12)

உ) "நேத்திரத்தால் அனங்கனுடல் தனை யெரித்த
செயங்கொண்டார்" (36)

குபேரன் தோழமை

ஊ) "தனவானைத் தோழனென்ற செயங்
கொண்டாரே" (44)

எ) நிதியனைத்தோ ழமைவேண்டுஞ் செயங்கொண்
டாரே" (92)

சூரியன் பல்லுடைத்தமை

ஏ) "முன்பாத வன்எயிற்றைப் பறித்தெறிந்த
செயங்கொண்டார்" (37)

திருவிளையாடல் வரலாறு

ஐ) "மதுரையிலிந் தனம்வளையல் விற்றசெயங்
கொண்டாரே" (35)

ஒ) "பஞ்சவனுக் காய்மாறி நடித்த செயங்
கொண்டாரே" (43)

3. மண்டோதரி

அ) "கயல்விழி மண்டோதரிக்கு அருள்செய்
செயங்கொண்டார்" (27)

சிலந்திக் கருளியது

"சூச்சமறச் சிலந்திப்பூச்சியைக் கதிசேர்த்
திட்ட" (99)

மேலே காட்டிய கதைகள் அனைத்தும் சிவபெருமானுடைய செயல்கள்: அவற்றை எல்லாம் செயங்கொண்டார் மேல் ஏற்றி முத்தப்பர் சிவபெருமானைப் பணிகின்றார். இவை நூலில் நேரடியாக இடம்பெறாதவை.

தோற்றப் பொலிவைப் பாடியும் சிவன் நிகழ்த்திய திருவிளையாடல்களைச் சுட்டியும் பாடியாங்குப் பல்வேறு சிவநாமங்களைக் கூறியும் இச்சதகம் சிவபெருமானைப் போற்றுகின்றது. 'தற்பர சதாசிவனே' (32) என்றும் 'அண்ணலரனே' (60) என்றும் 'சம்பு மகாதேவ' (65) என்றும் போற்றுதலுக்குரிய பொதுமொழிகளால் முத்தப்பர் சிவனைப் பாடியுள்ளார்.

தமிழ்க் கடவுள் :

சிவனைப் பாடும் தமிழ்ப் புலவரெல்லாம் இறைவனைத் தமிழொடு இணைத்துப் பாடுதல் இயல்பாகும். செயங்கொண்டார் ''தண்டமிழுக்கு அருள் புரியும்'' (29) தகையாளர் என்பர், ஆசிரியர். தான் எண்ணியதை இனிமைத் தமிழ்க் கவிதை பாடி முடித்த முத்தப்பர் இவ்வாறு பாடுவது பொருத்தமானதாகும். மற்றோரிடத்துப் ''பாக்கியம் செந்தமிழுக்கு உதவும் செயங்கொண்டார்'' (62) என்று குறிப்பர். அகத்தியரைத் 'தெக்கணமாமுனி' (78) என்று கூறி, அவர் பரவும் இறைவர், செயங்கொண்ட சோழீசர் என்பர் முத்தப்பர். ''சுந்தரற்குத் தூது சென்றவர்'' (74) என்றும் ''போற்றிய சுந்தரர்க்காய் முறிகாட்டும் செயங்கொண்டார்'' (87) என்றும் சுந்தரமூர்த்தி நாயனாரொடு இச்சதகம் இணைத்துப் போற்றுகிறது. சிவபெருமானுக்கு என்று பொதுவாகச் சொல்லும் சிறப்புகளையே இவர் செயங்கொண்ட சோழீசருக்குக் கூறுகிறார். இத்தலத்துக்கு என்றோ இவ்விறைவருக்கென்றோ விதந்து சொல்லத்தக்க சிறப்பாக இந்நூல் யாதொன்றும் இயம்பவில்லை.

கவலை போக்கும் கடவுள் :

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''[9]

என்பது திருக்குறள். இறைவன் திருவடிகளில் மனத்தை வைத்தபோதுதான் சிந்தை வெங்கொடும் துயர்தீரும். எனவே செயங்கொண்டார் வழிபாடு மக்கள் மனக் கவலையை மாற்றும் மாண்புடையது.

''சினக்குமர(வு) அணிந்தடியார் மனக்கவலை
தீர்த்தருளும் செயங்கொண் டாரே''
(பா. எண். 42 அடி 3)

என்று பாடுவார் முத்தப்பர் பாராட்டிப் பரவுவார். திருவள்ளுவரின் திருக்குறட் கருத்தை எளிமைப்படுத்திக் கொடுத்திருக்கிறார், ஆசிரியர்.

திருத்தலச் சிறப்பு:

செயங்கொண்ட சோழீசர் திருக்கோயில் விளங்கும் நேமத்தையும் சதகப் பாடல்கள் புனைகின்றன. எதை விரும்பினாலும் தரக் கூடியது கற்பகத்தரு. அத்தருவைப் போன்ற நேமநகர்[10] என்று சதகம் பாடுகிறது. இச்சத கத்தில் நேமத்தைச் சுட்டும் போது 'தென்' என்பதை அடையாக்கியே ஆசிரியர் சுட்டுவர். ''காவடரும் தென் னேமச் செயங்கொண்டார்''(33) என்றும் ''வாவிதிகழ் தென் னேமம்''(66) என்றும் இயற்கை வளங்காட்டிப் புலவர் பாடுவர். நேமத்தில் என்றும் திருமண முரசு ஒலிப்பதாக (91) வும் இவர் கூறுகிறார். மங்கலம் நிறைந்த நேம நகர் என்பது கவிஞர் வாழ்த்து.

கோனாடு, கானாடு என்பது போலத் தென்னேமநாடு என்பதும் ஒன்று. ''சிவகங்கை நன்னாட்டவர் புகழும்

தென்னேம நாடு''(21) என்றும் ''செகத்தரசர் புகழவரும் தென்னேம நாடாதிப''(81) என்றும் நேம நாட்டைச் சதகம் குறிக்கும்.

சதகமும் கதைகளும் :

கதையை வைத்துப் பழமொழிகளை விளக்குவது எனத் திட்டம் அமைத்துக் கொண்ட பாடுவார் முத்தப்பர், பல்வேறு கதைகளைச் சதகத்தில் பயன்படுத்துவர். இவற்றில் இராமாயணம், பாரதம் போன்ற கதைகள் பல பழமொழி களை விளக்கப் பயன்படுகின்றன. ஆனால் ஆசிரியர் அக் கதைகளைத்தொடர்புப் படுத்தியோ கதை நிகழ்ச்சி வரிசைப் படியோ சொல்லவில்லை.

எந்த இலக்கியத்திலும் காணப்படாத கதைகளும் ஆசிரியரால் பயன்படுத்தப்பட்டுள்ளன.

> ''இந்நூலில் சில (கதைகள்) பழக்க வழக்கத்தில் உள்ளன போலன்றித் திரிந்து காணப்படுகின்றன......(பாஎண் 5) பார்வதிக்குச் சிவபெருமான் பிரணவப் பொருளை உபதேசிக்கும் போது முருகன் மறைந்து நின்று கேட்டதாகவும் அதனையறிந்த சிவபெருமான், அவரை மகரமீனாகச் சபித்ததாகவும் கூறப்பட் டிருக்கிறது. இந்தக்கதை, திருவிளையாடற் புராணத் தில், ஆலவாய்க் காண்டத்தில், நந்தியை மகரமீனா கவும் முருகனை ஊமைப் பிள்ளையாக ஆகும்படியும் சபித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது''[11]

இவ்வாறு இச்சதகத்தில் பல கதைகள் முரண்படுகின்றன. நினைவில் இருப்பதைக் கொண்டு நூலாக்கியமையால் இத் தகைய தவறுகள் ஏற்பட்டனவோ என்று கருதத் தோன்று கின்றது. வேறு சில கதைகளில் நிகழ்ச்சிகள் உண்மை யானவை. அவற்றுக்கு ஆசிரியர் புதிய விளக்கம் கூறுவர்.

மங்கைக்கு நிழல்

பாடுவார் முத்தப்பர் மனமுருகி வழிபடும் கடவுள் முருகப் பெருமானே. முருகப் பெருமான் மீது திருமுக விலாசம் இயற்றினார். முருகன் – வள்ளி ஆகியோரின் காதல் செய்தி தமிழ்நாட்டின் விருப்பத்துக்குரியது. குறவர் குலத்தில் பிறந்த வள்ளியம்மை, தினைப்புனம் காக்கச் சென்றாள். அங்கே முருகன் வேடுவனாய் வந்து அவளொடு உரையாடி நின்றான். அவ்வேளையில் வள்ளியின் பெற்றோர்கள் வரவே, முருகன் வேங்கை மரமாக மாறினான். வள்ளியின் தந்தை நம்பி, புதிதாக முளைத்து நின்ற வேங்கை மரம் பற்றித் தன் மகளிடம் கேட்டான். அவளோ, ‘இம்மரம் வந்த வகை அறியேன்; மாயம் போல் தோன்றுகிறது’ என்றாள். கச்சியப்பர், வள்ளியம்மை திருமணப்படலத்தில் இவ்வாறு இப்பகுதியைப் பாடியிருக்கிறார்.[12]

பாடுவார் முத்தப்பர், ‘பெண்ணென்றால் பேயும் இரங்கும், என்ற பழமொழியை விளக்க இதே கதையைப் பயன்படுத்துகிறார். கந்தபுராணச் செய்திக்கு முரணாக இவர் வள்ளியம்மைக்கு நிழல் தருவதற்காக முருகன் வேங்கை மரமானான் என்பர்.[13] இதனையே திருமுகவிலாசத்திலும் உரைப்பர்.

நளவெண்பாவும் நைடதமும் :

பல்வேறு காப்பியங்களைப் பயின்ற முத்தப்பர் அந்தக் கதைகளையும் இச்சதகத்தில் பயன்படுத்தியிருக்கிறார். பாடலில் அவர் அமைத்திருக்கும் தொடர்கள். காப்பிய இலக்கியப் பயிற்சியை உணர்த்துகின்றன.

நளன் கதை நாடறிந்த கதை. சிலப்பதிகாரம் போன்ற தமிழ்க் காப்பியங்களில் கூட நளன் வரலாறு காணப்படுகிறது. நளவெண்பா, நைடதம் போன்ற நூல்கள் நளன் வரலாற்றை விரித்துரைக்கின்றன. செயங்கொண்டார் சதகத்தில் நான்கு பாடல்களில் நளன் கதையைப் பயன்படுத்தி ஆசிரியர் பழமொழிகளை விளக்குவர்.

நளனைப் பாம்பு கடித்தமையைக் கூறிப் 'புண்ணியத்திற்கு உழும் எருதைப் பல் பிடித்துப் பார்த்ததுபோல்' என்ற பழமொழியை முத்தப்பர் விளக்கினார். இது நளவெண் பாவிலும் நைடதத்திலும் சொல்லப்பட்டது.[14] இவ்விரு நூல் களும் பாம்பு கடித்தது என்று கூறினவேயன்றி 'வடு' என் றுரைத்தில. இந்திரன் நளனை நாடித்தமயந்தியைத் தனக்கு மணமுடிக்க வேண்டினான். (42) இந்த வரலாற்றைக் கொண்டு 'உனக்கு மழை பெய்யும் இப்போது எனக்கிரவை நீர்தா' என்ற பழமொழியைப் பாடுகிறார்.

'கடுகு சிறுத்தாலும் காரம் போகாது' என்பதை விளக்க, நாடு நகரிழந்து வீமன் நகருக்கு இருதுபன்னனொடு நளன் வேற்றுவடிவில் வந்தபோது நடந்த நிகழ்ச்சியை இந்நூல் உரைக்கின்றது. தேர்ச்சாரதியாக வந்த நளனைத் தன் அமைச்சர்களை அனுப்பி வீமன் அழைத்துவரச் சொன்னான். அது தன் தகுதிக்குக் குறைவு என்று நளன் செல்லவில்லை. பின் நளனுடைய மாமன் வீமனே சென்று நளனை அழைத்து வந்தான். நிலை திரிந்தபோதும் நளன் தன் மதிப்புக் குன்றாமல் நடந்து கொண்டான். செயங்கொண்டார் சதகம் சொல்லும் இந்நிகழ்ச்சி நளவெண்பாவிலோ நைடதத்திலோ கூறப்படவில்லை.

''நாவிதன் சேதியறிந்தால் குடுமியைப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்''. இதனை விளக்க நளன் வரலாறே பயன்படுகிறது. புட்கரன் நளனொடு சூதாட வந்தான். அவன் நோக்கத்தை அறிந்து நளன் சூதாட்டத்திற்குப் போயிருக்கக் கூடாது. இதனை விளக்கும் சதகப் பாடலில் 'காவலன் புட்கர நளனைச் சூதாட வரவழைக்கும் கபடம்' (பா. எண். 66) என்பர் ஆசிரியர். இவர் 'கபடம்' என்று

சொல்லியதை நளவெண்பா, நைடதப் பகுதிகளொடு ஒப்பிடும்போது அந்நூல்களில் ஆசிரியர் நன்கு தோய்ந்தவர் என்று அறிய முடிகிறது.

நளன் முன்னே புட்கரன் சூதுக்கொடி எடுத்து வந்தான்·

''அடற்கதிர்வேன் மன்ன னவனேற்றின் முன்போ
யெடுத்தகொடி யென்னகொடி யென்ன— மிடற்சூது
வெல்லுங் கொடியென்றான் வெங்கலியா லங்கவன்மேற்
செல்லுங் கொடியோன் தெரிந்து''

இந்நளவெண்பாவில், புட்கரன் நளனைச் சீற்ற மூட்டிச் சூது விளையாடத் தூண்டவே 'வெல்லுங் கொடி' என்றான். இதனையே நைடதமும் 'வல்லடுசூதினி லேற்ற மன்னரை வெல்கொடி யீதென விளம்பினானரோ'[15] என்றுரைக்கும்- புட்கரன் 'வெல்கொடி' என்று சொல்லி நளனைத் தன் வலையில் விழவைத்தான். நளவெண்பா, நைடதம் இரண்டிலும் பயிற்சியுடைய ஆசிரியர் 'கபடம்' என்று அதனைக் குறிப்பிட்டார். இவ்வாறு நளவெண்பா, நைடதப் பயிற்சி முத்தப்பருக்குச் சதக இலக்கிய ஆக்கத்துக்குத் துணை நின்றிருக்கிறது.

இராமாயணமும் பாரதமும் :

இராமாயணம், பாரதம் போன்றவற்றிலிருந்து முத்தப்பர் நிறையக் கதைகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறார், வான்மீகி, கம்பர் ஆகிய இருவர் இராமாயணம் அன்றித் தெலுங்கு ரங்கநாத ராமாயணம் கூறும் நிகழ்ச்சியைச் சதகத்தில்(34) பயன்படுத்துகிறார். இராமாயணக்கதை இருபத்திரண்டு பாடல்களிலும் பாரதம் தொடர்பானவை பன்னிரண்டு பாடல்களிலும் காணப்படுகின்றன. செட்டிநாட்டிலும் செட்டியார்களிடையிலும் இராமாயணத்துக்குத்தான் பெரும் செல்வாக்கு, அதன் வெளிப்பாடுதான் சதகத்திலும் விளங்குகிறது.

இராமாயணம்

வரிசை எண்	பாட்டு எண்	செய்தி	பழமொழி
1	1	வான்மீகி இராம மந்திரம் சொல்ல முடியாமை—பின் மராமரப்பெயர் சொல்லி இராமகதை முழுவதும் சொன்னமை.	கல்விக் கழகு கசடற மொழிதல்
2	6	இராமன்—விசுவாமித்திரரொடு சென்று பயன் பெற்றமை	பெரியோரைத் துணைக்கொள்
3	7	கூனி முடிசூட்டு விழாவைத் தடுத்தமை	ஆனை நிழல் பார்க்கையிலே தவளை வந்து கலக்கிவிடும்.
4	8	இந்திரசித்து, நிகும்பலை அழிந்ததும் இராவணன்பால், இலக்குவன் கைவலுவு என்று சொல்ல அவனோ நான் நாளை அவனை ஓரம்பால் வெல்லுவேன் என்றல்.	எதிரிதளத்துக் கஞ்சிப் படைக்குப் போகாதவர்கள் நல்ல சேவகர்.
5	9	வாலி—சுக்கிரீவர் பிரிய இராமனுக்குச் சுக்கிரீவன் கடலடைத்துச் சீதையை மீட்டான்.	ஊரிரண்டானால் கூத்தாடிக்கு அழகு
6	15	அகலிகை கதை	கொண்டவன் தூற்றும் போது கூறையொக்கத் தூற்றும் .
7	19	மறைந்த வாலியைக் கொன்ற பழி, மறு பிறப்பில் தீர்ந்தது.	பழி கிழவனாகி விட்டுப் போற தில்லை.

8	21	வீடணன், பின்னிகழ்ச்சியறிந்து கூறியதை இராவணன் கேளாமல் போக எதிரிப் பக்கம் சேர்ந்து நிகும்பலை, இராவணன் வலி எல்லாம் கூறி இராவணன் வலிவைக் குறைத்தான்.	தம்பி பிறக்கத் தரையாம்
9	23	சூர்ப்பனகை இலக்குவனை விரும்பி எடுக்க அவன் மூக்கு முலை துணித்தான்.	சிறுக்கி மனதறியாமல் செடித னைக் கையால் துரத்தித்திரிந்த வாறே.
10	24	சீதையை இராவணன் சிறையிட்டான் அவள் தன் கற்பைக் காட்ட தீக்குளித்து வந்தாள்.	தான் பத்தினியானால் தேவடி யாள் தெருவிலேயும் தரிக்கலாம்.
11	32	இராவணன் முதல்நாள் போரில் இராமன் வலிகண்டான். மகோதரன் பேச்சைக் கேட்டுச் சுற்றத்தோடு அழிந்தான்.	துர்ப்புத்தி மந்திரியால் அரசுக் கீனம்
12	34	சூர்ப்பனகையின் மகன் சம்பு குமாரன், சிவபெருமானை நோக்கித் தவமிருந்து வாளைப் பெறும் போது இலக்குவன் குறுக்கே கையை நீட்டி அதனைப் பெற்றுக் கொண்டான். (இஃது அரங்கநாத இராமாயணம்—தெலுங்கு)	காத்திருந்தோன் பெண்டுதனை நேற்று வந்தோன் கொண்டு போன கணக்குத் தானே.
13	44	அகலிகை சாபமும் நீக்கமும்	அனுபோகம் தொலைந்திடும் போது ஔடதம் சித்திக்கும்
14	45	வீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்து அரசு பெற்றான். இராவணனுடன் இருந்தால்போர்க்குவந்து இறந்திருப்பான்.	நிழல் அருமை வெயிலில் தெரியும்.

15	55	இரணியன் 'இரணியநமா' என்று சொல்லுமாறு செய்தது.	நீச்சறியா மாந்தரை வெள்ளங் கொண்டுபோம்
16	69	வசிட்டர் திரிசங்குவைத்தள்ள விசுவா மித்திரர் திரிசங்குவை மேலே ஏற்ற திரிசங்கு மன்னன் இன்றும் தலைகீழாய்த் தொங்குகிறான்.	எதிராளி தனுவாலெய்த அம்பு கிடக்கையில் ஆளைக் கட்டினால் மெய்யினில் புண் ஆறிடாதே.
17	70	மாவலி, பூமியைக் கொடுக்கச் சுக்கிரன் தடுக்கக் கண்ணிழந்தானன்றோ	ராமராண்டாலென்ன? ராக்கத ராண்டாலென்ன?
18	76	மண்டோதரி, 'யாகத்தால் பயனில்லை; இனி இறப்பது உறுதி' என்றாள். இராவணன் 'நான் சாகப்பயப்படவில்லை; இராமன் பெயரிருக்கும்வரை என் பெயரும் இருக்கும் என்றான்.	சாகத்தான் துணிந்தவருக்குச் சமுத்திரம் முழங்காலளவு.
19	83	குசலவர் குதிரையைக் கட்டித் தந்தை இராமனை வென்றனர்.	தகப்பனொரு பாக்கு; பிள்ளை யொரு தோப்பு
20	84	பரசுராமன் தாயுடலில் பறைச்சி தலை வைத்தமை	எண்சாண் உடம்பில் சிரசு பிரதானம்
21	91	மருத்துமலை கொண்டுவந்த அனுமனை இந்திரசித்து நாகபாசத்தால் கட்டினான்.	வலியாருக்கு வலியார் இருப்பர்
22	95	மயிலிராவணன் இராவணனைச் சேர்ந்து அழிந்தான். வீடணன் இராமனைச் சேர்ந்து அரசன் ஆனான்.	துச்சனர்தானுறவு கண்டால் தூரப்போ.

பாரதத் தொடர்பு

வரிசை எண்	பாட்டு எண்	செய்தி	பழமொழி
1	3	பாண்டவர், பங்காளி கொடுமையால் காடாண்டு தருமர் செய்த நன்மையால் உலகையாண்டார்.	தருமமே தலைகாக்கும் அதர்மமே அழிந்திடும்.
2	14	துரியோதனனைச் சக்கரவாளப் பறவை தூக்கிச் செல்லத் தருமன் காப்பாற்றி னான்.	முள்ளாலே எடுப்பதுவைக் கோடரியால் எடுத்தமுறைமை
3	18	வீமனைப் புருஷாமிருகம் பற்றத் தருமர் அறங்கூறிய சிறப்பு	நாழிப்பால் வார்த்தாலும் நடுச் சொல்வார் அறிவுடையார்.
4	25	துரோணர் கிணற்றுள் விழுந்த பவுத் திரத்தை அம்பிட்டு எடுத்ததைக் கண்டு அர்ச்சுனனும் அவ்வாறே செய்தான்.	கண்டது கற்கின்றவன் பண்டித னாவான்
5	35	விதுரன், கன்னன் ஆகியோர் எதிரியை வெல்ல நினைக்கவில்லை.	குதிரை நடவா விடில் மாவுத்தர் பறந்திடுவாரோ கொக்காய்த் தானே
6	37	தருமர் அசுவத்தாமா எனும் யானை இறந்தது என்று களத்தில் சொன்னார்.	தன் பானைசாயத்தான் பிடிப்ப துண்டோ

7	38	துரோணரை ஓணான் கொண்டுபோகிறது என்றதும் அம்புவில் ஆகியவற்றுடன் ஐவரும் போருக்குப் புறப்பட்டனர்.	சின்னப்பாம்பானாலும் பெரிய கம்பாலடி
8	51	கன்னன் எண்ணெய்க் கிண்ணத்தை இடது கையால் கொடுக்க; ஏன் என்று மறையோன் கேட்க; மனம் மாறி விடும் என்று அஃவன் சொன்னான்.	நாளையென்பார் கொடை தனக்குச் சடுதியிலே இல்லை யென்பார் நல்லோர்தானே.
9	54	கண்ணனிடம் தாய் சென்று பஞ்சவர் மீது ஒரு முறையே கணையை ஏவுக என்று வேண்டினாள்.	வெள்ளம் வருமுன் அணையைக் கோலிவைப்போர் காரியங்கள் மிக நன்றாமே
10	61	துரியோதனன் பாண்டவர்க்கு ஐந்து நிலம் தாரேன் என்றான். பின்னோ போரில் மாண்டு உலகம் மூன்றும் விட்டான்.	ஆற்றோடே போனாலும் போவ தல்லால் ஓடக்காரனுக்கு அரைக் காசும் கொடுக்கப் பொருந் திடாரே.
11	78	துரோணர் மனைவியைப் பிறந்த மேனி யாகப் பார்க்க வேண்டும் என்று சிவன் ஆசைப்பட்டான். அவ்வாறு சூழல் அமையச் சிவனுடைய இந்திரியம் வெளிப் பட்டது.	இச்சையுள்ள காமனுக்குக் கண்ணுகண்ட விடத்தில்
12	94	அருச்சுனன் உயிர் பிழைக்க என்ன செய் வோம் என்று கருதிக் கிருஷ்ணன் சக்கரத் தால் சூரியனை மறைத்தான்	வேணுமென்று நூற்றால் மெல்லிய நூலாய் நூற்றிடுவராம் மின்னார்தானே.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை போன்ற காப்பியச் செய்திகள் நூலில் இல்லை.

சதகமும் புலவர்களும் :

பழமொழிகளை விளக்கத் தான் கேட்ட பல்வேறு வரலாறுகளையும் கதைகளையும் ஆசிரியர் கையாண்டிருக் கிறார். தமிழ்நாவலர் சரிதையிலுள்ள அச்சுதவாணன் (39) வரலாறு, போன்றவை இச்சதகத்தில் காணப்படுகின்றன. இவற்றையன்றி வேறுபல கதைகளும் இச்சதகத்தில் பயில் கின்றன. புலவர்களின் காலம் தெளிவாக அறியப்படாத நாளில், வெவ்வேறு காலங்களில் வாழ்ந்தவர்களைச் சம காலத்தவர்களாகக் கொண்டு பாடிய பாக்களும் இந்நூலில் உள்ளன.

நக்கீரரைப் பற்றி இரண்டு பாடல்கள் கூறுகின்றன. ஒன்று தருமி பாட்டில் நக்கீரர் குற்றம் கண்டுபிடித்ததையும்,[16] மற்றொன்று, நக்கீரர் நிட்டையை விடுத்து நீர்க்கரை யில் வேடிக்கை பார்த்த குற்றத்துக்குக் குகையிலடை பட்டதையும்[17] கூறுகின்றன. இதே வரலாற்றைக் குன்றக் குடி முருகன் தோத்திரத்திலும்[18] ஆசிரியர் பாடுவர்.

கம்பர்,[19] சத்திமுற்றப் புலவர்,[20] கணிகண்ணன்,[21] பட்டினத்தார்,[22] அம்பிகாபதி,[23] போன்ற புலவர்களையும் வட மொழிப் புலவன் காளிதாசனையும்[24] பற்றிய கதை களை அமைத்துச் செயங்கொண்டார் சதகம் பாடப் பட்டுள்ளது. பல கதைகளி மக்கள் வழக்கில் உள்ளவை. செயங்கொண்டார் சதகப் பதிப்புகளுக்குகிடையே பாட பேதங்கள் மிகுதியாகவுள்ளன. புலவர் பெயர்கள் கூட ஒன்றுக்கு ஒன்று பெரிதும் வேறுபடுகின்றன. அம்முரண் பாடு, புலவர் பற்றிய செய்திகளை மேலும் குழப்புகின்றன.

கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த நிரம்ப அழகிய தேசிகர் சேதுபுராணம், திருவையாற்றுப்புராணம் திருப்பரங்கிரிப் புராணம், திருவருட்பயன் உரை முதலியன யாத்தவர். குன்றக்குடிக்கு அருகே உள்ள துழாவூர் ஆதீனத்தின் முதல் குரு இவரே. நாட்டுக்கோட்டை நகரத் தார் பெண்களுக்கு, இம் மரபினரே உபதேசம் செய்வர். இன்றும் செட்டியார் வீட்டுப் பெண்கள் இங்குத்தான் உபதேசம் பெறுகின்றனர்.

துழாவூர் ஆதீன முதல்வர் நல்ல கறுப்பாக இருந்தார்; அதனால் அரசன் அவரை 'அண்டங்காக்கை' என்றான். உடனே அப்பெரியார் 'நீயே அண்டங் காக்கை' என்றார். இதனைப்

''பொன்னார்செல் வமும்தமிழும் பொருந்தரசன்
தருக்கதனால் புலவருக்குள்
மன்னான நிரம்பவழ கியரையண்டங்
காக்கையென வழுத்தக் கேட்டே
அன்னார்நீ யேயண்டங் காக்கையென்றார்
செயங்கொண்டார் அணிகொள் நாட்டில்
தன்னாலே தான்மெலிந்தால் அண்ணாவி
என்செய்வான் தரணி மீதே'' (86)

என்று செயங்கொண்டார் சதகம் பாடும். இதற்குச் சென்னைக் கீழ்த்திசை சுவடிகள் நூலக வெளியீடான 'செயங்கொண்டார் வழக்கம்' முற்றிலும் வேறுபட்ட பாடலைத் தந்துள்ளது. அப்பாட்டில் கம்பரும் புகழேந்தியும் தொடர்பு படுத்தப்பட்டுள்ளனர்.[25]

முரண்பட்ட வரலாறுகள் :

செயங்கொண்டார் சதகத்தில் சொல்லப் பெறும் இரண்டு வரலாறுகள் இங்குக் குறிக்கத் தக்கவை. அவை

இலக்கிய வரலாற்றுக்கும் நாட்டு வரலாற்றுக்கும் முற்றிலும் வேறுபட்டவை. இந்தச் செய்திகளைப் புலவர் எங்குப் பெற்றார் என்பது புலனாகவில்லை.

கருணாகரத் தொண்டைமானின் கலிங்க வெற்றியைப் பாடுவார் முத்தப்பர்.

''சுத்துமளக் கலிங்கமென்னும் கடல்சூழும்
சிக்காந்தத் துருவந் தன்னை
எத்துவிலை மாதர்களால் பண்டுகரு
ணாகரன்வென் றெடுத்தா னன்றோ''

(பா. எண். 17 அடி 1-2)

என்று செயங்கொண்டார் சதகம் பேசுகிறது. பிற்காலச் சோழராட்சியில் நடைபெற்ற கலிங்கப் போரைப் பற்றிப் புதுமையான வேறெங்கும் காண முடியாத குறிப்பை இப் பாடல் தருகின்றது. செவிவழிச் செய்தியாக வழங்கியதைப் பாடுவார் முத்தப்பர் ஈண்டுக் குறிக்கின்றார் போலும்.

மன்னர்களிடையே ஏற்படும் போரில், படைவீரர் களொடு பரத்தையரும் துணை நிற்பது உண்டு. பிரச் சோதனையால் சிறைவைக்கப்பட்ட உதயணனை மீட்கும் போது, யூசி பரத்தை மகளிர் துணையைப் பயன்படுத்து கிறான். பரத்தையர்கள் உஞ்சை நகரத்தில் எரியூட்டிக் குழப்பம் விளைவிக்கின்றனர்.

''மட்டணி மூதூர் மனைதொறும் மரீஇய
கட்டணி கூந்தற் கள்ள மங்கையர்
அட்டிலு மறையும் விட்டெரி கொள்ளலின்''[26]

என்ற பெருங்கதைப் பகுதி இதற்கு நல்ல சான்று. இவ்வாறு கருணாகரன் கலிங்க நாட்டை வெல்லப் பரத்தையர் துணையை மேற்கொண்டான் போலும். பிற்காலச் சோழ

ராட்சியில், திருக் கோயில்களை ஒட்டித் தேவரடியார் மிகுந்திருந்தனர். அவர்கள் கலிங்கப் போரில், சோழர் படைத் தலைவனுக்குத் துணை நின்றனர் போலும். இதனை உறுதி செய்ய வேறு சான்றுகள் கிடைக்கவில்லை.

பாடுவார் முத்தப்பருக்கு, இந்த வரலாற்றுக் குறிப்பு எங்குக் கிடைத்தது என்பது புலனாகவில்லை. கலிங்கப் போரில், பரத்தையர் துணையைத் தொடர்புபடுத்த கலிங்கத்துப் பரணியிலுள்ள கடைதிறப்பே அடிப்படை யாகும். கலிங்கத்துப் பரணி முழுமையும் போரையும் படை வீரர் வீரத்தையும் பேசுவதாகும். புறப்பொருள் தழுவிய பரணியில் அகப்பொருள் நிறைந்த கடைதிறப்பு ஏன்? அக்கடைதிறப்பும். மங்கையரே கபாடம் திறமின் என்று பாடுகிறது. காமச்சுவையும் கவிச்சுவையும் நிறைந்த கடை திறப்பு, வீரமும் போரும் பற்றிய நூலில் இடம் பெறு வானேன்? என்று எழுந்த ஆராய்ச்சியே, கலிங்கப் போரில் பரத்தையர் கருணாகரனுக்கு உதவினர் என்ற கதை எழக் காரணமாயிற்று.

புறப் பொருளில் அகப்பொருளை இடைமிடைந்து பாடுவதேன் என்ற திறனாய்வு வினாவின் விளைவுதான் இத்தகைய கதைகள் பிறக்கக் காரணமாகும். தமிழ் நாட்டு வரலாற்றை அறியாத நாட்டுப்புற மக்களிடையே வழங்கிய கதையினைப் பாடுவார் முத்தப்பர் ‘புத்திமான் பலவான் ஆவான்’ என்ற கதையை விளக்கப் பயன்படுத்துகிறார்.

மாணிக்க வாசகரின் திருச்சிற்றம்பலக் கோவையைச் செயங்கொண்டார் சதகம் குறித்து அதுதொடர்பான கதை ஒன்றையும் தருகின்றது. இப் பாட்டு, சென்னை அரசு கீழ்த் திசைச் சுவடிகள் நூல் நிலைய வெளியீட்டில் மட்டும் உள்ளது. பிற பதிப்புகளில் நக்கீரர், தருமி வரலாற்றைக் கூறும் பாட்டாகக் காணப்படுகிறது.

கீழ்த்திசைச் சுவடிகள் நூல் நிலைய வெளியீட்டிலுள்ள பாட்டு

"அத்தர் கையா லெழுதவுமை விளக்கேந்த
வரதர் ஓரானே கூறும்
நத்திருசித் தம்ப (ல)க்கோ வைமதுரைச்
சங்கத்தார் நாவி லொன்று
குத்தமெனத் தள்ளினர்சற் றுள்பயமில்
லாதசெயங் கொண்டா ரேசொல்
வித்துவான் மதயானை இரண்டுமொப்பென்
றுரைப்பதுவும் மெய்ய தாமே" (பா. எண். 77)

என்பதாகும். மாணிக்கவாசகரின் திருச்சிற்றம்பலக் கோவை யாரில், மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் குற்றம் கண்டு கூறியதாக இந்தப் பாட்டுத் தெரிவிக்கின்றது. இப்பாட்டின் பழையவுரை

> "திருக்கோவையாரிலுள்ள நானூறு பாடல்களில் நூறு பாடல்களைச் சங்கத்தார் குற்றம் கூறித் தள்ளினர்: சங்கப் புலவருள் ஒருவரான கல்லாட (க)ர் பரமசிவன் கையெழுத்து மாணிக்கவாசகர் பாடல் தள்ளப் போகாது என்று கூறினார்; சங்கப் புலவர்களோ 'யார் பாடினால் என்ன? குற்றம் குற்றந்தான்' என்று தள்ளிப் போட்டார்கள். அதன்பின் கல்லாடர் தள்ளப்பட்ட நூறு பாட்டிற்கும் நூறு கல்லாடக அகவல் பாடி அந்த நூறு பாடல்களையும் ஒப்பேற்றினார்"[27]

என்று விளக்குகிறது. திருச்சிற்றம்பலக் கோவையாரை மட்டும் சதகப் பாடல் பேச, உரையோ அதனைக் கல்லாடத்துடன் இணைத்துப் பேசுகிறது.

இடைக்காலத்தில், புலவருக்கும் தமிழ் அன்பர்களுக்கும் படித்தற்கு ஏட்டுப் பிரதிகள் கிடைக்காமையால், இத்தகைய பொய்யான செய்திகள் புலவர்களிடையே பரவின. திருக்

கோவையாரிலுள்ள நூறு துறைகளை எடுத்துக் கல்லாடர் கல்லாடம் பாடினார். இவ்வாறு பாடியமைக்குச் சதக உரை ஒரு புதுக் கதை கூறுகின்றது. இப்புதுக் கதை, நக்கீரர்—தருமி கதையைத் தழுவி எழுந்தது. அதனால் செயங் கொண்டார் சதகத்திலுள்ள இந்தப் பாட்டு, வேறு பதிப்பு களில் நக்கீரர் வரலாற்றைச் சொல்லுவதாகக் காணப் படுகிறது.

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழ்ப் புலவரிடையே நாட்டு வரலாறு தமிழிலக்கிய வரலாறு ஆகியன பற்றிய கருத்துகள் எந்த அளவுக்கு இருந்தது என்பதை இவ்விரு பாடல்களும் இவற்றின் உரையும் உணர்த்துகின்றன.

அடிக்குறிப்பு

1. செயராமன். ந. வீ. (1981) - பாட்டியலும் இலக்கிய வகைகளும், சென்னை ப. 382.
2. குமரகுருபரன் பிள்ளை. டி. எம். (பதி) (1959) - செயங்கொண்டார் வழக்கம், திருப்பனந்தாள் - பாயிரம் பா. எண். 4 அடி எண் 2
3. சிவகாமி. ச. (1985) தமிழ்ச்சதக இலக்கியம், சென்னை. ப. 60
4. குமரகுருபரன் பிள்ளை டி. எம். (1959) - செயங் கொண்டார் வழக்கம், திருப்பனந்தாள். ப.7
5. மேற்படி
6. நடராஜன் நா. (1949) - பாடுவார் முத்தப்ப செட்டியார். கீழ்ச்சிவல்பட்டி பக். 42-43
7. மேற்படி ப. 45

8. இராமநாதன் செட்டியார். அ. வயிநாகரம் (தொ. ஆ) (1953) - நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, ப.53
9. புலியூர்க்கேசிகன் (பதி) (1976) - திருக்குறள் பரிமேலழகர் உரை. பா. எண். 7.
10. குமரகுருபரன் பிள்ளை. டி. எம். (பதி) (1959) - செயங்கொண்டார் வழக்கம், திருப்பனந்தாள். பா.எண். 224 எண். 3.
11. சந்திரசேகரன். தி. (பதி) (1955) - செயங்கொண்டார் வழக்கம், உரை விளக்கத்துடன். சென்னை. ப,
12. கச்சியப்பர் - கந்தபுராணம் - வள்ளியம்மை திருமணப் படலம்.
13. குமரகுருபரன் பிள்ளை. டி. எம். (பதி) (1959) - செயங்கொண்டார் வழக்கம். திருப்பனந்தாள். பா. எண். 13
14. — நளவெண்பா
15. — நைடதம்
16. குமரகுருபரன்பிள்ளை. டி. எம். (பதி) (1959) - செயங் கொண்டார் வழக்கம், திருப்பனந்தாள். பா. எண். 77
17. மேற்படி—பா. எண். 97
18. நடராஜன். நா. & நாகப்பன். ராம (பதி) (1951) திருமுக விலாசமும் முருகன் தோத்திரமும். ப. 20 பா. எண். 4
19. மேற்படி — பா. எண். 11
20. மேற்படி — பா. எண். 80
21. மேற்படி — பா. எண். 82
22. மேற்படி — பா. எண். 73
23. மேற்படி — பா. எண். 20

24. மேற்படி — பா. எண். 75

25. சந்திரசேகரன். தி. (பதி) (1955) - செயங்கொண்டார் வழக்கம் உரைவிளக்கத்துடன். சென்னை. பா. எண். 86

26. சோமசுந்தரனார். பொ. வெ. (பதி) - பெருங்கதை முதற்பகுதி : உஞ்சைக்காண்டம் - ஊர்தீயிட்டது. அடி எண். 115 - 117

27. சந்திர சேகரன். தி. (பதி) (1955) - செயங்கொண்டார் வழக்கம் உரைவிளக்கத்துடன். சென்னை. பக். 72 - 73 திருக்கோவையாரின் நூறு பாடல்கள் தள்ளப்பட்டன என்பதை நோக்கும்போது இந்த வரலாறு மிக வேடிக்கையாக உள்ளது. அந்தப் பாடல்கள் சிறந்தவை என்று காட்டக் கல்லாடம் இயற்றப்பட்டது. திருக் கோவையாருக்கும் கல்லாடத்துக்கும் உள்ள தொடர் புக்கு இத்தகைய விளக்கம் வாய்மொழியாக வழங்கியதை இப்பாட்டு உணர்த்துகிறது.

இனநலம் நாடும் புலவர்

பாடுவார் முத்தப்பர் தன் இனமக்கள் நிறைந்த செல்வத் துடனும் அறப்பயனொடும் வாழ வேண்டும் என்று எண்ணினார். காவிரிப்பூம்பட்டினத்தில் மன்னர் போற்ற வாழ்ந்த நகரத்தார்கள், பாண்டி நாட்டில் கூரைக் குடிசை யில் வாழ்ந்தது இவர் தம் உள்ளத்தை வருத்தியது. ஆதலின் நகரத்தார் அனைவரும் குபேரனைப் போலச் செல்வ முடையவர்களாக விளங்க வேண்டும் என்று முத்தப்பர், தான் பாடிய பாடல்களிலும் நூல்களிலும் கடவுளரை வேண்டினார்.

கவிஞர் கருத்து :

நகரத்தார் மரபைச் சார்ந்த முத்தப்பர் தன் இன மக்களொடு பழகி உறவாடியவர். பல்வேறு சூழல்களில் இப்புலவர், தனிப்பட்டவர்களையும் ஊர்மக்களையும் பாடினார்; ஆனால் தன் குடும்பத்தைச் சார்ந்தவர்களைப் பாடியதாகத் தெரியவில்லை. இவர் 'தன் இனத்தார் அனைவரும் செல்வத்துடன் வாழ வேண்டும்; அவர்கள் பல்வேறு அறங்களும் கோயில் திருப்பணிகளும் செய்ய வேண்டும்' என்ற கருத்துடையவர்.

பொருட்சிறப்பு :

உலகில் பொருளுடையார்க்குத்தான் பெரு மதிப்பு.

திருவள்ளுவர்

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்."[1]

என்று பொருளின் மதிப்பை உரைத்தார். செல்வமுள்ளவன் செலுத்தும் பாதையில்தான் உலகம் செல்லும். பாடுவார் முத்தப்பர் பொருட்செல்வத்தின் வலிமையை யுணர்ந்து, நகரத்தார்கள் செல்வ வளமுடையவர்களாக வாழ வேண்டும் என்று பாடிப் போந்தார். அவர் வாக்குப் பலிதமுடைய கவிஞர் என்பதால் அவர் பாடியவை எல்லாம் நடந்துள்ளன

என்றைக்கும் நீங்கா திரு :

செல்வத்திற்கு அதிபதியான கடவுள் திருமகள்; இவளை இலக்குமி என்றும் போற்றுவர். திருமகளை விளித்துப் பாடுவார் முத்தப்பர் மூன்று பாடல்கள் இயற்றியிருக்கிறார். அந்தப் பாக்களில் அவர் திருமகளைப் பணிவுடனும் அழுத்தத்துடனும் நகரத்தாரை விடுத்து நீங்காமல் இருக்க வேண்டும் என்று வேண்டுகிறார். அதில்

காடுவெட்டிப் போட்டுக்கூடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர்—வீடுகட்கு
அன்றைக்கு வந்தஎங்கள் அம்மா! இலக்குமியே!
என்றைக்கும் நீங்கா திரு

என்ற பாட்டு, செட்டிநாடு முழுதும் பரவிய பாட்டு; செட்டியார்கள் போற்றும் பாட்டு. நகரத்தார்கள் குடிசையில் வாழ்ந்த நிலைமாறி வீடுகட்டிக் கொண்டிருக்கும் காலத்தில் வந்த திருமகள் என்று புலவர்பேசுகிறார். திருமகளைத் தன் இனத்துக்கு மட்டும் உரிமைப்படுத்தி 'எங்கள் அம்மா! இலக்குமியே!' என்று பாடுகிறார். அச்செல்வ மகளை என்றைக்கும் நீங்காது இரு என வேண்டுகிறார்.

அன்பர்களிடத்தில் சிலர் அன்பொடு நடந்து கொள்வார் கள்; சிலர் பண்பொடு நடந்து கொள்வார்கள். பெரியோர் களிடம் தகுதி குறையாமல் நடந்து கொள்ளுதல் வேண்டும். அவர்களிடம் முறை தவறி நடந்துகொண்டால் அவர்கள் புறக்கணித்துப் போய் விடுவார்கள். இஃது உலகத்தியற்கை. திருமகள் என்றும் நகரத்தார்களை விட்டு நீங்காமல் இருக்க வேண்டும் என்று விரும்பிய முத்தப்பர், தவமாவணிகச் சின்னஞ் சிறுவர் தெரியாத காளையர் என்செய்யினும், திருமகளே! அக்குற்றம் குறைகளைப் பொறுத்து அவர் களிடமே இருக்க வேண்டும் என்று முத்தப்பர் வேண்டி நிற்கிறார். அவருடைய வேண்டுதல்,

"அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்"[1]

என்னும் வள்ளுவ நெறியின் பாற்பட்டது. இதனை முத்தப்பர் வெறும் கருத்தாகச் சொல்லவில்லை. திருமகள், திருமால், தமிழ்க்கடவுள் முதலிய தெய்வங்களின் மீது ஆணையிட்டு அறைகின்றார்.

மூன்றாவது பாடலில், ஆசிரியர் பாற்கடல் போல் நகரத்தார் செல்வம் பெருக வேண்டும் என்று நகரத்தாரிட மிருந்து நாளும் வளம் பெருக்கி என்றைக்கும் நீங்காதிரு என்றும் திருமகளை வேண்டுவர்.[3] இம்மூன்று பாடல்களும் நகரத்தார்களின் செல்வச் செழிப்புக்கு வழி வகுப்பனவாய்த் திகழ்கின்றன. இம்மூன்று பாக்களும் எக்காலத்துப் பாடியன என்று தெரியவில்லை. ஆனால் அவை நகரத்தார்கள் பெருஞ் செல்வத்துடன் வாழ வேண்டும் எனத் திருமகளைப் பாடியவை. இவற்றில் கூறிய கருத்துகளே பல்வேறு சமயங்களில் பாடிய பாடல்களிலும் நூல்களிலும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

திருமகளும் சிவபெருமானும் :

பாடுவார் முத்தப்பர், நகரத்தார்கள் செல்வவளம் பெற்றுப் பெருக வேண்டும் என்று திருமகளை விளித்து மூன்று பாடல்கள் பாடியுள்ளார். இவற்றையன்றி நகரத்தார்களின் மேல், ஒவ்வொரு பாட்டின் முதலெழுத்தைச் சேர்த்தால் பஞ்சாட்சர மந்திரம் கிடைக்குமாறு ஐந்து பாடல்களை இயற்றியிருக்கிறார். இலக்குமியை (திருமகள்) வேண்டிப் பாடிய பாடல்களில் நகரத்தார்களுக்குச் செல்வம் சேர வேண்டும் என்று மட்டும் பாடினார்! ஐந்தெழுத்து மந்திரத்தை அமைத்த பாக்களில் செல்வமும் வேண்டும்; அறமும் திருக்கோயில் திருப்பணிகளும் செய்யவேண்டும் என்று வேண்டினார். முழுமுதற் கடவுளான சிவபெருமானைப் பாடும் போது புலவரின் அறமனம் மேலோங்கி நிற்கின்றது.

குபேரர் எனும் வாழ்த்து :

நகரத்தாரினம் செல்வர்களாய்க் குபேரனைப் போல வாழ வேண்டும் என்று பாடுவார் முத்தப்பர் வாழ்த்துகிறார். குபேரன் தெய்வ உலகின் செல்வன். அந்த ஒருமைக்குரிய பெயரைப் பன்மையாக்கி நகரத்தாரையெல்லாம் 'குபேரர்' என்று புலவர் போற்றுகிறார். 'குபேரர் நகர் வணிகர்'[4] என்று இம்மரபினரை வாழ்த்துவது புலவரின் நோக்கத்தைக் காட்டுகிறது.

சங்கநிதி, பதுமநிதி என்னும் இருவகைச் செல்வங் களைப் பெற்றுச் செல்வனாய்த் திகழ்பவன், குபேரன். எனவேதான் 'குபேரர் நகர்வணிகர்' என்றே உலகம் புகழ அவர்க்கு ஈண் டிருநிதியம் 'நின்றே நிலவ'[5] என்றும் 'குபேரர் நகர்வணிகர்' என்னும் மகிமை யுறவும் ... பொன்னும் பொருளும் புவியுமுப் போகம் பொருந் திடவும்'[6] என்றும்

பாடுவார். திருமுகவிலாசத்தின் விநாயகர் காப்பிலும் 'இருநிதியஞ் சேருகின்ற வேழ் நகரத்தார்'' என்றே சுட்டுவர்.

பஞ்சாட்சரவர்க்க பூஷணம் என்னும் ஐந்து பாடல்களில் இரண்டில் நகரத்தார் ஒவ்வொருவரும் குபேரனைப் போல விளங்க வேண்டும் என்று வாழ்த்தினார். அவ்வாறு வாழ்த்தியவர், நான்காவது பாட்டில் நகரத்தாரெல்லாம், குபேரனைக் காட்டிலும் பெருஞ்செல்வராய் வாழ்தல் வேண்டும் என்று வாழ்த்துரைக்கின்றார். பஞ்சாட்சரப் பதிகத்தின் நான்காவது பாட்டு முழுமையும் நகரத்தார்கள் செல்வராய் விளங்க வேண்டும் என்று கூறுகிறது. அப் பாடல் பின்வருவது :

''வந்தார்க் குதவும் வணிகர்
குபேரனாம் வள்ளலுக்கும்
பிந்தார் தனத்தி லிவரே
யுலகில் பெரிய ரெனச்
சிந்தார் புரமிளை யாத்தங்
குடியார் சிறப்புறவும்
சொந்தார்சோ ழீசர் செயங்கொண்டார்
பாதம் துதிக்குதுமே''

குபரேனை விடச் செல்வத்தில் இம்மரபினர் பெரியராய் இருக்க வேண்டும் என்பது ஆசிரியர் ஆசை.

வணிகமும் அறமும் வளர்க :

பஞ்சாட்சரப் பதிகத்தின் ஐந்தாவது பாட்டு, நகரத்தார் களின் வணிகவளம் சிறப்படைய வாழ்த்துகிறது. நகரத்தார் களின் வணிகவளம், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெருக வேண்டும். யவனம், கலிங்கம், சிங்களம் எனப் பலநாடு களிலும் வணிகம் வளரச் செயங்கொண்டாரைப் பணி

கின்றார். மலேசியா, சிங்கப்பூர், செய்கோன், ரெங்கோன் போன்ற ஊர்களை அயல்நாட்டு வணிக மையங்களாக இப் பாடல் இயம்பவில்லை. இப்பாடலில் நகரத்தார்களின் 'வர்த்தகம்'[9] ஓங்க வேண்டும் என்பர் ஆசிரியர்.

கொடை வளம் சிறக்க:

நகரத்தார்கள் செல்வம் தேட வேண்டும்; வணிகம் வளர வேண்டும்; இருநிதியம் பெற்று வாழ வேண்டும் என்று மட்டும் முத்தப்பர் வாழ்த்தவில்லை. சேர்ந்த செல்வத்தைச் செவ் வனே செலவிட வேண்டும் என்பதும், அறம் செய்ய வேண்டும் என்பதும் பாடுவார் முத்தப்பரின் விருப்பம். இவர் நகரத்தார் களுக்குப் பொருள் சேர வேண்டும் என்று வாழ்த்தியதோடு அமையாது, அறமும் செய்யவேண்டும் என்று வாழ்த்தி யிருக்கிறார். எனவே பாடலில் 'அறமும் கனமும் நெடிது பெற'[9] என்றும் 'வறியவர்க்கு ஈந்திடவும்'[10] என்றும் நகரத்தார்களுக்குக் கொடை மனம் அமைய வேண்டும் என்றும் ஆசிரியர் வேண்டுவர்.

நகரத்தார்களுக்குச் சமய உணர்வு மிகுதி. அதுவும் சைவ சமயத்தில் பேரீடுபாடு உண்டு. சைவசமய உணர்வொடு வைணவப் பணியும் இவர்கள் ஆற்றுவர். பஞ்சாட்சரப் பதிகத்தின் மூன்றாம்பாட்டு, இம்மரபினர் திருக்கோயிற்பணி செய்யவேண்டும் என்று பாடுகின்றது.[11]

இந்தப் பஞ்சாட்சரப் பதிகப் பாக்கள் நகரத்தார்கள் செல்வம், அறம், சமயத்திருப்பணி ஆகிய மூன்றிலும் முதன்மை பெற்றிருக்க வேண்டுகின்றன. இவற்றைப் பாடிய பாடுவார் முத்தப்பர் வாக்குப் பலிதமுடைய கவிஞர் என்று ணர்ந்து அவர் வாழ்த்த வேண்டும் என்று அன்பர்கள் விரும் பினர். அவர்கள் அவாவினை நிறைவேற்றிப் புலவர் அரிய பாடல்களைக் பாடித்தந்திருக்கின்றார்.

இந்த ஐந்து பாடல்களின் இறுதியடிகள் அனைத்தும் ஒன்றுபோல, நேமம் கோயில் சிவபெருமானான செயங் கொண்ட சோழீசரை வணங்குதலைக் கூறுகின்றன. ஆதலின் இவை நேமங் கோயிலில் பாடப்பட்டவை என்றும் செயங் கொண்டார் சதகத்தை நேமத்தில் அரங்கேற்றிய போது இந்த ஐந்து பாடல்களை நகரத்தார் வேண்டுகோளுக்கு இணங்கப் பாடுவார் முத்தப்பர் பாடினார் என்றும் கொள்ளுதல் சாலும்.

கோட்டையூர் வாழ்த்து :

திருமகளை விளித்துப் பாடியதும் செயங்கொண்ட சோழீசரை வணங்கிப் பாடியதும், பொதுவாக எல்லா நகரத் தார்களையும் கருதிப் பாடியவை. இவ்வாறன்றிச் சில ஊர்களில் வாழும் நகரத்தார்களை மட்டும் கருதி இவர் பாடியது முண்டு. கோட்டையூர் நகரத்தார்களை முத்தப்பர் அவ்வாறு பாடியுள்ளார்.

நகரத்தார் வாழுகின்ற ஊர்களுக்குப் பாடுவார் முத்தப்பர் சென்றார். அந்நகர மக்கள் முத்தப்பரை அன்புடனும் பண்புடனும் வரவேற்றனர். அவர்களின் போற்றுதலில் மனங்குளிர்ந்த முத்தப்பர், கோட்டையூர் நகரத்தார்க்கு ஒப்புவமை இல்லாத வாழ்த்தைப் பாடிக் கொடுத்திருக்கின்றார்.

வணிகர் வாழ்த்து:

வந்தவரை வருக என்று இனியமுகம் காட்டி வரவேற்பது அன்புடை மக்கட் பண்பு. அயலாரை வரவேற்றுப் போற்று வாரைக் கண்டால் முத்தப்பர் பெரிதும் மகிழ்வார். இத்தகைய புலவர் பெருந்தகை, கோட்டையூருக்குச் சென்றார். ஏன் சென்றார்? எதற்குச் சென்றார்? என்பது புலனாகவில்லை. சென்ற புலவரைக் கோட்டையூர் மக்கள்

வரவேற்று உபசரித்தனர். அம் மக்கள் அன்பிலும் பண்பிலும் உவகையுற்ற புலவர் ஊர் மக்களை வாழ்த்தினார். அவ் வாழ்த்துப் பாடல்கள்.

கோட்டையூர் மாவணிகர் கொண்டுவிற்றுக் கொண்டுவந்த
ஏட்டையெல்லாம் கண்டு இயம்பினோம்—கோட்டையூர்
நாட்டைவிட்டுச் சென்ற நகரத்தார் யாவரும்பொன்
கோட்டையுடன் வருவர் கொண்டு[12]

நீர்பெருகி ஊற்றெடுக்கும் நீண்டபுகழ்க் கோட்டை
யூர்பெருகி ஊற்றெடுக்கும் ஊருணிகள்—சீர்பெருகி
அன்னஊர்; அன்ன அருஞ்செல்வம் வீற்றிருக்கும்
பின்னும் ஓர்ஊழி பேரிட்டு

கோட்டையூர் நகரத்தார்களில் வணிகம் செய்யச் சென்றவர்களில் சிலர் முதலாளிகளாய்ச் சென்றனர்; சிலர் அடுத்த ஆளாகப் போயினர்; இவ்வண்ணம் பலநிலைகளில் சென்றனர். எவ்வாறு சென்றாலும் அவர்கள் ஊருக்குத் திரும்பும் போது பொன் கோட்டையுடன் வருவர். இது தான் முத்தப்பரின் வாழ்த்து.

ஊர் வாழ்த்து:

கொண்டுவிற்றுக் கொண்டு வந்த பொருளை வைத்துக் கொள்ள வளமான ஊர் வேண்டும். எனவே அடுத்த பாட்டு அந்நகர மக்கள் வாழ்தற்குரிய ஊரை வாழ்த்துவதாகும். ஊர் வளமும் வாழ்வும் பெற நீர் வேண்டும். அதனால் புலவர் 'நீர்பெருகி ஊற்றெடுக்கும் நீண்ட புகழ்க் கோட்டையூர்' என்றார். கோட்டையூரின் பெருமையும் சிறப்பும் நாள் தொறும் பெருக வேண்டும் ஆதலின் 'சீர்பெருகி' என்றார், ஆசிரியர்.

பாடலின் மூன்றாம் அடி, 'அன்ன ஊரன்ன அருஞ் செல்வம் வீற்றிருக்கும்' என்பதாகும். அத்தகைய இயல்பு

களைப் பெற்ற ஊர் அத்தகைய அரிய செல்வங்களைப் பெற்றுத் தலை நிமிர்ந்து விளங்க வேண்டும். நீர் ஊறுவது போலச் செல்வம் ஊற்றெடுக்க வேண்டும். கோட்டையூர் பெருமிதமாகத் திகழவேண்டும் என்பார் 'வீற்றிருக்கும்' என்று பாராட்டுகிறார். அந்த ஊர் என்றும் அழியாததாய்க் காலங்கடந்து வாழ்தல் வேண்டும்.

இவ்விரு பாடல்களும் சிறந்த பொருட் சிறப்புடையவை. அந் நிறைமொழிப்புலவர் வாழ்த்தியாங்கு இன்றும் கோட்டையூர் செல்வ வளத்தோடு திகழ்கிறது.

நாளும் நாளும் வளர்ந்தோங்கும் வகையில் வாழ்த்துவதே உண்மையான வாழ்த்தாகும். முத்தப்பர் அவ்வாறே வாழ்த்தியிருக்கிறார். புலவர் முதல் பாடலில், கோட்டையூர் நகரத்தார்களின் வணிகத்தைப் பற்றிப் பேசுகிறார். அவ்வூர் வணிகர் எல்லாம் பெரிய வணிகர்களே யன்றிச் சிறிய வணிகர் அல்லர். அவர்கள் கொண்டு விற்கப் போகிறார்கள். உள்ளூரிலிருந்து பொருள்களைக் கொண்டு சென்று வேற்றூரில் விற்கின்றனர். இதனால் இது கொண்டுவிற்றல் எனப்பட்டது இஃது உள்நாட்டு வணிகத்துக்குப் பெயராக இருந்து பின் காலப்போக்கில் அயல்நாட்டு வணிகத்தைக் குறிப்பதாயிற்று. விற்றுத்திரும்பும் போது வருவாயேயன்றி வேறில்லை.

வணிகத்தைச் செய்தால் மட்டும் போதாது; ஆண்டு தோறும்—அவ்வப்போதும் கணக்குப் பார்க்கவேண்டும். கோட்டையூர் நகரத்தார்களின் கணக்கைக் கண்டு சொல்வதாக முத்தப்பர் பாடுகிறார். அது வெறும் வாய்ச்சொல் இல்லை. அவர்களுக்கு வருமானம் மிகுதி என்று அவ்வூர் நகரத்தார்களின் வணிக வளத்தைப் பாராட்டுகிறார்.

இத்தகைய பொருள் பொதிந்த பல்வகைச் சிறப்பும் நல்குகின்ற வாழ்த்தைப் பாடுவார் முத்தப்பர் கோட்டை

யூருக்குப் பாடியிருக்கிறார். இது கோட்டையூரும் அவ்வூர் நகரத்தார்களும் செய்த தவப்பேறாகும். அருள்மொழிக் கவிஞரான பாடுவார் முத்தப்பரின் வாக்கு என்றும் பொய்க் காதிருப்பதாக!

இவ்வாறு திருமகளை விளித்தும், சிவபெருமானை வேண்டியும் ஊர்மக்களை வாழ்த்தியும் நகரத்தார்கள் நலம் பெறப் பாடுவார் முத்தப்பர் வாழ்த்தினார். ஆயினும் அவர் பாடிய தனிப்பாடல்களிலும் நூல்களிலும் நகரத்தார் நலம் நாடும் கருத்துகள் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன.

அடிகள் வாழ்த்தில் ஆசிரியர் கருத்து :

பாதரக்குடி சேனாபதிக் குரு சிகாமணிக்கு அருள்புரியுமாறு குன்றக்குடி முருகனை முத்தப்பர் வேண்டிப் பாடினார். இப்பதிகத்தின் இறுதிப் பாடல், முத்தப்பரின் இனநலம் நாடும் பாங்கினை வெள்ளிடைமலை எனக் காட்டுகிறது. அப்பாடற்பகுதி.

"மத்தகஜ நிறையறிந் திளசையம் பதிதனில்
வந்துதன பதியதாக
வளர்ஏழு நகர்வணிகர் தேன்பாலு மாகஒரு
மனதாய்ச் செழித்திருக்க
இத்தல மதிற்புத்ர விருத்தியாய் நவரஸம்
இலங் குதமிழ் மாலைகொண்டுன்
இருசரண பங்கே ருகம்பணிந் திசைபெற்ற
இருநிதி படைத்திருக்க" (பா. 10. அடி 2-3)

என்பதாம். நகரத்தார் தனபதியாக—ஒருமனமாய்ச் செழித் திருக்க—மக்கட்பேறு பெற்றிருக்க—இரு நிதிபடைத்திருக்க வேண்டும் எனப் பாடுவார் முத்தப்பர் பாடுகின்றார். இதே கருத்தினை நகர வாழ்த்தின் துவக்கத்திலும் காண முடிகின்றது.

திருமார்பில் திருமகள்:

நகர வாழ்த்து நகரத்தார்களை வாழ்த்துவதுடன் அவர்கள் செல்வ வளம் கொழிக்க வேண்டும் என்றும் வாழ்த்துகின்றது இந்நூலாசிரியர் பாடுவார் முத்தப்பர் நகரத்தார்களை எங்குப் பாடினாலும் அனைவரும் செல்வச் செழிப்புடன் வாழ வேண்டும் என்று வாழ்த்திப் பாடினார். அதனால் நகர வாழ்த்தில் 'மால் மார்பிருக்கும் இலக்குமியை வைத்த குலத்தவர்கள்' என்று முத்தப்பர் போற்றுவர். எல்லாச் செல்வத்திற்கும் தலைவி இலக்குமி. அந்த இலக்குமியைத் தமதுடைமையாக வைத்தவர்கள் என்று கூறி இவர்கள் எப்போதும் குபேர வணிகராய் வாழ வேண்டும் என்று வாழ்த்தினர்.

நகர வாழ்த்தில், காப்புச் சொல்லி முடிந்ததும் நகரத்தார்களின் மாலையையும் கொடியையும் சொல்லி ஆசிரியர் செல்வம் செறியப் பெற்றவர்கள் என்றுணர்த்துகிறார்.

அடிக்குறிப்பு

1. புலியூர்க் கேசிகன் (பதி) (1976)—திருக்குறள் பரிமேலழகருரை பா. எண். 751.
2. மேலது பா. எண். 807
3. நாராயணன் செட்டியார் (1954)—முத்தப்பர் நூல்
4. குபேரன் என்ற சிறப்புப்பெயர் ஒருமைக்கே உரியது. ஆனால் இவர் இதனைப் பன்மை வடிவில் பயன்படுத்துகிறார்.
5. கிருஷ்ணசாமிநாயுடு. நா. (1925)—ஜெயங்கொண்டார் சதகம் ப. 40. பா. எண் 1.
6. மேலது. பா. எண் 2.
7. வெண்பா ஷை—திருமுக விலாசம். நேரிசை வெண்பா.
8. ஷை—ஜெயங்கொண்டார் ப. 40, பா. எண் 5.
9. ஷை. ஷை. பா. எண். 1.
10. ஷை ஷை பா. எண் 2.
11. ஷை. ஷை ப. 40.
12. நாராயணன் செட்டியார் (1954)—முத்தப்பர் நூல். ப. 62

முடிவுரை

முதற்புலவர்:

பாடுவார் முத்தப்ப செட்டியார் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபின் முதற்புலவர். இவருக்குமுன் பட்டினத் தார் போன்ற புலவர்கள் தோன்றியிருந்தாலும், இவரே உறுதியாக அறியப்பெறும் நகரத்தார் மரபுப் புலவர். முதற் புலவரான இவர் தன் தமிழ்ப் புலமையால், நகரத்தார்கள் செல்வம் பெற்றுப் பெருகி வாழ வேண்டும் என்று வாழ்த்திப் பாடினார். அவ்வாழ்த்தின் சிறப்பே இன்றைய நகரத்தார் களின் வள வாழ்வுக்கு அடிப்படையாகும்.

நாட்டுக் கோட்டை நகரத்தார்களுக்குத் தமிழில் பேரார்வம் ஏற்படுவதற்குப் பாடுவார் முத்தப்பர் போன்ற புலவர்களே காரணமாவர். இவர் பல்வேறு கதைகளை அமைத்துச் செயங்கொண்டார் சதகத்தைப் படைத்தார். இச்சதகம் கதையையும் பழமொழிகளையும் சுவைபடச் சொல்லுகிறது. இவருடைய திருமுகவிலாசம் போல வேறு நூல்கள் செட்டி நாட்டில் தோன்றியுள்ளன[1]. செட்டி நாட்டில், செட்டியார்களிடையே ஏற்பட்டுள்ள தமிழார் வத்துக்கும் தமிழ்ப்புலமைக்கும் பாடுவார் முத்தப்பர் ஒரு வழிகாட்டி. இயல்பாக நகரத்தார்களுக்கு இருந்த சமய வுணர்வு இவர்களின் தமிழ்ப்புலமையை வளர்த்தது.

வாழ்க்கை நிகழ்ச்சி:

சங்ககாலப் புலவர்கள், தாங்கள் மன்னரைக் கண்டு மகிழ்ந்ததையும் பாட்டாகப் பாடினார்; புரவலனை நெறிப் படுத்தி மனைவியொடு வாழ அறிவுறுத்தியதையும் பாட்டாகப் பாடினர். வாழ்க்கை நிகழ்ச்சி எதுவாயினும் பாட்டாகப் பாடுதற்குரியது என்பது அக்காலப் புலவர் துணிவு. பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளிலும் இதே போக்குத்தான் தமிழகத்தில் நிலவிற்று. தமிழில் வந்துள்ள தனிப்பாடல் திரட்டுகள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாடுவார் முத்தப்பரும் தன் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பாடல்களாகவே புனைந்தார். பாடுதற்கு எனத் தனியே பாடுபொருளை வரையறுத்துக் கொண்டு பாடாமல், கை வரப் பெற்ற தமிழ்ப் புலமையால் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அப் புலவர் பெருமான் பாடிப்போந்தார்.

இலக்கிய வரலாற்றில் முத்தப்பர் பெறுமிடம்:

இவரியற்றிய சிற்றிலக்கியங்களில் செயங்கொண்டார் சதகம் அறஇலக்கியமாகும். பல்வேறு கதைகளைக் கொண்டு அறமுணர்த்துவது. அனைவரும் விரும்பிப் படிக்கத்தக்கது. இவர் ஆக்கிய திருமுகவிலாசம், குளுவநாடகம், குதிரையடி என்பன செட்டிநாட்டுக்குரிய இலக்கிய வகைகள்; செட்டி நாட்டில் வழங்குபவை. தமிழிலக்கிய வரலாற்றில் இப்புதிய மூன்றிலக்கிய வகைகளைப் படைத்த பெருமை பாடுவார் முத்தப்பரையே சாரும்.

'திருமுகவிலாசம்' என்னும் சிற்றிலக்கியம், சீட்டுக்கவி எனும் இலக்கிய வகையினின்று தோன்றி வளர்ந்தது. இதனைப் பாடுவார் முத்தப்பர் ஆற்றுப்படையைப் போலவும் தூதிலக்கியம் போலவும் நகைச்சுவையும்

நையாண்டியும் நிறைந்த நாடகம் போலவும் புதிதாக உருவாக்கியிருக்கின்றார். முத்தப்பரைப் பின்பற்றிச் செட்டி நாட்டில் திருமுகவிலாசம் பலரால் பாடப்பட்டுள்ளது. குளுவநாடகம்' என்னும் குறவஞ்சி இலக்கியத்தின் பிற்பகுதி 'செட்டிநாட்டில் பலரால் பாடப்பட்டுள்ளது.[2] 'குதிரையடி' இலக்கியத்தை மிகவும் ஓசை நயத்துடனும் இன்றையப் புதுக், கவிதையமைப்புடனும் முத்தப்பர் அமைத்திருக்கிறார். தமிழிலக்கிய வகையாராய்ச்சியில், முத்தப்பருக்கு இந்த மூன்று வகை இலக்கியங்களைப் படைத்துள்ளமையால் சுட்டத்தக்க ஓரிடமுண்டு என்பதில் ஐயமில்லை.

ஆக்க இலக்கியப்பணி;

பாடுவார் முத்தப்பர் கம்பரைப் போலப் பெரும் புலவரல்லர்; இராமகாதையைப் போலப் பாரகாவியம் இயற்றவில்லை. ஆனால், செல்வத்தில் நாட்டம் மிக்க மக்களுக்குத் தமிழிலும் சமயத்திலும் ஆர்வம் ஏற்படுமாறு அம்மரபினர் வழிபடும் தெய்வங்களைப் பாடித் தமிழ்ப் பற்றை ஏற்படுத்தினார். இந்தத் தமிழார்வம் நகரத்தார் களைத் திருப்பணிச் செல்வர்களாக வாழத் தூண்டியது. ஆகவே முத்தப்பரின் நூல்களும் பாடல்களும் நகரத்தார் களுக்குச் செல்வம் சேர்த்தன; தமிழார்வமூட்டின; சமயப் பணியிலும் அறப்பணியிலும் ஈடுபடுத்தின.

பாடுவார் முத்தப்பர், இளமை முதலே இலக்கண இலக்கியம் பாடங்கேட்டுத் தமிழ்ப் புலவராகவில்லை; அன்றிப் பரம்பரையாகத் தமிழ்ப் புலவர் குடும்பத்தில் பிறக்கவும் இல்லை. இதனால்தான் பாடுவார் முத்தப்பரொடு போட்டி யிட்ட வெண்பாப்புலிச் சொக்கலிங்கக் கவிராயர் இவரைக் குறைத்து மதித்தார். முத்தப்பருடைய புலமையெல்லாம் ஆக்க இலக்கியம் படைத்தலேயாம். புதிய புதிய இலக்கியங் களை ஆக்குவோருக்குப் பாடல் புனையும் இயற்கைச்

செல்வமும் கருத்தூற்றமும் இருந்தால் போதுமானது. ஆராய்ச்சி இலக்கியம் படைப்போர்க்கே அகன்ற அறிவும் நுண்மாண் நுழைபுலமும் [வேண்டும்.

வணிகமும் தமிழும்:

முத்தப்பர், வணிகத்தில் ஈடுபட்டிருக்கும்போது தமிழிலும் ஆர்வங்கொண்டு நூல்களைத் தானே பயின்றிருக்கிறார். நளவெண்பா, ஔவையின் அறநூல்கள், தண்டலை யார் சதகம், திருவேங்கட சதகம் போன்றவற்றை இவரே முயன்று கற்றுப் புலமைத்திறம் பெற்றிருக்கிறார். கவிதை பாடும் இயற்கைத்திறம், அனுபவத்தால் பெற்ற அறிவுடன் கூடிப் புலமைத்திறமாக இவருக்கு மலர்ச்சி பெற்றது. மிதிலைப்பட்டிக் கவிராயர்களொடும் பாதரக்குடிச் சேனாபதி அடிகளொடும் முத்தப்பர் கொண்ட தொடர்பு இவர் தமிழ்ப் புலமையை வளர்த்தது. அனுபவத்தால் யாப்பிலக்கண நுட்பங்களை உணர்ந்து செய்யுள் இயற்றும் திறமுடையவர் கள் இன்றும் செட்டிநாட்டில் வாழ்கின்றனர்.

நடையியல்:

பாடுவார் முத்தப்பர் பாடிய தனிப்பாடல்கள்,வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பாடியபாக்கள் அனைத்தும் எளிமையானவை செட்டிநாட்டு வழக்குச் சொற்கள் நிறைந்தவை; பாடல் களைப் பொருள் கொள்வதில் எவ்வகை இடர்ப்பாடுமில்லை. ஆற்றொழுக்கான கருத்தோட்டமுடையவை. இவருடைய பாடல்களின் போக்கைநோக்கும்போது, பாடுவார் முத்தப்பர் மிக விரைவாகவும் தெளிவாகவும் பாடலை மனத்தில் கவனம் செய்து கொண்டு விறு விறு என்று சொல்லிவிடும் பண்புடை யவர் என்று துணிய வேண்டியிருக்கிறது.

புலவர்கள் பாடலை எழுதிப் பின் திருத்தி மீண்டும் ஒழுங்கு படுத்திப்பாடுவர். இக்காலத்துக்கு வேண்டுமானால்

இது பொருந்தும். பாடுவார் முத்தப்பரோ இவ்வாறு பாடும் புலமையாளர் அல்லர்; இயற்கையாகப் பாடும் தெய்வத் தன்மை வாய்ந்தவர். அதனால் இவர் பாடல்களில் வழக்குச் சொற்களும் கொச்சைச் சொற்களும் திரி சொற்களும் பயிலுகின்றன.

திருமுகவிலாசம், ஜெயங்கொண்டார் சதகம், நகர வாழ்த்துஆகிய மூன்றும் தமிழ்நடை தழுவியன. இவற்றிலும் ஆசிரியர் எளிமையாகப் பாடும் பண்பைக் காணமுடிகிறது. இவர் நூல்களிலும் பாடல்களிலும் பிறமொழிச் சொற்களின் ஆட்சி மிகுதி. எழுதப் படிக்கத் தெரிந்த எவரும் இவர் நூல்களை எளிதில் படித்துப் புரிந்து கொள்வது இயலும்.

வாய்மொழி வழக்கு:

பாடுவார் முத்தப்ப செட்டியார் என்ற பெயரைக் கேட்டாலேயே நகரத்தார்களுக்குத் தனி மகிழ்ச்சி பிறக்கும். அவர் பாடிய பாடல்களே தங்களைச் செல்வர் களாக ஆக்கியதாகக் கருதுகின்றனர். அதனால் நகரத்தார் கள் பலர் கூடும்போது, முத்தப்பர் பாடல்களையும் வரலாற்றையும் சொல்லிமகிழுவர்; வரலாறு தெரியாதவர் கள் தெரிந்தவர்களிடம் கேட்டு அறிந்து பாடல்களை நெட்டுருச் செய்துகொள்வர். இப்படி, வாய்மொழியாக, எழுதாக்கிளவியாகவே முத்தப்பர் பாடல்கள் நகரத்தார் களிடையே வாழ்ந்தன. இதனால் முத்தப்பர் வரலாற்றில் பல்வேறு நம்பவியலாத அற்புதக் கதைகள் இடம் பெற்றன.

இரங்கோன், ஈப்போ, பினாங்கு போன்ற பல்வேறு பகுதிகளில் நகரத்தார்கள் தொழில் செய்யச் சென்றனர். அங்கு ஓய்வு நேரங்களில் பலரும் ஒன்று கூடியபோது முத்தப்பரைப் பற்றிய பேச்சுகள் பரவின. அதனால் முத்தப்பர் பாடிய திருமுகவிலாசம், செயங்கொண்டார்

சதகம் போன்ற நூல்கள் இந்தியாவிலும் பிறநாடுகளிலும் அச்சிடப்பட்டன. அவற்றை அச்சிட்டோர், மூலபாடம் படித்தற்குக் கிடைத்தால் போதும் என்ற அளவிலேயே அச்சிட்டுக் கொடுத்தனர். திருமுகவிலாசத்துக்கும் ஜெயங் கொண்டார் சதகத்துக்கும் இத்தகைய பதிப்புகள் நிறையவுள்ளன.

நூல் பரவிய எல்லை :

பாடுவார் முத்தப்பர் தமிழ் வல்ல புலவராயினும் அவர் நூல்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே வழங்கின. முத்தப்பர் தன்னின மக்கள் செல்வத்தோடு வாழவேண்டும் என்றும் அவர் நலம்பெற வேண்டும் என்றும் பாடியமையால் அவரைச் சார்ந்தவர்கள் தாம் அவர் நூல்களைப் பயின்றனர். வேற்றின மக்கள் அவர் நூல்ளைப் படிக்க ஆர்வம் காட்ட வில்லை. எனவே பாடுவார் முத்தப்பர் நூல்கள் பெரிதும் செட்டிநாட்டெல்லையைக் கடந்தும் செட்டியார்களைக் கடந்தும் பரவவில்லை. இப்படி முத்தப்பரின் நூல்களைப் படிக்கும் எல்லை ஓரின வட்டத்துக்குள் அடங்கியது.

புலவர் பாடிய நூல்கள், பதிப்பாசிரியர்கள் பெருமை யாலும் புகழ்பெறுவது உண்டு. முத்தப்பர் நூல்களுக்குத் தக்க பதிப்பாசிரியர்கள் கிட்டாமல் போனது ஒரு பெருங் குறை. தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதையர் போன்ற பதிப்பாசிரியர்களால் முத்தப்பர் நூல்கள் வெளிவந்திருக்கு மாயின் கற்றோரவையில் மேலும் பரவியிருக்கும். முத்தப்பருக்கும் புகழ் சேர்ந்திருக்கும். இவற்றால் முத்தப்பர் நூல்கள் நகரத்தார்களிடையே தாம் பரவியிருந்தன. அவர்களொடு தொடர்புடைய ஏனை இனத்தவர்களில் ஒரு சிலரும் முத்தப்பர் நூல்களைப் பயின்றனர்.

நகரத்தார் கடமை :

பெருஞ் செல்வர்களாக விளங்கும் நகரத்தார்கள், தங்ள்க தேட்டத்தின் ஒரு சிறு பகுதியைப் பாடுவார் முத்தப்பரின் நூல்களை வெளியிடவும் திறனாய்வு நூல்களை எழுதி வெளியிடவும் பயன்படுத்த வேண்டும். செட்டிநாட்டின் நடுவண் வீற்றிருக்கும் அழகப்பா பல்கலைக்கழத்தில் பாடுவார் முத்தப்பர் பெயரில் ஓர் இருக்கை (Chair) அமைத்து அவர் பெயர் நின்று நிலவுமாறு செய்யலாம். நகரத்தார் களின் நலம் நாடிய-தேடிய முத்தப்பருக்கு இஃதே அவர்கள் செய்யத்தக்க கைம்மாறு ஆகும்.

அடிக்குறிப்பு

1. திருமுகவிலாசம் என்றபெயரால் ஏட்டுப் பிரதிகள் செட்டியார்களிடமுள்ளன. அவற்றை முத்தப்பர் நூல் என்று கருதிப் பார்த்தால் அது வேறு நூலாக இருக்கிறது. முத்தப்பரின் திருமுகவிலாசம் போல அமைந்த ஏட்டுச்சுவடி நூலாசிரியாரின் தமையனாரிடம் ஒன்றுள்ளது.
2. முத்தப்பர் பாடிய திட்டாணிக் கருப்பர் குளுவநாடகம், நெய்வாசல் திட்டாணிக் கருப்பரைப் பற்றியது. வயிரவங் கோயிலைச் சார்ந்தவர்களில் ஒரு பகுதியினர் இதைக் குல தெய்வமாகக் கொண்டவர்கள். நகரத் தார்கள் வாழ்ந்த தொண்ணூற்றாறு ஊரில் நெய்வாசலும் ஒன்று. டாக்டர் நிர்மலா மோகன் எழுதிய 'குறவஞ்சி இலக்கியத்தில்' இந்நூல் பற்றிய குறிப்புகளைக் காண முடியும்.

துணை நூற்பட்டியல்

1. அண்ணங்கராசாரியர் (1962) - திருப்பல்லாண்டும், பெரியாழ்வார் திருமொழியும், காஞ்சிபுரம், க்ரந்தமாலா ஆபீஸ்.

2. அண்ணாமலை. பழ (1986) - செட்டிநாடு ஊரும் பேரும். சிதம்பரம், மணிவாசகர் நூலகம்.

3. அருணசாலம். மு. (1970) - தமிழிலக்கிய வரலாறு—பதின்மூன்றாம் நூற்றாண்டு, காந்தி வித்தியாலயம். திருச்சிற்றம்பலம்.

4. இரத்நசபாபதி முதலியார் (1896) - ஜெயங்கொண்டார் சதகம், சென்னை, இந்து தியலாஜிகல் அச்சுக்கூடம்.

5. இராமசாமி நாயுடு. காஞ்சிபுரம் (1905) - பழமொழி விளக்கம் என்னும் தண்டலையார் சதகம், மதராஸ் ரிப்பன் பிரஸ், சென்னை.

6. இராமசாமிப்புலவர். சு. அ. (1955) - தமிழ்ப்புலவர் வரிசை, பத்தாம் புத்தகம், திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 2.

7. இராமநாதன் செட்டியார் வயிநாகரம். அ. (1953) - நாட்டுக் கோட்டை நகரத்தார் வரலாறு, வெளியிட்டவர் கு. பள. சித. சுப்பய்யா செட்டியார், மு. ராம. ராம. வீடு; கானாடுகாத்தான்.

8. இளங்கீரன் (1962) - சதகங்களின் சிறப்பு, சிதம்பரம், மணிவாசகர் நூலகம்.

9. கதிரைவேற்பிள்ளை. நா. (அ. இ) - நைடதம் மூலமும் உரையும், சென்னை. பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ், வித்தியாரநாகரம் பிரஸ்.

10. கந்தையாபிள்ளை. ந. சி. (1960) - தமிழ்ப்புலவர் அகராதி. சென்னை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், பவழக் காரத்தெரு.

11. கமால். எஸ். எஸ். (1987) - விடுதலைப் போரில் சேதுபதிமன்னர், சென்னை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.

12. கருணானந்த சுவாமிகள். சிதம்பரம் (1868) - திருமுகவிலாசம். பிற செய்திகள் தெரியவில்லை.

13. காசிவிசுவநாதன் செட்டியார் (1942) - ஜெயங் கொண்டார் சதகமும் திருமுகவிலாசமும் நாட்டுக் கோட்டை நகரத்தார் சரித்திரமும். சென்னை. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி

14. கிருஷ்ணசாமி நாயுடு. நா. (1925) - எழுநகரத்தார்க் களித்த திருமுகவிலாசம். மதுரை, ஸ்ரீமீனாம்பிகை பிரஸ்.

15. ஷெ (1925) - ஜெயங்கொண்டார் சதகம், மதுரை, ஸ்ரீமீனாம்பிகை பிரஸ்.

16. குமரகுருபரன் பிள்ளை (1959) - செயங்கொண்டார் வழக்கம் குறிப்புரையுடன். குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம்.

17. கோபால் கிருஷ்ணமாசார்யர் (1965) - திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் சென்னை. வை. மு. கோபாலக்ருஷணமாசார்யர் கம்பெனி, 17 தெளிசிங்கப் பெருமாள் கோயில் நெரு, திருவல்லிக்கேணி.

18. சந்திரசேகரன். தி. (1955) செயங்கொண்டார் வழக்கம் உரையுடன், சென்னை, சென்னை அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்.

19. ஷெ (1959) - பிள்ளைத் தமிழ்க்கொத்து இரண்டாம் பாகம். சென்னை, அ. கீ. சு. நூலகம்.

20. ஷெ (1960) - தனிப்பாடற்றிரட்டு சென்னை, சென்னை அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்.

21. சாமிநாதையர். உ. வே. (1933) - நன்னூல் மூலமும் மயிலை நாதருரையும், சென்னை, வைஜயந்தி அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப் பெற்றன.

22. சாமிநாதையர். உ. வே. (1960) - சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும். ஏழாம் பதிப்பு சென்னை ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு.

23. சிவகாமி. ச. (1985) - தமிழ்ச் சதக இலக்கியம்- சென்னை. உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்.

24. சுப்பிரமணியபிள்ளை. கா. (1958) - இலக்கிய வரலாறு - இரண்டாம் பாகம், சென்னை ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், பவழக்காரத் தெரு.

25. சுந்தரமூர்த்தி. கு. (1966) - தொல்காப்பியம் - சொல்லதிகாரம், சேனாவரையருரை. திருப்பனந்தாள், தெற்குத் தெரு.

26. செயராமன். ந. வி. (1981) - பாட்டியலும் இலக்கிய வகைகளும், சென்னை. இலக்கியப் பதிப்பகம்.

27. சோமசுந்தரனார். பொ. வெ. (பதி) பெருங்கதை - முதற்பகுதி, உஞ்சைக் காண்டம். சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

28. சோமலெ (1960) - செட்டிநாடும் தமிழும், சென்னை பாரி நிலையம், 59 பிராட்வே. இரண்டாம் பதிப்பு.

29. ஷை (1984) - செட்டிநாடும் செந்தமிழும் சென்னை, வானதி பதிப்பகம், 13 தீனதயாளு தெரு.

30. தெட்சிணாமூர்த்தி. உ. (1981) நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரமும் பாடுவார் முத்தப்ப செட்டியார் வரலாறும் அவர்கள் இயற்றிய அருட்கவிகளும் ச. செ. சேவு. மெய்யப்ப செட்டியார் உமையாள் ஆச்சி மணிவிழா வெளியீடு. தேவகோட்டை.

31. நடராசன். நா. (1949) - பாடுவார் முத்தப்ப செட்டியார் வரலாறு, கீழச்சிவல்பட்டி, மன்னவன் வெளியீடு.

32. நடராசன். நா & நாகப்பன். இராம. (1951) - திருமுக விலாசமும் முருகன் தோத்திரமும், கீழ்ச்சிவல்பட்டி, மன்னவன் வெளியீடு.

33. ஷை (1951) - ஜெயங்கொண்டார் சதகமும் தேவி தோத்திரமும், கீழச் சிவல்பட்டி, மன்னவன் வெளியீடு.

34. நாராயணபாரதி (1905) - மணவாளநாராயண சதகம் என்னும் திருவேங்கட சதகம், சென்னை. மதராஸ் ரிப்பன் பிரஸ்

35. நாராயணன் செட்டியார் ராம. மு.க.மு. (1954) - முத்தப்பர் நூல், கீழச்சிவல்பட்டி.

36. நிர்மலா மோகன் (1985) - குறவஞ்சி இலக்கியம் சிதம்பரம், மணிவாசகர் பதிப்பகம்.

37. பாலசாரநாதன் (1982) குமாரலிங்கர் குறஞ்சி சென்னை, உ. வே. சா. நூலகம்.

38. புகழேந்திப் புலவர் (1926) - நளவெண்பா மகாதேவ முதலியார் அரும் பொருள் விளக்கத்துடன் சென்னை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் திருநெல்வேலி.

39. புலியூர்க்கேசிகன் (பதி) (1976) - (திருக்குறள் பரிமேலழகர் உரை) சென்னை, பூம்புகார்ப் பதிப்பகம்,

40. பெருமாள் ஏ. என் (1985) - கும்மிப் பாடல்கள். சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

41. முத்தப்ப செட்டியார் (1910) - திருமுகவிலாசம் இரங்கோன், ஸ்ரீபால சுப்பிரமணிரச்சியந்திர சாலை.

42. ஷெ (1933) - திருமுகவிலாசம் ஈப்போ, மெர்க்கண்டைல் பிரஸ்.

43. முத்தய்யா செட்டியார். சி. கரு. (பதி) (1937 - உச்சினிமாகாளியம்மன்பேரில் கும்மி பி. அழகாபுரி, நாஷனல் பிரஸ்.

44. முத்துக்குட்டிப் புலவர் (1852) - கண்ணுடையம்மன் பள், இரங்கோன், ஸ்ரீபாண்டியன் அச்சுக் கூடம்.

45. விசுவநாதன் அ. (1986) - ஆண்டாள் திருமணம், காரைக்குடி, அ. சொ. வெளியீடு.

46. (1859) - வில்லிபாரதம் நான்கு பாகங்கள், சென்னை எஸ். ராஜம், 5, தம்புச்செட்டித்தெரு.

47. வெள்ளைவாரணன், க. (1983) - தொல்காப்பியம் புறத்திணைஇயல் உரைவளம். மதுரை,மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

எம்பில் - ஆய்வேடு

1. இராசம்மாள். தை (1985) - திண்டுக்கல் வட்டாரக் காராள வேளாளர் குலமுறைச் சடங்குகள், காரைக்குடி. அழகப்பா கல்லூரித் தமிழுயராய்வுமையம்.

அகாரதி

1. (1934) - தமிழ்லெக்ஸிகன், தொகுதி 6 பகுதி 1 சென்னை சென்னைப் பல்கலைக் கழகம்,



பார்வதி பதிப்பகம்

11, எட்டாவது தெரு.
சுப்பிரமணியபுரம்-தென் விரிவு
காரைக்குடி-623 003.